மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள்

(06.02.2019 முதல் 28.09.2019 வரை)

தொகுப்பு – 1

மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள்

(06.02.2019 முதல் 28.09.2019 வரை)

தொகுப்பு – 1

சிறப்பு வெளியீடு எண். 35

தமிழரசு

இலவச வெளியீடு

ஜனவரி 2020

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி,
சென்னை – 600 113.

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
1.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள், 06.02.2019 அன்று, கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர், வையம்பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களின் மணிமண்டபத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை	1
2.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், 06.02.2019 அன்று, கோயம்புத்தூர் மாவட்டம், முதலிப்பாளையத்தில், பேரூர் ஆதினம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அறக்கட்டளையின் சாந்தலிங்கர் மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை	14
3.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.02.2019 அன்று, கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கோயம்புத்தூர் மாவட்ட சிறு தொழில் சங்கம் மற்றும் கொடிசியா இண்டஸ்டிரியல் பார்க் லிமிடெட் சார்பில் மோப்பிரிபாளையம் மற்றும் கள்ளப்பாளையத்தில் புதிய கொடிசியா தொழிற்பூங்காக்களை துவக்கி வைத்து ஆற்றிய உரை	20
4.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 23.02.2019 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நடைபெற்ற ஜெயம் 2019 நிறுவனர் தின விழாவில் ஆற்றிய உரை	34

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
5.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 24.02.2019 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற பிரதம மந்திரியின் கிசான் சம்மான் நிதி திட்டத்தின் முதல் தவணை தொகை வழங்கும் துவக்க விழாவில் ஆற்றிய உரை...*	*42*
6.	*கன்னியாகுமரியில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் தலைமையில் 01.03.2019 அன்று நடைபெற்ற இராமேஸ்வரம்–தனுஷ்கோடி இடையில் இரயில் இணைப்பை புதுப்பித்தல் மற்றும் புதிய பாம்பன் இணைப்புப் பாலம் கட்டும் அடிக்கல் நாட்டு விழா மற்றும் மதுரை – சென்னை எழும்பூர் இடையே புதிய தேஜஸ் எக்ஸ்பிரஸ் இரயில் சேவை துவக்க விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை...*	*53*
7.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 04.03.2019 அன்று, சென்னை, எழும்பூர், மகளிர் மகப்பேறு நோயியல் நிலையம் மற்றும் அரசு மகளிர் மற்றும் சிறார் நல மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆற்றிய உரை....................................*	*63*
8.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.06.2019 அன்று, சேலத்தில் ஏ.வி.ஆர். ரவுண்டானா முதல் இராமகிருஷ்ணா சாலை சந்திப்பு வரையிலான புதிய மேம்பாலத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை..............*	*73*

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
9.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 08.06.2019 அன்று, சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து ஆற்றிய உரை	79
10.	புதுடெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் முக்கிய விவரங்களின் தமிழாக்கம் (15.06.2019)	86
11.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 13.07.2019 அன்று, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சிறப்பு பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை	91
12.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 19.07.2019 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் திரு. எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை	96
13.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 21.07.2019 அன்று, சேலம், சங்ககிரி சட்டமன்றத் தொகுதி, தாரமங்கலம் புதிய புறவழிச் சாலை மற்றும் மேம்பாலங்களை திறந்து வைத்து ஆற்றிய உரை.	101

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
14.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 21.07.2019 அன்று, சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி, ஆற்றிய உரை.	108
15.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 22.07.2019 அன்று, தமிழ்நாடு கிராம வங்கியின் சார்பில் சேலத்தில் நடைபெற்ற வங்கிக் கடன் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.	114
16.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 04.08.2019 அன்று, சேலம், மாநகராட்சி மைதானம், அண்ணா கலையரங்கத்தில் நடைபெற்ற சேலம் அரசுப் பொருட்காட்சி – 2019ஐ தொடங்கி வைத்து ஆற்றிய விழாப் பேருரை.	128
17.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.08.2019 அன்று நடைபெற்ற ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் முப்பதாம் ஆண்டு விழா மற்றும் வளங்குன்றா வளர்ச்சிக்கான குறிக்கோள்களை அடைவதற்கும், பருவநிலை மீட்சிக்கான அறிவியலைப் பலப்படுத்துவதற்குமான கருத்தரங்க துவக்க விழாவில் ஆற்றிய உரை	147

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
18.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், 43 பனப்பாக்கத்தில் 07.08.2019 அன்று நடைபெற்ற குடிமராமத்துப் பணிகள் 2019–2020இன் கீழ், தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர்மேலாண்மை இயக்கத்தின் பணிகளை துவக்கி வைத்து ஆற்றிய விழாப் பேருரை	154
19.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில் 08.08.2019 அன்று, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய தொடக்க உரை	166
20.	மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் பதவியில் திரு. **மு.வெங்கையா நாயுடு** அவர்கள் இரண்டாண்டு நிறைவு செய்தது குறித்து வெளியிடப்பட்ட புத்தகத்தின் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை – 11.08.2019	168
21.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 13.08.2019 அன்று, சேலம், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைத்து ஆற்றிய விழாப் பேருரை	175
22.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் 13.08.2019 அன்று நடைபெற்ற கலைமாமணி விருதுகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை	186

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
23.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் சுதந்திர தின உரை (15.08.2019)..*	*195*
24.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 18.08.2019 அன்று, சேலம், எடப்பாடி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திறப்பு விழாவில் ஆற்றிய உரை...............*	*214*
25.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 19.08.2019 அன்று, சேலம் மாவட்டம், நங்கவள்ளியில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தினை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை...*	*221*
26.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 19.08.2019 அன்று, சேலத்தில் புதிய சட்டக் கல்லூரியை திறந்து வைத்து ஆற்றிய உரை..*	*232*
27.	*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.08.2019 அன்று, சேலம் மாவட்டம், கெங்கவல்லியில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தினை துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை ....*	*239*

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்
28.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.08.2019 அன்று, சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர் பேரூராட்சியில் அபிநவம் ஏரியில் தூர்வாரும் பணியை ஆய்வு செய்து ஆற்றிய உரை........	247
29.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 20.08.2019 அன்று, சேலம் மாவட்டம், ஆத்தூர் மற்றும் ஏற்காடு சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தினை துவக்கி வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை........	251
30.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஈரோடு மாவட்டத்தில், 21.08.2019 அன்று நடைபெற்ற வேளாளர் கல்வி நிறுவனத்தின் பொன் விழா நிகழ்ச்சியை துவக்கி வைத்து ஆற்றிய உரை........	260
31.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 26.08.2019 அன்று, தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட "கல்வித் தொலைக்காட்சி"யை சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கத்தில் துவக்கி வைத்து ஆற்றிய உரை.	273
32.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 29.08.2019 அன்று, இலண்டன், கிங்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.	284

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

33. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 29.08.2019 அன்று இலண்டனில் உள்ள இங்கிலாந்து பாராளுமன்ற கூட்டரங்கில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்..286

34. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 03.09.2019 அன்று நியூயார்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வெளிநாடு வாழ் தமிழர்களின் முதலீடுகளை ஈர்க்க ஏதுவாக "யாதும் ஊரே" என்ற திட்டத்தினை துவக்கி வைத்து ஆற்றிய உரை.......................289

35. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 13.09.2019 அன்று, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை – உணவு பாதுகாப்புத் துறையினால் நடத்தப்பட்ட "மதராசபட்டினம் விருந்து – வாங்க ரசிக்கலாம், ருசிக்கலாம்" என்ற நிகழ்ச்சியை துவக்கி வைத்து ஆற்றிய உரை. 295

36. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 15.09.2019 அன்று, ஈஷா யோகா மையத்தின் சார்பில் சென்னை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மரம் நடும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆற்றிய உரை. 302

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

37. *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள், 27.09.2019 அன்று கோயம்புத்தூர், தமிழ்நாடு வன உயர் பயிற்சியகத்தில் நடைபெற்ற வனக்காப்பாளர்கள் பயிற்சி நிறைவு மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை. 311*

38. *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.* ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள் 28.09.2019 அன்று, சேலம் மாவட்டம் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி, நெய்க்காரப்பட்டியில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் முகாமினை துவக்கி வைத்து ஆற்றிய உரை...320*

❖ ❖ ❖

அம்மாவினுடைய அரசு,
விவசாயிகளின் அரசு,
விவசாயிகளின் நலன்காக்க கூடிய அரசு!

விவசாய பெருமக்களின் காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

உழவர் பெருந்தலைவர் மறைந்த அய்யா நாராயணசாமி மணிமண்டப திறப்பு விழா நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பான உரையாற்றி அமைந்திருக்கின்ற மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் சகோதரர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் சகோதரர் திரு.கடம்பூர் ராஜு அவர்களே!

சிறப்பான உரையாற்றி அமைந்திருக்கின்ற மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அண்ணன் முனைவர் திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. ஏ.கே.செல்வராஜ் அவர்களே! திரு. மகேந்திரன் அவர்களே!

வழிநெடுகிலும் மக்கள் வெள்ளம் கூடுகின்ற காட்சியைப் பார்க்கின்ற அளவிற்கு சிறப்பாக வரவேற்பு நல்கிய இந்தத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் அண்ணன் திரு. வி. சி. ஆறுக்குட்டி அவர்களே!

அவருக்கு உறுதுணையாக இருந்த மாவட்டச் செயலாளர், சட்டப்பேரவை உறுப்பினர் சகோதரர் திரு. பி.ஆர்.ஜி.அருண்குமார் அவர்களே!

மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் அவர்களே!

சட்டமன்ற உறுப்பினர் திரு. ஓ.கே.சின்னராஜ் அவர்களே! திரு. ஆர்.கனகராஜ் அவர்களே! திருமதி வி.கஸ்தூரி வாசு அவர்களே! முன்னாள் அமைச்சர் அண்ணன் மரியாதைக்குரிய வேலுச்சாமி அவர்களே! மரியாதைக்குரிய தாமோதரன் அவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே! மரியாதைக்குரிய ஈஸ்வரன் அவர்களே! முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகளே!

முன்னாள் கூட்டுறவுச் சங்க நிருவாகிகளே! விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளே! விவசாயிகளே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

வரவேற்புரை ஆற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் அவர்களே! செய்தி மக்கள் தொடர்புத் துறை

இயக்குநர் அவர்களே! மேடையிலே வீற்றிருக்கின்ற முன்னோடி நிருவாகிகளே அத்தனைபேருக்கும் பணிவான வணக்கத்தை இந்நேரத்திலே தெரிவித்து,

கோவையை அடுத்து செங்காலிபாளையத்தை சேர்ந்த விவசாயப் பெருந்தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள், 1957இல் விவசாயத்திற்கு வழங்கப்பட்ட 16 மணிநேர மின்சாரம், 4 மணி நேரமாக குறைக்கப்பட்டதை எதிர்த்து, விவசாயிகளை ஒன்று திரட்டி கோவை பகுதியில் போராட்டம் நடத்தியதோடு மாவட்ட ஆட்சியர் மற்றும் மின் துறை அமைச்சரை சந்தித்து விவசாயிகளின் துன்பத்தை விளக்கி, மீண்டும் நாள் ஒன்றுக்கு 16 மணி நேர மின்சாரத்தை பாசனத்துக்கு பெற்றுத் தந்தது மரியாதைக்குரிய அய்யா நாராயணசாமி நாயுடு அவர்கள்.

விவசாயிகளின் கோரிக்கைகளை அரசுக்கு தெரிவிக்கும் அமைப்பாக 1966ஆம் ஆண்டு கோவை வடக்கு தாலுக்கா விவசாயிகள் சங்கம் என்ற ஒரு சங்கம் திரு. வேலப்பன் அவர்களை தலைவராகவும், திரு. நாராயணசாமி நாயுடு அவர்களை செயலாளராகவும் கொண்டு துவக்கப்பட்டது. பின்னர் இது கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகள் அனைவரையும் உள்ளடக்கியதாக 1967ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டது. இவ்வாறு விதை ஊன்றப்பட்ட விவசாயிகள் சங்கம், 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயிகள் சங்கமாக மலர்ந்து, விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு சலுகைகளை பெற்றுத் தந்தது. தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட அய்யா திரு.நாராயணசாமி நாயுடு அவர்கள் 1984ஆம் ஆண்டு அவர் மறையும் வரை தொடர்ந்து அச்சங்கத்தின் தலைவராகவே இருந்தார்.

விவசாயிகளின் நலனைக் காக்க அவர் நடத்திய போராட்டத்தின் காரணமாக அரசு மின் கட்டணத்தைக் குறைத்தது. திரு. நாராயணசாமி நாயுடு அவர்களின் பேச்சுத் திறன், தலைமைப்

பண்பு, வாதத் திறமை, விவசாயிகளை ஒருங்கிணைத்தல் போன்ற ஆற்றல்களால், விவசாயிகளின் ஒப்பற்றத் தலைவராக அவர் விளங்கினார்.

இவர் தமிழ்நாடு மட்டுமின்றி, இந்திய அளவில் உழவர்களை திரட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டார். அதன் விளைவாக, கருநாடகம், மகாராஷ்டிரா, உத்திரபிரதேசம் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உழவர் இயக்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

அய்யா திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் ஆற்றிய பணிகளுக்காக அவரை கௌரவிக்கும் விதத்தில் கடந்த 2011ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத் தேர்தலின்போது, கோயம்புத்தூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உழவர் பெருந்தலைவர் அய்யா திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு கோவையிலுள்ள அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்றும், 1970ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற பல்வேறு விவசாயிகள் போராட்டங்களின்போது உயிர் நீத்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும் என்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தான் தேர்தல் கூட்டத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலும், உழவர் பெருந்தலைவர் அய்யா திரு.நாராயணசாமி நாயுடு அவர்களின் நினைவை போற்றும் வகையிலும் கோவை மாவட்டம் வையம்பாளையத்தில் உள்ள அவரது நினைவிடத்தில் அரசு சார்பில் மணிமண்டபம் அமைக்க உத்தரவிட்டார்கள். மேலும் 1970 முதல் 1980 வரை பல்வேறு விவசாயப் போராட்டங்களில் உயிர் நீத்த 40 விவசாயிகளின் வாரிசுதாரர்களுக்கு ஒட்டு மொத்தமாக 5 இலட்சம் ரூபாய் நிதி வழங்கவும் உத்தரவிட்டார்கள். இதற்காக 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்ட தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 30 செண்ட் நிலத்தில் கோவை மாவட்டம் வையம்பாளையத்தில் உள்ள உழவர் பெருந்தலைவர் அய்யா திரு.நாராயணசாமி நாயுடு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசால் கட்டப்பட்ட மணிமண்டபத்தை ஒரு விவசாயி ஆகிய நான் இன்று திறந்து வைத்ததில் பெருமிதம் கொள்கிறேன்.

“அன்னமிட்ட கை, நம்மை ஆக்கிவிட்ட கை
உன்னை என்னை உயர வைத்து உலகமெல்லாம்
வாழ வைத்து”

என்று புரட்சித்தலைவர் அவர்கள் தனது பாடலின் மூலம் விவசாயிகளின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளார்.

மாண்புமிகு புரட்சித்தலைவர் மற்றும் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிவந்த மாண்புமிகு அம்மாவின் அரசு விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு விவசாயிகளுக்கு அரணாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற அரசு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு.

விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வாழ்நாள் முழுவதும் உறுதுணையாக இருக்கும் வண்ணம் ‘முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்’ செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் வேளாண்மைத் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசின் சாதனைகள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டிலே மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, 2016–2017ஆம் ஆண்டில் அதிக அளவிலான காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை பெற்றதில், இந்தியாவிலேயே முதலிடம் தமிழ்நாடு வகிக்கிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். அதாவது, கடந்த 2016–2017ஆம் ஆண்டில் மட்டும் காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து 3 ஆயிரத்து 526 கோடியே 78 இலட்சம் ரூபாய் அளவிற்கு இழப்பீட்டுத் தொகை ஒப்பளிக்கப்பட்டு, வேளாண் பெருமக்களுக்கு இழப்பீட்டத் தொகையாக வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு.

2018–2019ஆம் ஆண்டில் இதுவரை 16 இலட்சத்து 39 ஆயிரம் விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளனர். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 2 இலட்சத்து 41 ஆயிரம் விவசாயிகள் கூடுதலாக பதிவு செய்துள்ளனர்.

இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் விதமாக, கடந்த 7 ஆண்டுகளில் 5 முறை உணவு தானிய உற்பத்தியில் 100 இலட்சம் மெட்ரிக் டன்னைக் கடந்து சாதனை புரிந்து, இந்திய அரசின் உயர் விருதான கிருஷி கர்மான் விருது உட்பட பல்வேறு விருதுகளைப் பெற்ற மாநிலம் தமிழ்நாடு என்பதை பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

கூட்டுப் பண்ணைய முறையை ஊக்குவிக்க 100 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 2 இலட்சம் சிறு, குறு, விவசாயிகளை ஒருங்கிணைத்து கூட்டுப் பண்ணையத் திட்டம் அம்மாவினுடைய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

டெல்டா மாவட்ட விவசாயிகளின் நீராதாரத்தை பெறுவதற்கு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காவேரி பிரச்சினையில் நடத்திய சட்டப் போராட்டத்தில், கடந்த ஆண்டு மாண்புமிகு உச்சநீதிமன்றம் தன்னுடைய இறுதித் தீர்ப்பை வழங்கியது. அத்தீர்ப்பின்படி, காவேரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டது. உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, காவேரியில் உள்ள தமிழ்நாட்டு விவசாயிகளின் உரிமையை இதன்மூலம் நிலைநாட்டிய அரசு அம்மாவினுடைய அரசு.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் விதமாக, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் வாயிலாக இந்த நிதியாண்டில் 31.01.2019 வரை 10 இலட்சத்து 12 ஆயிரத்து 796 விவசாயிகளுக்கு 6 ஆயிரத்து 648 கோடியே 35 இலட்சம் ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது.

தென்னை விவசாயிகளின் பொருளாதார நிலையினை உயர்த்தும் வகையில் தென்னையிலிருந்து நீராபானம் உற்பத்தி செய்ய மாண்புமிகு அம்மாவின் அரசால் அனுமதி வழங்கப்பட்டு, அவர்களின் வருமானம் இருமடங்காக இன்றைக்கு அம்மாவினுடைய அரசால் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முழுக்க, முழுக்க மாநில நிதியின் மூலம் அத்திக்கடவு – அவிநாசி திட்டம் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. பிப்ரவரி மாத இறுதிக்குள் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

உடலுக்கு உயிர் முக்கியம் என்பது போல, விவசாயிகளுக்கு நீர் முக்கியம். விவசாயத்திற்குத் தேவையான நீர், குடிப்பதற்குத் தேவையான நீரை உருவாக்குவதே அம்மாவினுடைய அரசின் தலையாய கடமையாகக் கருதி, இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் குடிமராமத்து என்ற அற்புதமான திட்டத்தை கொண்டுவந்து, விவசாயிகள், பொதுமக்கள் பங்களிப்புடன் ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள் எல்லாம் ஆழப்படுத்தப்பட்டு பெய்கின்ற மழைநீர் சேமித்து வைக்கப்படுகிறது. மேலும், இவ்வாறு ஆழப்படுத்துவதன் மூலமாக கிடைக்கும் வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக அள்ளிக்கொள்ளலாம் என்று அறிவித்ததன் அடிப்படையில், விவசாயிகளின் நிலங்களுக்கு இயற்கை உரமாகப் பயன்படுத்தக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்துள்ளோம். இந்தத் திட்டத்தை தமிழகத்திலே அம்மாவின் அரசு தான் கொண்டுவந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்திக்கடவு அவினாசி திட்டத்தை துவங்குகின்றபொழுது சில பகுதிகள் விடுபட்டிருக்கின்றன. நமது நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், மேலும் அந்த விடுபட்ட பகுதி, பகுதி–2 திட்டத்தின் மூலமாக அண்ணூர் மேற்கு பகுதி, காரமடை, பெரியநாயக்கன்பாளையம், எஸ்.எஸ்.குளம் ஆகிய

பகுதிகளில் விவசாய பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில், நிலத்தடி நீர் உயர, இந்தத் திட்டத்திற்கும் அம்மாவின் அரசால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேட்டூர் அணையில் நீர்வரத்து குறையும்போது டெல்டா விவசாயிகள் சாகுபடி செய்வதற்காக குறுவைதொகுப்புத் திட்டம் மற்றும் சம்பா தொகுப்புத் திட்டத்தை அம்மாவினுடைய அரசுதான் அறிவித்தது.

2011ஆம் ஆண்டு முதல் நுண்ணீர் பாசன அமைப்புகளை உருவாக்க சிறு, குறு விவசாயிகளுக்கு முழு மானியமும், பிற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனக் கருவி அளிக்கப்பட்டு வருகிறது.

வேளாண் தொழிலை மேம்படுத்துவதற்கும், விவசாயிகளின் வாழ்வை வளம் பெற செய்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வருகிறது.

சாகுபடி பரப்பினை அதிகரித்தல், விவசாயத்தில் புதிய உத்திகளை கையாளுதல், விதைகள், உரங்கள் ஆகியவை உரிய நேரத்தில் கிடைக்கச் செய்தல், பாசன வசதி அளித்தல், மானிய விலையில் இயந்திரங்கள் வழங்குதல் என பல்வேறு நடவடிக்கைகளை விவசாயிகளின் நலன் கருதி மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வருகிறது.

2007இல் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்தபொழுது, அந்தத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட மத்திய அரசு மறுத்தது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உச்சநீதிமன்றத்தை நாடி 2013இல் அந்த உத்தரவை பெற்றார்கள். அதற்காக தஞ்சையிலே விவசாயிகள் ஒரு பாராட்டு விழாவை நடத்தினார்கள். அப்பொழுது மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கலந்துகொண்டு பேசுகிறபோது,

காவேரி உரிமையை மத்திய அரசிதழில் வெளியிட்ட நாள் வாழ்நாளிலே பெற்ற மகிழ்ச்சியான நாள் என்று குறிப்பிட்டு, விவசாயிகளை பெருமைப்படுத்திய தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

நான் விவசாய குடும்பத்திலே பிறந்து வந்திருக்கின்றேன். இன்று உழவர் பெருந்தலைவர் அய்யா நாராயணசாமி நாயுடு மணிமண்டபத்தை திறந்த நாள் எனது வாழ்நாளில் ஒரு பொன்னான நாளாக கருதுகிறேன் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்கெங்கெல்லாம் நீர் இருக்கின்றதோ, அந்த நீரையெல்லாம் சேமித்து வைக்கும் அளவிற்கு இன்றைக்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக ஓய்வு பெற்ற திறமையான நான்கு தலைமைப் பொறியாளர்களை நியமித்து கிட்டத்தட்ட நான்கு மாதம் ஆகிறது. அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று அங்கு இருக்கும் நதிகள் மற்றும் ஓடைகளில் ஓடுகின்ற நீர் வீணாகக் கடலிலே கலக்கின்ற நீரையெல்லாம் அங்கே தடுப்பணைகள் கட்டி சேமித்து வைக்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை உருவாக்கியிருக்கின்றோம். ஆகவே, இது மூன்றாண்டு திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, முதற்கட்டமாக 328 கோடி ரூபாய் ஒதுக்கி, நதிகள், ஓடைகளின் குறுக்கே தடுப்பணை கட்டுகின்ற பணி துவக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இன்றைக்கு படிப்படியாக தமிழகம் முழுவதும் இருக்கின்ற ஓடைகள், நதிகள் குறுக்கே தடுப்பணை கட்டப்பட்டு, நீரை சேமித்து, நிலத்தடி நீர் உயர்கின்ற சூழ்நிலையை அம்மாவினுடைய அரசு ஏற்படுத்தும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு வரலாற்றுச் சாதனையான திட்டத்தை நாங்கள் இயற்றியிருக்கின்றோம். மத்திய அரசோடு தொடர்பு கொண்டு

அந்தத் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம் என்பதை இந்த நேரத்தில் ஆணித்தரமாக தெரிவித்துக்கொள்கிறேன். கோதாவரி–காவேரி இணைப்பு நிச்சயம் அம்மாவினுடைய அரசு நிறைவேற்றித் தரும். ஆகவே, கோதாவரியில் உற்பத்தியாகின்ற நீர் கிட்டத்தட்ட 2,500 டி.எம்.சி. தண்ணீர் கடலிலே கலந்து வீணாகிறது. அந்த வீணாகின்ற நீரை, தெலுங்கானா, ஆந்திரா மூலமாக தமிழ்நாட்டிற்கு கொண்டு வந்து சுமார் 200 டி.எம்.சி தண்ணீர் தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது. அது விரைந்து செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்தில் ஆணித்தரமாக தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, நீண்ட நாட்களாக விவசாயிகள் போராடி வரும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். ஏனென்று சொன்னால், ஒவ்வொரு காலகட்டத்திலும் பருவமழை பொய்க்கின்றபொழுது, டெல்டா பாசன விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். அந்த விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற நிலையை மாற்றி, அதுபோல 20 மாவட்டங்களுக்கு காவிரி நீர்தான் குடிநீர் ஆதாரமாக இருக்கின்றது. ஆகவே, பல்வேறு காலகட்டங்களில் விவசாயிகள் நடவு செய்கின்றபொழுது, தண்ணீர் இல்லாமல் காய்ந்து விடுகின்றது, நஷ்டம் ஏற்படுகின்றது. ஆனால், இந்த கோதாவரி–காவிரி இணைப்புத் திட்டத்தின் மூலமாக நிரந்தர தீர்வு காணப்படும் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அம்மாவினுடைய அரசு விவசாயிகளுக்காக ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதுமட்டுமல்ல, இன்றைக்கு நவீன முறையில் விவசாயத் தொழிலை மேற்கொள்ள அம்மாவினுடைய அரசால் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களின் மூலமாக விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகளை விற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு, சந்தை ஏற்படுத்துவதற்காக ஆங்காங்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 10 மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயிகள்

உற்பத்தி செய்கின்ற காய்கறிகளை அங்கே விற்பனை செய்யலாம், ஆன்–லைனிலும் விற்பனை செய்யலாம். விளைபொருட்களுக்கு குறைந்த விலை வருகின்றபொழுது பாதுகாத்து வைப்பதற்காக குளிர்பதனக் கிடங்குகளும் கட்டித் தரப்பட்டுள்ளது. விவசாய சந்தைகளின் மூலமாக சேகரிக்கப்பட்ட காய்கறிகளையெல்லாம் ஒரே இடத்தில் விற்பனை செய்வதற்கும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் மற்றும் விவசாயிகள் நல்ல விலைக்கு விற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க, சென்னைக்கு அருகில் ரூபாய் இரண்டாயிரம் கோடியில் உணவுப் பூங்கா ஒன்று, தனியார் பங்களிப்போடு அமைப்பதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. இத்திட்டத்திற்கு தேவையான கிட்டத்தட்ட 300 ஏக்கருக்கும் மேலான நிலம் கையகப்படுத்துவதற்கான பணி ஆய்வில் இருந்து கொண்டிருக்கிறது.

விவசாயிகளின் உபதொழிலாக இருப்பது கால்நடை. ஆசியாவிலேயே மிகப்பெரிய கால்நடை ஆராய்ச்சி மையம் தமிழ்நாட்டில் அமையவிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். பல்வேறு வகையான பசுக்கள், ஆடுகள், கோழிகள், மீன் வளர்ப்பு குறித்து விவசாயிகள் அறிந்துகொள்வதற்கும், விவசாயிகளுக்கு கூடுதலான விலை கிடைப்பதற்கும் இவ்வாராய்ச்சி மையம் பயன்படும் என்பதையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மாவினுடைய அரசு விவசாயிகளின் அரசு; விவசாயிகளின் நலன் காக்கக்கூடிய அரசு. இரவு, பகல் பாராமல், வெயில், மழை என்றும் பாராமல் உழைக்கின்ற விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறவேண்டும், விவசாயத் தொழிலாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்ற நோக்கோடு, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் என இரண்டு பேரையும் காக்கின்ற அரசாக அம்மாவினுடைய அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது.

அவர்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருங்காலத்தில் விவசாயத்தொழில்மிகச்சிறந்ததொழிலாகதிகழ்வதற்குதேவையான நடவடிக்கைகளை அம்மா அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உலகப் பெருந்தலைவர் அய்யா நாராயணசாமி நாயுடு மண்டபம் இங்கே திறக்கப்படும் என்று அறிவித்தபடி தமிழ்நாடு அரசு மிகச் சிறப்பாக, பிரம்மாண்டமான முறையில் கட்டி, உங்கள் அத்தனைபேரின், மேடையிலே வீற்றிருக்கின்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆசியோடு, ஆதரவோடு, விவசாயப் பெருமக்களுடைய நினைவைப் போற்றுகின்ற விதத்திலே மறைந்த அய்யா அவர்களுக்கு மரியாதை செலுத்துகின்ற விதமாக புகழ் சேர்க்கின்ற விதமாக மணிமண்டபம் திறந்ததிலே மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள், 06.02.2019 அன்று*
கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர், வையம்பாளையத்தில்
அமைக்கப்பட்டுள்ள உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு
அவர்களின் மணிமண்டபத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை.

மருத்துவத் துறையில் சாதனைப் படைத்து சிறந்த மருத்துவ சுற்றுலா தளமாக தமிழ்நாடு விளங்கி கொண்டிருக்கிறது!

மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,

பேரூர் ஆதினம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அறக்கட்டளை மூலம் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவமனை கட்டடத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மிகச் சிறப்பான விழாவிலே கலந்துகொண்டு தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அண்ணன் திரு.கே.தனபால் அவர்களே!

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் சகோதரர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!

சட்டப் பேரவையின் துணைத்தலைவர் அண்ணன் திரு.பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களே!

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய இந்த மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு காரணமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற சாந்தலிங்க மருதாசல அடிகளார் அவர்களே!

திரு. இராமனந்த குமரகுருபர அடிகளார் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு.சி. மகேந்திரன் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஹ.மு.செல்வராஜ் அவர்களே! மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் மரியாதைக்குரிய சகோதரர் திரு. அர்ச்சுனன் அவர்களே! திரு. அருண்குமார் அவர்களே! திரு. கனகராஜ் அவர்களே! திரு. சண்முகம் அவர்களே! திரு. சின்னராஜ் அவர்களே! திருமதி கஸ்தூரி வாசு அவர்களே! திரு. ஆறுக்குட்டி அவர்களே! திரு. குணசேகரன் அவர்களே! திரு.விஜயகுமார் அவர்களே! திரு.ஈஸ்வரன் அவர்களே! மற்றும் முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் திரு.வேலுச்சாமி அவர்களே! சகோதரர் திரு.ஆனந்தன் அவர்களே! முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கருப்பசாமி அவர்களே, வருகை தந்திருக்கின்ற கோவை மருத்துவமையம் மற்றும் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் ஜி.பழனிசாமி அவர்களே! மருத்துவமனையின் இயக்குநர் அவர்களே மற்றும் இந்த அறக்கட்டளையினுடைய நிர்வாகிகள் மரியாதைக்குரிய திரு.மாணிக்கம் அவர்களே, பன்னாரி குழுத்தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்களே! மற்றும் ரூட்ஸ் குழும தலைவர் திரு.எஸ்.ராமசாமி அவர்களே! திரு.ஆறுமுகசாமி

அவர்களே! ஸ்ரீ கிருஷ்ணா பொறியியல் கல்லூரியின் தலைவர் திருமதி மலர்விழி அவர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கிற, மேடையிலே வீற்றிருக்கின்ற ஆன்றோர் பெருமக்களே! சான்றோர் பெருமக்களே! பெரியோர்களே! தாய்மார்களே! கழகத்தினுடைய பல்வேறு பொறுப்பாளர்களே, கழக ஒன்றிய செயலாளர் அவர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆரோக்கியமான நாடு தான் வளமான நாடு என கருதப்படும். தரமான மருத்துவ சேவை, மாநிலத்தின் மூலை முடுக்குகளில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு பல சுகாதார திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அது மட்டுமின்றி, மாறிவரும் தொழில் நுட்ப வசதிகளை உள்ளடக்கிய தரமான மருத்துவ சேவையை மக்களுக்கு வழங்குவதிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சுகாதாரத் துறைக்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு அதிக முக்கியத்துவம் அளித்து நிதி நிலை அறிக்கையில் அதிகமான நிதி ஒதுக்கி வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசால் சுகாதாரத் துறைக்காக ஒதுக்கப்பட்ட நிதி 62,705.17 கோடி ரூபாய். இதன் பயனாக அரசு மருத்துவமனைகள் அனைத்தும் சிறப்பாக பராமரிக்கப்பட்டு, தரமான மருத்துவ சேவைகளை வழங்கி வருகிறது. இன்றைக்கு அரசு மருத்துவமனைகளை பொதுமக்கள் அதிக அளவில் பயன்படுத்தி வருகின்றனர். மக்களுக்கு தரமான மருத்துவ சேவைகளை அளிப்பதில் அரசு மருத்துவமனைகளோடு,

தனியார் மருத்துவமனைகளும் சிறப்பாக சேவையாற்றி வருகிறது. இன்றைக்கு வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும், தரமான மருத்துவ சிகிச்சை குறைந்த செலவில் பெறுவதற்காக அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டிற்குத் தான் வருகிறார்கள். அந்த அளவிற்கு வளர்ச்சியடைந்து “மருத்துவ சுற்றுலா” தளமாக தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த நிலையை அடைய தனியார் மருத்துவமனைகளும் பெரும் பங்காற்றியுள்ளது என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தென் இந்தியாவின் தொழில் நகரம் என்றழைக்கப்படும் கோயம்புத்தூர் மாநகர் பலதரப்பட்ட மக்களை உள்ளடக்கியது. தொழிலாளர்களும், வணிகர்களும் நிறைந்த நகரம் இது. ஆகவே, இந்த மாவட்டமும், அருகிலே இருக்கின்ற திருப்பூர் மாவட்டம், இரண்டு மாவட்டங்களுமே இன்றைக்கு தொழில் வளம் மிகுந்த மாவட்டம், நிறைய விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் நிறைந்த மாவட்டம். ஆகவே, ஏழைகள் அதிகமாக இருக்கின்ற மாவட்டத்திலே இந்த மருத்துவமனை துவக்கப்பட்டது பொருத்தமாக இருக்கும்

என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன். இம்மருத்துவமனை இன்றைக்கு பல்வேறு சிறப்புகள் அடங்கிய மருத்துவமனையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

1 இலட்சத்து 15 ஆயிரம் சதுர அடியில் இந்த மருத்துவமனை கட்ட இருப்பதாவும், 110 அறைகள் கொண்ட மருத்துவமனையாக இருக்கும் என்றும் இங்கே நான் பேசுகின்றபொழுது, என்னிடத்திலே சொல்லி இருக்கின்றார்கள். பல்நோக்கு மருத்துவமனையாக இந்த மருத்துவமனை அமைகின்றது. இந்த மருத்துவமனை அமைகின்றபொழுது, இந்த சுற்றுப் பகுதியில் இருக்கின்ற அத்தனை பேரும் சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலை, இந்த மருத்துவமனையால் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, அம்மாவினுடைய அரசு இன்றைக்கு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, இந்த மருத்துவமனை ஏழை, எளிய மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் மருத்துவ சேவை வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அம்மாவினுடைய அரசு மருத்துவத் துறையில் மிகப்பெரிய சாதனையை படைத்துக் கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட கிராமங்களில் மருத்துவமனை அமைகின்றபொழுது, சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமத்தில் இருக்கின்ற ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் எல்லாம் இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை பேரூர் ஆதினம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் அறக்கட்டளை இன்றைக்கு நிறைவேற்றி இருப்பது போற்றுதலுக்குரிய ஒரு செயலாகும்.

தமிழகத்திலே ஆன்றோர் பெருமக்கள், சான்றோர் பெருமக்கள் இருந்தாலும் கூட, எனக்கு முன்னால் பேசியவர் குறிப்பிட்டதைப் போல, கல்வியிலே அறக்கட்டளை துவக்குகின்றார்கள். ஒரு நாடு வளம் பெற வேண்டுமென்றால் கல்வி கிடைக்க வேண்டும். எந்த மாநிலத்தில் கல்வி கிடைக்கின்றதோ அந்த மாநிலம் வளரும். அந்த மாநிலத்திலே வளர்ச்சியை பார்க்க முடியும். அங்கேதான், உயர்வு காணப்படும், பொருளாதார மேம்பாடு அடையும், அமைதி நிலவும், அன்பு உயரும், ஒரே நேரத்தில் அத்தனையும் கிடைக்க வேண்டுமென்றால் கல்வி உயர வேண்டும். அப்படி கல்விசார் மாவட்டமாக இன்றைக்கு கோவை மாவட்டம், திருப்பூர் மாவட்டம் திகழ்ந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் மருத்துவம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மருத்துவமனை மிகச் சிறப்பான மருத்துவமனை. Kovai Medical Center and Hospital மிக தரமான மருத்துவ சேவையை செய்து கொண்டிருக்கின்றார்கள். அதற்கு பக்கபலமாக இந்த மருத்துவமனை வளரும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, இந்த அறக்கட்டளையால் செயல்படுத்தப்பட்டு இந்த மருத்துவமனை இன்றைக்கு ஏழை, எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய மருத்துவமனையாக அமைந்திருப்பதற்கு பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.02.2019 அன்று*
கோயம்புத்தூர் மாவட்டம், முதலிப்பாளையத்தில்,
பேரூர் ஆதினம் சீர்வளர்சீர் சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
அறக்கட்டளையின் சாந்தலிங்கர் மருத்துவமனை
அடிக்கல் நாட்டு விழாவில் ஆற்றிய உரை.

சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் புதிய தொழில் தொடங்க தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

கோவை மாவட்ட சிறு தொழில்கள் சங்கம்–கொடிசியா மற்றும் கொடிசிய தொழிற் பூங்கா நிறுவனம் மோப்பிரிபாளையம் மற்றும் கள்ளப்பாளையம் ஆகிய இடங்களில் நிறுவியுள்ள கொடிசியா தொழிற்பூங்காவை துவக்கி வைக்கும் விழாவில் கலந்துகொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களே கலந்து

கொள்வதாக இருந்தது, தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்த நிகழ்ச்சியில் அவர் கலந்துகொள்ள முடியவில்லை.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே சுருக்கமாக, விளக்கமாக பேசி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் சகோதரர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் சகோதரர் திரு. எம்.சி.சம்பத் அவர்களே!

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் சகோதரர் திரு.பி.பென்ஜமின் அவர்களே!

மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அண்ணன் திரு. பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களே!

இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. கனகராஜ் அவர்களே!

பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.C.மகேந்திரன் அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.A.K.செல்வராஜ் அவர்களே! மத்திய கயிறு வாரியத் தலைவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.C.P.ராதாகிருஷ்ணன் அவர்களே!

சகோதரி திருமதி வானதி சீனிவாசன் அவர்களே!

கோயம்புத்தூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அர்ச்சுனன் அவர்களே!

கோயம்புத்தூர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. அருண்குமார் அவர்களே!

கிணத்துக்கடவு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சண்முகம் அவர்களே!

மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்களே!

வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி கஸ்தூரி வாசு அவர்களே!

கவுண்டம்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆறுக்குட்டி அவர்களே!

சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! கொடிசியா அமைப்பின் தலைவர் திரு. ராமமூர்த்தி அவர்களே! மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஏ.வி.வரதராஜன் அவர்களே! மற்றும் கொடிசியா அமைப்பின் நிருவாகிகளே! அமைப்பாளர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! பெரியோர்களே! தாய்மார்களே!

அத்தனைபேருக்கும் முதற்கண் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தினை தெரிவித்துக்கொண்டு,

மாண்புமிகு அம்மா அவர்கள் 2015ஆம் ஆண்டில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதைத் தொடர்ந்து, மாண்புமிகு அம்மாவின் அரசு சென்ற ஜனவரி மாதம் 23 மற்றும் 24 ஆகிய தினங்களில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை மீண்டும் நடத்தியது. இம்மாநாட்டில் 10 இலட்சத்து 50 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிடும் வகையில், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் 3 இலட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டன. இவற்றில் சிறு, குறு தொழில்களுக்கு மட்டும் 32 ஆயிரத்து 206 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறையில் புதிய தொழில் தொடங்க தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை (Start up Policy) சமீபத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசால்

வெளியிடப்பட்டுள்ளது. தொழில்நுட்பம் வழியே புத்தாக்கத்திற்கு உகந்த சூழலை உருவாக்குவதே இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டில் துடிப்பான புத்தொழில் சூழலை உருவாக்குவதன் மூலம் 2023க்குள் 10 உலகளாவிய உயர் வளர்ச்சி புத்தொழில்கள் உட்பட, குறைந்தபட்சம் 5,000 புத்தொழில்கள், உருவாக்கப்பட்டு, அதன் மூலம் அதிக வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி அடையும் நோக்கத்திலேயே இந்த கொள்கை வெளியிடப்பட்டுள்ளது என்பதை இங்கே பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில், தனியே ஒரு இணையதள ஒற்றைச் சாளரத் தகவு ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் புதிய முதலீடுகளுக்கு விரைவாகவும், எளிதாகவும் இசைவு வழங்கப்படுகிறது. இதனால், புதிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, ஆயிரக்கணக்கான நபர்களுக்கு புதியதாக வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை பன்னாட்டு மயமாக்கவும், வெளிநாட்டின் ஒத்துழைப்பைப் பெறவும், தமிழ்நாட்டில் முதலீட்டை ஈர்க்கவும் ஒற்றைச் சாளர அமைப்பாக "குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பு" ஒன்று உருவாக்க வேண்டும் என்று கொடிசியா உட்பட பலதரப்பிலிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. இது அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்த பெரிய தொழில் நகராக கோயம்புத்தூர் திகழ்கிறது. இங்கு பல ஆயிரம் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றின் பெரும்பாலானவை சிறு, குறு, தொழிற்சாலைகளாகும்.

கோவை மாவட்ட சிறு தொழில் அதிபர்கள் சங்கம், அதாவது, கொடிசியா 40 உறுப்பினர்களுடன் 1969ஆம் ஆண்டு

தொடங்கப்பட்டது. சிறுதொழில் செய்வோரின் குறைகள் மற்றும் தொழில் வளர்ச்சிக்கான கருத்துக்களை அரசாங்கத்திடம் எடுத்துச் செல்லவும், அதற்கான தீர்வு காணவும் இந்த சங்கம் உருவாக்கப்பட்டது. அந்த வகையில் சுமார் 50 ஆண்டு காலமாக இப்பகுதியின் தொழில் வளர்ச்சிக்கு கொடிசியா செயல்பட்டு வருகிறது. 40 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்ட இச்சங்கம், இன்று கிட்டத்தட்ட ஆறாயிரம் உறுப்பினர்களுக்கு மேலான எண்ணிக்கையுடன் செயல்பட்டு வருகிறது என்பதை அறிவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சிறு தொழில் வளர்ச்சிக்கும், வளத்திற்கும் வழிகோலிட துவக்கப்பட்ட இச்சங்கம், கோயம்புத்தூரின் தொழில் துறை உறுதியாக வளர்ச்சியடைய காரணமாக இருந்து வருவது மட்டுமல்லாமல், தொழில் முனைவோரின் தேவைகளை ஒட்டி பல கருத்தரங்குகளும், பயிலரங்குகளும், தொழில் துறை கண்காட்சிகளும் நடத்தி வருகிறது.

கொடிசியாவின் சிறப்பு செயல்பாடுகளில் ஒன்றாக அதன் தொழில் கண்காட்சிகளை குறிப்பிடலாம். குறிப்பாக, 1988ஆம் ஆண்டு பெரிய அளவிலான இன்டெக் 88 எனும் சர்வதேச கண்காட்சி நடைபெற்றது.

இச்சங்கம் நடத்தும் பன்னாட்டு தொழில் கண்காட்சிகள், ஆரம்பத்தில் பி.எஸ்.ஜி. மைதானத்தில் நடந்து வந்தன. பின்னர், கோவையை அடுத்த விளாங்குறிச்சியில் 40 ஏக்கர் பரப்பளவில் 11 கோடி ரூபாய் செலவில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரு மாபெரும் கட்டடத்தை கட்டியது. இந்தக் கட்டடம் யாதொரு தூணும் இன்றி கட்டப்பட்டுள்ளது ஓர் பொறியியல் சாதனையாகும். இக்கட்டடம் கொடிசியா உறுப்பினர்களின் ஒற்றுமைக்கும், திறமைக்கும் சான்றாக விளங்குகிறது. உலகத் தரமான கண்காட்சிகளை நடத்திட வேண்டிய அனைத்து வசதிகளையும் தன்னகத்தே கொண்டு, புதுடில்லியிலுள்ள பிரகதி மைதானத்திற்கு ஒப்பாக,

தென்னிந்தியாவிலேயே மிகப்பெரிய தொழில் துறை காட்சிக் கூடமாகவும் இந்த வளாகம் விளங்குகிறது.

2016ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின் மாவட்ட அளவிலான சிறந்த தொழில் அமைப்புக்கான BMO விருது, 2018ஆம் ஆண்டுக்கான பொறுப்புணர்வு மிக்க தொழில் அமைப்புக்கான விருது ஆகிய விருதுகளை கொடிசியா பெற்றுள்ளது. இவ்விருதுகள் தொழில் வளர்ச்சிக்கு இந்த அமைப்பு காட்டும் அக்கறைக்கு கிடைத்த அங்கீகாரம் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேற்கு மண்டலத்தைச் சார்ந்த இப்பகுதி மக்கள் இயற்கையாகவே தொழில் தொடங்குவதில் ஆர்வம் மிக்கவர்கள். அதனால்தான், கோயம்புத்தூர் மாவட்டமும், அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களும் மிக வேகமாக வளர்ச்சி அடைந்து வருகின்றன. எனவேதான், இப்பகுதி மக்களின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, கோயம்புத்தூர் மாநகரத்தில் புதிய மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கை தயாரிக்கும் ஆரம்ப கட்டப் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் ஓராண்டில் முடிவடையும் என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வளர்ந்து வரும் கோயம்புத்தூர் நகர தொழில் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் விதமாக விமான போக்குவரத்து சேவையினை அதிகரிக்கும் வகையில், தற்போதுள்ள விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கான நில எடுப்புப் பணிகள் மிக விரைவாக நடைபெற்று வருகின்றன.

மேலும், இம்மாவட்ட தொழில் முனைவோர்கள் மற்றும் பொதுமக்கள் பயனடையும் விதத்தில் கோயம்புத்தூர் விமான நிலையத்தில் இரவில் தங்கிச் செல்லும் விமானங்களுக்கான எரிபொருள் மீதான வரியினை 29 சதவீதத்தில் இருந்து ஒரு சதவீதமாக குறைத்து மாண்புமிகு அம்மாவின் அரசு உத்தரவிட்டுள்ளது.

கோயம்புத்தூரில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்காக ஆற்றுப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு வரை மேம்பாலம் ஒன்றினை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். இத்திட்டத்திற்காக ரூபாய் 128 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமயத்தில், பொள்ளாச்சி மற்றும் கோவையைச் சார்ந்த பொதுமக்கள் இம்மேம்பாலத் திட்டத்தினை பொள்ளாச்சி–பாலக்காடு சாலை சந்திப்பு வரை நீட்டிப்பு செய்ய கோரிக்கை வைத்தார்கள். இதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி முடிந்தவுடன், ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பாலம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படும். ஏற்கெனவே மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் விரிவாகச் சொன்னார்கள், அவரும் அந்தக் கோரிக்கையை வைத்தார். அவருடைய கோரிக்கையையும் நிறைவேற்றும்விதமாக அந்தப் பணி தொடங்கப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

இவ்விரு திட்டங்களும் 2020க்குள் முடிவடையும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்தத் திட்டங்கள் மூலம் கோவை மாநகரத்திலிருந்து பொள்ளாச்சி செல்லும் நேரம் குறைவதோடு மட்டுமல்லாமல், உக்கடம் பகுதியில் போக்குவரத்து நெரிசலும் வெகுவாகக் குறையும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கோவை மாநகரத்திலுள்ள அவினாசி சாலையில், உப்பிலிபாளையம் முதல் சின்னியம்பாளையம் வரை 9 கி.மீ. நீளமுள்ள ஓர் உயர்மட்ட சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கோவை மாநகரின் போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருகி வரும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் தேவையை கருத்தில் கொண்டு, 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கட்டுமானம், இயக்கங்கள் மற்றும் பராமரிப்புச் செலவு உட்பட அனைத்துப் பணிகளுக்காகவும் ரூபாய் 2,961 கோடிக்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு களஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு முன்னோடிப் பகுதியாக ஆர்.எஸ்.புரம் பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டம் நிறைவேறுகின்றபொழுது கோவை மாநகரம், கோவை மாவட்டத்தில் இருக்கின்ற மக்களுக்கு தங்குதடையில்லாமல் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட கவுண்டம்பாளையம், வடவள்ளி மற்றும் வீரகேரளம் ஆகிய மூன்று பகுதிகளிலும் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் ரூபாய் 108 கோடிக்கு வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான 85 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அனைத்துப் பணிகளும் வரும் ஏப்ரல், 2019க்குள் முடிவடைந்து, இத்திட்டத்தை முழுமையாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இப்பகுதி விவசாய பெருங்குடி மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று, 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில நிதியின் மூலம் அத்திக்கடவு – அவிநாசி திட்டம் செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்பட்டு இந்த மாத இறுதிக்குள் இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புற பகுதிகள் வளர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணத்தில், கள்ளப்பாளையம், மோப்பிரிபாளையம் ஆகிய இரு இடங்களில் 375 ஏக்கர் பரப்பளவில் கொடிசியா தொழில்

பூங்காக்களை அமைத்துள்ளது. அதை நான் இன்று திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த 375 ஏக்கர் நிலத்தில் மோப்பிரிபாளையத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு அளித்த 5 ஏக்கர் நிலமும் அடங்கும். மேலும், இவ்விரண்டு பூங்காக்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் வகையில் மாண்புமிகு அம்மாவின் அரசு தலா 10 கோடி ரூபாய் வழங்க ஆணையிட்டுள்ளது.

இத்தொழில் பூங்காவில் 322 சிறுதொழில் நிறுவனங்கள் தங்கள் தொழில் கூடங்களை அமைக்க உள்ளன. இதன்மூலம் சுமார் 3,000 கோடி ரூபாய்க்கு முதலீடுகள் வர வாய்ப்பும், சுமார் 10 ஆயிரம் நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 20 ஆயிரம் நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கப் பெறும். இது சிறு தொழில் வளர்ச்சிக்காக கொடிசியா அமைப்பு ஆற்றும் பணிகளின் ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

கொடிசியா இராணுவத் தொழில் புத்தாக்க மையம், அடல் இன்குபேஷன் மையம், கொடிசியா திறன் மேம்பாட்டு மையம், கூட்டரங்க மையம் ஆகியவை கொடிசியாவின் வருங்காலத் திட்டங்கள் என்பதை அறிவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கொடிசியா இது போன்ற தொழில் பூங்காக்களை பல்வேறு பின்தங்கிய பகுதிகளில் அமைத்து மேன்மேலும் வளர வேண்டும் என்று மனதார பாராட்டுகிறேன்.

தமிழ்நாடு அரசு கடந்த ஜனவரி மாதம் முதல் ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்துள்ளது அனைவரும் அறிந்ததே. வருங்கால சந்ததியின் நலனை கருத்தில் கொண்டு, கொண்டுவரப்பட்ட இந்தத் தடைக்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இதனால், பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் சில நிறுவனங்கள் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பிற பொருட்களை உற்பத்தி செய்வதற்கு சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை மூலம் கடனுதவி உட்பட பல்வேறு

வசதிகளையும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கி வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதை மேலும் அதிகரிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் இந்த முடிவுக்கு சிறு, குறு தொழில் நிறுவன அதிபர்கள் உதவிட வேண்டும் என்றும், குறைந்த விலையில் மாற்று பொருட்களை உற்பத்தி செய்து, பொதுமக்களிடையே கொண்டு சென்று, அரசின் இந்த பிளாஸ்டிக் ஒழிப்பு திட்டத்திற்கான வெற்றியில் நீங்களும் பங்குகொள்ள வேண்டும் என்று உங்கள் அனைவரையும் இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பினை பெருக்குவதற்கும், பொருளாதார வளர்ச்சியினை முன்னேற்றவும் உதவிடும் வகையில், 3,100 கோடி ரூபாய் மதிப்பில் தமிழ்நாட்டில் ராணுவ தளவாட உற்பத்தி முனையம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு நிகழ்ச்சிக்கு மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் வருவதாக இருந்தார்கள். ஆனால், பல்வேறு காரணங்களால் வரமுடியவில்லை. இருந்தாலும், நம்முடைய கொடிசியா பகுதியிலே இந்த அமைப்பை உருவாக்குவதற்கு மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு உங்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், மரியாதைக்குரிய பெரியவர் ஐயா வரதராஜன் அவர்கள் அழகாக, அருமையாக பல கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார். ஒரு தொழிற்சாலை அமைப்பது எவ்வளவு கஷ்டம் என்பதை இங்கே விரிவாக எடுத்துரைத்தார். அதுவும், நிலம் எடுப்பதற்கு எவ்வளவு பிரச்சினை இருந்தது, அதற்கு யார் யாரெல்லாம் உறுதுணையாக இருந்தார்கள் என்பதையெல்லாம் இங்கே விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். அதுமட்டுமல்லாமல், பெரிய தொழிற்சாலை வருகின்றபொழுது, அதிக முதலீடு தேவைப்படுகிறது, குறைந்த ஆட்கள் தான் அதிலே பணிக்கு சேர்க்கப்படுகின்றார்கள். அதே நேரத்தில், சிறு தொழில்கள்

வருகின்றபொழுது அதிகமான வேலைவாய்ப்பு கிடைக்கின்றன, முதலீடு குறைவாக இருக்கின்றது, ஆகவே, வேலைவாய்ப்பை பெருக்குவதற்கு சிறு தொழிலை ஊக்குவிக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். அம்மாவினுடைய அரசு எப்பொழுதும் உங்களுக்குத் துணை நிற்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதேபோல, பெரிய தொழில்கள் அதிகம் வந்தால்தான், சிறு தொழில்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஏனென்றால், பெரிய தொழிலுக்கு தேவையான உதிரி பாகங்களை சிறு தொழில் மூலமாகத்தான் கொடுக்க முடியும். பெரிய தொழில் ஊக்குவிக்கப்படுகின்றபொழுது சிறிய தொழில் தானாக வளரும் என்பதையும் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். எனவே, பெரிய தொழிலும், சிறிய தொழிலும் ஒரு வண்டிக்கு இரண்டு சக்கரம் போன்றது. இரண்டு சக்கரம் இருந்தால்தான் இலக்கை அடைய முடியும். ஆகவே, இரண்டு தொழில்களும் ஒன்றாக இணைகின்றபொழுதுதான், தொழில் மேம்பாடு முன்னுக்கு வரும், தொழில் வளர்ச்சி காண முடியும்.

அதோடு இந்தக் கருத்தைச் சொல்கின்றபொழுது எவ்வளவு கஷ்டப்பட்டார் என்பதையும் ஐயா சொன்னார். நாங்களும் அதேபோலத்தான் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். ஒரு தொழில் பூங்கா அமைக்கின்றபொழுதே எவ்வளவு கஷ்டம் இருக்கின்றது. இதற்கு உங்களுக்கு பலர் உதவி செய்கின்றார்கள். ஆனால், ஒரு அரசை நடத்துகின்றபொழுது எவ்வளவு கஷ்டம் இருக்கும் என்பதை நீங்கள் உணர வேண்டும். இந்த மிகப்பெரிய, பரந்து, விரிந்த மாநிலம். **234** சட்டமன்ற உறுப்பினர்களையும், **39** நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கொண்ட மாநிலம். இங்கே பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன, உருவாக்கப்படுகின்றன. சில அரசியல்வாதிகளின் சுயநலத்திற்காக உருவாக்கப்படுகின்றன. அண்மையில்கூட, சென்னையில், இதயதெய்வம் புரட்சித்தலைவி

அம்மா அவர்கள், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருக்கின்ற தொழிலதிபர்களும், வெளிநாட்டில் இருக்கின்ற தொழிலதிபர்களும் நம்முடைய நாட்டிற்கு வந்து தொழில் தொடங்குவதற்காக 2015ஆம் ஆண்டு மிகப்பெரிய தொழில் முதலீட்டாளர் மாநாட்டை நடத்தினார்கள். இதில், சுமார் ரூபாய் 2 இலட்சத்து 42 ஆயிரம் கோடி தொழில் முதலீடு ஈர்க்கப்பட்டது. அந்தத் தொழில் முதலீட்டாளர்களுக்கு நமது அரசு சிறப்பாக உதவி செய்ததின் விளைவாக அத்தனைபேரும் ஆர்வத்தோடு, இப்பொழுது ரூபாய் 3 இலட்சத்து 431 கோடி முதலீடு செய்வதற்காக 304 நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுவதற்கு முன் வந்திருக்கின்றார்கள்.

இவற்றையெல்லாம் அரசியலாக்கப் பார்க்கின்றார்கள். இது அரசியலுக்கு அப்பாற்பட்டது. ஒரு நாடு வளர்ச்சி பெற வேண்டுமென்றால் விவசாயம், தொழில் வளம் இரண்டும் சிறப்பாக இருக்க வேண்டும். அதற்கு அத்தனைபேரின் ஒத்துழைப்பும் சிறப்பாக இருக்க வேண்டும். இதிலெல்லாம் சிலர் அரசியல் செய்யப் பார்க்கின்றார்கள். தொழில் முதலீட்டாளர்களாகிய நீங்கள் அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லாமல், எங்கள் தரப்பிலிருந்து, மாண்புமிகு தொழில் துறை அமைச்சராக இருந்தாலும் சரி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சராக இருந்தாலும் சரி, மற்ற துறைகளின் அமைச்சர்களாக இருந்தாலும் சரி, எப்பொழுது நம்முடைய சிறு, குறு, நடுத்தர தொழிலதிபர்கள் வருகின்றார்களோ அவர்களுக்கு தேவையான உதவிகளை உடனுக்குடன் செய்து கொடுக்க வேண்டுமென்று நாங்கள் ஆலோசனை வழங்கியிருக்கின்றோம். அவர்களை அணுகுகின்றபொழுது உங்களுக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் செய்வார்கள் என்பதை இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். ஆகவேதான், ஒரு தொழிற்சாலை புதிதாக வரவேண்டமென்று சொன்னால், 30 நாட்களுக்குள் அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்ற உத்தரவையும் நாங்கள் பிறப்பித்திருக்கின்றோம்.

ஆகவே, தொழில் செய்வதற்கு உதவிகரமாக இருக்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொடங்கியதை, அம்மா அவர்கள் அரசு தொடர்ந்து செயல்படுத்தி, இந்தியாவிலேயே, தமிழகம் தொழில் துவங்க உகந்த மாநிலம் என்ற ஒரு பெயரை பெற்றிருக்கின்றது. அதற்குக் காரணம், தமிழகத்திலே சட்டம்–ஒழுங்கு சிறப்பாக இருக்கின்றது. மற்ற மாநிலங்களைப் பார்க்கின்றபொழுது தமிழகம் தான் சட்டம்–ஒழுங்க சிறந்த மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. டெல்லியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்தியா டுடே என்ற ஆங்கில நாளேடு பல்வேறு மாநிலங்களில் சர்வே செய்ததில், சட்டம்–ஒழுங்கில் சிறந்த மாநிலத்தில் தமிழ்நாடு தான் முதலிடம் வகிக்கின்றது என்றும், அதற்கான விருதை மாண்புமிகு துணைக் குடியரசுத் தலைவர் மரியாதைக்குரிய வெங்கைய நாயுடு அவர்கள் வழங்கினார்கள்.

இதை எதற்காகச் சொல்கிறேனென்றால், ஒரு தொழில் தொடங்கும்பொழுது, அதற்கான வசதிகள் அந்த மாநிலத்தில் உருவாக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குத்தான் என்றைக்கும் இல்லாத அளவிற்கு, அதிகமான மேம்பாலங்கள், சாலை விரிவாக்கம் போன்றவற்றை கொடுத்திருக்கின்றோம். கடந்த கால ஆட்சிக்கும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும் சரி, இப்பொழுதும் சரி, சாலைகளின் விரிவாகக்கத்தை அதிகளவில் நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். 2 வழிச்சாலைகளை 4 வழிச் சாலைகளாகவும், 4 வழிச்சாலைகளை 8 வழிச்சாலைகளாகவும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றோம். சேலத்திலிருந்து கோவை வருகின்ற சாலை 8 வழிச்சாலையாக உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தப் பணிகள் எல்லாம் துவங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், அவினாசியிலிருந்து மேட்டுப்பாளையம் வரைக்கும் சாலைகள் விரிவாக்கம்

செய்யப்பட்டுள்ளன. இப்படி பல்வேறு சாலைகளை விரிவாக்கம் செய்வதன் மூலமாக உட்கட்டமைப்பு வசதிகளை சிறப்பாக செய்து கொடுப்பதன் மூலமாக தொழில் வளம் பெருகும். அம்மாவினுடைய அரசு தொழில்முனைவோர்களுக்கு உதவியாக இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த அரசு உங்களுடைய அரசு, நீங்கள் எப்பொழுதும் நாடலாம். உங்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றோம் என்பதையும் சுட்டிக்காட்டி,

இந்த விழாவை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்வதோடு, நான் எப்பொழுதும் யாரையும் காக்க வைக்காமல் உரிய நேரத்தில் சென்று யாருக்கும் எவ்விதக் கஷ்டமும் கொடுக்கக்கூடாது என்று நினைப்பதுடன், நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்ததிலிருந்து இன்று வரை அதை கடைபிடித்தும் வருகின்றேன். இருந்தாலும் இன்றையதினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 5 நிகழ்ச்சி என்று சொல்லிவிட்டு 30 நிகழ்ச்சி என்று பல்வேறு நிகழ்ச்சியை வைத்துவிட்டதன் காரணமாக சரியான நேரத்திற்கு வரமுடியவில்லை.

தொழில் வளம் பெருக வேண்டும், கொடிசியா இந்தியாவிற்கே முன்னோடியாக திகழ வேண்டுமென்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
__06.02.2019__ அன்று கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா
தொழிற்பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கோயம்புத்தூர் மாவட்ட
சிறு தொழில் சங்கம் மற்றும் கொடிசியா இண்டஸ்டிரியல் பார்க் லிமிடெட்
சார்பில் மோப்பிரிபாளையம் மற்றும் கள்ளப்பாளையத்தில்
புதிய கொடிசியா தொழிற்பூங்காக்களை துவக்கி வைத்து ஆற்றிய உரை.

இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தை தோற்றுவித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இசை மற்றும் நமது கலைகளை பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி என்ற முறைகளில் மக்களிடையே கொண்டு செல்லவும், அடுத்த தலைமுறைக்கு நமது பராம்பரிய கலைகளை நிலைநிறுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஜெயம் 2019 நிறுவனர் தின விழா நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவில் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் அண்ணன் திரு.டி.ஜெயக்குமார் அவர்களே! மற்றும்

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு தலைமையேற்று உரையாற்றிய மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் சகோதரர் திரு.க.பாண்டியராஜன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் சகோதரர் திரு.கடம்பூர் ராஜு அவர்களே!

நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் சகோதரர் திரு.உதயகுமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ.ஜெயவர்தன் அவர்களே! மற்றும் வருகை தந்திருக்கின்ற தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே!

சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசுச் செயலாளர் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் பிரமீளா குருமூர்த்தி அவர்களே!

பல்கலைக்கழகத்தின் ஆசிரியப் பெருமக்களே! அலுவலர்களே! இப்பல்கலைக்கழகத்தின் உயிர்நாடியாக விளங்கும் மாணவ, மாணவியரே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! இசையை வளர்ப்பதில் பேரார்வம் கொண்டு ஆதரவு நல்கும் பெரியோர்களே! தாய்மார்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் நன்றிகலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

வில் நாணிலிருந்து எழுந்த ஓசையிலிருந்து யாழும், வண்டு துளைத்த மூங்கிலின் வழியே காற்று புகுந்து எழுந்த நாதத்தால் குழலும், இயற்கை வழி வந்ததே இசை. ‘தமிழோடு இசைப் பாடல் மறந்தறியேன்’ என்கிறார் திருநாவுக்கரசர். ‘ஏழிசையாய் இசைப் பயனாள்’ என்று இறைவனை வியக்கிறார் சுந்தரர்.

மனிதன் மனிதனாக வாழ்ந்தால் அவன் கடவுளாகவே கருதப்படுவான். அந்த மனிதத் தன்மையை அடைவதற்கு முதலில் நாம் எல்லோரும் ஒன்று என்ற எண்ணம் உண்டாக வேண்டும். நம் எல்லோரையும் ஒன்ற வைக்கும் ஆற்றல் இசைக்கு உண்டு. நாம் எல்லோரும் பல வகையில் வேறுபட்டு இருந்தாலும், ஒருவர் பாடும்போதோ அல்லது இசைக் கருவியை இசைக்கும் போதோ அதில் ஒன்றி, அனைவரின் கண்களில் நீர் பெருகுவதைக் காண்கிறோம். இசைக்கு நம் அனைவரையும் ஒருங்கிணைக்கும் சக்தி உண்டு என்பதை இது தெளிவாக்குகிறது.

பொதுவாக, இசை நம் தமிழ் குடும்பங்களில் ஒன்றிப்போன ஓர் அம்சமாகும். சின்னஞ் சிறு குழந்தையை தூங்க வைக்க, தொட்டிலில் குழந்தையை போட்டு தாய் தாலாட்டு பாடுவதும் இசை.

வயல்களில் வேலை செய்பவர்களும், கடின வேலை செய்பவர்களும் தங்கள் களைப்பை மறக்க பாடுவதும் இசை. கோவில்களிலும், மங்கல விழாக்களிலும் இசைப்பதும் இசை.

எல்லா சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பாடல்கள் மற்றும் வாத்தியங்களை வகுத்து திறம்பட இசையை கையாண்டவர்கள் நம் முன்னோர்கள்.

காதில் இன்பத் தேனைப் பாய்ச்சுகிறது இசை! அந்த இசையின் ஒலி இதயத்தில் எதிரொலிக்கிறது. அதோடு உடல் முழுவதும் பரவுகிறது. ஒவ்வொரு நரம்பையும் தட்டி எழுப்புகிறது. பரவசம் ஊட்டுகிற ஓர் அபூர்வமான மின் சக்தியாகி, நம்முடைய உடலின்

ஒவ்வொரு அணுவையும் தீண்டி, ஒரு விதமான மலர்ச்சியை—நெகிழ்ச்சியை பூரிப்பை உண்டாக்கி நம்மை தன்வசப்படுத்திக் கொண்டு விடுகிறது.

சோர்வை உற்சாகமாக்குகிறது; கவலையை களிப்பாக மாற்றுகிறது; கோபத்தை சாந்தப்படுத்துகிறது; பகையை நட்பாக்கிறது. இவை அனைத்தும் இசைக்கே உள்ள சக்தியாகும்.

கருநாடக இசையின் மும்மூர்த்திகளாகத் திகழ்ந்தவர்கள் தியாகராசர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவரும். உலகத்தில் இசையை ரசிக்கின்ற அனைவருக்கும் இவர்கள் மூவரும் சொந்தமானவர்கள். தமிழ் தியாகய்யா என்று போற்றப்படும் பாபநாசம் சிவன், அரிகேசநல்லூர் முத்தைய்ய பாகவதர், கோபாலகிருஷ்ண பாரதியார், முத்து தாண்டவர் ஆகியோரின் பாடல்களை கேட்கும்போது, இசையின் இனிமையோடு பொருளையும் அறிய வாய்ப்பு ஏற்படுகிறது.

தமிழ்நாட்டில் பிறந்து, தமிழிலேயே பாசுரங்கள் இயற்றிய பன்னிரு ஆழ்வார்கள் வழங்கிய நாலாயிர திவ்யபிரபந்தம், சைவ சமயக்குரவர்கள் என்று அழைக்கப்படும் அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோர் அருளிய தேவாரம் மற்றும் திருவாசகத்தை இசை வடிவங்களாக நான் மிகவும் ரசித்துக் கேட்டிருக்கிறேன்.

தமிழிலே மாபெரும் கவிஞர்கள் பல கவிதைகளை இயற்றியிருக்கிறார்கள். அவர்களின் கவிதைகள் இசையுடன் பாடப்படும்போது அக்கவிதைகள் மக்களை எளிதாக சென்றடைகிறது.

“துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா”

என்றும், “தமிழுக்கும் அமுதென்று பேர்” என்றும் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய கவிதைகளும், “சின்னஞ்சிறு கிளியே” என்ற

மகாகவி பாரதியாரின் கவிதையும் இசையோடு சேரும் போது, புதிய பரிமாணத்துடன் வெளிப்படும் அதன் உணர்வு அலாதியானது.

எந்த ஒரு கலையும் ஆற்றின் நீரோட்டம் போல ஓடிக் கொண்டிருக்க வேண்டும். தேங்கிப் போனால் அதனுடைய அழகும், இனிமையும் குறைந்து போய்விடும். இந்தக் கருத்து இசைக்கும் பொருந்தும்.

கலையும், பண்பாடும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. தமிழகத்தின் மரபு கலைகளின் வழியாக பண்பாட்டினை பாதுகாத்திட வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகவும், இசைக்கலை, நாடகக்கலை, நாட்டியக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றை இளைய தலைமுறையினருக்கு இசை மற்றும் கவின்கலைக் கல்வி பயிலகங்கள் வாயிலாகக் கொண்டு செல்லவும், இக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்த 'கலை பண்பாட்டுத் துறை' என்ற ஒரு தனித்துறை டிசம்பர் மாதம் **1991**ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்று இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தை தோற்றுவித்தவரும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். தமிழ்நாட்டில், சென்னை, மதுரை, திருவையாறு ஆகிய இடங்களில் இசைக் கல்லூரிகளும், பல்வேறு இடங்களில் இசைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. சில இடங்களில் மாலை நேர இசைக் கல்லூரிகளும் மற்றும் பள்ளிகளும் இயங்கி வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்கள் இசை மற்றும் நாட்டியத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். அதிலே சாதனையும் படைத்துள்ளார்கள்; இதைக் காணும் போது, ஒரு சம்பவம் என் நினைவுக்கு வருகிறது.

நாட்டிய நட்சத்திரமாக வேண்டும் என்ற அவரது தாயின் ஆசைப்படி, 'பரதம்' 'கதக்' என்று நாட்டியப் பயிற்சி தொடங்கினார் மாண்புமிகு அம்மா அவர்கள்.

நடனத்துடன் முறைப்படி சங்கீதமும் கற்றுக் கொடுக்க ஒரு வாத்தியார் ஏற்பாடு செய்யப்பட்டார். விடியும் முன்னே எழுந்து கண்களை கசக்கிவிட்டுக் கொண்டு வந்து பார்த்தால் பாட்டு வாத்தியார் திரு.கோபாலகிருஷ்ண சர்மா தயாராக இருப்பார். மாண்புமிகு அம்மா அவர்கள் முறைப்படி இசையைப் பயின்றார்கள். காலை நேரத்தில் பாடிப் பழகினால் குரல் நன்றாகப் பக்குவம் அடைந்து மெருகேறும். அதனால்தான் அவரது அம்மா காலையில் சங்கீதம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார். இதன் பயனாக மாண்புமிகு அம்மா அவர்கள் நல்ல குரல்வளத்துடன் சிறப்பாக பாட ஆரம்பித்தார்கள்.

ஒரு சமயம் அடிமைப் பெண்ணில் கதாநாயகியாக நடித்து வந்த மாண்புமிகு அம்மா அவர்கள், பொழுதுபோக்காக ஒரு நாள் வேறொரு படத்திற்காக செட்டில் பாடிக் கொண்டிருந்ததை தற்செயலாக கேட்ட மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள், அடிமைப்பெண் படத்தின் இசையமைப்பாளரை அழைத்து, “இந்தப் படத்தின் கதாநாயகியை சொந்தக் குரலிலே பாட வைக்கலாம் என்று நினைக்கிறேன்” என்றார். உடனே இசையமைப்பாளர், மாண்புமிகு அம்மா அவர்களை அழைத்து ஒரு ட்யூனைக் கொடுத்து பாடச்

சொன்னார். அவரது இனிமையான குரலைக் கேட்ட, அடிமைப் பெண் படத்தின் இசையமைப்பாளர், அவரிடம் ஒரு பாடலைக் கொடுத்து பாடச் சொல்லி ஒலிப்பதிவு செய்தார். அந்தப் பாடல்தான் மக்கள் அனைவராலும் பாராட்டப்பட்ட ‘அம்மா என்றால் அன்பு’ என்றப் பாடல். அதன் பிறகு மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைய படங்களில் தனது சொந்தக் குரலில் பாடினார்கள். அம்மா அவர்களின் இசைத் திறமையை வெளி உலகுக்கு கொண்டு வந்தவரும் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் தான். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆளுமையை அறிந்து, அரசியலில் தனது வாரிசாக கொண்டு வந்தவரும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள்தான்.

மாண்புமிகு அம்மா அவர்கள் நாட்டிய கலாநிகேதன் என்ற பெயரில் ஒரு நாடகக் குழுவினை நடத்தி வந்தார்கள். தமிழ்நாட்டின் பரத நாட்டியம், ஆந்திராவின் குச்சுப்புடி, கேரளத்தின் கதகளி, மாப்பிள்ளை ஆட்டம், அசாமின் மணிபுரி நடனம், பஞ்சாபின் பாங்கரா நாட்டியம், மத்திய பிரதேசத்தின் சாந்தாலி நடனம் இப்படி பல நடனங்களை அக்குழுவினர் ஆடி வந்தனர். இந்த குழுவினரின் முக்கியமான நாட்டிய நாடகம் காவேரி தந்த கலைச் செல்வி ஆகும். இந்த நாட்டிய நாடகம் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றது. பின்னர் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டிற்கு காவேரி மீட்ட கலைச் செல்வியாகத் திகழ்ந்தார் என்பதை சரித்திரம் பல நூற்றாண்டுகள் பேசும்.

மாண்புமிகு அம்மா அவர்களும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும், இயல், இசை, நாடகம் நன்கு வளர்ச்சியடைய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நலிந்த கலைஞர்களுக்கும், கலைகளுக்கும் பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ் இசை, பஜனை இசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை, மெல்லிசை, கிராமிய இசை மற்றும் மேற்கத்திய இசையை

உள்ளடக்கிய கலைஞர்களைக் கொண்ட நகரமாக சென்னை விளங்குகிறது. மார்கழி மாதம் நடைபெறும் இசை விழாவில், இந்தியா மற்றும் வெளிநாட்டிலிருந்து கலைஞர்கள் பங்கேற்பதால் சென்னை மாநகரம் பெருமை பெற்றுள்ளது. இதனைக் காண எண்ணற்ற இசை ரசிகர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து சென்னைக்கு வந்து இசை விழா நிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் கண்டு களித்து வருகிறார்கள். படைப்பாக்கம் மற்றும் இசைக்கான பங்களிப்பு ஆகியவற்றிற்கான சிறப்புப் பட்டியலில் தற்போது உலக அளவில் சென்னையை யுனெஸ்கோ அமைப்பு தேர்வு செய்து அங்கீகரித்துள்ளது.

இப்பல்கலைக்கழகம் தமிழ் இசை பாடல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் நிகழ்ச்சிகளை அதிக அளவில் நடத்தி, மக்களுக்கு இசை எளிதில் சென்றடைய உறுதுணையாக இருக்கவேண்டும் என அன்போடு இந்தத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், தேவாரம் மற்றும் திருவாசகம் ஆகிய பாசுரங்களை இசை வடிவில் மக்களிடம் கொண்டு செல்வதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தத் தருணத்தில் நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
23.02.2019 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில்
தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் சார்பில்
நடைபெற்ற ஜெயம் 2019 நிறுவனர் தின விழாவில் ஆற்றிய உரை.

சிறு, குறு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில், வேளாண் பெருமக்களுக்கு ஆண்டுக்கு ரூ.6,000/- வழங்கப்படும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

பிரதம மந்திரி கிஸான் சம்மான் நிதி திட்ட துவக்க விழாவில் கலந்துகொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய தினம் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்கள் இந்தியா முழுவதும் உள்ள சிறு, குறு விவசாயிகள் மகிழ்ச்சியடைகின்றவிதமாக பிரதம மந்திரி கிஸான் சம்மான்

நிதி திட்டத்தை துவக்கி விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டத்தை அளித்திருக்கின்றார் என்று சொன்னால் விவசாயிகளின் மீது எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார் என்பது நன்றாக தெரிகின்றது. அதற்கு மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு சிறு, குறு விவசாயிகளின் சார்பாக, தமிழக மக்களின் சார்பாக எனது இதயபூர்வமான நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சிறப்பான விழாவிலே சிறந்த முறையிலே உரையாற்றிய மாண்புமிகு இரயில்வே மற்றும் நிலக்கரித் துறை அமைச்சர் திரு. பியுஷ் கோயல் அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா.துரைக்கண்ணு அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! தலைமைச் செயலாளர் அவர்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற பாரதீய கட்சியினுடைய மாநிலத் தலைவர் மரியாதைக்குரிய டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் அவர்களே!

நிகழ்ச்சியை சிறப்பான முறையிலே ஏற்பாடு செய்திருக்கின்ற மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களே! மற்றும் வருகை தந்திருக்கின்ற வேளாண் பெருமக்களே! பெரியோர்களே! தாய்மார்களே! கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் இருக்கின்ற நிருவாகிகளே! கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிருவாகிகளே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! நன்றியுரை ஆற்றவிருக்கின்ற வேளாண்மை இயக்குர் அவர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை தெரிவித்து, அனைவருக்கும் உணவளிக்கும் உன்னத பணியை செய்து வரும் வேளாண் பெருமக்கள், இந்திய நாட்டின் முதுகெலும்பாக விளங்கி வருகிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் வழங்கி வருகின்றன.

சமீபத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில், “பிரதம மந்திரி கிஸான் சம்மான் நிதி”என்ற ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. சிறு குறு விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில், விவசாயிகள் தங்கள் நிலங்களில் சாகுபடி செய்யும் பயிர்களுக்கு தேவையான இடுபொருட்களை வாங்கி பயிர் செய்திடவும், அதன் மூலம் அதிக மகசூல் பெற்று தங்கள் பண்ணை வருவாயை பெருக்கிடவும் தேவையான நிதியுதவியை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி ரூபாய் **2,000/–** வீதம் **3** தவணைகளாக ஆண்டுக்கு வேளாண் பெருமக்களுக்கு மொத்தம் **6,000/–** ரூபாய் தகுதி வாய்ந்த விவசாய குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்தியா முழுவதும் உள்ள **2** ஹெக்டேர் அல்லது **5** ஏக்கர் வரையிலான விளை நிலங்களை உடைய சிறு, குறு விவசாய குடும்பங்களுக்கு ஆண்டுக்கு **6,000/–** ரூபாய் வீதம் இந்த திட்டத்தின் வாயிலாக நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்தொகை மூன்று தவணைகளில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் **2018–2019**ஆம் ஆண்டிற்கு **01.12.2018** முதல் **31.03.2019** வரையிலான முதல் தவணைத் தொகை வழங்கி இத்திட்டத்தை சீரோடும், சிறப்போடும் இன்றையதினம் துவக்கி வைத்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு எனது உளப்பூர்வமான நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் மேடையிலே பேசிக் கொண்டிருக்கும்பொழுது, தேனியிலிருந்து ஒருவர், எனக்கு முதற்கட்டமாக ரூபாய் 2 ஆயிரம் என்னுடைய வங்கிக் கணக்கிற்கு வந்துவிட்டதென்று நம்முடைய வேளாண் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களுக்கு தெரிவித்திருக்கின்றார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் உத்திரப்பிரதேசத்தில் துவக்கி வைத்த மறு நொடியிலேயே அவருடைய வங்கிக் கணக்கிற்கு அந்தப் பணம் வந்துள்ளது. அதே சமயம் மாநில அளவில், சென்னையில் இந்த திட்டத்தை துவக்கி வைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள சுமார் 22 இலட்சத்திற்கும் அதிகமான பயனாளிகளின் விபரங்கள் மத்திய அரசின் வலைதளத்தில் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையினால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில், முறையான சரிபார்த்தலுக்குப் பின் இன்றைக்கு சிறு, குறு விவசாயக் குடும்பங்களுக்கு மத்திய அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, முதல் தவணையின் முதல் கட்டமாக இன்றே தலா 2,000 ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது. இன்று வரை, சுமார் ரூபாய் 277 கோடி இதற்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் விவசாயிகளின் நலனுக்கு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட இடையறாத சட்டப் போராட்டத்தின் காரணமாக காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் காவேரியின் மீது தமிழ்நாட்டின் உரிமை தமிழ்நாட்டில் நிலைநாட்டப்பட்டது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் வெளியிட்ட தொலைநோக்குத் திட்டம் 2023இல் வேளாண்மைத் துறையில் 40 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், பாசன வசதி கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், ஏரி குளங்களை தூர்வாருதல், வேளாண் பொருட்களை பாதுகாக்க கிடங்கு வசதிகளை ஏற்படுத்துதல், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை அமைத்தல் போன்றவை அறிவிக்கப்பட்டு, பல்வேறு திட்டங்கள் மூலமாக இவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நீராதாரங்களை முறையாக பராமரிக்கும் பொருட்டு, 2016–2017ஆம் ஆண்டில் குடிமராமத்துத் திட்டத்தை நான் துவக்கி வைத்தேன். இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் இதுவரை 2,565 பணிகள் 285.79 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

31.01.2019 வரை நீர்வள ஆதாரத் துறை மூலம் ஒரு கோடியே 61 இலட்சத்து 61 ஆயிரத்து 604 கன மீட்டர் வண்டல் படிவுகள், 1 இலட்சத்து 17 ஆயிரத்து 632 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் 29 பெரிய நீர்த்தேக்கங்களும் முதல் முறையாக பல ஆண்டுகளுக்குப் பிறகு தூர்வாரப்பட்டுள்ளன.

2016ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நிலவிய கடும் வறட்சியின் காரணமாக, சிறு, குறு விவசாயிகளுக்கு ஏற்பட்ட நிதி நெருக்கடியை தணிக்கும் வகையில், கூட்டுறவு வங்கிகளில் சிறு, குறு விவசாயிகள் பெற்ற ரூபாய் 5,318 கோடி அளவிலான பயிர்க்கடன் மாண்புமிகு அம்மா அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும், 2017ஆம் ஆண்டு வறட்சி நிவாரணமாக 2 ஆயிரத்து 247 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மாவின் அரசால் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த தருணத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

கரும்பு விவசாயிகளின் நலனுக்காக 2017–2018 கரும்பு அரவை பருவத்திற்காக மத்திய அரசு அறிவித்த நியாயமான மற்றும் ஆதாய விலையை விட டன் ஒன்றுக்கு 200 ரூபாய் கூடுதலாக, 125 கோடியே 77 இலட்சம் ரூபாய் கரும்பு உற்பத்தி ஊக்கத் தொகையாக இதுவரை ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 890 கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணை குறித்த காலத்தில் திறக்கப்படாதபோது, டெல்டா பாசன விவசாயிகளின் நலனுக்காக 'குறுவை தொகுப்பு திட்டம்' மற்றும் 'சம்பா தொகுப்பு திட்டம்' ஆகியவற்றின் மூலம் பயிர் சாகுபடி செய்வதற்கு நிவாரணம் வழங்கப்பட்டது. டெல்டா விவசாயிகளின் நலனுக்காக தொகுப்பு திட்டம் முதன்முதலில் அறிவித்த முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

நுண்ணீர் பாசனத்திற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவிகித மானியமும் வழங்குவதுடன், இக்கருவிகளுக்கான சரக்கு மற்றும் சேவை வரியை முழுமையாக மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும், இதுவரை இல்லாத அளவாக நடப்பு ஆண்டில் மட்டும் 1 இலட்சத்து 43 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் நுண்ணீர் பாசனம் அமைத்திட 950 கோடி ரூபாய் அளவிற்கு பணி ஆணை வழங்கப்பட்டு, இந்த திட்டம் சிறப்பாக தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு இந்த தருணத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

802 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மானாவாரி சிறப்பு தொகுப்புத் திட்டம் செயல்படுத்தியதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தான்.

கூட்டுப் பண்ணைய முறையை ஊக்குவிக்க இரண்டு ஆண்டுகளில் 200 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 4 இலட்சம் சிறு, குறு

விவசாயிகளை ஒருங்கிணைத்து கூட்டுப் பண்ணையத் திட்டம் செயல்படுத்தியதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தான்.

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 4,600 கோடி ரூபாய் அளவிற்கு காப்பீட்டு நிறுவனங்களால் காப்பீடு இழப்பீட்டுத் தொகை ஒப்பளிக்கப்பட்டு, காப்பீடு செய்த 18 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு பெற்றுத்தந்த அரசு அம்மாவினுடைய அரசு.

உரங்கள், வேளாண் கருவிகள் உள்ளிட்ட வேளாண் இடுபொருட்களுக்கு 4 சதவிகித மதிப்புக்கூட்டு வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

வேளாண் மற்றும் தோட்டக்கலையில் வேலைவாய்ப்பினை பெருக்கும்விதமாகதிறன்மிக்கஇளைஞர்களைஉருவாக்குவதற்காக 3 வேளாண் கல்லூரிகள், ஒரு தோட்டக்கலை மகளிர் கல்லூரி மற்றும் இரண்டு தோட்டக்கலை பட்டயப் படிப்பு கல்லூரிகளை கடந்த 7 ஆண்டுகளில் மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் துவக்கி உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு இந்த தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு வேளாண் பெருமக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை செயல்படுத்தியதன் விளைவாக கடந்த 7 ஆண்டுகளில் 5 முறை உணவு தானிய உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி, மத்திய அரசின் உயரிய விருதான கிரிஷிகர்மான் விருதினை இன்றைக்கு தமிழ்நாடு அரசு தொடர்ந்து 4 முறை பெற்றிருக்கிறது என்பதை இந்த தருணத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, விவசாயிகளுக்கு இன்றைக்கு 10 HP வரை சோலார் மின் மோட்டார் பம்பு செட் வழங்க அறிவிக்கப்பட்டு 90 சதவிகித மானியத்தில் வேளாண் பெருமக்களுக்கு இந்த வசதி

செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த தருணத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும், கஜா புயலினால் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை உள்ளிட்ட 12 மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு நிவாரணமாக 600 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இப்புயலினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மறுசாகுபடி செய்வதற்கான வாழ்வாதாரத் திட்டம் 228 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்திலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும், சிறு, குறு விவசாயிகளுக்கும், வாழ்க்கை முழுவதும் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் 15.08.2005 அன்று தொடங்கப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு மீண்டும் முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், வேளாண் பெருமக்களுக்காக பல்வேறு அம்சங்களுடன் புதிய விரிவான முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தினை தாயுள்ளத்தோடு நடைமுறைப்படுத்தினார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் மற்றும் விவசாயக் குடும்ப உறுப்பினர்களுக்கு கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இயற்கை மரணம் மற்றும் விபத்து ஏற்படும் விவசாயி மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மட்டுமின்றி அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். இந்தத் திட்டம் தற்போது வெற்றிகரமாக தமிழகத்திலே இன்றைக்கு நடைபெற்று வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, தொழிலாளர், பிற விவசாயத் தொழிலாளர், பிற ஏழை தொழிலாளர்களுக்கு ரூபாய் 2,000 வழங்கும் சிறப்பு ஊதியத் திட்டத்தை மாண்புமிகு அம்மாவினுடைய அரசால்

அறிவிக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேபோல, வேளாண் தொழிலின் உப தொழிலான கால்நடைத் தொழிலை மேம்படுத்தி, விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்டித் தரும் வகையில் சேலம் மாவட்டம், தலைவாசல் கூட்டு ரோட்டிற்கு அருகில் தேசிய நெடுஞ்சாலை எண்.79ஐ ஒட்டி அமைந்துள்ள கால்நடை பராமரிப்புத் துறைக்கு சொந்தமான 900 ஏக்கர் பரப்பில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை உள்ளடிக்கிய உலகத் தரம் வாய்ந்த ஆசியாவிலேயே பெரிய ஒருங்கிணைந்த பல்துறை பல்நோக்குடன் கூடிய நவீன கால்நடைப் பூங்கா ஒன்று சுமார் 396 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்படும் என்பதை சட்டப்பேரவை விதி எண்.110இன்கீழ் நான் அறிவித்திருக்கின்றேன்.

உலகத் தரம் வாய்ந்த இவ்வளாகம், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்ட வளாகமாக அமையும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மரபுத் திறன்மிக்க நாட்டின மற்றும் கலப்பினக் காளைகளைக் கொண்டு ரூபாய் 100 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய உறைவிந்து உற்பத்தி நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தனது 2019–2020ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்த 'உறைவிந்து உற்பத்தி நிலையம்' இந்த வளாகத்திலேயே அமையப்பெறும் என்ற செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வேளாண் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், வேளாண் பெருமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், வேளாண் பொருட்களை பதப்படுத்தி, மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக தயார் செய்து சந்தைப்படுத்த, தமிழ்நாட்டில் 10 உணவு பதப்படுத்தும் பூங்காக்கள் நிறுவப்படும் என்று மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்து, அதனை செயல்படுத்தத் துவங்கியுள்ளது. முதற்கட்டமாக, விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் ஒரு உணவுப் பூங்கா அமைக்கவும், திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் ஒரு உணவுப் பூங்கா அமைக்கவும் முதற்கட்டப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

மேலும், தனியார் துறையில் உணவு பதப்படுத்தும் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, சமீபத்தில் நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பிரெஞ்ச் நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இதன் மூலம், தமிழ்நாட்டில் ரூபாய் 2 ஆயிரம் கோடி முதலீடு உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. இத்தகு உணவு பதப்படுத்தும் பூங்காக்கள் மூலம் வேளாண் பொருட்களுக்கு உரிய நியாயமான விலை கிடைப்பது மட்டுமல்லாமல், இத்துறையில் வேலைவாய்ப்பும் பெருக வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த நாள் விழா. நேற்றையதினம்

தமிழ்நாடு இசை மற்றும் கவின் பல்கலைக்கழகத்தின் சார்பாக நடத்தப்பட்ட நிகழ்ச்சியிலே, தமிழ்நாடு இசை மற்றும் கவின் பல்கலைக்கழகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் திருநாமத்தை சூட்ட வேண்டுமென்று கோரிக்கை வைத்ததன்படி, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பிறந்தநாளான இன்று அறிவிப்பது பொறுத்தமாக இருக்கும் என்று கருதி, இன்றைக்கு தமிழ்நாடு இசை மற்றும் கவின் பல்கலைக்கழகத்திற்கு மாண்புமிகு அம்மாவின் திருநாமத்தால் அழைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக, வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கின்றார்கள். அந்தத் திட்டம், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமான திட்டம். ஏனென்றால், விவசாயிகள் இரத்தத்தை வியர்வையான மண்ணிலே சிந்தி உழைக்கின்றார்கள். சிறு, குறு விவசாயிகள் பல்வேறு காலக்கட்டங்களிலே பாதிப்புக்குள்ளாகின்றார்கள். அதையெல்லாம் கவனத்தில் கொண்டு தான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சிறு, குறு விவசாயிகளின் நலனைக் கருதி, இன்றையதினம், மூன்று தவணையாக ரூபாய் 6,000 அவர்களுடைய வங்கியிலே செலுத்தப்படும் என்ற அறிவிப்பைத் தந்து, இன்று உத்திரப்பிரதேசத்திலே தன்னுடைய திருக்கரங்களால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைகின்றவிதமாக இந்தத் திட்டத்தை துவக்கி வைத்திருக்கின்றார்கள். அதற்கு என்னுடைய மனமார, உளமார நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
24.02.2019 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில்
நடைபெற்ற பிரதம மந்திரியின் கிசான் சம்மான் நிதி திட்டத்தின்
முதல் தவணை தொகைவழங்கும் துவக்க விழாவில் ஆற்றிய உரை

மாநில அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் போக, மத்திய அரசும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன!

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றையதினம் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடிஜி அவர்கள் தமிழகத்திற்கு பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயை வாரி வழங்கி புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, ஏற்கனவே முடிவுற்ற பாலப் பணிகளை திறக்கின்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டமைக்கு உங்கள் சார்பாகவும் எனது சார்பாகவும் அவருக்கு நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே பங்குபெற்று கருத்துக்களை வழங்க இருக்கின்ற மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடிஜி அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற துணை சபாநாயகர் திரு. தம்பிதுரை அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திரு. பொன். ராதாகிருஷ்ணன் அவர்களே!

தமிழ்நாடு அரசின் புதுடெல்லிக்கான சிறப்புப் பிரதிநிதி திரு. தளவாய் சுந்தரம் அவர்களே!

மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு. விஜயகுமார் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே! பாரதீய ஜனதா கட்சியினுடைய நிருவாகிகள், தொண்டர்களே! அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்களே, நிருவாகிகளே! கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகளே,

அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டு மக்களின் மீது, குறிப்பாக கன்னியாகுமரி மாவட்ட மக்களின் நலனில் அக்கறை கொண்டு, தமிழ்நாட்டிற்கான பல்வேறு வளர்ச்சிப் பணிகளை துவக்கி வைக்கும் இந்த நிகழ்ச்சிக்கு வருகை புரிந்திருக்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை மீண்டும் வருக! வருக! என்று உங்கள் சார்பாகவும், தமிழக மக்கள் சார்பாகவும் வரவேற்கிறேன்.

I welcome the Hon'ble Prime Minister who has come to Kanniyakumari for inaugurating and laying foundation stone for various schemes, which would benefit the people of Tamil Nadu.

கன்னியாகுமரி மாவட்டம் அதிக அளவிலான மீனவ கிராமங்களைக் கொண்டதாகும். இங்கே விவசாயப் பெருங்குடி மக்களும் அதிக அளவில் உள்ளனர். இங்கு ரப்பர் உற்பத்தி அதிக அளவில் செய்யப்படுகிறது.

நீலக்கடல் ஓரத்திலே
நித்தம் தவம் செய்யும் குமரி

என்ற மகாகவியின் வரிகளுக்கிணங்க தமிழ்நாட்டின் தென்கோடியில் தவக்கோலத்தில் இருந்துகொண்டு அருள் பாலிக்கும் குமரி அன்னை வீற்றிருக்கும் மாவட்டம் குமரி மாவட்டம்.

இங்கு முக்கடல் மட்டுமல்ல. மூன்று மதங்களும் சங்கமிக்கின்றன. சமூக மாற்றத்திற்கு வித்திட்ட அய்யா வைகுண்டசாமி திருக்கோயில் இம்மாவட்டத்தில் தான் உள்ளது. அனைத்து சமயத்தினரும் சகோதர பாசத்துடன் வாழும் மாவட்டம் கன்னியாகுமரி.

நாட்டில் சமுதாய மாற்றத்தை உருவாக்க பாடுபட்ட இளைஞர் சுவாமி விவேகானந்தர் தவமிருந்து, அறிவு விளக்கம் பெற்றதும் முக்கடலும் சங்கமிக்கும் குமரியில் தான். மேலும் இம்மாவட்டம் கல்லாதவர்களே இல்லாத அளவுக்கு, கற்றவர்கள் நிறைந்த மாவட்டமாகும்.

சுதந்திர போராட்ட வீரர்கள் செண்பகராமன், மார்ஷல் நேசமணி, ஜீவானந்தம், மாபெரும் கவிஞர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஆகியோரும், சினிமாத் துறையில் புரட்சி செய்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களும் இம்மாவட்டத்தில் பிறந்தவர்கள் என்பதை குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், அவர்களைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் அதிக அளவிலான திட்டங்களை இந்த மாவட்டத்திற்கு செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்:

மீனவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன், **96.72** கோடி ரூபாய் செலவில் குளச்சலிலும், **81.22** கோடி ரூபாய் செலவில் சின்னமுட்டத்திலும், மீன்பிடி துறைமுகங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மீனவர்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

97.4 கோடி ரூபாய் செலவில் தேங்காய்பட்டிணத்தில் மீன்பிடி துறைமுகம் கட்டப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது.

இது தவிர, நீரோடி, வள்ளவிளை மற்றும் மார்த்தாண்டம்துறை ஆகிய இடங்களில் **116** கோடி ரூபாய் செலவில் நேர்கல் சுவர் அமைக்கும் பணியும், தேங்காய்பட்டிணத்தில் குளிர்சாதன மற்றும் நவீன பதப்படுத்தும் வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த மீன்பிடித் துறைமுகம் அமைத்திட தேவையான ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளன.

விளவங்கோடு தாலுகா, சின்னத்துரையில் ஒரு கோடியே **95** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடல் அரிப்பு தடுப்புச் சுவரை மறு சீரமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

விளவங்கோடு தாலுகா, பூத்துரையில் **14** கோடியே **68** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு ஏற்ற வகையில் **50** சதவீத மானியத்தில் **26** ஆழ்கடல் சூரை மீன்பிடி படகுகள் கொள்முதல் செய்ய மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கில், **50** மீனவ குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு தலா **2** செயற்கைக் கோள் தொலைபேசிகளும், **3** நேவிக் கருவிகளும் சமீபத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசால் மீனவ மக்களுக்கு வழங்கப்பட்டன.

கடலோர மக்களை பாதுகாக்கும் வகையில், கன்னியாகுமரி, கிள்ளியூர், குளச்சல், நாகர்கோவில் ஆகிய கடலோர பகுதிகளில் பல இடங்களில் சுமார் 25 கோடி ரூபாய் செலவில் கடலரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 76.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளவங்கோடு மற்றும் கன்னியாகுமரி பகுதிகளில் 5 அணைகள் புனரமைக்க ஆணை வழங்கப்பட்டு, அதில் 4 பணிகள் முடிவுற்றும், ஒரு பணி முன்னேற்றத்திலும் உள்ளது. இதன் மூலம் 97 ஆயிரத்து 357 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில், 15.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏழை, எளியோர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

'அனைவருக்கும் வீடு' திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் 821 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 24 ஆயிரத்து 987 வீடுகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் 53.67 கோடி ரூபாய் செலவில் 157.180 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் அமைக்கப்பட்டு உள்ளன. மேலும், 23 பாலங்களும், சிறு பாலங்களும் கட்டப்பட்டுள்ளன.

மாநிலங்களை இணைக்கும் சாலை நிதி திட்டத்தின் கீழ் அண்டை மாநிலமான கேரளாவை இணைக்கும் வகையில், 95.85 கி.மீ. நீள சாலைப் பணிகள் 90.91 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மிகக் கடுமையாகத் தாக்கிய ஒக்கி புயலின்போது இறந்த மற்றும் காணாமல் போன 204 மீனவர் குடும்பத்தினருக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு அவர்களின் குடும்ப நிலையை கருத்தில் கொண்டு குடும்பம் ஒன்றுக்கு தலா 20 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 40.80 கோடி ரூபாய் நிவாரணமும், சேதம் அடைந்த படகுகள் மற்றும் மீன்பிடி சாதனங்களுக்கு 7.80 கோடி ரூபாய் நிவாரணமும் வழங்கியது.

இறந்த மற்றும் காணாமல் போன மீனவர் குடும்பங்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, அவர்களது வாரிசுதாரர்களுக்கு தாயுள்ளத்துடன் அரசுப் பணியும் வழங்கப்பட்டுள்ளது.

'ஒக்கி' புயலால் சேதமடைந்த சாலைகளை நிரந்தரமாக சீரமைக்கும் பணிகள் 28.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

30 ஆயிரத்து 788 மீனவர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவித்தொகையாக தலா 5 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 15 கோடியே 38 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 1,524 மலைவாழ் குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாய் நிவாரணமாக 76 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

'ஒக்கி' புயலின்போது சேதமடைந்த வாழை, ரப்பர் மற்றும் கிராம்புப் பயிர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டன. அந்த

வகையில், கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு தோட்டக்கலை மற்றும் வேளாண் பயிர்களுக்கு 10 கோடியே 99 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டாரத்தில் அதிக அளவு மலர்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. அவற்றை சந்தைப்படுத்த விவசாயிகளும், வணிகர்களும் அனுபவித்து வந்த சிரமத்தைக் களைத்திடும் பொருட்டு, 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 75 கடைகளுடன் கூடிய பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் மலர் வணிக வளாகம் தோவாளையில் அமைக்கப்பட்டு, 30.01.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித் துறையின் சார்பில் 15.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளவங்கோடு வட்டத்தில் இரையுமன்துறை அருகில் குழித்துறை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

அரசின் நலத்திட்டங்கள் மக்களை எளிதில் சென்றடையும் பொருட்டு, நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்த மாண்புமிகு அம்மாவின் அரசால் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மேலும், கிள்ளியூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் வட்டமும், செருப்பலூரை தலைமையிடமாகக் கொண்டு திருவட்டார் வருவாய் வட்டமும் உருவாக்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், அவ்வப்போது இயற்கை பேரிடர்களினால் பாதிக்கப்படும் இம்மாவட்டத்தில், 20.13 கோடி ரூபாய் செலவில் சுமார் 15 இடங்களில் 7 ஆயிரம் நபர்கள் தங்கும் வகையில் இயற்கை பேரிடர் பல்நோக்கு பாதுகாப்பு மையக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் சுற்றுலாவுக்கு புகழ் பெற்ற மாவட்டம் என்பதால், 2.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புற நிரந்தர

கைவினைப் பொருட்கள் கண்காட்சி வளாகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இம்மாவட்ட மண்ணின் மைந்தரான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் நூலகத்துடன் கூடிய ஒரு மணிமண்டபம் விரைவில் அமைக்கப்பட உள்ளது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல மாண்புமிகு அம்மாவின் அரசு நடைமுறைப்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களில் ஒரு சிலவற்றை மட்டும்தான் இங்கே கூறியுள்ளேன். இது போன்ற பல்வேறு பணிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன.

மேலும், மதுரை—இராமநாதபுரம் நான்கு வழிச்சாலையும், தேசிய நெடுஞ்சாலை 32 மற்றும் 7ஐ இணைக்கும் பணக்குடி—கன்னியாகுமரி நான்கு வழிச் சாலையும், மார்த்தாண்டம் சந்திப்பு மற்றும் பார்வதிபுரம் சந்திப்பில் பாலங்கள் கட்டும் பணிகளும் முடிக்கப்பட்டு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட உள்ளன.

இது தவிர, மதுரை—செட்டிக்குளம் பிரிவுக்கும், செட்டிக்குளம்—நத்தம் பிரிவுக்கும் நான்கு வழிச் சாலை அமைக்கவும், இராமேஸ்வரத்துக்கும் தனுஷ்கோடிக்கும் இருந்த இரயில் சேவை தொடர்பையும், பாம்பன் பாலத்தையும் மீள அமைக்கும் திட்டங்களுக்கும், கன்னியாகுமரியில் சாலை பாதுகாப்புப் பூங்கா மற்றும் போக்குவரத்து அருங்காட்சியகம் அமைக்கும் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டப்பட உள்ளது.

மதுரை முதல் சென்னை வரையிலான தேஜாஸ் அதிவேக இரயில் சேவையை இன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைக்க உள்ளார்கள்.

I thank the Hon'ble Prime Minister who has come here to inaugurate various schemes, lay foundation stones for new

schemes which will help in the overall development of Tamil Nadu. I also thank the Hon'ble Prime Minister for sanctioning the 'Tejas' Express Train, which will help in enhancing connectivity to South Tamil Nadu.

மாநில அரசு நடைமுறைப்படுத்தும் திட்டங்கள் போக, மத்திய அரசும் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன என்பது மக்கள் அனைவருக்கும் தெரியும். வளர்ச்சித் திட்டங்களில் காட்டும் அக்கறைக்கு இணையாக நாட்டின் பாதுகாப்பிலும் மத்திய அரசு அக்கறை செலுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்தில் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அந்த வகையில், உலகத்தை அச்சுறுத்தும் பயங்கரவாதத்தை வேரோடு அழிப்பதற்கு நமது மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடிஜி அவர்கள் எடுத்து வரும் துணிச்சல் மிக்க செயல்பாட்டின் காரணமாக, வெற்றிகரமான விமானப்படை தாக்குதல் நடத்தி பயங்கரவாத முகாம்கள் அழிக்கப்பட்டதற்கு, தமிழ்நாட்டு மக்கள் சார்பாக எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

On behalf of the people of Tamil Nadu, I thank the Hon'ble Prime Minister for the bold and decisive measures to root out terrorism, which is threatening the world and the successful air strike to decimate the terrorist camps.

As Chief Minister of Tamil Nadu, I thank the Hon'ble Prime Minister for having taken effective diplomatic steps to bring back Wing Cdr. Abhinandan safely to India.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வருகை புரிந்துள்ள இந்த நேரத்தில், தமிழ்நாடு அரசின் சார்பிலும், கன்னியாகுமரி மாவட்ட மக்கள் சார்பிலும் ஒரு கோரிக்கையை வலியுறுத்த விரும்புகிறேன். அதாவது, இயற்கை பேரிடர்களினால் அதிக அளவில் பாதிக்கப்படும்

மாவட்டங்களில் கன்னியாகுமரி மாவட்டமும் ஒன்றாகும். எனவே, மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்களை இயற்கை இடர்பாடுகளின் போது துரிதமாக மீட்பதற்கு ஏற்ப, ஒரு ஹெலிகாப்டர் இறங்குதளம் அமைத்திட வேண்டும் என்று நான் மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளேன். I request the Hon'ble Prime Minister to establish a Naval station at Kanniyakumari for ensuring the safety and security of our fishermen at sea. அக்கோரிக்கையின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து இம்மாவட்ட மீனவர்களின் நீண்ட நாள் தேவையினை நிறைவேற்றித் தந்து, மீனவ மக்களின் வாழ்வில் ஒளியேற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு,

கடந்த 5 ஆண்டு காலமாக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் இந்திய நாட்டை வழி நடத்திச் செல்வது மட்டுமல்ல, இந்திய நாட்டு மக்களுக்கே பாதுகாப்பாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறார். இன்றைக்கு ஒட்டுமொத்த நாடே அவர் பின் நிற்கின்றது, தமிழ்நாடும் அவர் பின் நிற்கின்றது என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

கன்னியாகுமரியில் மாண்புமிகு பாரதப் பிரதமர்
*திரு. **நரேந்திர மோடி** அவர்கள் தலைமையில் 01.03.2019 அன்று*
நடைபெற்ற இராமேஸ்வரம் – தனுஷ்கோடி இடையில்
இரயில் இணைப்பை புதுப்பித்தல் மற்றும் புதிய பாம்பன்
இணைப்புப் பாலம் கட்டும் அடிக்கல் நாட்டு விழா மற்றும்
மதுரை – சென்னை எழும்பூர் இடையே புதிய தேஜஸ் எக்ஸ்பிரஸ்
இரயில் சேவை துவக்க விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை.*

சுகாதாரத் துறைக்கு 2019-2020ஆம் ஆண்டிற்கு ரூ.12 ஆயிரத்து 563 கோடியே 83 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவை வணங்கி,

மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக, கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறந்த முறையிலே கரு வளரக்கூடிய அற்புதமான திட்டத்தை துவக்கி வைக்கின்ற சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பான கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் அவர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே,

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறை அரசுச் செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ் அவர்களே, மற்றும் சுகாதாரத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளே, மருத்துவர்களே, புதிதாக பணியாணை பெறவிருக்கின்ற உதவி மருத்துவர்களே, கிராம சுகாதார செவிலியர்களே, மற்றும் வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

இந்த விழாவிலே நன்றியுரை ஆற்றிவிருக்கின்ற சுகாதாரத் துறை இயக்குநர் அவர்களே,

அனைவருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்து, “சமுதாயத்தின் அனைத்துக் கட்ட வளர்ச்சிக்கும் சிறந்த ஆரோக்கியம் இன்றியமையாததாகும். சமுதாயத்தின் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் தரமான மருத்துவ வசதிகளை அளிப்பதே நம்முடைய குறிக்கோளாகும்” என்றார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

உயர்தர சுகாதார சேவைகளை வழங்குவது மட்டுமல்லாமல், மிகச் சிறந்த மனிதவளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்துவதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக விளங்கி வருகிறது. தாய்சேய் நலம் மற்றும் குடும்ப நலத் திட்டங்களை செயல்படுத்துவதிலும், நோய்களைத் தடுப்பதற்காகவும் பல முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு திறம்பட செயல்படுத்தி வருகிறது.

ஒரு குழந்தை பிறந்தவுடன் 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம் வழங்கப்படுகிறது. பின்னர் அவர்கள் படிப்பதற்கு ஊக்கத் தொகை, அருகிலேயே பள்ளிக்கூடம், வளர் இளம் பெண்கள் உடல் நலம் பேண சானிடரி நாப்கின், ஊட்டச்சத்து மாவு அளித்தல், இரும்பு சத்து மாத்திரை அளித்தல், திருமண வயது அடைந்த பெண்களுக்கு திருமணம் நிதி உதவி மற்றும் தாலிக்குத் தங்கம், பின்னர் அவர்கள் கருவுற்றவுடன் அரசு சார்பில் வளைகாப்பு மற்றும் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் நிதி உதவி என வாழ்வின் அனைத்து கட்டங்களிலும் மாண்புமிகு அம்மாவின் அரசு அவர்களுக்கு துணை நிற்கும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதை பெருமிதத்துடன் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்

மாண்புமிகு அம்மாவின் அரசு மக்கள் நல்வாழ்வுத் துறையில் நிகழ்த்திய சாதனைகள் பல இருந்தாலும், அதில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த 8 ஆண்டுகளில் சுகாதாரத் துறைக்கு 62 ஆயிரத்து 705 கோடியே 17 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, 2019–2020ஆம் ஆண்டுக்கு 12 ஆயிரத்து 563 கோடியே 83 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

பேறுகாலத்திற்குப் பின் தாய்மார்கள் மற்றும் பச்சிளம் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்த ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம் வழங்கும் திட்டம், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 08.09.2015 அன்று தொடங்கப்பட்டு, இதுவரை 17 இலட்சம் தாய்மார்களுக்கு இப்பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

மகப்பேறு காலத்தில் மகளிரின் ஆரோக்கியத்தைக் காக்க, 11வகையான சித்த மருத்துவ மூலிகைகள் அடங்கிய அம்மா மகப்பேறு சஞ்சீவி பெட்டகம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சித்த மருத்துவத்தை விரும்பும் பெண்களுக்கு மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில் இந்த பெட்டகம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் உயர்தர மருத்துவ சேவை கிடைக்க வேண்டும் என்பதற்காக முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 2012ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இதுவரை 28 இலட்சத்து 70 ஆயிரம் பயனாளிகள் 5,587 கோடி ரூபாய் காப்பீட்டுத் தொகையின் மூலம் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தற்பொழுது மருத்துவ சிகிச்சைக்கு அளிக்கப்பட்டு வரும் 2 இலட்சம் ரூபாய் போதுமானதாக இல்லை என்று கோரிக்கை வைத்தவுடன், மாண்புமிகு அம்மாவின் அரசு அதனை உயர்த்தித் தர வேண்டும் என்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கையை ஏற்று, ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயாக மாண்புமிகு அம்மாவின் அரசால் உயர்த்தப்பட்டு, அந்த மக்கள் இன்றைக்கு சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாடுகளின் காரணத்தால், குழந்தை இறப்பு விகிதம், பேறுகால தாய்மார்கள் இறப்பு விகிதம் மற்றும் கருவள விகிதம் போன்ற சுகாதார குறியீடுகளில், தமிழ்நாடு சிறந்த சாதனை படைத்துள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகளின் கீழ் தாய்மார்கள் இறப்பு விகிதத்தில் 2030ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய இலக்கினை 2016ஆம் ஆண்டுக்குள் அடைந்த இந்தியாவின் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்ற பெருமையை பெற்றுள்ளது.

கடந்த 7 ஆண்டுகளில் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 221 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இதுதவிர 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி, ஸ்கேன் போன்ற வசதிகளுடன் 190 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.

அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்புக்காக 1,035 கோடி ரூபாயும், பல்வேறு உபகரணங்களுக்காக 376 கோடி ரூபாயும், மாவட்ட மற்றும் துணை மாவட்ட அரசு மருத்துவமனைகளின் உட்கட்டமைப்புக்காக 224 கோடியே 13 இலட்சம் ரூபாயும், உபகரணங்களுக்காக 82 கோடியே 41 இலட்சம் ரூபாயும் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது.

அரசு மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்புக்காக ஆயிரத்து 630 கோடியே 40 இலட்சம் ரூபாய், மருத்துவ கருவிகளுக்காக 722 கோடியே 26 இலட்சம் ரூபாயும் தேசிய நலவாழ்வு குழுமம் வழங்கியுள்ளது.

அரசு மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன், சி.டி.ஸ்கேன் போன்ற பல புதிய நவீன உபகரணங்களை நிர்மாணிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு அம்மா அவர்களாலும், அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு அம்மாவின் அரசாலும் மேற்கொள்ளப்பட்ட இடைவிடாத முயற்சியின் காரணமாக மதுரை மாவட்டம், தோப்பூரில் 1,264 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்பட உள்ளது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சமீபத்தில் இதற்கு அடிக்கல் நாட்டியுள்ளார்.

இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக மத்திய அரசின் முதன்மை மாநிலத்திற்கான விருதை தமிழ்நாடு அரசு தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக பெற்று வருகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

102 இலவச வாகனத் திட்டத்தின் மூலம் அரசு மருத்துவமனைகளில் பிரசவித்த தாய்மார்கள் மற்றும் சிகிச்சை பெற்ற சிசுக்கள், மருத்துவமனையிலிருந்து கட்டணமில்லாமல் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் சேவையை அம்மாவின் அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை சொல்லிக்கொண்டே போகலாம். முழுவதையும் சொல்ல வேண்டுமானால் நாட்கள் போதாது. எனவேதான் நான் இங்கே ஒரு சிலவற்றை மட்டுமே குறிப்பிட்டு பேசினேன்.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள கருவுற்ற பெண்களுக்கு பேறு காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும், சத்தான உணவை உட்கொள்ளவும், அதன் மூலம் எடை குறைவான குழந்தைகள் பிறப்பதை தடுக்கும் வகையிலும், தாய் மற்றும் குழந்தையின் சுகாதார நிலையை மேம்படுத்தும் உயர்ந்த நோக்கத்துடன் கர்ப்பிணிப் பெண்களுக்காக டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நான் முதலமைச்சராக பதவியேற்றவுடன் இத்திட்டத்தில் வழங்கப்படும் நிதியுதவியை 12,000 ரூபாயிலிருந்து 18,000 ரூபாயாக உயர்த்தி நான் ஆணையிட்டேன். கடந்த எட்டு ஆண்டுகளில் இத்திட்டத்தில் 56.36 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 4 ஆயிரத்து 866 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நடப்பு ஆண்டில் புதிதாக 508 முதுநிலை மருத்துவ மேற்படிப்பு இடங்கள் நமது மருத்துவக் கல்லூரியில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 1,758 முதுநிலை மருத்துவ மேற்படிப்பு இடங்கள் ஏற்படுத்தப்பட்டு, தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதன்மை வகிக்கின்றது என்ற பெருமையான செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொகையிலிருந்து கர்ப்பிணிப் பெண்களுக்கு பரவலாக உள்ள இரத்த சோகையைப் போக்கவும், பிறந்த குழந்தைகளின் எடையளவை உயர்த்தவும், 4,000 ரூபாய் மதிப்புள்ள இரும்புச் சத்து மற்றும் ஊட்டச் சத்து பொருட்கள் அடங்கிய அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்படும் என்று 2018–2019ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக, இன்று கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பெட்டகம் வழங்கி இந்தத் திட்டத்தை தொடங்கி வைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த திட்டத்தால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 6 இலட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் பயன்பெறுவார்கள். இதனால் தமிழ்நாட்டில் பேறுகால தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் இறப்பு விகித குறியீடுகள் மேலும் குறையும்.

அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் அவ்வப்போது புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பும் பொருட்டு, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின் பேரில், இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் இதுவரை 11,003 மருத்துவர்கள், 9,533 செவிலியர்கள் உட்பட 24,736 பணியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, பணி அமர்த்தப்பட்டுள்ளனர். மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் தற்போது 1,883 மருத்துவர்களை தேர்ந்தெடுத்துள்ளது. இவர்களில் 1,300 மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குவதை நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக துவக்கி வைத்துள்ளேன் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இதுதவிர, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட 129 இளநிலை உதவியாளர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள் மற்றும் தட்டச்சர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குவதை நான் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக துவக்கி வைத்துள்ளேன்.

பணி ஆணை பெறுகின்ற மருத்துவர்களும், அமைச்சுப் பணியாளர்களும் மக்களுக்கு செய்யும் சேவையே மகேசனுக்கு செய்யும் சேவை என்பதை நினைவில் கொண்டு சிறந்த முறையில் மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களை கேட்டுக்கொள்கிறேன். இன்று பணி ஆணை பெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் **110**இன் கீழ், தாய்சேய் நலப் பணிகளை திறம்பட செயல்படுத்தி வரும் **9,994** சுகாதார செவிலியர்களுக்கு கையடக்கக் கணினிகள் வழங்கப்படும் என்று **05.07.2017** அன்று நான் அறிவித்தேன். இந்த அறிவிப்பை செயல்படுத்தும் பொருட்டு, இன்று **11,068** கிராம சுகாதார செவிலியர்களுக்கும், தொற்றா நோய் தடுப்பு, கட்டுப்படுத்தல் மற்றும் சிகிச்சை திட்டத்தில் பணியாற்றும் **2,341** செவிலியர்களுக்கும், **20** கோடியே **78** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கையடக்க கணினி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்னை மாநகராட்சி பகுதியில், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளப்படுகிறது. இதே போன்று மாநிலம் முழுவதும் ஒரே இணையதளம் மூலம் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வகையில், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு முறை (Civil Registration System) மென்பொருளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக இன்று தொடங்கி வைத்துள்ளேன். இதனால் மாநிலத்தில் எந்தப் பகுதியில் வசிக்கும் மக்களும், பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழை, எந்த ஒரு இ–சேவை மையத்திலிருந்தோ, வீட்டிலிருந்தோ கணினி மூலமாகவோ அல்லது கணினி மையத்திற்கு சென்றோ பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

ஆரம்ப சுகாதார சேவைகளில் ஆய்வகங்களின் பங்கு இன்றியமையாததாகும். நோயை சரியாக கண்டுபிடித்து, சிகிச்சை அளிக்க ஆய்வகங்களின் செயல்பாடு மிக முக்கியமானதாகும். எனவேதான், ஆய்வகங்களுக்கு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியும் ஆய்வக நுட்புநர்களை பணியமர்த்தியும், புதிய ஆய்வக உபகரணங்கள் வழங்கியும் இந்த அரசு ஆய்வகங்களை செம்மைப்படுத்தியுள்ளன. மேலும், நோயாளிகளின் இரத்த

மாதிரிகள் உயர் ஆய்வக பரிசோதனைக்காக கொண்டு செல்ல, ஆய்வக தகவல் மேலாண்மை அமைப்பு இன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த வசதி அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள ஆய்வகங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற மாண்புமிகு அம்மாவின் எண்ணத்திற்கிணங்க மருத்துவத்துறையில் தற்பொழுது நடைமுறையில் உள்ள அனைத்து நவீன சிகிச்சைகளும் தமிழ்நாட்டு மக்களுக்கு இலவசமாகவும், குறைந்த கட்டணத்திலும் கிடைக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு நவீன வசதிகளை அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தி வருகிறது. மக்கள் அனைவரும் இதை பயன்படுத்தி, நோயற்ற வாழ்வு வாழ வேண்டும் என்று உங்கள் அனைவரையும் அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தாய் சேய் நல மருத்துவமனை 175ஆவது ஆண்டை அடியெடுத்து வைக்கின்ற இந்தத் தருணத்தில், இந்த மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டுவதற்காக ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்து, இந்த விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***04.03.2019** அன்று சென்னை, எழும்பூர், மகளிர் மகப்பேறு நோயியல் நிலையம் மற்றும் அரசு மகளிர் மற்றும் சிறார் நல மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆற்றிய உரை*

சேலம் மாநகரில் ரூ.441 கோடி மதிப்பீட்டில் ஈரடுக்கு மேம்பாலம்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அத்தனை பேருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாநகரம் வளர்ந்து வருகின்ற ஒரு மாநகரமாக இருப்பதால், கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதன் விளைவாகவும், அதனை முற்றிலும் குறைக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லியதன் விளைவாக, தமிழகத்திலே எந்தவொரு மாநிலத்திற்கும் இல்லாத ஒரு சிறப்பை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சேலம் மாநகரத்திற்கு தந்திருக்கின்றார்கள்.

எங்கெங்கெல்லாம் போக்குவரத்து நெரிசல் இருக்கின்றதோ, எங்கெங்கெல்லாம் சாலை சந்திப்புகள் இருக்கின்றதோ, அங்கெல்லாம் பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட ஒரு மாநகரம் என்று சொன்னால் அது சேலம் மாநகரம்தான் என்று பெருமைப்படக்கூடிய அளவிற்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே அனைத்துப் பாலங்களுக்கும் ஒரே காலகட்டத்தில் அனுமதி வழங்கி, இன்றைக்கு பாலப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. சில இடங்களில் நிலம் எடுக்கின்ற பணி இருக்கின்ற காரணத்தினாலே சற்று காலதாமதம் ஏற்பட்டது. ஏற்கெனவே இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் இந்த ஐந்து ரோட்டில் ரூ.441 கோடியில் அமைக்கப்படுகின்ற இந்த பாலத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு இன்றைய தினம் ஈரடுக்கு மேம்பாலப் பாலப்பணியின் ஒரு பகுதியான ஏ.வி.ஆர். ரவுண்டானா முதல் இராமகிருஷ்ணா சாலை சந்திப்பு வரை 2.5 கி.மீ. நீளமுள்ள இதில் 1.30 கி.மீ. இரு வழிப்பாதை, 1.20 கி.மீ. ஒரு வழிப்பாதை உள்ள புதிய மேம்பாலத்தை உங்கள் அனைவரின் சார்பாக, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அருளாசியோடு நான் திறந்து வைத்திருக்கின்றேன்.

இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அருளாசியோடு திருவாக்கவுண்டனூர் ரவுண்டானாவிலே ஒரு உயர்மட்டப் பாலம், ஏ.வி.ஆர் ரவுண்டானா முதல் குரங்குச்சாவடி

வரை ஒரு உயர்மட்டப் பாலம், இரும்பாலை சந்திப்பிலே உயர்மட்டப் பாலம் போன்றவைகள் எல்லாம் ஏற்கெனவே திறந்து வைக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு வந்துள்ளது. அதேபோல, மேட்டூர் எல்லிஸ் பார்க்கின் குறுக்கே உயர்மட்டப் பாலம், அப்பம்மா சமுத்திரம் நரசிங்கபுரம் பாலம் ரூ.5.15 கோடியில் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. தலைவாசல் கோவிந்தம் பாளையத்தில் வசிஷ்ட நதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் ரூ.6.2 கோடி மதிப்பில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகள்: நம்முடைய சேலம் மாநகரை போக்குவரத்து நெரிசல் இல்லாத ஒரு நகரமாக உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, ஆங்காங்கே இருக்கின்ற அனைத்து இரயில்வே கடவுகளின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதில் மணல்மேட்டில் ரூபாய் 50.15 கோடி மதிப்பில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முள்ளுவாடி கேட் இரயில்வே மேம்பாலம் ரூ.83 கோடியிலும், லீ பஜார் இரயில்வே மேம்பாலம் ரூ.46.35 கோடியில் கட்டுவதற்கு நிலம் எடுக்கின்ற பணி இருக்கின்ற காரணத்தினால் சற்று தாமதம் ஆயிற்று. அந்தப் பணிகள் விரைவில் முடித்துக் கொடுக்கப்படும். அதேபோல, தொளசம்பட்டி உயர்மட்டப் பாலம், கொங்கணாபுரம் நரிமேடு சாலை மேம்பாலம், ஜலகண்டாபுரம், சின்னப்பம்பட்டி, வெள்ளாளபுரம், அக்கரைப்பட்டி பாலம், முத்தநாயக்கன்பட்டி உயர்மட்டப் பாலம், மகுடஞ்சாவடி குமாரபாளையம் சாலையில் எடப்பாடி செல்லும் கவுண்டநேரி பாலம், தாரமங்கலம் எருமைக்காரன் வளைவு சாலையில் பாலம் என பல்வேறு பாலப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேபோல, அரசினுடைய தேசிய நெடுஞ்சாலையின் சார்பாக நடைபெறுகின்ற பணிகளைப் பொறுத்தவரை, சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கையை ஏற்று, விபத்து ஏற்பட்டு உயிர்ச் சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக, மகுடஞ்சாவடியில் உயர்மட்டப் பாலம் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது. அரியானூர் பிரிவு

ரோட்டில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு ரூ.45 கோடியில் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் துவங்கியிருக்கின்றது. கந்தம்பட்டி புறவழிச்சாலையில் ரூ.33 கோடியில் பாலம் கட்டும் பணிகள் துவங்கப்பட்டுள்ளது. ஆத்தூர், அம்மாபாளையம், நரிக்குறவர் காலனி வஷ்டவதியின் குறுக்கே ரூ.5 கோடியில் மேம்பாலம், புழுதிக்குட்ட உயர்மட்டப் பாலம் ரூ.3.50 கோடியில், அயோத்தியா பட்டணம் தும்பல் அருகில் உயர்மட்டப் பாலம் ரூ.3.50 கோடியிலும் பணிகள் துவங்க இருக்கின்றது. சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற இரயில்வே கடவுகளின் குறுக்கே பாலம் கட்ட வேண்டுமென்ற பொதுமக்கள், சட்டப்பேரவை உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று முத்துநாயக்கன்பட்டி இரயில்வே மேம்பாலம், தொளசம்பட்டி, கள்ளிப்பட்டி, வாழப்பாடி, ஓமலூர் பகுதி இப்படி பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற இரயில்வே கடவுகளின் குறுக்கே பாலம் கட்டும் பணி விரைவில் துவங்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாநகர போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் விதத்தில், நமது சேலத்திற்கு அருகாமையில் கிட்டத்தட்ட 60 ஏக்கர் நிலப்பரப்பில் மிகப் பிரமாண்டமான Bus-Port உருவாக்குவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிந்தவுடன் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் துவங்கும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

போக்குவரத்து நெரிசல் இல்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காக, சேலத்திலிருந்து செங்கப்பள்ளி வரையிலான சாலையை விரிவுபடுத்துவதற்கு மத்திய அரசு திட்டமிட்டு அதற்குண்டான பணிகள் துவங்கவிருக்கின்றன. இன்னும் பல்வேறு சாலைகள், இங்கேகூட 8 வழிச் சாலை பற்றி சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள், அது விரைவுச் சாலையாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த விரைவுச் சாலையைப் பொறுத்தவரைக்கும் சேலம், ஈரோடு, நாமக்கல், திருப்பூர், கோவை மாவட்டங்கள், அருகாமையில் இருக்கின்ற கேரள மாநிலத்திற்கு

இடையே கனரக வாகனங்கள் தடையில்லாமல் செல்ல முடியும். நம்முடைய தேசிய நெடுஞ்சாலைகள் எல்லாம் கிட்டத்தட்ட 15, 20 ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்டவை. இப்பொழுது 2001ஆம் ஆண்டைக் காட்டிலும் 100 சதவிகிதம் வாகன எண்ணிக்கை உயர்ந்துள்ள காரணத்தினால் உலகத் தரத்திற்கேற்ற நவீன சாலைகள் உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது.

ஆகவே, வளர்ந்து வருகின்ற, தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி, இன்னும் பல தொழில்கள் வருவதற்கு முன்னோடியாக இந்த சாலை அமைப்பதற்குத்தான் நடவடிக்கை மேற்கொண்டார்கள். இருந்தாலும் சில பிரச்சினைகள் காரணமாக நீதிமன்றத்தில் இருக்கின்றது. அங்கே இருக்கின்ற நில உரிமையாளர்களிடம் பேசி, சமாதானப்படுத்தி, அவர்களின் சமாதானத்தோடு இந்தத் திட்டத்தை மாநில அரசும், மத்திய அரசும் ஒத்துழைப்பு கொடுத்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும். இது ஏதோ எடப்பாடி பழனிசாமிக்கு தனியாக வருகின்ற சாலையாக வைத்துக்கொள்ளக் கூடாது. அது மத்திய அரசின் திட்டம், மாநில அரசின் திட்டமல்ல. மாநில அரசைப் பொறுத்தவரைக்கும் யாரிடமும் திணித்து, அவர்களிடத்திலே பறித்து திட்டத்தை நிறைவேற்றுவது நோக்கமல்ல. மக்களுடைய உயிர் சேதத்தை, விபத்தை தடுக்க, எரிபொருளை மிச்சப்படுத்த, சுற்றுச்சூழலை பாதுகாக்கின்ற விதத்திலே, பயண நேரத்தை மிச்சப்படுத்துகின்ற விதத்திலே தான் இந்தத் திட்டங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன.

தமிழகம் முழுவதும் பல்வேறு சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்த மத்திய அரசால் ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டு, பல்வேறு பணிகள் துவங்கக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, மற்ற மாநிலங்களை தமிழகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற பொழுது தமிழகம் உள்கட்டமைப்பிலே, சாலை வசதியிலே ஒரு முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது

என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் படிப்படியாக வளர்ந்து இந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான சாலை வசதி, சுகாதார வசதி, புதிய தொழில்கள் துவங்கி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும் அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கவிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு மத்திய அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் இங்கே இராணுவத் தளவாடங்களுக்கான உதிரிப் பாகங்கள் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலை சேலத்திலே உருவாக்கப்படும் என்ற ஒரு செய்தியை சொல்லியிருந்தார்கள். அந்தத் திட்டம் மத்திய அரசின் திட்டமாக இருந்தாலும் அதை விரைந்து பெற்று நம்முடைய மாவட்ட மக்களுக்கு, இளைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதற்கு அரசு உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இது உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்களுடைய தேவைகளை நிறைவேற்றுகின்ற அரசு என்பதை தெரிவித்து இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்ற அனைவருக்கும் மனமார்ந்த, உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***07.06.2019** அன்று, சேலத்தில் ஏ.வி.ஆர். ரவுண்டானா முதல்*
இராமகிருஷ்ணா சாலை சந்திப்பு வரையிலான புதிய மேம்பாலத்தை
திறந்து வைத்து, ஆற்றிய உரை

மக்களின் புதிய கோரிக்கைகளையும் நிறைவேற்ற அரசு தயாராக உள்ளது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு வருகை புரிந்துள்ள அத்தனை பேருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவுண்டம்பட்டி பகுதியில் வாழ்கின்ற மக்கள் தேர்தல் நேரத்தில், கவுண்டம்பட்டி–வெல்லாண்டிவலசை இணைக்கின்ற பாலம், கட்டிக் கொடுக்க வேண்டுமென்று வைத்த கோரிக்கையை ஏற்று, சரபங்கா நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்டி மாண்புமிகு இதயதெய்வம்

புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காலத்திலே திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொடுக்கப்பட்டது. இப்பொழுது, மேலும், ஒரு புதிய பாலம் தேவை என்ற நைனாம்பட்டியில் இருக்கின்ற பொது மக்களின் கோரிக்கையை ஏற்று கிட்டத்தட்ட ரூபாய் 1.90 கோடி மதிப்பீட்டில் சரபங்கா நதியின் குறுக்கே கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய பாலத்தை திறந்து வைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தப் பாலத்தை கட்டியதன் மூலம், நைனாம்பட்டியில் இருக்கக்கூடிய, அரசு மருத்துவமனைக்கு செல்லக்கூடிய பொது மக்கள், பள்ளிக்குச் செல்கின்ற நம்முடைய மாணவச் செல்வங்கள் கிட்டத்தட்ட 1.50 கிலோ மீட்டர் சுற்றிச் செல்லக்கூடிய நிலையை மாற்றி, இப்பொழுது நேரடியாக, எளிதாக செல்லக்கூடிய ஒரு சூழ்நிலையை நாங்கள் உருவாக்கியிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தடையில்லாமல் 30 வார்டுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரித் தண்ணீரை கொடுக்கின்றது. நஞ்சுண்டேஸ்வரர் ஆலயம் சீரமைக்கப்பட்டு, புதுப்பிக்கப் பட்டிருக்கிறது. பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்திலே புதிதாக திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு வருகிறது. எடப்பாடி நகராட்சிக்கு அருகிலே பிரம்மாண்டமான மார்கெட் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று, மாலை நேரங்களில் ஓய்வு எடுப்பதற்காக பூங்கா வசதி அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இங்குள்ள மாணவ, மாணவிகள் உயர்கல்வி படிப்பதற்காக குறைந்த கட்டணத்திலே, ஏற்கெனவே, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற பொழுதே வைத்த கோரிக்கையை ஏற்று அனைத்து பட்டப்படிப்புப்

பிரிவுகளையும் உள்ளடக்கிய, இரண்டாயிரம் மாணவர்கள் படிக்கக்கூடிய அளவிற்கு பிரம்மாண்டமான அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை நாங்கள் கொடுத்திருக்கின்றோம். அதேபோல, ஜலகண்டபுரத்திற்கும், நங்கவள்ளிக்கும் இடையிலே வனவாசி என்ற பகுதியிலே சுமார் ரூபாய் 58 கோடி மதிப்பீட்டில் பாலிடெக்னிக் கல்லூரி பிரம்மாண்டமாக கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. எட்டிக்கோட்டைமேட்டில் பி.டெக். கல்லூரியும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், சிட்கோ தொழிற்பேட்டை விரைவில் அமைக்கவிருக்கின்றோம். மருத்துவமனைகள் எல்லாம் சீரமைக்கப்படுகின்றது. ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதிகளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவமனைகளை திறந்திருக்கின்றோம். புதிதாக ரேஷன் கடைகளை திறந்திருக்கின்றோம், அதற்கான கட்டடங்களை கொடுத்திருக்கின்றோம். பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையை ஏற்று, பால் உற்பத்தியாளர்களுக்கு புதிதாக கட்டடங்களை கட்டிக் கொடுத்திருக்கின்றோம். வெள்ளாளபுரம் பஞ்சாயத்து, செட்டிமாகுறிச்சி பஞ்சாயத்து, நங்கவள்ளி ஒன்றியம் ஆகிய பகுதிகளில் மாதிரிப் பள்ளி வகுப்புகளையும் அதற்கான கட்டடங்களையும் அம்மாவினுடைய அரசால் திறந்துவைத்து, மாணவர் நலன் காக்கப்படுகிறது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

நங்கவள்ளியில் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை இருப்பு வைத்துக்கொள்ளவும், மார்கெட் கமிட்டி மூலமாக விவசாயிகள் வங்கிக்கடன் பெறுவதற்காகவும் வேளாண் துறைக்கு ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக வேளாண் கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். இதுபோல பல்வேறு வசதிகளை, எடப்பாடி மக்கள் வைத்த கோரிக்கைகளை

நாங்கள் நிறைவேற்றித் தந்திருக்கின்றோம். மேலும், மக்களின் புதிய கோரிக்கைகளையும் நிறைவேற்ற அரசு தயாராக இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஜலகண்டபுரம் பேரூராட்சியில் இருக்கின்ற மக்கள் வைத்த கோரிக்கையான போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு ஒரு புறவழிச் சாலை அமைப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே எடப்பாடி நகரத்தில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக பிரம்மாண்டமான புறவழிச் சாலையை அமைத்திருக்கின்றோம். இங்கே வந்திருக்கக்கூடிய பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்கள், அனைத்து தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பியதற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக மின்சாரக் கோட்டம் கொடுத்திருக்கின்றோம், நெடுஞ்சாலைத் துறைக்கு கோட்ட அலுவலகம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம், கல்வி மாவட்டத்தை இங்கே கொடுத்திருக்கின்றோம். அதுபோல, கருவூலத்தை கட்டிக் கொடுத்திருக்கின்றோம். இப்படி பல திட்டங்களை, மக்கள் வைத்த கோரிக்கைகளை, கிட்டத்தட்ட 85 சதவிகிதத்திற்கு மேல் நாங்கள் நிறைவேற்றித் தந்திருக்கின்றோம். இன்னும் சில நகரப் பகுதியிலே சாலைகள் அமைக்க வேண்டுமென்று வைக்கப்பட்ட கோரிக்கைகளும் படிப்படியாக அமைத்துக் கொடுக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, எடப்பாடியில் ரூ.80.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய சார்நிலைக் கருவூல அலுவலகக் கட்டடம், தாட்கோ மூலம் சமுத்திரம் ஊராட்சியில் ரூபாய் 1 கோடியே 14 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள

அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் கொங்கணாபுரம் பேரூராட்சியில் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாட்டு வாரச் சந்தை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ், ரூபாய் 68 இலட்சத்து 6 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நிழற்கூடம், புதிய மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் மற்றும் கான்கிரீட் சாலைகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், ரூபாய் 34 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 4 அங்கன்வாடி கட்டடங்கள் என மொத்தம் ரூபாய் 5 கோடியே 87 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் முடிவுற்ற 17 புதிய பணிகளை இன்றைய தினம் உங்கள் முன் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமான திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்ற காலத்திலே தொடங்கப்பட்டு, முடிக்கப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை கொடுக்கின்றோம். மேலும், விடுபட்டுள்ளதாகச் சொன்ன சில பகுதிகளும் இப்பொழுது சேர்க்கப்பட்டு விரைவாக அந்தப் பணிகளையும் தொடங்கவிருக்கின்றோம். இந்த ஊராட்சி ஒன்றிய மக்களால், குடிநீர் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி தேவை என்று சட்டமன்ற உறுப்பினர்களிடம் வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, ஆய்வு செய்து, அந்தப் பணிகளும் விரைவில் தொடங்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்திலே, நங்கவள்ளி–மேச்சேரி கூட்டுக் குடிநீர் திட்டம் கொண்டு வரவேண்டுமென்று பொதுமக்கள் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையிலே, விரைவாக அந்தப் பணியை முடித்து இன்றைக்கு பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ள அரசு அம்மாவினுடைய அரசு என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல, இந்த கவுண்டம்பட்டிப் பகுதியிலே குடிநீர், சாலை, கழிவுநீர் அகற்றுதல், மக்களுக்குத் தேவையான சுகாதார வசதி, கால்நடை மருத்துவமனை, ரேஷன் கடைகளுக்கு நல்ல கட்டடம் மற்றும் புதிய கடைகள் திறப்பு, விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான வசதி போன்ற பல்வேறு அடிப்படை வசதிகளை நம்முடைய எடப்பாடி பகுதி வாழ் மக்கள் அனைவருக்கும் அம்மாவினுடைய அரசு சிறந்த முறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மேலும்

உங்களால் கொடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்செங்கோட்டிலிருந்து ஓமலூர் வரை நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கு அம்மாவினுடைய அரசால் திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

மக்கள் வைத்த கோரிக்கைகள் பெரும்பாலும் நிறைவேற்றப் பட்டுள்ளது என்று நான் எண்ணுகிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த முடிவுற்ற 17 பணிகளையும் உங்கள் முன் திறந்து வைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளேன் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***08.06.2019** அன்று சேலம் மாவட்டம்,*
எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் முடிவுற்ற திட்டப் பணிகளை
திறந்து வைத்து ஆற்றிய உரை.

தமிழ்நாட்டின் பல்வேறு திட்டங்களுக்கு மத்திய அரசு போதிய நிதியுதவி வழங்க வேண்டும்!

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே, மாண்புமிகு மத்திய அமைச்சர்களே, மாண்புமிகு முதலமைச்சர்களே மற்றும் துணை நிலை ஆளுநர்களே, நிதி ஆயோக்கின் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களே மற்றும் உயர் அலுவலர்களே, வணக்கம்.

நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற மகத்தான வெற்றிக்காக நான் பிரதமருக்கு முதலில் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களது திறன்மிக்க தலைமையின் கீழ், இந்தியா மிக விரைவில் உலகில் உள்ள அதிக வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஒன்றாக திகழும். அந்த முயற்சிக்கு தமிழ்நாடு அரசு என்றும் துணை நிற்கும். இந்த மாநாட்டில் என்னுடைய கருத்துக்களை

தெரிவிக்க வாய்ப்பளித்த பிரதமருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

புரட்சித்தலைவி அம்மாவின் தொலைநோக்கு பார்வையோடு உருவாக்கப்பட்ட திட்டங்களை தமிழக அரசு மிகச்சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களை மேலும் சிறப்பாக செயல்படுத்த பிரதமர் முழு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மழை நீர் சேகரிப்பு திட்டம் புரட்சித்தலைவி அம்மாவின் அற்புதமான கண்டுபிடிப்பு ஆகும். அவரது சிந்தனையில் உதித்த இத்திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இதை நாடு முழுவதும் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மழைநீரை வீணாக்காமல் சேகரிக்க அம்மாவின் அரசு குடிமராமத்து திட்டத்தை செயல்படுத்தி கொண்டு வருகிறது. தமிழகம் முழுவதும் உள்ள ஏரிகள், குளங்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுது 1,600 நீர்நிலைகளை சீரமைக்க ரூ.500 கோடி தமிழக அரசு ஒதுக்கி இருக்கிறது. தமிழகத்தின் பல்வேறு குடிநீர் திட்டங்களுக்கு மத்திய அரசு போதிய நிதியுதவி வழங்கவேண்டும்.

கோதாவரி ஆற்றில் ஆண்டுக்கு கூடுதலாக 300 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கிறது என்றும், இதை மற்ற தென்னக ஆறுகளுக்கு திருப்பிவிடலாம் என்றும் மத்திய நீர்வள ஆணையம் மதிப்பீடு செய்து உள்ளது.

எனவே, ஆந்திராவில் உள்ள கோதாவரி ஆற்றை காவிரி ஆற்றுடன் இணைக்கும் திட்டத்தை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்திட வேண்டும். நீரை சேமித்து வைக்க 383 தடுப்பணைகளையும், நீர் பாதுகாப்பு கட்டமைப்புகளையும் ரூ.7.36 கோடி செலவில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். அடிக்கடி வறட்சியை சந்திக்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு

ஆண்டுக்கு ரூ.1,000 கோடியை சிறப்பு நிதி ஒதுக்கீடாக அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2017ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவியது. அப்போது விவசாயிகளுக்கு உடனடி நிவாரணமாக ரூ.2,247 கோடியும், பிரதமர் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.5,300 கோடி இழப்பீடாகவும் தமிழக அரசு வழங்கியது. வறட்சி தடுப்பு நடவடிக்கைகளை தீவிரமாகவே மேற்கொண்டு வருகிறோம். எனவே, அதற்கு தேவையான நிதி உதவிகளை மத்திய அரசு வழங்க வேண்டும்.

பேரூரில் ரூ.6,078 கோடியில் 400 மில்லியன் லிட்டர் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்துக்காக ஜப்பான் நாட்டு நிறுவனத்திடம் வாங்கும் கடன் உதவிபோக, மீதம் உள்ள ரூ.1,810 கோடியை மத்திய அரசு வழங்க வேண்டும். கழிவு நீரை தொழிற்சாலைகளின் பயன்பாட்டுக்காக சுத்திகரிக்க ரூ.1,900 கோடி செலவாகும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்கங்களில் நீரை நீண்டகாலம் சேமித்து வைக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் தலா ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கிட அனுமதி வழங்க வேண்டும். இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களில் விவசாயத் திறன் மேம்பாட்டு வளர்ச்சிக்காக தலா ரூ.100 கோடி வழங்க வேண்டும். பிரதமர் பயிர் காப்பீட்டு திட்டத்துக்காக பெண் விவசாயிகள் கட்ட வேண்டிய பிரீமியத்துக்கு 100 சதவீதம் மானியம் வழங்க வேண்டும்.

பழங்கள், காய்கறிகள் போன்ற அழுகும் பொருட்கள் அதிகமாக உற்பத்தி ஆகும் இடங்களில் பெரிய அளவிலான குளிர்சாதன கிட்டங்கிகள் அமைக்க வேண்டும். தற்போது குறைந்தபட்ச ஆதாரவிலை சில குறிப்பிட்ட பயிர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. பெரிய மாநிலங்களில் விவசாயிகளின்

விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. இந்த நிலையிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க ஆண்டுக்கு ரூ.500 கோடி வழங்க வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள தலைவாசலில் ரூ.496 கோடி செலவில் ஆசியாவிலேயே பெரிய ஒருங்கிணைந்த கால்நடை பண்ணை அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதற்காக 50 சதவீத நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு வழங்க வேண்டும். மத்திய அரசு மலிவு விலையில் பருப்பு வகைகளை வழங்கி வந்தது. இந்தத் திட்டம் இந்த ஆண்டு ஜுன் மாதம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது. ஏழை, எளிய மக்கள் பயன் அடைய இந்தத் திட்டத்தை தொடர வேண்டும். இதுபோல வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சமையல் எண்ணெயும், ஒரு லிட்டர் ரூ.15/—க்கு வழங்கப்பட்டு வந்தது. இந்தத் திட்டத்தையும் மீண்டும் செயல்படுத்த வேண்டும்.

ரேஷன் கடைகளில் வழங்கப்படும் பாமாயில், தரமான மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்கு ஜி.எஸ்.டி.யில் இருந்து வரிவிலக்கு அளிக்க வேண்டும். கடலோர போலீஸ் படையை மேலும் வலுப்படுத்த ரூ.7.50 கோடி நிதியை தமிழகத்துக்கு வழங்க வேண்டும். மீனவர்களுக்கு வழங்க வேண்டும். மீனவர்களுக்கு உதவியாக குளச்சல் அல்லது கன்னியாகுமரியில் நிரந்தரக் கடற்படை நிலையத்தை அமைக்க வேண்டும்.

ஏற்கெனவே சென்னையில் பசுமை விமான தளம் அமைக்கப்படும் என்று எனது அரசு அறிவித்து இருந்தது. அதன்படி பசுமை விமான தளம் அமைக்க தமிழக அரசுடன் சமமான அளவில் மத்திய அரசு பங்களிப்பை தர வேண்டும். ஜி.எஸ்.டி. வரியில் தமிழகத்துக்கு தரவேண்டிய ஒருங்கிணைந்த சரக்கு சேவை வரி நிலுவை தொடர்பாக ரூ.4,458 கோடியை உடனடியாக வழங்கிட வேண்டும்.

சென்னையில் ஒருங்கிணைந்த வெள்ள மேலாண்மைத் திட்டத்தை ரூ.3,000 கோடியில் உடனடியாக நிறைவேற்ற நிதி ஆயோக் தேவையான அனுமதி மற்றும் நிதி உதவிகளை வழங்கிட பிரதமர் உத்தரவிட வேண்டும்.

அனைத்து வளர்ச்சி திட்டங்களையும் நிறைவேற்ற பிரதமர் உத்தரவிட வேண்டும் என்று தமிழக மக்கள் மிகுந்த எதிர்பார்ப்பில் உள்ளார்கள்.

நன்றி! வணக்கம்!

புதுடெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
கலந்துகொண்டு ஆற்றிய உரையின் முக்கிய விவரங்களின்
தமிழாக்கம் (15.06.2019)

தெற்காசிய நாடுகளில், சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம், நமது டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்!

Hon'ble President of India

Hon'ble Governor of Tamil Nadu

Hon'ble Governor of Kerala

Hon'ble Judge of Supreme Court of India

Hon'ble Chief Justice, High court of Madras

Hon'ble Judges of Supreme Court and

High Court of Madras!

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி. சண்முகம் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களே!

இப்பல்கலைக்கழகத்தின் ஆசிரிய பெருமக்களே!

வருங்கால வழக்குரைஞர்களாக மலரவிருக்கும் மாணவச் செல்வங்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

அனைவருக்கும் வணக்கம்.

At the outset, I convey my greetings to all of you.

It gives me immense pleasure to participate in the Special Convocation function. I appreciate the decision of the Tamil Nadu Dr. Ambedkar Law University for having rightly chosen three eminent persons and honouring them as Doctor of Laws by the Hon'ble President of India. I am happy to mention here that this honour is the first of its kind in the annals of legal and judicial history.

I congratulate the three personalities who are receiving the honours today.

Our Hon'ble President of India started his career by enrolling himself as an Advocate in the Bar Council of Delhi. He served two consecutive terms as a Member of Rajya Sabha. Before his elevation as President of India, he was the Governor of Bihar. He has been a custodian of poor and stood for their cause.

Shri. P.Sadasivam, Hon'ble Governor of Kerala and retired Chief Justice of Supreme Court, is a son of our soil. His sustained hard work and dedication made him rise to the highest position in the Judiciary.

He has pronounced several path-breaking judgments in his career. Notable among them is the 1993 Bombay Blast

case, wherein several accused persons were sentenced, winning the praise of people. He has also delivered a judgment for ending the inhuman practice of Manual scavenging.

Justice Bobde, Hon'ble Judge of the Supreme Court, hails from a lawyer family. He delivered a land mark judgment stating that no Indian citizen without an Aadhar card, can be deprived of basic services and Government subsidies.

Hon'ble Chief Justice of High Court of Madras - started her career by enrolling herself as a lawyer in the Bar Council of Maharashtra in 1982. Her deep involvement in cases relating to women prisoners and deserving people, has made her the Chief Justice of the Madras High Court.

"நீதிக்கு முன் அனைவரும் சமம்" என்ற கொள்கையை உறுதியாக கடைபிடிக்கும் மாநிலம் தமிழ்நாடாகும். நீதி கேட்ட பசுவிற்காக, அதன் கன்றை கொன்ற தனது மகனை தேர் காலில் இட்டு கொன்ற மனுநீதி சோழன், நீதி தவறியதற்காக தனது உயிரை விட்ட பாண்டிய மன்னன், புறாவிற்காக தனது தொடையிலிருந்து சதையை அறுத்துக் கொடுத்த சிபி சக்கரவர்த்தி போன்ற நீதிக்கு தலை வணங்கும் எண்ணற்ற மன்னர்கள் வாழ்ந்த நாடு தமிழ்நாடு.

இந்திய அரசியலமைப்பின்படி, நீதித் துறை, ஆட்சித் துறை, சட்டமன்றம் மற்றும் பத்திரிகைத்துறை ஆகிய நான்கு தூண்கள் தங்கள் எல்லைக்குள் சுதந்திரமாக செயல்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ முடியும். தமிழ்நாட்டில் இந்த நான்கு பிரிவுகளும் சுதந்திரமாக செயல்படுகின்றன என்பதை நான் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தெற்காசிய நாடுகளில், சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம், நமது டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம். ஆசியாவிலேயே மிகக் குறைவான கல்விக்

கட்டணத்தில் தரமான சட்டக் கல்வியை வழங்கி வருகிறது. இந்த பல்கலைக் கழகத்திற்கென தனியாக சென்னையிலுள்ள பெருங்குடியில் 62 கோடி ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய வளாகம் அமைக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சட்டக்கல்வி மேம்பாட்டிற்கு மாண்புமிகு அம்மாவும், மாண்புமிகு அம்மாவின் அரசும் எடுத்த நடவடிக்கைகள் ஒரு சிலவற்றை இங்கே கூற விரும்புகிறேன்.

திருச்சிராப்பள்ளியில் தேசிய சட்டப் பள்ளி துவக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாணாக்கர்களுக்கும் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் குறைந்த செலவில் சட்டக் கல்வியை வழங்கி வருகிறது. இந்த பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள 13 சட்டக் கல்லூரிகளில், 11 சட்டக் கல்லூரிகள் அரசு சட்டக் கல்லூரிகளாகும்.

கடந்த ஆண்டு மட்டும், புதிதாக 3 அரசு சட்ட கல்லூரிகளை நாங்கள் துவக்கினோம். இந்த ஆண்டு, மேலும் 3 புதிய அரசு சட்ட கல்லூரிகள் துவங்கப்படவுள்ளன.

தமிழ்நாடு முழுவதும் நீதிமன்றங்கள் கட்டுதல், நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிக்காக கடந்த 8 ஆண்டுகளில் 998 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சட்டப் பல்கலைக்கழகங்களில் முதன்முறையாக மிகப்பெரிய அளவில் ஏஐஆர் (AIR) இணைய வழி சட்டத் தொகுப்பகம் மற்றும் சட்டச்செயலி பகிர்வகம், நமது தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

சட்டப் பல்கலைக்கழகம் மற்றும் ஒவ்வொரு அரசு சட்டக் கல்லூரிக்கும், அதன் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த உரிய நிதி, அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

“சட்டத்தின் அனைத்து பயன்களும் ஏழை மக்களை சென்றடையும்படி பார்த்துக்கொள்ளும் கூட்டுப் பொறுப்பு அனைவருக்கும் உண்டு” என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். எனவே நீதியரசர்களும், நீதிமன்றங்களும் இந்த இலக்கை அடைய உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும், அதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய ஒத்துழைப்பை வழங்கும் என்றும் இந்த தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று Doctor of Laws பட்டம் பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய விழாவில் முதன்மை விருந்தினராக பங்கேற்று சிறப்பித்த மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை நல்ல முறையில் நடத்திய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
13.07.2019 அன்று தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர்
சட்டப் பல்கலைக்கழகத்தின் சிறப்பு பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய உரை.

ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொண்ட தலைவர் திரு.இராமசாமி படையாட்சியார்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களை வணங்கி, சமூக நீதி காக்க அல்லும் பகலும் அயராமல் உழைத்த வீராங்கனை மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

இந்த விழாவிற்கு தலைமை ஏற்றுள்ள மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே!

முன்னிலை வகிக்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே!

மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களே!

மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!

வருகை தந்து சிறப்பித்துக் கொண்டு இருக்கிற மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, அரசு கொறடா அவர்களே, பல்வேறு கட்சிகளுடைய தலைவர்களே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழாவின் நாயகன் திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின் புதல்வன் திரு.ராமதாஸ் மற்றும் அவர்களின் குடும்பத்தினரையும், அவர் மீதுள்ள அன்பின் காரணமாக இவ்விழாவிற்கு வருகை புரிந்திருக்கும் சகோதர, சகோதரிகளையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

“இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்
இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்”

என்ற புரட்சித்தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, வாழும்போதே வரலாறாக வாழ்ந்த மரியாதைக்குரிய திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின் முழு திருஉருவப் படத்தை, வரலாற்று சிறப்புமிக்க நம்முடைய சட்டமன்றத்தில் திறந்து வைக்கும் இந்த விழாவில், பங்கேற்பதை நான் பெருமையாக கருதுகிறேன். நமது சட்டப் பேரவை வரலாற்றில் இது ஒரு சிறப்பான நிகழ்வாகும்.

நாட்டுக்காகவும், சமுதாயத்திற்காகவும் உழைத்த நல்லவர்களை சிறப்பிப்பதில், மரியாதை செலுத்துவதில், மாண்புமிகு அம்மா அவர்களும், மாண்புமிகு அம்மாவின் அரசும் முன்மாதிரியாக திகழ்கிறது. அந்த வகையில், இந்திய விடுதலைப் போராட்டத்திலும் சமுதாயப் பணியிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட மரியாதைக்குரிய திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின்

தன்னலமற்ற உழைப்பை பெருமைப்படுத்தவும், அன்னாரின் நினைவை சரித்திரம் போற்றும் வகையிலும், அன்னாரின் முழு உருவப்படத்தை இம்மாமன்றத்தில் நிறுவுவதில் மாண்புமிகு அம்மாவின் அரசு பெருமைப்படுகிறது.

இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது என்றால், அந்த வளர்ச்சிக்கு உரமாக இருப்பது பல விடுதலைப் போராட்டத் தலைவர்களின் தியாகங்கள் தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அப்படிப்பட்ட தியாக சீலர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் தான் திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள்.

1952ஆம் ஆண்டு தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியை தோற்றுவித்து, அதே ஆண்டில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில், திரு.இராமசாமி படையாட்சியார் உட்பட உழைப்பாளர் கட்சியைச் சேர்ந்த 19 வேட்பாளர்கள் சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். மக்களவை தேர்தலிலும், இக்கட்சியை சேர்ந்த நான்கு வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். மக்கள் பணியாற்றுவதில் மற்ற தலைவர்களுடன் இணக்கமாக பணியாற்ற திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள் தயங்கியதில்லை.

1954ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் அவர்களின் அமைச்சரவையில் திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக பணியாற்றினார். அதன் பின்னர் 1980 மற்றும் 1984ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனிலும், முன்னேற்றத்திலும் அதிக அக்கறை எடுத்துக்கொண்ட தலைவர்களில் முதல்வரிசை தலைவராக திகழ்ந்தவர் திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள். மிகவும் பின்தங்கிய மக்களை முன்னேற்றுவதற்காக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவை

உருவாக்கக் காரணமாக இருந்தவர் திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள். குறிப்பாக, வன்னியர் சமூகத்திற்கு மாநிலத்தில் 20 சதவீத ஒதுக்கீடும், மத்தியில் 2 சதவீத ஒதுக்கீடும் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை உழைப்பாளர் கட்சி மாநாட்டில் நிறைவேற்றிய முதல் தலைவர் இவர்தான்.

தீர்மானம் நிறைவேற்றியது முக்கியமல்ல. அந்த தீர்மானம் வெற்றி பெற தொடர் முயற்சி மேற்கொள்வதில்தான் அந்த தீர்மானத்தின் வெற்றி அடங்கியிருக்கிறது. இந்த தீர்மானத்தின் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்காக மத்திய, மாநில அரசுகளுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வந்தவர் திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள்.

பின்தங்கிய மக்களை முன்னேற்ற வேண்டும் என்பதற்காக தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த அந்த உன்னதத் தலைவர் இந்த நாட்டில் பிறந்ததும், வாழ்ந்ததும் நாம் செய்த பாக்கியம் என்பதால், அவர் பிறந்தநாளான செப்டம்பர் 16ஆம் நாள், அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று 29.06.2018 அன்று நான் சட்டமன்றத்தில் அறிவித்தேன்.

மேலும், திரு.இராமசாமி படையாட்சியார் அவர்கள் பிறந்த கடலூர் மாவட்டத்தில், அரசு சார்பாக நினைவு மண்டபமும், அதில் அன்னாருடைய ஒரு முழு உருவ வெண்கலச் சிலையும் அமைக்க வேண்டும் என்று வன்னியர் குல பெருமக்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும், என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். அதனை முழு மனதாக ஏற்று, 19.07.2018 அன்று மேட்டூரில் நடைபெற்ற ஒரு அரசு விழாவில் திரு.இராமசாமி படையாட்சியாருக்கு நினைவு மண்டபமும், முழு உருவ வெண்கலச் சிலையும் அமைக்கப்படும் என்று நான் உறுதியளித்தேன்.

வாக்குறுதி கொடுத்ததோடு நிற்காமல், அதனை உடனடியாக நிறைவேற்றும் ஆட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் ஆட்சி தான் என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் பலமுறை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களிடம் குருகுல பயிற்சி பெற்ற நாங்களும், “சொன்னதை செய்வோம்! சொல்லாததையும் செய்வோம்!” என்ற கொள்கையின் அடிப்படையில், கடலூர் மாவட்டம், மஞ்சக்குப்பத்தில் திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களுக்கு 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1.5 ஏக்கர் அரசு நிலம் ஒதுக்கி, அதில் நினைவு மண்டபமும், திருஉருவ வெண்கலச் சிலையும் அமைக்க 14.09.2018 அன்று நான் அடிக்கல் நாட்டினேன். இம்மண்டபம் விரைவில் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். உயிரோட்டமுள்ள இந்த ஓவியம், திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின் கம்பீரம், கண்ணியம் மற்றும் ஆளுமையை தத்ரூபமாக பிரதிபலிக்கின்றது. இந்த ஓவியத்தைத் தீட்டிய ஓவியரை நான் மனதார பாராட்டுகிறேன்.

இந்த விழாவினை நல்ல முறையில் நடத்திய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
19.07.2019 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
திரு. எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் அவர்களின்
திருவுருவப் படத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை.

சிறந்த சாலை மேம்பாடு, சிறந்த உட்கட்டமைப்புகளை பெற்று இந்தியாவிலேயே, தமிழ்நாடு சிறந்த மாநிலமாக விளங்குகின்றது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

நீண்டகாலமாக தாரமங்கலம் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற பொதுமக்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், முன்னாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்க நிர்வாகிகள் ஆகியோரின் ஒட்டுமொத்தக் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக தாரமங்கலம் புறவழிச் சாலையையும், இரண்டு பாலங்களையும் உங்களின் ஆசியோடு நான் இன்று திறந்து வைக்கின்றேன்.

இந்த சிறப்பான கூட்டத்திற்கு வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு சாலை உள்கட்டமைப்பு என்பது மிகமுக்கியமான ஒன்றாகும். எந்தவொரு மாநிலத்தில் சாலை உள்கட்டமைப்பு சிறந்து விளங்குகின்றதோ அந்த மாநிலம் தொழில் வளம் நிறைந்த சிறந்த மாநிலமாக இருக்கும். எனவே, நம்முடைய தமிழ்நாடு சாலை மேம்பாடு இந்தியாவிலேயே சிறந்து விளங்கியிருக்கின்றது. சிறந்த உள்கட்டமைப்பு உள்ள மாநிலம் என்று சொன்னால் அது தமிழ்நாடு என்று பெயர் சொல்கின்ற அளவிற்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்து இன்று வரை சாலைப் பராமரிப்பில் இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்ற மாநிலம் தமிழ்நாடு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்றையதினம், நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டத்தின் சார்பாக சங்ககிரி சட்டமன்றத்திற்கு உட்பட்ட தாரமங்கலத்தில் ரூபாய் 24 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் 3.110 கிலோமீட்டர் நீளம் கொண்ட தாரமங்கலம் புதிய புறவழிச் சாலை மக்களின் ஆசியோடும், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அருளாசியோடும் நான் திறந்து வைத்திருக்கின்றேன். இந்தப் புறவழிச் சாலை ஓமலூர், சங்ககிரி, திருச்செங்கோடு, பரமத்தி சாலை கிலோமீட்டர் 9/240 பெரியபட்டியில் துவங்கி, கிலோமீட்டர் 15/300 தொட்டம்பட்டியில் முடிவடைகின்றது. சேலம் நெடுஞ்சாலைத் துறையின் நபார்டு மற்றும் புறவழிச் சாலை கோட்டத்தின் சார்பில் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கோணசமுத்திரம் ஊராட்சி, வடகரை வாய்க்கால் நரிமேடு சாலை ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், ஓலைப்பட்டி ஊராட்சி, தொலசம்பட்டி சாலை ரூபாய் 2 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம்

ரூபாய் 5 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டு புதிய பாலங்களும் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாமல், ஓமலூரிலிருந்து மேட்டூர் வரைக்கும் உள்ள இரயில்வே கடவுகளின் இருபுறங்களிலும் ஏற்படும் அதிகமான போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக சட்டப்பேரவை உறுப்பினர்களும், பொதுமக்களும் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் தொலசம்பட்டியில் ரூபாய் 18.44 கோடியில் இரயில்வே மேம்பாலம், முத்தநாயக்கன்பட்டியில் ரூபாய் 15.94 கோடியில் ஒரு இரயில்வே மேம்பாலம், JSW என்ற தொழிற்சாலைக்கு அருகிலே ரூபாய் 19.34 கோடி மதிப்பீட்டில் ஒரு உயர்மட்ட மேம்பாலம், புஞ்சாண்டியூரில் இரயில்வே கடவின் குறுக்கே ஒரு மேம்பாலமும் விரைந்து கட்டிக் கொடுத்து, மக்களுடைய பயன்பாட்டிற்கு வரும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக, Road Sector Project மூலமாக திருச்செங்கோடு, சங்ககிரி, கொங்கணாபுரம், தாரமங்கலம், ஓமலூர் வரை நான்கு வழிச் சாலையாக விரிவுபடுத்தி போக்குவரத்து நெரிசலற்ற சாலையாக உருவாக்கித் தரப்படும். தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக ஓமலூர்–மேச்சேரி சாலையில் ஓமலூர் முதல் மேச்சேரி வரை 14.6 கிலோமீட்டர் நீளத்திற்கு 4 வழிச்சாலை அமைப்பதற்கு அம்மாவினுடைய அரசு திட்டமிட்டு, அந்தப் பகுதியும் வளர்ச்சியடைவதற்கு விரிவுபடுத்தப்படும்.

பவானி–மேட்டூர், மேட்டூர்–தொப்பூர் பகுதிகளில் செல்கின்ற வாகனங்கள் தங்குதடையின்றி செல்வதற்கு அம்மா அவர்களின் அரசு அந்தச் சாலைகளையும் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

சாலை அமைக்கும்பொழுது, நிலம் கையகப்படுத்துவதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதால், மனமுவந்து நிலம் கொடுத்தால்தான் இது போன்ற சாலைகளை அமைத்து, விபத்து, விலைமதிக்க முடியாத உயிர்ச் சேதம், பயண நேரம் ஆகியவற்றை குறைக்க முடியும், எரிபொருள் மிச்சப்படும். போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது தான் எங்களுடைய இலட்சியம்.

இதயதெய்வம் அம்மா அவர்கள் காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து இன்று வரை சேலம் மாவட்டம் மட்டுமல்லாமல் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு சாலைகளை சீரமைத்திருக்கின்றோம்.

இந்தியாவின் இராணுவத் தளவாடங்களுக்கான உதிரிப் பாகங்களை உற்பத்தி செய்வதற்கு மிகப்பெரிய தொழிற்சாலையை Salem Steel Plant பகுதியில் உள்ள ஒரு பகுதி நிலத்தில் மத்திய அரசு அமைக்க இருப்பதால் நேரடியாகவும், மறைமுகமாகவும்

பல்லாயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இது ஒரு வரப்பிரசாதமான திட்டம், இதனையும் அம்மாவின் அரசு தான் கொண்டு வந்திருக்கிறது.

குடிநீருக்காக கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். தற்போது, நீர்மேலாண்மை மிக முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. விவசாயத்திற்கு தேவையான நீர், குடிப்பதற்கான பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆகியவை விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், பொதுமக்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில், ஆங்காங்கே இருக்கின்ற ஏரிகளை விவசாய சங்கங்களிடம் ஒப்படைத்து, விவசாயிகளின் பங்களிப்போடு உருவாக்க வேண்டுமென்று, குடிமராமத்துத் திட்டத்தினை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். விவசாய அமைப்புகளும் தங்களுடைய ஆதரவினை நல்கி இத்திட்டம் சிறப்பாக செயல்பட உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் ஏரிகள், குளங்கள் தூர்வாரப்படுவதால் கிடைக்கும் வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்து தங்கள் நிலங்களுக்கு இயற்கை உரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேட்டூர் அணையில்

கிடைக்கும் வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்துக் கொள்ளலாம். இதற்கெல்லாம் அம்மாவினுடைய அரசு தாராளமாக அனுமதி வழங்கியிருக்கின்றது.

ஓமலூர் பகுதி விவசாயிகள் மலர்களை அதிகளவில் பயிரிட்டு பெங்களூரில் விற்பனை செய்கின்றார்கள். அதற்குத் தகுந்த விலை கிடைப்பதில்லை. எனவே, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அரசால் சர்வதேச அளவில் மலருக்கான ஏலமய்யம் ஒன்றை ஓசூரில் ஏற்படுத்த நேற்றைய தினம் அறிவிப்பு கொடுத்தேன். விவசாயிகளுக்குத் தேவையான விலை கிடைக்காத காலங்களில் அங்குள்ள குளிர்பதனக் கிடங்குகளில் மலர்களை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளலாம். விவசாயிகளுக்கு அங்கே ஓய்வு அறைகளும் கட்டிக் கொடுக்கப்படும். சர்வதேச அளவில் வருகைபுரியும் வியாபாரிகளுக்கும் தங்குவதற்கு தேவையான ஓய்வு அறைகளும் கட்டிக் கொடுக்கப்படும்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக ஓமலூரிலிருந்து மேச்சேரி செல்கின்ற சாலையில் பிரம்மாண்டமான கட்டடம் கட்டப்படும். அதில், விவசாயிகள் தங்களின் உற்பத்திப் பொருள்களை அந்த மார்கெட்டில் ஆன்–லைன் மூலமாக விற்பனை செய்து கொள்ளலாம். அப்படியும் விலை கட்டுப்படியாகாத காலங்களில் அங்குள்ள குளிர்பதனக் கிடங்கில் பாதுகாத்து வைத்துக்கொள்ளலாம், அதற்கு வாடகை ஏதுமில்லை, இங்கு ATM வசதியும் செய்து கொடுக்கப்படும்.

சென்னைக்கு அருகே ரூபாய் இரண்டாயிரம் கோடியில் உணவுப் பூங்கா அமைக்கவிருக்கின்றோம். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களை உணவுப் பூங்காவில் விற்பனை செய்கின்றபொழுது உரிய விலை கிடைக்கும். வறட்சியால் பாதிக்கப்படுகின்ற விவசாய நிலங்களுக்கு சொட்டுநீர்ப் பாசன கருவிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒரு ஏக்கர்

வைத்திருப்பவர்களுக்கு 100 சதவிகித மானியம் கொடுக்கின்றோம். ஒரு ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களுக்கு 75 சதவிகித மானியத்தில் கொடுக்கின்றோம். விவசாயிகளுக்கு இரட்டிப்பு வருமானம் கிடைக்க வேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். எனவே அம்மாவின் அரசு விவசாயிகளின் நலன் காக்கின்ற அரசாக இருக்கின்றது.

தொழில் வளம் பெருக, விவசாயம், ஜவுளித் தொழில் இரண்டும் சிறக்க, கைத்தறி நெசவாளர்களுக்கு நிறைய சலுகைகளை கொடுத்திருக்கின்றோம். பொங்கல் திருநாளன்று அணிவதற்கு பொது மக்கள் கைத்தறி வேட்டி, சேலைகள் நெய்வதற்கான கூலியை உயர்த்திக் கொடுத்திருக்கின்றோம். புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதன் மூலமாக அதிகமான வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் அம்மாவின் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இது மக்களின் அரசு, விவசாயிகளின் அரசு, அம்மாவினுடைய அரசு விவசாயிகளின் நலனை தலையாய கடமையாகக் கொண்டிருக்கின்றது. மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கின்ற அரசு அம்மாவினுடைய அரசு என்பதை சுட்டிக்காட்டி, அனைவரும் அரசுக்கு துணை நின்று அரசின் திட்டங்கள் மக்களுக்கு நேரடியாகச் சென்றடைய உதவிட வேண்டும் என்றும் தெரிவித்து, இந்நிகழ்ச்சியில், பல்வேறு வேலைகளுக்கும் இடையில், மிகத் திரளாக, எழுச்சியாக பங்குபெற்ற அத்தனை நல்ல உள்ளங்களுக்கும், ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
21.07.2019 அன்று சேலம், சங்ககிரி சட்டமன்றத் தொகுதி,
தாரமங்கலம் புதிய புறவழிச் சாலை மற்றும் மேம்பாலங்களை
திறந்து வைத்து ஆற்றிய உரை.

பள்ளியில் இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்க பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு கல்வியில் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகின்றது!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றையதினம் இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்குதல் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 34 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 4 நியாய விலைக் கடைகள், ரூபாய் 22 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஒரு சமுதாயக் கூடம், ரூபாய் 19 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கச்சுப்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளிக்கான சுற்றுச் சுவர் கட்டடம், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் சார்பாக

ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்கநாடு ஆரம்ப சுகாதார நிலையம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் எடப்பாடி நகராட்சியில் பேருந்து நிலையத்தில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நவீன சுகாதார வளாகக் கட்டடம், மருத்துவ மற்றும் ஊரக நலப் பணிகளின் சார்பில் எடப்பாடி அரசு மருத்துவமனையில் சுமார் 30 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 3 இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் என மொத்தம் ரூபாய் 1 கோடியே 91 இலட்சம் 15 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 11 முடிவுற்ற திட்டப் பணிகள் பொதுமக்களின் ஆசியோடும், அம்மா அவர்களின் அருளாசியோடும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், காவல் துறையின் சார்பில் ரூபாய் 91 இலட்சத்து 61 ஆயிரம் மதிப்பீட்டில் கொங்கணாபுரம் ஊரகக் காவல் நிலையத்திற்கு புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டும் பணிக்கு இன்று அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

எடப்பாடியில், அரசு பொது மருத்துவமனைக்குத் தேவையான நவீனக் கருவிகளை வழங்கி, மருத்துவமனையை மேலும் சிறப்பாக செயல்படுத்திட வேண்டுமென்று எடப்பாடி மக்கள் ஏற்கனவே என்னிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, நவீனக் கருவிகள் வாங்குவதற்கு ரூபாய் 4 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில், இரத்த சேமிப்பு வங்கி, இரத்த சுத்திகரிப்பு, எலும்பு முறிவுக்கு ஆபரேஷன் தியேட்டர் மற்றும் ஜெனரேட்டர், 50 படுக்கைகள் கொண்ட கூடுதல் கட்டடம் என பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படும் இம்மருத்துவமனையிலேயே அறுவை சிகிச்சை செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு அம்மாவினுடைய அரசால் தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பாக எடப்பாடி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூபாய் 32 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் மின்கலத்தால் இயங்கும் 18 குப்பை சேகரிக்கும் வாகனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த வாகனங்கள் மூலமாக குப்பைகளை சேகரித்து எளிதாகத் தரம் பிரிக்கும் பணிகளை மேற்கொள்ள முடியும்.

தற்பொழுது இயக்கப்பட்டு வரும் எடப்பாடி–கொங்கணாபுரம் வழியாக தாதாபுரம், கோரணம்பட்டி, மூலப்பாதை செல்லும் நகரப் பேருந்தின் வழித்தடத்தை மெய்யம்பாளையம் வழியாகச் செல்ல நீட்டிப்பு செய்யப்படுகிறது.

இதயதெய்வம் அம்மா அவர்கள் கொண்டு வந்த உன்னதமான திட்டம் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம். இன்றையதினம் 11 மற்றும் 12ஆம் வகுப்பில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கியிருக்கின்றோம். இவைகள் ஆயிரக்கணக்கான கோடி மதிப்பீட்டில் உங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, இதனை நல்ல முறையில் பயன்படுத்தி, மாணவ, மாணவிகள் தங்கள் அறிவுத் திறனையும், பொது அறிவுத் திறனையும் பெருக்கிக்கொண்டு, எதிர்காலத்தில் எத்தனை போட்டித் தேர்வுகள் வந்தாலும் அதனை எதிர்கொள்ள தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இதன்மூலம், இன்று எடப்பாடியில் 20 பள்ளிகளைச் சார்ந்த 6,172 மாணவ, மாணவிகளும், கெங்கவள்ளி சட்டமன்றத் தொகுதியில் 18 பள்ளிகளைச் சார்ந்த 3,661 மாணவ, மாணவிகளும், ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் 20 பள்ளிகளைச் சார்ந்த 4,823 மாணவ, மாணவிகளும், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 15 பள்ளிகளைச் சார்ந்த 3,923 மாணவ, மாணவிகளும், சேலம் மேற்கு சட்டமன்றத் தொகுதியில் 9 பள்ளிகளைச் சார்ந்த 2,914 மாணவ, மாணவிகளும் என 78 அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 4 அரசு நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளைச் சார்ந்த 9,115 மாணவர்கள், 12,378 மாணவிகள் என மொத்தம்

21,493 மாணவ, மாணவிகள் ரூபாய் 26 கோடியே 37 இலட்சம் மதிப்பிலான விலையில்லா மடிக்கணினி வழங்கும் விதமாக, இன்றையதினம் 56 மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்க பல்வேறு வசதிகள் கொடுக்கப்பட்டு கல்வி கற்பவர்களின் எண்ணிக்கை உயர்ந்து தமிழ்நாடு கல்வியில் சிறந்த மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் 76 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்கள் பாலிடெக்னிக் கல்லூரி, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, கால்நடை மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி, ஐடிஐ கல்லூரி என ஏராளமான கல்லூரிகளைத் திறந்து கிராமத்திலிருந்து நகரம் வரையுள்ள ஏழை மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்தில் சிறந்த கல்வி பயில உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள். எடப்பாடி மக்கள் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்தார்கள்.

சேலம் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று வரும் மாணவ, மாணவிகளுக்கு Smart Card வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்து 2 மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டது.

வருவாய்த் துறையின் மூலமாக 54 நபர்களுக்கு கல்வி உதவித்தொகையும், 46 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகையும், 30 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகையும், 8 நபர்களுக்கு திருமண நிதி உதவியும், 6 நபர்களுக்கு விதவை உதவித்தொகையும், 2 நபர்களுக்கு விவசாய கூலி உதவித் தொகையும், 2 நபர்களுக்கு கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகையும், 2 நபர்களுக்கு முதிர்கண்ணி உதவித்தொகையும், 39 நபர்களுக்கு வீட்டுமனை பட்டாக்களும்,

130 நபர்களுக்கு நகர நில வரிப்பட்டாக்களும் என மொத்தம் 319 நபர்களுக்கு ரூபாய் 6 கோடியே 40 இலட்சத்து 64 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டம் மற்றும் பாரதப் பிரதமரின் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 88 இலட்சம் வீடு கட்டுவதற்கு மானிய நிதியுதவியும் வழங்கப்படுகிறது.

கூட்டுறவுத்துறையின் சார்பில் 108 நபர்களுக்கு பயிர் கடனும், 73 நபர்களுக்கு சுய உதவி குழு கடனும், 1 நபருக்கு மத்திய கால கடனும், என மொத்தம் 182 நபர்களுக்கு ரூபாய் 1 கோடியே 4 இலட்சத்து 97 ஆயிரம் மதிப்பிலான கடன் உதவிகளும்,

மகளிர் திட்டம் சார்பில் உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டதின் கீழ் 100 மகளிருக்கு மானியமும், 6 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன் உதவியும் என 106 மகளிர்களுக்கு ரூபாய் 58 இலட்சம் மானியம் மற்றும் வங்கி கடன் உதவிகளும்,

தோட்டக்கலைத் துறையின் சார்பில் 25 பயனாளிகளுக்கு ரூபாய் 14 இலட்சத்து 28 ஆயிரம் மதிப்பிலான வேளாண் கருவிகள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

வேளாண்மைத்துறையின் சார்பில் 60 பயனாளிகளுக்கு ரூபாய் 10 இலட்சத்து 74 ஆயிரம் மதிப்பிலான சொட்டு நீர் பாசன கருவிகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 2 நபர்களுக்கு ரூபாய் 4 இலட்சத்து 8 ஆயிரம் மானியமும்,

பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூபாய் 1 இலட்சத்து 5 ஆயிரம் மதிப்பிலான பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களும்,

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 மாற்றுத் திறனாளிக்கு ரூபாய் 25 ஆயிரம் திருமண நிதியுதவியுடன் தாலிக்கு 8 கிராம் தங்கமும், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 52 ஆயிரத்து 682 மதிப்பிலான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரும்,

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 1 பயனாளிக்கு ரூபாய் 9 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரமும் என மொத்தம் இன்றைய தினம் நடைபெறுகின்ற இவ்விழாவில் 22,294 பயனாளிகளுக்கு ரூபாய் 36 கோடியே 59 இலட்சத்து 88 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்து, இவ்விழாவிற்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
21.07.2019 அன்று சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி, ஆற்றிய உரை.

தமிழ்நாடு கிராம வங்கி, விவசாயிகள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு மட்டுமே கடன் வழங்குகிறது!

தமிழ்நாடு கிராம வங்கியின் சார்பில் மாநில அளவிலான மாபெரும் வங்கிக் கடன் வழங்கும் விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரங்கத்தினுள் நுழைகின்றபொழுது அனைவரும் மகளிராகக் காட்சியளிக்கின்றீர்கள். ஆகவே, இந்தத் திட்டம் மகளிருக்காக பூத்திருக்கின்ற திட்டமாக கருதப்படுகிறது. மண்டல ஊரக வங்கிகள், சிறு, குறு விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள், கிராமப் பகுதிகளில் சிறு தொழில் மற்றும் சிறு வியாபாரம் செய்பவர்களுக்கு கடனுதவி வழங்க ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வங்கி ஆரம்பிக்கப்பட்டபொழுது

ஒவ்வொரு வங்கியும், ஒன்று அல்லது இரண்டு மாவட்டங்களில் மட்டுமே இயங்க அனுமதிக்கப்பட்டன. பொதுவுடைமை வங்கியின் சேவைகள் கிராம மக்களுக்கு எட்டாத கனியாக இருந்த காரணத்தாலும், அரசு நலத் திட்டங்கள் யாவும் பொதுவுடைமை வங்கிகள் மூலம் கிராம மக்களுக்கு முழுமையாக கிடைக்காத காரணத்தாலும் அனைத்துக் கடைக்கோடி கிராம மக்களும் வங்கி சேவைகளை முழுமையாக பெற்றிட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தில் மண்டல, ஊரக வங்கிகள் மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வங்கிகளின் மூலதனத்தில் 50 சதவிகிதத்தினை மத்திய அரசும் 35 சதவிகிதத்தை ஏதேனும் ஒரு தேசிய வங்கியும், மீதமுள்ள 15 சதவிகிதத்தை மாநில அரசும் அளிக்கின்றன. 35 சதவிகிதம் மூலதனம் வழங்கிய தேசிய வங்கி, கிராம வங்கிகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யும். குறிப்பாக, வங்கி செயல்பட வேண்டிய முறை, அதற்கான தொழில்நுட்ப உதவிகள், ஆலோசனைகள் வழங்குவதுடன், கிராம வங்கியின் தலைவராகவும் தேசிய வங்கியின் ஒரு உயர் அதிகாரியே செயல்படுவார்.

வங்கிகள் இணைவது என்பது உலகமயமாக்கலுக்குப் பின் சாதாரண நிகழ்வு என்றாகிவிட்டது. கிராம வங்கிகளும் அதுபோன்று மத்திய அரசால் இணைக்கப்பட்டு வருகின்றன. 196 ஊரக வங்கிகள் இருந்த நிலைமை மாறி, தற்போது 45 வங்கிகள் மட்டுமே உள்ளன. ஆனால், சிறு, குறு வங்கிகள் சேர்ந்து பெரிய வங்கியாக உருவானதால் மற்ற தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் வங்கிகளுக்கு இணையாக செயல்பட்டு வருகிறது. மத்திய அரசும், மாநில அளவிலான ஒரு ஊரக வங்கி என்ற நிலைப்பாட்டினை செயல்படுத்த முயற்சிகள் எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகத்தான் தமிழகத்தில் இருந்த பாண்டியன் கிராம வங்கியும், பல்லவன் கிராம வங்கியும் இணைந்து தமிழ்நாடு கிராம வங்கியாக உருவெடுத்துள்ளது. பாண்டியன் கிராம வங்கி

09.03.1977இல் தென் தமிழகத்தின் பிரிக்கப்படாத இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் துவக்கப்பட்டது. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் செயல்பட்டு வந்த அதியமான் கிராம வங்கியும், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் செயல்பட்டு வந்த வள்ளலார் கிராம வங்கியும் 31.08.2006இல் ஒன்றிணைந்து பல்லவன் கிராம வங்கியாக உதயமானது. இந்த வங்கி, சென்னை மாவட்டம் தவிர தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுகிறது. சென்னை நகரப் பகுதிகளிலும் தமிழ்நாடு கிராம வங்கியின் கிளைகள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கிராம வங்கிக்கு தமிழ்நாட்டில் தற்சமயம் 630 கிளைகள் உள்ளன. இது வெகுவிரைவில் ஆயிரத்தை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வங்கியைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளது உண்மையிலே மகிழ்ச்சியளிக்கின்றது. தமிழ்நாடு கிராம வங்கியின் தற்போதைய மொத்த வர்த்தகம் ரூபாய் 23 ஆயிரம் கோடிக்கு மேல் உள்ளது. பல வங்கிகள் நஷ்டத்தில் செயல்பட்டு வந்தாலும், பல்லவன் கிராம வங்கியும், பாண்டியன் கிராம வங்கியும் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருவதை உணர்ந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மற்ற வங்கிகளைக் காட்டிலும், இங்கு வாராக் கடனும் மிகக் குறைவென்றும் அறிகிறேன். மற்ற வங்கிகளில் வாராக்கடன் 10 விழுக்காட்டிற்கு மேல் உள்ள நிலையில் தமிழ்நாடு கிராம வங்கியின் வாராக்கடன் 1.79 விழுக்காடு என்பது பெருமைக்குரிய விஷயமாகும். இந்த வங்கி மிகப்பெரிய நிறுவனங்களுக்கு பெரும்பாலும் கடன் வழங்குவதில்லை.

இந்த வங்கி விவசாயிகளுக்கும், சுய உதவிக் குழுக்களுக்கும், ஏழை, எளிய மக்களுக்கு மட்டுமே கடன் வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே வந்திருப்பவர்கள் பெரும்பாலும் ஏழை, எளியோர், வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்று பல்வேறு உதவிகளை வங்கியின் மூலமாக நாடக்கூடிய, அப்படிப்பட்ட நல்ல

உள்ளங்களுக்கு இந்த வங்கி பேருதவியாக செயல்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. வங்கியின் குறைந்த அளவிலான வாராக்கடன் சாமான்ய மக்களின் நேர்மைக்கு ஒரு எடுத்துக்காட்டு. சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குவதில், 99 விழுக்காடு வசூலாகிறது என்று அறிந்து பெருமைப்படுகின்றேன். உண்மையிலேயே பாராட்டுக்குரியது. இந்த வங்கியில் வாங்கிய கடனை இங்கு வந்திருக்கக்கூடிய சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் 99 விழுக்காடு திரும்பச் செலுத்தி வரலாறு படைத்திருக்கின்றீர்கள். இந்த வங்கி உங்கள் வங்கியாக கருதுகின்றீர்கள். இந்த வங்கி செழித்தால்தான், தாங்கள் நலம் பெறவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலே, வாங்கிய கடனை முறையாக செலுத்தி, மேலும் அந்தத் தொழில் வளர்வதற்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கின்றவர்களுக்கு, இந்த வங்கிக்கு உறுதுணையாக இருப்பது பாராட்டுக்குரியது. சில சுய உதவிக் குழுக்கள் ரூபாய் 20 இலட்சம் வரையில் எந்தவொரு பிணையமும் இல்லாமல் கடனுதவி பெற்று வருகிறார்கள் என்று அறிகிறேன். மற்ற வங்கிகளில் பிணையம் இல்லாமல் கடன் கொடுக்கமாட்டார்கள்.

இந்த வங்கியானது மலைவாழ் மக்களின் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் விதமாக அம்பாசமுத்திரம் அருகாமையில் உள்ள ஒரு கிராமத்தில் வாழும் மலைவாழ் மக்களுக்கு சோலார் அமைத்துக் கொடுத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்துள்ளார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். ஏனென்றால், மலைவாழ் மக்கள் மிக உயரமான மலைப் பகுதியில் வாழ்கின்ற காரணத்தினால் அங்கே மின்சார வசதி வழங்குவது என்பது மிகவும் கடினமானது. அங்கே மின் கம்பங்கள் அமைக்கப்பட்டு மின் இணைப்பு கொடுக்க வேண்டும், வனம் அடர்ந்த பகுதியாக இருப்பதினால் வனத்துறையின் அனுமதி பெற வேண்டும். புயல் வரும் காலங்களில் மின் கம்பங்கள் மீது மரங்கள் விழுந்து மின் தடை ஏற்படுவதையும் மாற்றும்விதமாக மலைவாழ் மக்களுக்கு பயன்படும்விதமாக சூரிய ஒளி மின்சக்தியை வங்கி அளித்திருக்கிறது. மத்திய மற்றும் மாநில அரசு மானியத்துடன் கடன் வழங்கி வருவதை எண்ணி பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற பாரதியின் கூற்றுக்கிணங்க, தமிழ்நாடு கிராம வங்கி விவசாயிகளின் வளர்ச்சிக்காகவும், கிராமத் தொழிலாளர்களின் வளர்ச்சிக்காகவும் கடன் வழங்கி வருவதற்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். பனைத் தொழிலாளர்கள் மேம்பாட்டிற் காகவும், இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகவும் மானியத்துடன் கூடிய சிறப்புக் கடன் திட்டங்களை இந்த வங்கி செயல்படுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடத்தில் மட்டும் **2018–2019**இல் **4** சதவிகித வட்டியில் **13.52** இலட்சம் பயனாளிகளுக்கு ரூபாய் **9,210** கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது என்பதை எண்ணும்போது, இந்த வங்கியானது விவசாயிகள் வளர்ச்சியில் பெரிதும் உதவி வருகிறது

என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. விவசாயிகளுக்கு குறைந்த வட்டியிலே கடன் வழங்கப்படுகிறது. இது கந்து வட்டிக் கடனிலிருந்து ஏழை, எளிய மக்களை விடுவிப்பதற்கும் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது என்று அறிகிறேன். பெண்களின் முன்னேற்றத்திற்காக பெண் சக்தி என்ற திட்டத்தின் மூலமாக பெண் தொழில் முனைவோருக்கு கடனுதவியும் இவ்வங்கி செய்து வருகிறது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சிறப்புக் கடனுதவி திட்டத்தை செயல்படுத்தவுள்ளதாகவும் அதற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு ஆணையத்துடன் தொழில் மேம்பாட்டு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பம் இட்டுள்ளதாக இந்த வங்கி அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். வங்கி சேவையை அனைத்து இல்லங்களுக்கும் எடுத்துச் செல்லும் நோக்குடன் 738 வணிகத் தொடர்பாளர்களை நியமித்து இவர்கள் மூலமாக முதியோர் ஓய்வூதியம் மற்றும் அரசு நலத் திட்டங்கள் வாயிலாக வழங்கப்படும் உதவித்தொகைகளை பயனாளிகளின் இல்லங்களுக்கே சென்று வழங்கி வருவது பாராட்டுக்குரியதாகும். இந்த வணிக தொடர்பாளர்கள் மூலம் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகள்

அரசின் உதவித்தொகைகளைப் பெற்று பயனடைந்து வருகின்றனர். மக்களுக்கு வங்கி சேவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் 22 இடங்களில் நிதிசார் கல்வி மையங்களை வங்கி நடத்தி வருவதாகவும் மேலும், வங்கியின் 630 கிளைகளின் மூலமாக மாநில அளவில் கடந்த 16.07.2019 அன்று மாநில அளவில் நிதிசார் கல்வி முகாம்களை நடத்தியுள்ளதாகவும் வங்கியாளர்கள் தெரிவித்துள்ளனர். இவை தவிர, கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று நடமாடும் நிதிசார் கல்வி மையங்களையும் நடத்தி வருவதாக கூறுகின்றனர்.

தமிழகத்திலேயே மாதிரித் திட்டமாக நபார்டு வங்கியினால் செயல்படுத்தப்பட்டு ஒருங்கிணைந்த வங்கி சேவை திட்டத்தினை தருமபுரி மாவட்டத்திலுள்ள 5 கிராமங்களில் இவ்வங்கி சிறப்பாக செயல்படுத்தி அதற்காக நபார்டு விருதையும் பெற்றுள்ளது பாராட்டுக்குரியது. பாண்டியன் கிராம வங்கியும் பல்லவன் கிராம வங்கியும் தொடர்ந்து பல வருடங்களாக சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்குவதில் சிறந்த முறையில் பணியாற்றி வருவதற்கு தமிழ்நாடு அரசு மற்றும் நபார்டு வங்கியின் விருதுகளைப் பெற்று வருகிறது. தேசிய அளவில் சிறந்த ஊரக வங்கியினை அசோசெம் என்கிற *ஸ்காட்ச்* விருதினையும், மத்திய அரசின் *அடல் பென்ஷன் யோஜனா* என்ற ஓய்வூதிய திட்டத்தின் கீழ் அதிக எண்ணிக்கையிலான ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை ஆணையத்தின் விருதுகளை பலமுறை பல்லவன் கிராம வங்கி பெற்றுள்ளது பாராட்டுக்குரியது.

தமிழ்நாடு கிராம வங்கிகளின் பணியில் சிகரம் வைத்ததுபோல் இன்று மாநில அளவிலான மாபெரும் கடன் வழங்கும் விழா நடைபெற்று வருகிறது. இவ்விழாவில், 28,506 பயனாளிகளுக்கு ரூ.109 கோடியே 80 இலட்சம் கடனுதவி, இந்நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படுகிறது. நான் கடந்த 10.07.2019 அன்று தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் பல்லவன் கிராம வங்கி மற்றும் பாண்டியன் கிராம வங்கி ஆகிய இரண்டு மண்டல ஊரக வங்கிகள் 01.04.2010 அன்று ஒருங்கிணைந்து மாநிலம் முழுவதும் 630 கிளைகளைக் கொண்ட தமிழ்நாடு கிராம வங்கி என்ற பெயரில் சேலத்தினை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இதற்கென தமிழ்நாடு கிராம வங்கியும் ஊரக சுயவேலைவாய்ப்புப் பயிற்சிநிறுவனமும் ஒருங்கிணைந்த ஒரு வளாகம் அமைக்க சேலத்தில் இரண்டு ஏக்கர் அரசு நிலம் வழங்கப்படும். இவ்வளாகம் வாழ்க்கைத் தொழில் சார்ந்த பயிற்சிகள் அனைத்தையும் வழங்கும் ஒரு மையமாக செயல்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என்ற அறிவிப்பினை நான் வெளியிட்டேன். இதனை செயல்படுத்தும் விதமாக சேலம் மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு கிராம வங்கியும், ஊரக சுயவேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனமும் ஒருங்கிணைந்த ஒரு வளாகம் அமைக்க சேலம் மேற்குக் கோட்டத்திற்கு உட்பட்ட ஜாகீர் அம்மாபாளையம் என்ற இடத்தில் 2 ஏக்கர் நிலம் முன் நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

தமிழ்நாடு கிராம வங்கியின் பணிகள் மென்மேலும் சிறக்கவும் மக்களுக்கு தொடர்ந்து இவ்வங்கி சிறப்பான சேவைகளை அளித்திடவும், சிறந்த வளர்ச்சியினை அடைந்திடவும் என்னுடைய வாழ்த்துக்களை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, சேலம் மாவட்டத்தில் மட்டும் ஊரகப் பகுதியில் 14,985 மகளிர் சுயஉதவிக் குழுக்களும் நகரப் பகுதிகளில் 11,230 மகளிர் சுயஉதவிக் குழுக்களும் ஆக மொத்தம் 26,215 சுயஉதவிக் குழுக்கள் இயங்கி வருகிறன. சேலம் மாவட்டத்தில் மட்டும் முழுக்க, முழுக்க, மகளிர் அனைவரும் ஒன்றாக இணைந்து சுயமாக தொழில் துவங்கக்கூடிய ஒரு அமைப்பை இங்கே ஏற்படுத்தியிருக்கின்றீர்கள். கடந்த 8 ஆண்டுகளில்,

87,350 குழுக்களுக்கு ரூ.2,378 கோடியே 88 இலட்சம் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டில் மட்டும் ரூபாய் 624 கோடி வங்கிக் கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இலக்கையும் தாண்டி ரூபாய் 646.80 கோடி வங்கிக் கடன் 14,743 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன். இது 104 சதவிகிதம் சாதனை படைத்துள்ளது. இது, கடந்த 26.02.2019 அன்று சேலத்தில் நடைபெற்ற விழாவில் மட்டும் 3,186 குழுக்களுக்கு ரூபாய் 146 கோடியே 57 இலட்சத்திற்கு கடன் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், 2019–2020 நடப்பாண்டில், மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 650 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 1,747 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூபாய் 65 கோடியே 45 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் 239 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு சுழல் நிதியாக ரூபாய் 1 கோடியே 19 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 161 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு முதல்கட்ட நிதியாக ரூபாய் 2 கோடியே 47 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டாண்டுகளில் 250 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு முதலீட்டு நிதியாக ரூபாய் 7 கோடியே 27 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இதுபோன்று மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்காக ஏராளமான கடனுதவி வழங்கி அவர்கள் சுயமாக தொழில் தொடங்கி அவர்கள் சொந்தக்காலில் நிற்கக்கூடிய சூழ்நிலையை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது.

அதேபோல தமிழ்நாடு கிராம வங்கி என்று பெயரைப் பார்க்கும்பொழுதே கிராமத்தினுடைய அக்கறை கொண்ட ஒரு வங்கி தமிழ்நாடு கிராம வங்கி ஒன்றுதான். மற்ற வங்கிகளில் எளிமையாக கடன் பெற முடியாது. ஆனால், தமிழ்நாடு கிராம வங்கியைப் பார்க்கின்றபொழுது முழுக்க, முழுக்க விவசாயிகளை சார்ந்த தொழில்களுக்கும், ஏழை எளியவர்களுக்கு சுய உதவிக்

குழுக்கள் அமைத்து, அந்த அமைப்புகளுக்குத் தேவையான உதவி வழங்குவதற்காக இந்த வங்கி முன்னுரிமை கொடுக்கிறது. இந்த வங்கியில் வட்டி குறைவாக இருக்கின்றது. மேலும், கேட்ட நேரத்திற்கு உங்களுக்குத் தேவையான நிதி உதவியையும் இந்த வங்கி அளித்து வருகிறது. விவசாயிகளுக்கு பயிர்க்கடன், பால் உற்பத்தி செய்ய கடன் போன்றவை இந்த வங்கி கொடுக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டிலேயே அதிக பால் உற்பத்தியாளர்களைக் கொண்ட மாவட்டமாகவும், பால் உற்பத்தியில் முதலிடம் வகிப்பதும் நம்முடைய சேலம் மாவட்டம்தான். பால் உற்பத்தி செய்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு தேவையான கால்நடைகளைப் பெற்று, வளர்ப்பதற்கு ஒரு நபருக்கு ரூ.3 இலட்சம் வரை தமிழ்நாடு கிராம வங்கி வழங்குவதாக இந்த வங்கியின் அலுவலர்கள் தெரிவிக்கின்றார்கள். தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற விவசாயக் குடிமக்கள், விவசாயத் தொழிலாளர்கள் எல்லோரும் தமிழ்நாடு கிராம வங்கியின் மூலமாக கடனுதவி பெற்று அங்கே கறவை பசுமாடுகளை வளர்த்து, அதன் மூலமாக பாலை கறந்து ஆங்காங்கே இருக்கின்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அளிக்கின்ற பொழுது அவர்களுக்கு வருமானம் கிடைக்கிறது. அண்மையில் சட்டமன்றத்தில், பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்ற மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தை பிரித்தேன். திருநெல்வேலியை பிரித்து தூத்துக்குடிக்கு கொடுத்தேன், திருச்சியை பிரித்து கரூரில் கொடுத்தோம், கிருஷ்ணகிரியை பிரித்து தருமபுரிக்கு கொடுத்தோம். இப்படி பல இடங்களில் புதிய புதிய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தை நிறுவுகின்றபொழுது, அந்தப் பகுதியில் இருக்கின்ற பால் உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அதிக கால்நடைகளை வளர்த்து பால் உற்பத்தியை பெருக்குவது மட்டுமல்லாமல் சுயமாக தொழில் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசு உருவாக்குவதற்காக இப்படி ஏற்கெனவே

பல்வேறு மாவட்டங்களை உள்ளடக்கிய பெரிய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தை பிரித்து நிர்வாகக் காரணத்திற்காகவும், பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்கின்ற பாலை குறித்த காலத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு கொண்டு செல்வதற்கு வசதியாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சங்கங்களுக்கெல்லாம் இன்றைக்கு தமிழ்நாடு கிராம வங்கி உதவி செய்கின்றது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய பகுதி விவசாயிகள் நிறைந்த பகுதி. விவசாயம் செழிக்க வேண்டுமென்றால் நீர் வேண்டும். ஒரு மனிதனுக்கு உயிர் எப்படியோ, அதுபோல விவசாயத்திற்கு நீர் முக்கியம். ஆகவே, நீர் மேலாண்மைத் திட்டத்தை கொண்டுவந்து, முறையாக நடைமுறைப்படுத்துவதற்காக அம்மாவினுடைய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. குடிமராமத்து திட்டத்தின் மூலமாக ஆங்காங்கே உள்ள ஏரிகள், குளங்கள் ஆழப்படுத்தப்படுகின்றன. பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகாமல் ஓடையின் குறுக்கே, நதியின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி நீர் நிலைகளை உயர்த்தி, நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு விவசாயிகளுக்கு தேவையான நீர் கிடைக்கிறது. குடிப்பதற்கான தேவையான நீரை அரசு பெற்றுத் தருவதற்காக இந்த திட்டத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம். அதன் வழியாக, சேலம் மாவட்டத்தில், பருவகாலங்களில் அதிகமாக மழை பெய்கின்ற பொழுது அந்த மழைநீர் வீணாக கடலிலே கலக்கின்றது. இப்படிப்பட்ட காலங்களில் காவேரி ஆற்றில் உபரியாக செல்கின்ற நீரை பயன்படுத்தி ரூபாய் 565 கோடியில், 100 ஏரிகளுக்கு தண்ணீரை கொண்டு செல்கின்ற திட்டத்தை வகுத்துக் கொடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட இரண்டாண்டுகளில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். அந்தத் திட்டம் நிறைவேறுகின்றபொழுது, சேலம் மாவட்டத்தில்

இருக்கின்ற ஓமலூர், மேட்டூர், சங்ககிரி, எடப்பாடி ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 100 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, அந்த 100 ஏரிகளில் ரூபாய் 565 கோடி செலவிலே காவேரியில் இருக்கின்ற உபரிநீர் வருகின்ற காலகட்டத்தில் அங்கேயிருந்து drip irrigation மூலமாக எடுத்துச் சென்று அந்த தண்ணீர் ஏரிகளில் நிரப்பப்படும். இதையெல்லாம் விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகளுக்கு பயனளிக்கக்கூடிய திட்டத்தை நம்முடைய அரசு இந்த மாவட்ட மக்களுக்கு அர்ப்பணித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கும்பொழுது, நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக நான் இருந்த பொழுது வறட்சியாக இருக்கும் ஓமலூர் மற்றும் தாரமங்கலம் வட்டாரத்திற்கு சென்று பார்த்தேன். ஓமலூர் பகுதியில் மலர் அதிகமாக உற்பத்தி செய்கிறோம். அங்குள்ள விவசாயிகள் எல்லாம் எங்களுக்கு போதிய விலை கிடைப்பதில்லை, பெங்களூருக்கு சென்றுதான் இந்த மலர்களை விற்பனை செய்கின்றோம் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலேயே மலர்கள் விற்பனை செய்வதற்கு ஒரு மையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பே கோரிக்கை வைத்தார்கள். சேலம், ஈரோடு, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களிலுள்ள விவசாயப் பெருமக்கள் அதிகமாக மலர் சாகுபடி செய்கிறார்கள். ஒட்டுமொத்த 4 மாவட்டங்களில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள், விவசாயத் தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்று அம்மாவினுடைய அரசு ஓசூரில் மிகப் பிரம்மாண்டமான உலகத் தரத்திற்கேற்ற மலர் ஏல மையம் ஒன்றை ரூ.20 கோடி மதிப்பீட்டில் அமைக்கவுள்ளது. இது சர்வதேச ஏல மையமாக நடத்தப்படுவதால் பல்வேறு நாடுகளிலிருந்து, மாநிலங்களிலிருந்து வரக்கூடிய வியாபாரிகள் மலர்களை வெளிநாட்டிற்கும் அனுப்பலாம்.

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக அதனை முறையாக அரசு வாங்கி பயன்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசு 10 மாவட்டங்களின் தலைமையிடத்தில் காய்கறி, பழங்களை விற்பனை செய்யக்கூடிய விற்பனை மையத்தை ஏற்படுத்தவிருக்கின்றோம்.

சென்னைக்கு அருகே 300 ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 2 ஆயிரம் கோடியில் உணவுப் பூங்கா அமைக்கவிருக்கின்றோம். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களை உணவுப் பூங்காவில் விற்பனை செய்கின்ற பொழுது உரிய விலை கிடைக்கும். இதற்கும் மேலாக, 900 ஏக்கரில், ரூபாய் 1,000 கோடியில் சேலம் மாவட்டம், தலைவாசலில் கால்நடைகளை வளர்க்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு அனைத்து அம்சங்களுடன் கூடிய ஆசியாவிலேயே பிரம்மாண்டமான கால்நடைப் பூங்கா ஒன்றை உருவாக்கவிருக்கின்றோம். பால் உற்பத்திக்கு தேவையான உயர் இனப் பசுக்கள் மற்றும் ஆடு, கோழி, நாய், பன்றி அனைத்தையும் வளர்க்க அங்கே கால்நடை ஆராய்ச்சி நிலையம் மற்றும் கால்நடை மருத்துவக் கல்லூரியையும் துவக்கவிருக்கின்றோம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு தாலிக்குத் தங்கத்துடன் நிதியுதவியும் கொடுக்கின்றது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கான உதவித்தொகை ரூபாய் 6 ஆயிரத்திலிருந்து ரூபாய் 12 ஆயிரமாக உயர்த்தப்பட்டு, தற்பொழுது ரூபாய் 18 ஆயிரமாக வழங்கப்படுகிறது. இப்பொழுது மூன்றாம் கட்டமாக, அம்மா மகப்பேறு என்ற திட்டத்தை அறிவித்து ஊட்டச்சத்து உள்ள பொருட்கள் வழங்கப்படுகின்றது. சேலத்தில் பிரம்மாண்டமான மகப்பேறு மருத்துவமனை கட்டிக் கொடுத்திருக்கின்றோம். அதில், பச்சிளம் குழந்தைகளுக்கு சிறப்பு சிகிச்சை மையம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு

16 பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தைகள் பரிசுப் பெட்டகம் வழங்கப்பட்டு வருகிறது. ஏழை, எளிய மாணவர்களுக்கு நல்ல கல்வித் தரம் கொடுத்து, உயர் கல்வி படிக்கக்கூடிய அளவிற்கு அரசு உதவி செய்கிறது. விஞ்ஞானக் கல்வி பெறுவதற்காக நம்முடைய மாணவச் செல்வங்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் **76** அரசு கல்லூரிகளுக்கு அம்மா அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அதேபோல, பொறியியல், வேளாண்மை, மருத்துவம், ஐடிஐ, கால்நடை மருத்துவக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டுள்ளன. இது போன்ற காரணங்களினால், தமிழ்நாட்டில் உயர்கல்வி படிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கின்றது. சேலம் மாவட்டத்தில் புதிய சட்டக் கல்லூரி இந்த ஆண்டு முதல் செயல்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழங்கிய திட்டங்களை அம்மா அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
22.07.2019 அன்று தமிழ்நாடு கிராம வங்கியின் சார்பில் சேலத்தில் நடைபெற்ற வங்கிக் கடன் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை அரசுக்கும், மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகிறது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த சிறப்பான பொருட்காட்சிக்கு வருகை புரிந்துள்ள அத்தனை பேருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றத்தைத் தந்திட்ட தமிழக மக்களுக்கு ஏற்றத்தைத் தரும் வகையில் சீரிய முறையில் திட்டங்களைத் தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்துவதுதான் உண்மையான மக்கள் நலன் நாடும் அரசின் கடமையாகும் என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். தமிழகம் வளம் பெறுவதையும், தமிழக மக்கள் நலம்பெறுவதையும் தனது ஒரே குறிக்கோளாகக்

கொண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல நலத்திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் தமிழ்நாட்டில் அமல்படுத்தி சாதனை படைத்தார்கள். அம்மா அவர்கள் வழியில் செயல்படும் எங்களுடைய அரசும், மக்கள் நலத்திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. அரசு செயல்படுத்தும் திட்டங்களைப் பற்றி மக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் அத்திட்டங்கள் பற்றிய விளக்கங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லும் பணியை செய்யும் துறை தான் செய்தி மக்கள் தொடர்புத் துறை. அதாவது, செய்தி மக்கள் தொடர்புத் துறை அரசுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசின் திட்டங்களை அரசுத் துறையின் சார்பில் நிறைவேற்றும் பணிகளை மக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் ஒவ்வொரு துறையின் சார்பிலும் அரங்குகள் அமைக்கப்பட்டு, அரசின் சாதனைகளை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதுதான் அரசுப் பொருட்காட்சியினுடைய நோக்கமாகும். இந்தப் பொருட்காட்சியில் ஆண்டுதோறும் அந்தந்த மாவட்டங்களில் நடைபெறும் முக்கிய விழா நாட்களில் அதிக அளவில் மக்கள் பங்குபெறும் வகையில் பொருட்காட்சிகள்

நடத்தப்படுகின்றன. இதன்மூலம் மக்கள் பெருமளவில் அரசு திட்டங்களை அறிந்துகொள்ள வழிவகை செய்யப்படுகின்றது. அரசு என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றது என்பதை பொருட்காட்சியில் இடம்பெற்றுள்ள அந்தந்த துறை அரங்கத்தின் மூலம் தெரிந்துகொள்ளலாம். பொருட்காட்சியில் உள்ள அரசுத் துறையின் அரங்குகளை நீங்கள் சென்று பார்த்தால் அம்மா காலத்திலிருந்து, அம்மாவின் அரசு எவ்வளவு திட்டங்களைத் தந்திருக்கின்றது என்பதை தத்ரூபமாகப் பார்த்துத் தெரிந்து கொள்வதற்கு இந்த பொருட்காட்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களது ஆட்சிக் காலத்தில் தான் முதன்முதலாக அரசுப் பொருட்காட்சி 06.08.1978 அன்று சேலத்தில் நடத்த ஆணையிடப்பட்டு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது என்பது பெருமைக்குரியதாகும். ஆகவே, வாழும் தெய்வமாக வாழ்ந்து மறைந்த பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருக்கரங்களால் திறக்கப்பட்ட பொருட்காட்சியை, அவருடைய தொண்டனாக இருந்து, வளர்ந்து, முதலமைச்சராகி, இன்றைய தினம் திறந்து வைப்பதற்கு, நம்முடைய சேலம் மாவட்டத்தில் பிறந்த எனக்குக் கிடைத்த வாய்ப்பை நான் பெருமையாகக் கருதுவதுடன் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை ஆற்றியுள்ள சிறப்புப் பணிகளில் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். இதுவரை, சேலத்தில் 36 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. 1978ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் இதுவரை மொத்தம் 204 அரசுப் பொருட்காட்சிகள் தமிழ்நாடு முழுவதும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. 205ஆவது அரசுப் பொருட்காட்சி 22.06.2019 அன்று திருநெல்வேலியிலும், 206ஆவது அரசுப் பொருட்காட்சி 29.06.2019 அன்று காஞ்சிபுரத்திலும்

தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றது. இதுவரை நடைபெற்று நிறைவடைந்த 204 அரசுப் பொருட்காட்சிகளின் வாயிலாக அரசிற்கு ரூபாய் 39 கோடியே 1 இலட்சத்து 18 ஆயிரம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. அரசுப் பொருட்காட்சியில் முன்னர் 15 அரசுத் துறைகள்தான் பங்கேற்றன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா மேலும் 12 அரசுத்துறைகள் பங்குபெற ஆணையிட்டதன் விளைவாக தற்போது 27 அரசுத் துறைகள் இன்றைக்கு அரசுப் பொருட்காட்சியில் அரங்குகள் அமைக்கப்பட்டு பங்கேற்றுள்ளன என்பதை பெருமகிழ்ச்சியுடன் இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், தமிழ்நாடு கிராமக் கைத்தொழில் வாரியம், கோ–ஆப்டெக்ஸ், ஆவின், தாட்கோ, சேலம் மாநகராட்சி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு உப்பு நிறுவனம் போன்ற அரசு சார்பு நிறுவனங்களும் அரசுப் பொருட்காட்சியில் அரங்குகள் அமைத்து பங்கேற்றுள்ளன. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 10 அரசு பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. அரசுக்கு வருவாய் ஈட்டுகின்ற வகையிலும், அனைத்து மாவட்டப் பொதுமக்களும் பயன்பெறுகின்ற வகையிலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய 6 மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வந்தது. மேலும், ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில் ஆண்டுதோறும் சுழற்சி முறையில் 4 மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சி நடத்தப்படுகின்றன.

2019ஆம் ஆண்டு புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில், தமிழ்நாடு அரசின் சார்பில், மகாத்மா

காந்தி மதுரையில், 1921ஆம் ஆண்டு அரையாடை மட்டுமே அணிவது என்ற முடிவினை விளக்கும் வகையில் அலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டது. மேலும், ஊர்தியுடன் இணைந்து வந்த செய்தி மக்கள் தொடர்புத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட கரகாட்டக் கலை நிகழ்ச்சிக் குழு அனைவரின் பாராட்டைப் பெற்று அகில இந்திய அளவில் முதல் பரிசு பெற்று தமிழகத்திற்கு பெருமையை சேர்த்தது. தமிழ்நாடு அரசு சார்பில், புதுடெல்லியில் நடைபெறும் அகில இந்திய பன்னாட்டு வர்த்தக பொருட்காட்சியில் இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று தமிழக அரசின் அனைத்துத் துறைகள் தொடர்பான கொள்கை விளக்கங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகளை அனைத்து மாநில அரசுகளும், மக்களும் அறிந்துகொள்ளும் வகையில் விளக்கப் புகைப்படங்கள் மற்றும் காட்சிப்பொருட்கள் வாயிலாக வெளிக்கொணரப்பட்டு வருகிறது. புதுடெல்லியில் 2018ஆம் ஆண்டு பங்குபெற்றதில் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்பட்ட அரங்கிற்கு சிறந்த அரங்கு என்ற சான்று வழங்கப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்திய துணைக்கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப் பேரணி விழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடந்து பங்கேற்று வருகிறது. 2012, 2013, 2014, 2015, 2016, 2017 மற்றும் 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற மலர்ப் பேரணி விழாக்களில் தமிழ்நாடு அரசு பங்கேற்று தொடர்ந்து முதல் பரிசு பெற்று வருகிறது என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகின்றேன்.

மக்களுக்கான நலப் பணிகள் விரைவாகவும், உரிய முறையிலும் சென்றடைந்து உதவிப் பணியாளர்கள் கொண்டு செயல்படுவதன் விளைவாக பல்வேறு திட்டங்கள் ஒப்புதல் வழங்கப்பட்டு அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் வீட்டுவசதித்

திட்டங்கள், வேளாண் பெருமக்களுக்கான திட்டங்கள், ஏழை மக்கள் உயர்தர சிகிச்சை பெற சுகாதார திட்டங்கள், மக்கள் போக்குவரத்தை எளிதாக்க சாலை வசதிகள், உரிய பேருந்துகள், நெசவாளர் முன்னேற்றத்திற்கான பல திட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிகழ்ச்சியின் வாயிலாக முடிவுற்ற பணிகளை இங்கே நான் திறந்து வைத்திருக்கின்றேன். அதில் சிலவற்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து ரூபாய் 85 இலட்சத்து 95 ஆயிரம் மதிப்பீட்டில் முடிவுற்ற 8 திட்டப்பணிகளை உங்கள் முன் நான் திறந்து வைத்திருக்கிறேன்.

பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ், ஜலகண்டாபுரம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில்

ரூபாய் 2 கோடியே 28 இலட்சத்து 12 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 வகுப்பறைகள், 1 அறிவியல் ஆய்வுக்கூடம், 3 கழிவறைகள் மற்றும் குடிநீர் வசதியுடன் கூடிய பள்ளிக் கட்டடமும்;

ஓமலூர், கே.மோரூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 1 கோடியே 89 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் 8 வகுப்பறைகள், 1 அறிவியல் ஆய்வுக்கூடம், 2 கழிவறைகள், குடிநீர் வசதி மற்றும் சுற்றுச்சுவருடன் கூடிய பள்ளிக் கட்டடமும்;

பெத்தநாயக்கன்பாளையம், பெரிய கிருஷ்ணாபுரம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூபாய் 1 கோடியே 8 இலட்சத்து 33 ஆயிரம் மதிப்பீட்டில் 4 வகுப்பறைகள், 1 அறிவியல் ஆய்வகம், 2 கழிவறைகள், குடிநீர் வசதி மற்றும் சுற்றுச்சுவருடன் கூடிய பள்ளிக் கட்டடமும்;

என மொத்தம் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 3 பள்ளிகளில் ரூபாய் 5 கோடியே 25 இலட்சத்து 95 ஆயிரம் மதிப்பீட்டில் முடிவுற்ற 3 திட்டப் பணிகளை உங்கள் ஆசியோடு திறந்து வைத்திருக்கின்றேன்.

வனத்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ், ரூபாய் 3 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டில் பெத்தநாயக்கன் பாளையம், நெய்யமலை அடிவாரம் பேருந்து நிறுத்தம் முதல் நெய்யமலை கிராமம் வரை சுமார் 4 கி.மீ. நீளம் அமைக்கப்பட்டுள்ள தார் சாலையும்,

நகராட்சி நிருவாகம் குடிநீர் வழங்கல் துறையின் மேட்டூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், ரூபாய் 2 கோடியே 2 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 3 நுண் உரக் கூடங்களும்,

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் கருமந்துறை, மணியார்குந்தம் மற்றும் தாழ்வள்ளம் ஆகிய 3 துணை சுகாதார நிலையங்களுக்கு தலா ரூபாய் 30 இலட்சம் வீதம்

ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்களும்,

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் பெத்தநாயக்கன் பாளையம் மேற்கு ராஜபாளையத்தில் ரூபாய் 31 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கால்நடை மருந்தக கட்டடமும்,

ஆக மொத்தம் ரூபாய் 13 கோடியே 40 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 19 முடிவுற்ற திட்டப் பணிகள் இன்றைய தினம் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நான் திறந்து வைத்ததில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த நிகழ்ச்சியின் வாயிலாக பல்வேறு துறைகளின் சார்பாக நலத்திட்ட உதவிகளை வழங்கி இருக்கின்றோம்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டம் மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ், 500 பயனாளிகளுக்கு ரூபாய் 9 கோடியே 42 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான மானிய நிதி உதவியும்,

பள்ளி கல்வித் துறையின் சார்பில் புதிய பாடத் திட்டத்தின் படி, தொழில்நுட்பத்துடன் கூடிய, பாடப்புத்தகத்தில் உள்ள QR-CODE-ஐ பயன்படுத்தி சிறப்பாகக் கற்பிக்கும் வகையில், சேலம் மாவட்டத்தில் உள்ள 154 அரசு பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு கற்பிக்கும் 1,359 ஆசிரியர்களின் பயன்பாட்டிற்கு ரூபாய் 1 கோடியே 66 இலட்சம் மதிப்பிலான 1,359 விலையில்லா மடிக்கணினிகளும்,

வனத்துறையின் சார்பில் தமிழ்நாடு காடு வளர்ப்பு திட்ட வனக்குழு நிதியிலிருந்து 24 பயனாளிகளுக்கு ரூபாய் 3 இலட்சத்து 90 ஆயிரம் சிறுதொழில் தொடங்குவதற்கான கடனுதவிகளும்,

கூட்டுறவுத்துறையின் சார்பில் 263 நபர்களுக்கு பயிர் கடனும், 62 நபர்களுக்கு மத்திய கால கடனும், 322 நபர்களைக் கொண்ட 26 சுய உதவி குழுக்களுக்கு கடனுதவியும், 45 நபர்களைக் கொண்ட 7 குழுக்களுக்கு கூட்டுப்பொறுப்புக் குழு கடனுதவியும்,

என மொத்தம் 692 நபர்களுக்கு ரூபாய் 3 கோடியே 47 இலட்சத்து 76 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு கடன் உதவிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்பட உள்ளன.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் சார்பில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 4,050 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 47 இலட்சத்து 55 ஆயிரம் மதிப்பிலான கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, விபத்து ஊனம் மற்றும் மரணத்திற்கான நிதியுதவி மற்றும் கண் கண்ணாடி நிதியுதவி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

மகளிர் திட்டம் சார்பில் 3,948 நபர்களைக் கொண்ட 329 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 32 இலட்சத்து 90 ஆயிரம் சுழல்நிதியும், உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், 200 மகளிர்களுக்கு ரூபாய் 50 இலட்சம் அம்மா இருசக்கர வாகன மானியமும்,

வருவாய்த்துறையின் சார்பில் 140 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகையும், 5 நபர்களுக்கு உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், முதியோர் உதவித்தொகையும், 16 நபர்களுக்கு விதவை உதவித்தொகையும், 10 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகையும், 192 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களும்,

என மொத்தம் 343 பயனாளிகளுக்கு ரூபாய் 27 இலட்சத்து 55 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 45 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூபாய் 12 இலட்சத்து 71 ஆயிரம் மதிப்பிலான திருமண நிதி உதவி மற்றும் மாதாந்திர உதவித்தொகைகளும்,

ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 9 பயனாளிகளுக்கு ரூபாய் 84 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களும்,

நல்லிணக்கத்துடன் வாழும் சிறந்த ஊராட்சிகளுக்கு பரிசுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், அம்மாபாளையம் ஊராட்சிக்கு ரூபாய் 10 இலட்சம் பரிசுத் தொகையும்,

பட்டுவளர்ச்சித் துறையின் சார்பில் 20 பயனாளிகளுக்கு ரூபாய் 10 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான பட்டுப்புழு வளர்ப்பு தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களும்,

தோட்டக்கலைத் துறையின் சார்பில் 50 பயனாளிகளுக்கு ரூபாய் 26 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பிலான நுண்நீர் பாசன மானியம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் வனவாசி வள்ளலார் உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு ரூபாய் 10 இலட்சம் மதிப்பு கூட்டும் இயந்திரங்களுக்கான மானியத் தொகையும்,

வேளாண்மைத் துறையின் சார்பில் 51 விவசாயிகளுக்கு ரூபாய் 6 இலட்சத்து 32 ஆயிரம் மதிப்பிலான தெளிப்பு நீர் பாசனம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும்,

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் ரூபாய் 1 இலட்சத்து 47 ஆயிரம் மதிப்பீட்டில் 20 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள் மற்றும் விலையில்லா சலவைப் பெட்டிகளும்,

உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் 238 நபர்களுக்கு மின்னணு குடும்ப அட்டைகளும்,

ஆக மொத்தம் இன்றைய தினம் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 11,571 பயனாளிகளுக்கு ரூபாய் 17 கோடியே 96 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட உள்ளன.

ஏன் இத்தனையும் சொல்கிறேன் என்றால், இன்றைக்கு எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் எல்லாம் இந்த ஆட்சியில் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்கிறார்கள். இந்த நிகழ்ச்சியின் வாயிலாக இன்றைக்கு மட்டும் 11,571 நபர்கள் இந்த மாவட்டத்தில் மட்டும் பயன் பெறுகிறார்கள். ஆகவே, நான் சொன்ன திட்டங்கள் அனைத்தும், அனைத்து தரப்பு மக்களுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழாவாக இந்த அரசு பொருட்காட்சியிலே இடம் பெற்றிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே நான் தெரிவிக்கிறேன். இத்தனையும் பத்திரிகையின் வாயிலாக வெளிப்படுத்த வேண்டும். ஏனென்றால் எதிர்க்கட்சி இந்த ஆட்சியிலே ஒன்றுமே நடக்கவில்லை என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். இவ்வளவும், நடக்கிறது, நடக்கிறது என்று உங்கள் முன் பகிரங்கமாக அறிவிக்கிறேன்.

அதுமட்டுமல்ல இன்னும் செய்யப்போகின்ற திட்டங்களை உங்கள் முன் சொல்லியாக வேண்டும்.

திருமேனி முத்தாற்றின் சுத்திகரிப்புத் திட்டம். நம்முடைய சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற கழிவுநீர் எல்லாம் வெளியேறி திருமேனிமுத்தாற்றில் போய் கலக்கிறது. அந்த திருமேனிமுத்தாறு நாமக்கல் மாவட்டம் வரைக்கும் பல ஏரிகளில் போய் நிரம்புகிறது. இதனால், அந்த நீர் எல்லாம் மாசுபடுகிறது. இதை களைவதற்காக அம்மாவுடைய அரசு சேலம் மாநகராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காக அணைமேடு, வெள்ளக்குட்டை, மான்குட்டை மற்றும் வண்டிப்பேட்டை ஆகிய இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, பாதாள சாக்கடை திட்டங்களில் ஒன்றாக சேர்ந்து

263 கோடி ரூபாயில் இந்தப் பணிக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக இனி சேலம் மாநகரத்திலிருந்து வெளியேறும் நீர் அனைத்தும் சுத்திகரித்து திருமேனிமுத்தாற்றில் விடப்படும் என்ற செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்கிறேன்.

அதேபோல, நம்முடைய சேலம் மாவட்ட விவசாய பெருங்குடி மக்கள் பலமுறை சந்தித்து என்னிடத்திலே கோரிக்கை மனுவினை அளித்தார்கள். அதேபோல நம்முடைய மாவட்டத்திலே இருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. செம்மலை அவர்கள், திரு. வெற்றிவேல் அவர்கள், திரு. ராஜா அவர்கள், என்னுடைய தொகுதி, இந்த நான்கு சட்டமன்ற தொகுதியிலே இருக்கின்ற விவசாய மக்கள் எல்லாம் பயன்பெறுகின்ற விதமாக இன்றைக்கு மேட்டூர் அணை நிரம்பி உபரியாக வெளியேறுகின்ற போது அந்த காலக்கட்டத்திலே Lift Irrigation நீர் ஏற்றி மூலமாக 565 கோடி ரூபாயிலே 100 ஏரிகள் நிரப்பப்படும். அந்த அறிவிப்பு கொடுக்கப்பட்டு பணி விரைவாக முடிக்கப்படும். ரூ.565 கோடியில் நிறைவேற்றுகின்ற அந்த பணிகளில் 100 ஏரிகள் நிரப்பப்படுகின்றபொழுது நிலத்தடி நீர் உயர்ந்து, விவசாயத்திற்குத் தேவையான நீர் கிடைப்பதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

காவேரி – கோதாவரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எங்களுடைய அரசால் கடும் முயற்சி எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக தமிழ்நாட்டின் டெல்டா பாசன விவசாயிகளுக்கு 125 டி.எம்.சி. தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகை செய்கின்ற அரசு எங்களுடைய அரசு.

கங்கை நதியில் கலக்கின்ற மாசுநீரை தவிர்ப்பதற்காக கங்கையை புனிதப்படுத்தும் திட்டத்தை மத்திய அரசு

அறிவித்ததைப் போன்ற திட்டத்தை, நம்முடைய காவேரி ஜீவ நதியில் பல்வேறு நதிகளிலிருந்து வெளியேறுகின்ற மாசடைந்த நீர் கலப்பதை தவிர்த்து, காவேரி நீரையும் புனிதப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நான் சந்தித்தபொழுது வைத்தேன். அவரும் அதனை ஏற்று, அண்மையில் நடைபெற்ற மேதகு குடியரசுத் தலைவர் உரையிலே காவேரி நதிநீர் மாசுபடுவதை தவிர்ப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்திருக்கின்றார்கள். அதற்கு தமிழ்நாட்டின் மக்களின் சார்பாக நன்றியை நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசின் சார்பாக, காவேரி நதிநீர் மட்டுமல்ல, பவானி, அமராவதி, வைகை, தாமிரபரணி ஆற்றின் நீர் மாசுபடுவதை சுத்திகரிப்பதற்கானத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு அமல்படுத்தவிருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன், இது மிகப்பெரிய சாதனை.

பருவமழை பொய்த்து, நிலத்தடி நீர் வற்றிவிட்ட காரணத்தினால், நிலத்தடி நீரை உயர்த்த, பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீர் முழுவதையும் சேமித்து வைக்க வேண்டுமென்பதற்காக அம்மா அரசு நீண்டகால நெடிய திட்டமான குடிமராமத்து திட்டம் மூலமாக தமிழ்நாட்டில், பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏரிகள் தூர்வாருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக 2016–2017ஆம் ஆண்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு 1,519 ஏரிகள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் துவக்கினோம். இதற்கு பொதுமக்கள், விவசாயிகளிடத்திலிருந்து நல்ல வரவேற்பு கிடைத்த காரணத்தினால் இதனை விரிவுபடுத்த 2017–2018ஆம் ஆண்டு 1,511 ஏரிகள் ரூ.328 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும்,

2018–2019ஆம் 1,829 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஏரிகளை தூர்வாருவதற்கு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு முதற்கட்டமாக 07.08.2019 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் நீர்வள ஆதார பாதுகாப்பு இயக்கத்தின் கீழ், மஞ்சாங்காரணி ஊராட்சியில், ஊரம்பாக்கம் கிராமத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் உள்ள சிறு பாசன ஏரி, மணப்பாக்கம் என்ற இடத்தில் உள்ள பொதுப்பணித் துறைக்கு சொந்தமான ஏரி ஆகிய ஏரிகளில் தூர்வாரும் பணியை நான் துவக்கி வைக்க உள்ளேன்.

ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் சட்டம் பயில முடியாத நிலை உள்ளதை கருத்தில்கொண்டு, கடந்த முறை 3 சட்டக் கல்லூரிகளை உருவாக்கித் தந்த பெருமை அம்மா அவர்களைச் சாரும். மேலும், தொடர்ச்சியாக இந்த ஆண்டு 3 சட்டக் கல்லூரிகளை அம்மா அரசு வழங்கியுள்ளது. அதில் ஒன்று சேலம் மாவட்ட சட்டக் கல்லூரி.

தமிழ்நாட்டில் முதன்முதலாக சேலம் மாவட்டத்தில் Bus Port அமைக்க மத்திய அரசு அனுமதித்து, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் முதல் பாலம் ஏ.வி.ஆர். ரவுண்டானாவிலிருந்து அஸ்தம்பட்டி

செல்லும் வரையிலான மேம்பாலம் என்னால் அண்மையில் துவக்கி வைக்கப்பட்டு, அந்தப் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சேலம் மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் உள்ள அனைத்துப் பகுதிகளிலும், இரயில்வே கடவுகளின் குறுக்கிலும் பாலம் கட்டுகின்ற அரசு எங்களுடைய அரசு.

சேலம் மாவட்டம் மட்டுமன்றி, தமிழ்நாடு முழுவதும், குடிநீர் பிரச்சினை இருக்கக்கூடிய இடங்களுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தண்ணீர் வழங்குகின்ற அரசு எங்களுடைய அரசு.

தேசத்திற்காக பாடுபட்ட தேச பக்தர்கள் புகழ் சிறக்க அதிகமாக மணிமண்டபங்கள் கட்டியதும், சிலை வைத்ததும் அம்மாவினுடைய அரசு தான். எந்த ஆட்சியிலும் இதுபோல கிடையாது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற போது, தேசத்திற்காக பாடுபட்ட, தேசத்திற்காக உழைத்த சுதந்திரம் பெற்றுத்தந்த அந்த நல்ல உள்ளங்களுக்கு மரியாதை கொடுக்கின்ற விதத்திலே அவர்களுக்கு புகழ் சேர்க்கின்ற விதத்திலே, மணிமண்டபங்களையும், சிலைகளையும் அமைத்தார்கள். அதேபோல, எங்களுடைய அரசும், அம்மா வழியில் நின்று அதிகமான தேச பக்தர்களுக்கு, நாட்டிற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்ட, உயிர்நீத்த தியாக செம்மல்களுக்கு சிலைகள் வைத்து மணிமண்டபங்களை அமைத்ததும் எங்களுடைய அரசு தான். வேறு எந்த அரசாங்கத்திலும், இவ்வளவு சிலைகளை அமைக்கவில்லை. தேச பக்தர்களுக்கு இவ்வளவு மணிமண்டபங்களையும் கட்டவில்லை.

அதேபோல, நீண்டநாள் என்னுடைய ஆசை, சேலம் மாவட்டத்திலே பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய சிலை, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவுடைய சிலை, இரண்டையும் நிறுவ வேண்டும் என்று எண்ணினேன். அதையும் உங்களுடைய ஆசியோடு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்,

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவுடைய அருளாசியோடு நான் கண்ட கனவை உங்கள் அனைவரோடு, இங்கே இருக்கின்ற, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் துணையோடு, அற்புதமாக இரண்டு வெண்கலச் சிலைகளை அமைத்து பெருமை சேர்த்திருக்கின்றேன். அதுவே, நான் வாழ்நாளில் பெற்ற மகிழ்ச்சியாக கருதுகின்றேன்.

அதேபோல, சில பத்திரிகையிலே செய்தி வந்திருக்கின்றது. ஒரு ஆங்கில நாளேட்டிலும், தினகரன் நாளேட்டிலும் அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவழிக்கவில்லை என்று ஒரு தவறான கருத்தை பதிவு செய்திருக்கிறார்கள். அதற்கு நான் விளக்கம் அளிக்க விரும்புகின்றேன்.

2017–2018ஆம் ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் மாநில நிதிநிலை மீதான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மத்திய அரசின் திட்டங்களுக்கான நிதி பயன்பாடு குறித்து பத்திரிகையில் வெளிவந்த செய்திகள் குறித்து விளக்கம் அளிக்கின்றேன்.

ஏனென்றால் ஒரு தவறான செய்தியை இன்றைக்கு பத்திரிகையின் வாயிலாக வந்திருக்கின்றது. அரசிற்கு அவப்பெயர் ஏற்படுத்துகின்ற விதமாக இருக்கின்ற காரணத்தினாலே இதை தெளிவுப்படுத்துவது அரசினுடைய கடமை என்ற காரணத்தினாலே இதை தெளிவுப்படுத்த விரும்புகின்றேன்.

சில பத்திரிகைகளில், 2017–2018ஆம் ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் மாநில நிதிநிலை மீதான அறிக்கையில் தமிழக அரசால் ஏறத்தாழ 3,600 கோடி ரூபாய் அளவிற்கு வரப்பெற்ற மத்திய அரசின் மானியங்களை பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பி உள்ளதாக ஒரு தவறான கருத்து வெளியாகியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கையில் வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கும்

போது மத்திய அரசு திட்டங்களுக்கு எந்த அளவிற்கு மத்திய அரசு நிதி எதிர்பார்க்கப்படுகிறதோ அந்த அளவிற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதன்மூலம் இத்திட்டங்களை உடனடியாக செயல்படுத்த இயலும். இந்த ஒதுக்கீடு மத்திய அரசிடமிருந்து அந்த நிதியாண்டில் விடுவித்து வரப்பெறும் மானியங்களின் அடிப்படையில் திட்டப் பணிகளுக்கான விடுவிக்கப்படுகிறது. சில திட்டங்களுக்கான எதிர்பார்க்கப்படும் நிதி மத்திய அரசிடமிருந்து வரப்பெறவில்லை என்றால் மாநில அரசின் நிதிநிலை அறிக்கையில் அதற்காக செய்யப்படும் ஒதுக்கீட்டை அந்த ஆண்டு விடுவிக்காமல் அதை சேமிப்பாக கருதுகிறோம். தொடர்ந்து அடுத்த ஆண்டு மத்திய அரசிடமிருந்து நிதி வரப்பெறும்போது அந்தத் திட்டங்களுக்கான நிதியை மாநில அரசு ஒதுக்கீடு செய்கிறது. இதுபோன்ற இனங்களில், மாநில அரசு மத்திய அரசின் நிதியை பயன்படுத்தாமல் திருப்பிக் கொடுத்துள்ளது என்று கூறுவது ஒரு தவறான கருத்தாகும்.

எடுத்துக்காட்டாக, 2017–2018ஆம் ஆண்டு பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படவுள்ள அடிப்படை மானியத்திற்காக 1,516.12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், மத்திய அரசு அதற்கான முதல் தவணையான 758.06 கோடி ரூபாய் தான் விடுவித்தது. எனவே, மாநில அரசால் இரண்டாவது தவணையான 758.06 கோடி ரூபாய் விடுவிக்க இயலவில்லை. அந்தத் தொகை 2017–2018ஆம் ஆண்டு சேமிப்பாக கருதப்படுகிறது. 2018–2019ஆம் ஆண்டில் மாநில அரசால் எடுக்கப்பட்ட முயற்சிகளினால் மத்திய அரசிடமிருந்து இந்த நிதியைப் பெற்று மாநில அரசு ஊராட்சிகளுக்கு விடுவித்தது.

அதேபோல்தான் பாரதப் பிரதமரின் ஊரக வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 2017–2018ஆம் ஆண்டு அதற்கு முந்தைய ஆண்டுகளில் அளிக்கப்பட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், மத்திய

அரசிடமிருந்து **2017–2018**ஆம் ஆண்டில் பெறப்பட்ட தொகை குறைந்துவிட்ட காரணத்தினால் மாநில அரசின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை **2017–2018**ஆம் ஆண்டு முறையாக விடுவிக்க இயலவில்லை. **2018–2019**ஆம் ஆண்டு இந்தத் தொகை விடுவிக்கப்பட்டது. எனவே, இதுபோன்ற திட்டங்களுக்கு அதே நிதியாண்டில் மத்திய அரசின் நிதி பெறப்படவில்லை என்கிற நிலையில் சேமிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. ஆனால் அதற்கு அடுத்த ஆண்டு மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்றவுடன் இந்தத் தொகைகளை மாநில அரசு விடுவித்து திட்டங்களை சீரான முறையில் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, ஒருபோதும் மாநில அரசு மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதியை பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பிய ஒருநிலை ஏற்படவில்லை என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்தபொழுதும் இப்படிப்பட்ட நிகழ்வுகள்தான் ஏற்பட்டிருந்தது. அதற்கான புள்ளிவிவரங்கள் எங்களிடம் இருக்கின்றது. ஆகவே, பத்திரிகையில் செய்தி வெளிவர வேண்டுமென்பதற்காக, மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதியை பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பப்பட்டதைப் போன்ற ஒரு தோற்றத்தை அளிக்கும் விதமாக செய்திகள் வெளிவந்தது உண்மையல்ல. மத்திய அரசு அளித்த நிதி முழுவதையும் அரசு செலவழித்துக் கொண்டிருக்கின்றது. நான் குறிப்பிட்டதைப் போன்று, சில இனங்களில், அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் அந்த நிதி வராத காரணத்தினால் அடுத்த ஆண்டு அந்த நிதியை பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு அரங்குகள் மிகச்சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப் போல இந்தப் பொருட்காட்சியில் கண்டுகளிப்பது மட்டுமல்ல அரசாங்கம் செயல்படுத்தும் திட்டங்களை விளக்கமாக, தெளிவாக

கண்முன் நாம் பார்க்கின்றோம். இந்த அரங்கத்தை நம்முடைய மாவட்ட மக்கள் மட்டுமன்றி, அருகில் இருக்கின்ற கிருஷ்ணகிரி, தருமபுரி, நாமக்கல், ஈரோடு மாவட்ட மக்களும் கண்டுகளித்து மகிழ வேண்டுமென்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டு, செய்தி மக்கள் தொடர்புத் துறை அல்லும் பகலும் அயராது உழைத்து அரசின் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி வருகின்ற காரணத்தினால் இத்துறை சார்ந்த அனைவருக்கும் மனமார, உளமார நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த அரசு பொருட்காட்சி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறுவதற்கு உழைத்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அரசு உயரதிகாரிகளுக்கும், வருகை தந்துள்ள பொதுமக்களுக்கும், பயனாளிகளுக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
04.08.2019 *அன்று, சேலம், மாநகராட்சி மைதானம்,*
அண்ணா கலையரங்கத்தில் நடைபெற்ற சேலம் அரசுப்
பொருட்காட்சி – ***2019****ஐ தொடங்கி வைத்து ஆற்றிய விழாப் பேருரை.*

வேளாண் உற்பத்தியை இருமடங்காக்கி விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக்கிடும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது!

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் 30ஆம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் பங்கு கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அறக்கட்டளையின் சொந்தக் கட்டடம் மாண்புமிகு அம்மா அவர்களால் 1993ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இனிய விழாவில் மிகச் சிறப்பாக உரை ஆற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய கஸ்தூரி அன் சன்ஸ் தலைவர் திரு. என்.ராம் அவர்களே!

தலைமை உரையாற்றிய நிறுவனர் பேராசிரியர் முனைவர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள உலக சுகாதார நிறுவனத்தின் துணை பொது இயக்குநர் மற்றும் தலைமை விஞ்ஞானி மருத்துவர் சௌமியா சுவாமிநாதன் அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய இந்நிறுவனத்தின் தலைவர் முனைவர் மதுரா சுவாமிநாதன் அவர்களே!

இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் முனைவர் ந.அனில் குமார் அவர்களே!

அறக்கட்டளை நிருவாகிகளே! நண்பர்களே, விஞ்ஞான பெருமக்களே! ஊடக மற்றும் பத்திரிகைத் துறை நண்பர்களே! பெரியோர்களே, தாய்மார்களே! உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

“விடா முயற்சியை கடல் அலைகளிடமும்,
கடமை தவறாமையை கதிரவனிடமும்,
உத்வேகத்தை காட்டாற்றிடமும்,
புன்சிரிப்பை பூக்களிடமும்,
சுறுசுறுப்பை எறும்புகளிடமும்,
சேமிப்பை தேனீக்களிடமும்,
பொறுமையை பூமியிடமும்,
கருணையை கடவுளிடமும் கற்றுக்கொள்”

என்பது ஆன்றோர் வாக்கு. இதில் கூறப்பட்ட குணநலன்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்றவர் மரியாதைக்குரிய டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. ‘முடியாது’ என்ற எண்ணம் தன் வாழ்க்கையிலே கிடையாது என்ற நோக்கத்தின் அடிப்படையில் தனது 92 வயதிலேயும், ஒரு இளைஞனைப் போல் இன்றும் பணியாற்றிக் கொண்டிருப்பது நம்மையெல்லாம் வியக்க வைக்கின்றது. இவர் இந்தியாவிலும், உலக அளவிலும் புகழ் பெற்ற ஆய்வு நிலையங்களில் பேராசிரியர், ஆராய்ச்சி நிர்வாகி, தலைவர் ஆகிய பதவிகளை வகித்தவர். மத்திய வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறை செயலாளர், மத்திய திட்டக்குழு உறுப்பினர் போன்ற உயர் பதவிகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய உலகம் போற்றும் ஒரு விவசாய விஞ்ஞானியாக திகழும் இவர், நமது தமிழ்நாட்டைச் சார்ந்தவர் என்பதில் நாம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

1942ஆம் ஆண்டு வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சம் இவரை பாதித்ததன் காரணமாக, இந்திய போலீஸ் பணித் துறையில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், அந்த பணியில் சேராமல், இந்தியாவில் விவசாயப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்து, உணவு உற்பத்தியில் நம் நாடு தன்னிறைவு பெற தனது வாழ்நாளை வேளாண்மை முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்தவர்.

இவர் மேலை நாடுகளில் வேளாண்மைத் துறையில் படித்து முனைவர் பட்டம் பெற்றாலும், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதில் தனது தாய்நாடு பின்தங்கி இருப்பதை அறிந்து, இந்தியாவிற்குத் திரும்பினார். இவரது இடைவிடாத ஆராய்ச்சி மற்றும் நடவடிக்கைகளின் காரணமாக, கோதுமை மற்றும் அரிசியில் உயர் விளைச்சல் பயிர் ரகங்கள் கண்டறியப்பட்டன. இந்தப் பயிர்

ரகங்கள் பயன்படுத்துவது பற்றிய விளக்கங்களை இவரே நேரடியாக விவசாய பெருமக்களிடம் சென்று எடுத்துரைத்துள்ளார். இந்த அதிக மகசூல் தரும் பயிர் ரகங்களை விவசாயிகள் உற்பத்தி செய்ததன் காரணமாக, உணவுப் பொருள் உற்பத்தியில் பின்தங்கி இருந்த நமது நாடு, உணவு தன்னிறைவு பெற்று ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியது. வெளிநாட்டிலிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்த நிலைமை முற்றிலும் மாறி, தன்னிறைவு நிலையை இந்தியா அடைந்ததன் காரணமாகத்தான் இவர் பசுமைப் புரட்சியின் தந்தை என்றும் அழைக்கப்படுகிறார்.

“செயற்கரிய செய்வார் பெரியர்”, அதாவது எல்லோராலும் செய்ய இயலாத செயலைச் செய்பவர்தான் பெரியர் என்றார் வள்ளுவர் பெருந்தகை. அந்த வகையில், வேளாண்மைத் துறையில் இவர் நிகழ்த்திய சாதனையை கௌரவிக்கும் வகையில், இவருக்குக் கொடுத்த பரிசுத் தொகையைக் கொண்டு இந்த ஆராய்ச்சிக் கட்டளையை இவர் தொடங்கினார். இலாப நோக்கமற்ற இந்த தொண்டு நிறுவனம், கிராமப்புறங்களில் உள்ள ஏழைப் பெண்களை இலக்காகக் கொண்டு, அவர்களின் நேரடி வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான உத்திகளை உருவாக்குகிறது. இத்தொண்டு நிறுவனத்தின் விஞ்ஞானத் தொழில்நுட்ப பயன்பாடு சுற்றுச்சூழல் நிலைத் தன்மை மற்றும் சமூக அபிவிருத்திக்கு பெரிதும் பயன்படுகிறது.

இந்த நிறுவனத்தின் மூலம் ஒரு இலட்சத்து 62 ஆயிரம் ஹெக்டேர் நிலங்கள் வளப்படுத்தப்பட்டுள்ளன. சதுப்பு நில காடுகள் மீட்கப்பட்டுள்ளன. 4,000 சத்துணவு பூங்காக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கீழ்மட்ட அளவில் வேளாண்மை பணிகளை செய்ய நிறுவனங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது போன்ற எண்ணற்ற வேளாண்

சம்பந்தப்பட்ட பணிகளை 30 ஆண்டுகளாக இந்த நிறுவனம் செய்து வருவது மிகவும் பாராட்டுக்குரியது.

வேளாண்துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு படைத்துள்ள சில சாதனைகளை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாம் பசுமை புரட்சியை தமிழ்நாட்டில் ஏற்படுத்திட முனைப்புடன் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு, வேளாண் உற்பத்தியை இருமடங்காக்கி விவசாயிகளின் வருமானத்தை மும்மடங்காக்கிடும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது.

திருந்திய நெல் சாகுபடி முறை, நேரடி நெல் விதைப்பு, தீவிர பயறு சாகுபடி, ஊட்டச்சத்து மிக்க சிறுதானிய சாகுபடி முறைகள், ஒருங்கிணைந்த பண்ணையம், கூட்டுப் பண்ணையத் திட்டம், நீடித்த மானாவாரி விவசாயத்திற்கான இயக்கம் மற்றும் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம் பாசன நீர் மேலாண்மை செய்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதன் விளைவாக கடந்த எட்டு ஆண்டுகளில் ஆறாவது முறையாக தமிழ்நாடு 100 இலட்சம் மெட்ரிக் டன்னிற்கும் அதிகமாக உணவு உற்பத்தி செய்து சாதனை புரிந்துள்ளது என்பதை பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறேன். இதே போல் பல சாதனைகளை செய்த தமிழ்நாடு

அரசை கௌரவிக்கும் வகையில் மத்திய அரசின் உயரிய விருதான ‘கிருஷி கர்மான் விருதை’ தமிழ்நாடு அரசு கடந்த 8 ஆண்டுகளில் 4 முறை பெற்றுள்ளது என்பதை பெருமிதத்துடன் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் 30ஆவது ஆண்டு விழாவில் பல்வேறு தலைப்புகளில் நடைபெற உள்ள கருத்தரங்கங்கள் வெற்றி அடைய எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிறுவனம் இன்னும் மேன்மேலும் வளர்ந்து, வேளாண்மைத் துறையில் பல்வேறு யுக்திகளை கண்டறிந்து, அதனை விவசாய பெருமக்களிடம் கொண்டு சென்று, அதன் மூலம் நாட்டின் வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதில் பெரும் பங்காற்ற வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டில் தண்ணீர் பிரச்சினை மிக முக்கியமாக கருதப்படுகிறது. காரணம், பருவ மழைக் காலங்களில் அண்டை மாநிலங்களில் உற்பத்தியாகின்ற ஆறுகளிலிருந்து கிடைக்கின்ற நீரை வைத்துத்தான் வேளாண்மை மேற்கொள்ளப்படுகின்ற ஒரு சூழ்நிலை உள்ளது. சில வருடங்களில் பருவ மழை பொய்த்து விடுகின்றது. இந்த ஆண்டும் பருவமழை பொய்த்து விட்டது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் கிடைக்கின்ற தண்ணீரை சேமிப்பது மிக முக்கியமாகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு நீர் மேலாண்மை திட்டத்தினை உருவாக்கி, அதன் மூலம் பருவ காலங்களில் கிடைக்கின்ற நீரை சேமிக்க வேண்டி, குடிமராமத்துப் பணிகள் மூலம் ஏரி, குளங்கள் தூர்வாரப்பட்டு சீர் செய்யப்படுகின்றது. அதேபோல, பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீர், ஓடை, நதிகளின் குறுக்கே தடுப்பணைகளை கட்டி தேக்கப்படுகிறது. இதனால் ஒரு சொட்டு நீர்கூட வீணாகாமல் ஏரிகள், குளங்கள் மூலம், தடுப்பணைகள் மூலம் நீர் சேமிக்கப்படுகிறது. இதனால், விவசாயப் பெருமக்களுக்கு தேவையான நீர் கிடைக்கின்றது. குடிப்பதற்குத் தேவையான

நீர் கிடைக்கின்றது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே மரியாதைக்குரிய திரு. ராம் அவர்கள் குறிப்பிடுகின்ற பொழுது, இந்த Lease period முடிவடைந்து விட்டது, நீட்டித்துக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார். ஏற்கெனவே இந்த நிறுவனம் Lease period முடிவடைவதற்கு முன்பாகவே விண்ணப்பித்திருக்கின்றது. அது அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. விரைவாக அந்தப் பணி நிறைவு பெற்று Lease period நீட்டித்துக் கொடுக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
07.08.2019 அன்று நடைபெற்ற ம.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி
நிறுவனத்தின் முப்பதாம் ஆண்டு விழா மற்றும் வளங்குன்றா
வளர்ச்சிக்கான குறிக்கோள்களை அடைவதற்கும்,
பருவநிலை மீட்சிக்கான அறிவியலைப் பலப்படுத்துவதற்குமான
கருத்தரங்க துவக்க விழாவில் ஆற்றிய உரை.

நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கத்தின் மூலம் தமிழ்நாட்டை நீர் மிகை மாநிலமாக உருவாக்குவோம்!

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கத்தின் பணிகள் துவக்க விழா நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவிற்கு வருகை புரிந்துள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நிரந்தர வற்றாத ஆறுகள் என்று எதுவும் இல்லை. பருவ மழையை நம்பியே இந்த ஆறுகள் உள்ளன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில், ஆற்று நீரைக் கொண்டு ஏரி, குளம், குட்டை, ஊருணிகளை நிரப்பி, பின்னர்

அந்த நீர் குடிநீருக்காவும் பாசனத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டது. இவ்வாறான பொறியியல் கட்டமைப்புகளை நமது முன்னோர்கள் கட்டமைத்து இருந்தனர். இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது. ஆற்றை சுற்றியுள்ள கிராமங்கள் பாசன வசதி பெற்றன. நிரம்பிய ஒரு ஏரியிலிருந்து வெளியேறும் நீர் அடுத்த ஏரிக்கு பாயும் விதத்தில் கட்டமைப்புகளை ஏற்படுத்தினர். கல்லணை போன்ற சிறப்பான அணைகளை கட்டி, காவேரி ஆற்றை பாசன வசதிக்கு பயன்படுத்திக் கொண்டனர். இதேபோன்று, பல நீர் நிலைகளை தமிழ்நாடு முழுவதும் ஏற்படுத்தி நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கினர்.

பொருளாதார வளர்ச்சிக்கு நீர் மேலாண்மை மிகவும் அவசியமானதாகும். பருவமழை பொய்க்கும் காலங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதற்கான நிரந்தர தீர்வை காண்பது மிகவும் இன்றியமையாதது. விண்ணிலிருந்து மண்ணில் விழும் ஒவ்வொரு நீர்த்துளியும், பயன்படுத்தப்பட்ட நீரும் மறுசுழற்சி செய்து முறையான பயன்பாட்டிற்காக சேமிக்கப்பட வேண்டும்.

இதற்கென அனைத்து ஏரிகளிலும், குளங்களிலும், குட்டைகளிலும், கண்மாய்களிலும், ஊருணிகளிலும், வரத்து வாய்கால்களிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாரி ஆழப்படுத்த வேண்டும். அனைத்து கிராமங்களிலும் புதிய ஏரிகளையும், குட்டைகளையும், நீர்ப்பிடிப்பு பகுதிகளையும் உருவாக்க வேண்டும். பாசன வாய்க்கால்களை செப்பனிடவும் பண்ணைக் குட்டைகள் உருவாக்குவதை ஊக்கப்படுத்தவும் வேண்டும்.

நீர் மேலாண்மையின் முக்கியத்துவத்தை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள், மழைநீர் சேகரிப்பை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினார்கள். தற்போது, என்னுடைய அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலேயே மழை நீர் சேகரிப்பை முன்னெடுத்துச் செல்லவும், நீர் நிலைகளின் கொள்ளளவினை அதிகப்படுத்தி பாதுகாக்கவும், வேளாண்மைக்கு நீர் திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்யவும், கழிவுநீர் மற்றும் பயன்படுத்தப்பட்ட நீரினை

சுத்திகரித்து மறுசுழற்சி முறையில் உபயோகிப்பதை பெருமளவில் ஊக்கப்படுத்த “நீர் வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்” என்ற ஒரு தீவிர மக்கள் இயக்கத்தை தொடங்க சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் அறிவித்து, அதனை நான் துவக்கி வைப்பதில் பெருமை கொள்கிறேன். இந்த தீவிர இயக்கத்தில், கீழ்க்காணும் வழிமுறைகளின் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்த உள்ளது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- மழை நீர் சேகரித்தல், நீர் நிலைகளைப் பாதுகாத்து அதன் கொள்திறனை அதிகரித்தல்.
- நிலத்தடி நீரை செறிவூட்டி, குடிநீர் வழங்குதலை நிலைப்படுத்துதல்.
- வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் நீர் பயன்பாட்டுத் திறனை அதிகரிப்பதோடு, மானாவாரி வேளாண்மைக்காக மழை நீர் சேகரிக்கும் திட்டத்தையும் செயல்படுத்துதல்.
- பயன்படுத்தப்பட்ட நீரினை மறுசுழற்சி செய்து உபயோகப்படுத்துவதன் மூலம் நன்னீருக்கான தேவையை குறைத்தல். இதன் மூலம் மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி கோட்பாட்டினை தீவிரமாக கடைபிடித்தல்.
- ஆறுகள், ஏரிகள், முக்கிய கடற்கரை பகுதிகள், முகத்துவார நீர்நிலைகள், கழிமுகங்கள், சிற்றோடைகள் மற்றும் சதுப்பு நிலங்களின் சூழலியலை மீட்டெடுத்தல்.

இச்செயல் திட்டம் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில், பல்வேறு துறைகளின் உதவியுடன் செயல்படுத்தப்படும். நகர்ப் பகுதிகளில் வார்டு வாரியாகவும், ஒவ்வொரு கிராமத்திலும், ஒன்றியத்திலும் நீர் பாதுகாப்பு வாரியம் அமைக்கப்பட்டு, அவற்றில் பெண்கள் பெருவாரியாக கலந்துகொண்டு செயல்படுவதை இத்திட்டம் உறுதி செய்கிறது.

இந்த நீர்வள பாதுகாப்பு இயக்கத்தை ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற, ஒரு 'தீவிர பிரச்சார இயக்கம் 2019', இவ்விழாவின் மூலம் தொடங்கி ஒருமாத காலத்திற்கு தீவிரமாக செயல்படுத்தப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தத் தீவிர இயக்கத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பெருமளவில் பங்கேற்பர். மாவட்ட ஆட்சியர்கள், இத்தீவிர இயக்கப் பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவர். இந்த இயக்கம், தனியார் நிறுவனங்கள், பொது மக்கள் அரசுசாரா நிறுவனங்கள், தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் ஒரு மக்கள் இயக்கமாக செயல்படுத்தப்படும். இந்த தீவிர இயக்கத்தின் மூலம் பருவமழை காலத்திற்கு முன்பு நீர்நிலைகளை மேம்படுத்தி, அதிக அளவு மழை நீரை சேமிக்க வழி வகை செய்யப்படும்.

குடிமராமத்துத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு 499.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 1,829 பணிகளும், தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டின் ஒரு பகுதியாக, காவேரி டெல்டா பகுதியில் உள்ள கால்வாய்களை சீரமைக்க 61 கோடியே 38 இலட்சம்

ரூபாய் மதிப்பீட்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிகளும், இந்த இயக்கத்தின் மூலமாக எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

இத்தீவிர பிரச்சார இயக்கத்தின் மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் கிராமந்தோறும் சிறுபாசன ஏரிகள், குட்டைகள் மற்றும் ஊருணிகளின் கொள்ளளவினை அதிகரிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 750 கோடி ரூபாயுடன், கூடுதலாக சிறப்பு நிதியாக 500 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு வழங்கி, மொத்தம் 1,250 கோடி ரூபாய் நிதியின் மூலம் இப்பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்திலுள்ள 210 நீர்நிலைகளில், மாநகராட்சி நிதி மற்றும் தனியார் நிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதியின் மூலமாக 53 நீர்நிலைகளில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், 114 நீர்நிலைகளில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகளும் இத்தீவிர இயக்கத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் மேலாண்மை இயக்கத்தின் மூலம் நீண்ட கால செயல்பாடுகளாக, மாநிலத்தில் பாயும் நதிகளை இணைத்தல், கோதாவரி – காவேரி ஆறுகளை இணைக்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

இதுதவிர, கழிவுநீரை மறுசுழற்சி மூலம் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து நன்னீருக்கான தேவையைக் குறைத்தல், ஆறுகள், ஏரிகள், முக்கிய கடற்கரைப் பகுதிகள், முகத்துவார நீர்நிலைகள், கழிமுகங்கள், சிற்றோடைகள் மற்றும் சதுப்பு நிலங்களின் சூழலியலை மீட்டெடுத்தல், சொட்டுநீர் பாசனத் திட்டத்தை தீவிரமாக செயல்படுத்துதல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல் போன்ற எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகிறது.

கங்கையை தூய்மைப்படுத்தும் திட்டத்தைப் போன்றே, காவேரி மற்றும் அதன் துணை ஆறுகளை தூய்மைப்படுத்த "நடந்தாய் வாழி காவேரி" என்னும் ஒரு புதிய திட்டத்தை மாண்புமிகு அம்மாவின் அரசு, இந்த இயக்கத்தின் மூலம் செயல்படுத்தும். இத்திட்டம், இந்திய அரசு மற்றும் வெளிநாட்டு நிதியுதவி முகமைகளின் உதவியுடன் மாண்புமிகு அம்மாவின் அரசு படிப்படியாக நிறைவேற்றும். காவேரி ஆற்றில், கழிவு நீர் மற்றும் தொழிற்சாலைக் கழிவு கலப்பதை தடுக்கவும், கடல் முகத்துவாரம் வரை ஆற்றை மீட்டெடுக்கவும் ஒரு விரிவான திட்ட அறிக்கையை தயாரித்து செப்டம்பர் மாதத்தில் மத்திய அரசுக்கு சமர்ப்பிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். இதேபோன்று, பவானி, வைகை, அமராவதி மற்றும் தாமிரபரணி ஆறுகள் மாசுபடுவதைத் தடுக்கவும் மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

பெருகி வரும் மக்கள் தொகையும், அதற்கேற்ப பெருகும் நீரின் தேவையினையும் கருத்தில்கொண்டு, இனி நாம் ஒவ்வொருவரும் நீரின் சேமிப்பைப் பற்றி சிந்தித்து, அடுத்த தலைமுறைக்கு வளமான நீராதாரத்தை விட்டுச் செல்ல வேண்டும் என்பதே எனது அன்பான வேண்டுகோள்.

இந்த நீர்வள பாதுகாப்பு இயக்கத்தில் மிகப் பெரிய அளவில் பொதுமக்களும், இளைஞர்களும், தனியார் நிறுவனங்களும், அரசு சாரா நிறுவனங்களும், தொழில் நிறுவனங்களும் முனைப்புடன் பங்கேற்று, மாநிலத்தின் ஒட்டுமொத்த நலனை பாதுகாக்க தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என இத்தருணத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இன்றைக்கு ஒரு மிகச் சிறந்த திட்டத்தை துவக்கி வைத்திருக்கின்றோம். வறட்சியான காலத்திலே நமக்குத் தேவையான நீரை சேமிப்பது தான் இந்தத் திட்டத்தின் மிக முக்கிய நோக்கமாகும். **40** ஆண்டுகாலம் இல்லாத வறட்சி. இரண்டு மூன்று ஆண்டு காலமாக பருவமழை முழுமையாக நமக்கு பொழியவில்லை. இதனால்

நிலத்தடி நீர் குறைந்து கொண்டே செல்கின்றது. ஆகவே, நிலத்தடி நீரை செறிவூட்டுவதற்கும், நிலத்தடி நீரை வேளாண் பெருமக்கள் பயன்படுத்தி, வேளாண் பணிகளை மேற்கொள்வதற்கும், குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இந்தக் குடிமராமத்துத் திட்டம் மிகப் பெரிய திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலமாக, தமிழகத்திலிருக்கின்ற பொதுப்பணித்துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பராமரிப்பில் இருக்கின்ற ஏரிகள் முழுவதும் படிப்படியாக தூர்வாரப்பட்டு, அதன் மூலமாக ஏரிகள் ஆழப்படுத்தப்பட்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டு, மதகுகள் சரிசெய்யப்பட்டு, வரத்து வாய்க்கால்கள் சுத்தப்படுத்தப்பட்டு, உபரி நீர் வெளியேறுகின்ற கால்வாய்கள் சுத்தப்படுத்தப்பட்டு, சீரமைக்கப்பட்டு இன்றைக்கு ஒரு முழுமையான ஏரியாக காட்சி அளிக்கக்கூடிய அளவிற்கு அம்மாவினுடைய அரசு திட்டம் தீட்டி செயல்படுத்துகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல ஆண்டுகாலமாக, கிட்டத்தட்ட 20, 30 ஆண்டுகளாக தூர்வாராமல் இந்தத் திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தான் இந்தத் திட்டத்தை கையிலெடுத்து, இன்றைக்கு சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. தூர்வாரும்பொழுது ஏரிகள் ஆழமாவதுடன், கிடைக்கும் வண்டல் மண் விவசாயிகளுக்கு இயற்கை உரமாகப் பயன்படுகின்றது. இருவிதத்தில் நன்மை கிடைக்கின்றது.

பருவ காலங்களில் பொழிகின்ற மழை நீர் ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் பாதுகாப்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை நாங்கள் துவக்கி வைத்திருக்கின்றோம். இந்தத் திட்டத்திற்கு புத்துயிர் கொடுத்த அரசு அம்மாவின் அரசு. 2017–2018ஆம் ஆண்டு பரீட்சார்த்த முறையில் இந்தத் திட்டத்தை துவக்கினோம். முதற்கட்டமாக 1,519 ஏரிகளும், இரண்டாம் கட்டமாக 2018–2019ஆம் ஆண்டில் ரூபாய் 328 கோடியில் 1,511 ஏரிகளுக்கான திட்டத்தை அறிவித்தோம். 2019–2020ஆம் ஆண்டிற்கு 1,829 ஏரிகள் ரூபாய் 499 கோடியில் தூர்வாருவதற்கு

தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். இன்று 43–பனப்பாக்கம் என்ற பகுதியில் உள்ள ஏரியில் குடிமராமத்துத் திட்டத்தை துவக்கி வைத்துள்ளேன். ஒரு மனிதனுக்கு நீர் எப்படியோ, அதுபோல் விவசாயத்திற்கு உயிராக இருப்பது நீர். எனவே, அந்த நீரை, ஒரு சொட்டுகூட வீணாகாமல் பாதுகாப்பது அரசின் கடமை என்பதால் இப்படி ஒரு செயல்திட்டத்தைத் தீட்டி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். பொதுப்பணித்துறை சார்பில், குடிமராமத்துத் திட்டம் மூலமாக, முழுக்க, முழுக்க விவசாயப் பெருங்குடி மக்கள், பாசனத்திற்குட்பட்ட விவசாயிகள் சங்கம், ஆயக்கட்டுதாரர்களை ஈடுபடுத்தி, அவர்களிடத்தில் நிதியை கொடுத்து அவர்கள் மூலமாக ஏரிகளை சீரமைத்து, ஏரிகளில் வண்டல் மண் அள்ளுவது, கரையை பலப்படுத்துவது, மதகுகளை சீர் செய்வது, வரத்து வாய்க்கால்களை சுத்தப்படுத்துவது, உபரிநீரை வெளியேற்றுகின்ற கால்வாய்களை சுத்தப்படுத்துவது போன்ற பணிகளை செயல்படுத்துகின்றோம்.

வறட்சியால் பாதிக்கப்படும் காலங்களில் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகையை காப்பீட்டு நிறுவனங்களிலிருந்து, இந்தியாவிலேயே அதிகளவில், கிட்டத்தட்ட ரூபாய் 3,400 கோடி பெற்றுத் தந்த அரசு அம்மாவின் அரசு.

விவசாயிகளின் நலன் கருதி, வேளாண் கருவிகளான டிராக்டர், இடுபொருள், விதை போன்றவற்றிற்கு மானியம் கொடுக்கின்றோம்.

விவசாயிகளின் பணி சிறக்க அம்மாவின் அரசு துணை நிற்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் மார்க்கெட் கட்டப்பட்டு, அங்கே விவசாயிகள் விற்பனை செய்து தங்களுக்குத் தேவையான வருமானத்தை ஈட்டிக் கொள்ளவும் அம்மாவினுடைய அரசு ஏற்பாடு செய்திருக்கின்றது.

விவசாயிகள் மலர்களை அதிகளவில் பயிரிட்டு விற்பனை செய்கின்றார்கள். அதற்குத் தகுந்த விலை கிடைப்பதில்லை. எனவே, சர்வதேச மலர் ஏல மையம் ஒன்றை ஒசூரில் ஏற்படுத்த அண்மையில் நான் சட்டமன்றத்தில் அறிவித்தேன். அந்தப் பணிகளையும் துவக்கவிருக்கின்றோம்.

சென்னைக்கு அருகே ரூபாய் இரண்டாயிரம் கோடியில் மிகப் பெரிய உணவுப் பூங்கா அமைக்கவிருக்கின்றோம்.

விவசாயிகளின் உபதொழிலான கால்நடை வளர்ப்பினை ஊக்குவிப்பதற்காக, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருந்த காலத்திலேயே, வெண்மைப் புரட்சியை தமிழ்நாட்டில் உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில், விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள், கோழிகள் ஆகியவற்றை நம்முடைய பெண் பயனாளிகளுக்குக் கொடுத்தார்கள். அதை அம்மாவின் அரசும் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. இத்திட்டத்தை மேலும் செம்மைப்படுத்த, அம்மாவின் அரசு, ஆசியாவிலேயே மிகப் பிரம்மாண்டமான, கிட்டத்தட்ட 1,000 ஏக்கரில் ரூபாய் 1,000 கோடியில், கால்நடை ஆராய்ச்சி நிலையம், கால்நடை மருத்துவக் கல்லூரி, கலப்பினப் பசுக்கள் உருவாக்குதல், அனைத்து ரக மீன் வளர்ப்பு, ஆடுகள், கோழிகள் வளர்த்தல் போன்ற பல வசதிகளுடன்கூடிய “கால்நடைப் பூங்கா” அமைக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றது.

இதயதெய்வம் அம்மா அவர்கள் கொடுத்த அத்தனை திட்டங்களையும் சிந்தாமல், சிதறாமல் கிராமத்திலிருந்து நகரம் வரை அனைத்து மக்களுக்கும் கொடுக்கக்கூடிய ஒரே அரசு அம்மாவின் அரசு தான்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உழைக்கின்ற மகளிருக்கு இருசக்கர வாகனம் வழங்கப்படுமென அறிவித்தார்கள். ரூபாய் 25 ஆயிரம் மானியத்தில் நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

திருமணமாகாத ஏழை குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு 4 கிராமிலிருந்து 8 கிராமாக தாலிக்குத் தங்கம் வழங்கி அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றியது அம்மாவினுடைய அரசு. பட்டப் படிப்பு படித்த பெண்களுக்கு 50 ஆயிரமும், +2 படித்த பெண்களுக்கு ரூபாய் 25 ஆயிரமும் உதவித்தொகையாக அம்மாவின் அரசால் வழங்கப்படுகிறது. இந்தியாவில், எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, கிராமத்தில் குடிசையில் வாழ்கின்ற மக்கள் கூட நிம்மதியாக வாழ்கின்ற ஒரு இடம் தமிழ்நாடு தான் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கருவுற்ற தாய்மார்களின் கரு சிறப்பாக வளர வேண்டுமென்பதற்காக அவர்களுக்கான உதவித்தொகை ரூபாய் 6 ஆயிரத்திலிருந்து ரூபாய் 12 ஆயிரமாக உயர்த்தப்பட்டு, பின்னர் ரூபாய் 18 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. கரு வளரும்பொழுதே குழந்தை நன்றாக வளர வேண்டுமென்பதற்காக ஊட்டச்சத்து அடங்கிய பெட்டகம் வழங்கிய அரசு அம்மாவினுடைய அரசு. ஏழைத் தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள் இந்த மண்ணில் பிறக்கும்பொழுதே நன்றாக வாழ வேண்டுமென்பதற்காக, பிறந்தவுடன் 16 வகையான பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம் அம்மாவினுடைய ஆட்சியில் தான் கொடுக்கின்றோம்.

அதிகமாக ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்பட்டிருக்கின்றது, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் அதிக அளவில்

திறக்கப்பட்டிருக்கின்றது. கிராமத்தில் வாழ்கின்ற மக்களுக்கு அங்கேயே சிகிச்சை அளிக்கக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கி தந்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், அம்மா இருந்த காலத்தில் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில், ஒரு குடும்பத்திற்கு ரூ.2 இலட்சம் வரை பயன்பெறலாம் என்று இருந்தது, ஆனால் தற்போது, ரூ.5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இவையெல்லாம் ஏழை, எளிய மக்களுக்கு கொடுக்கப்பட்ட வரப்பிரசாதமான திட்டம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றைக்கு சாலை வசதிகள் அதிக அளவில் கொடுத்திருக்கின்றோம். அதிக அளவில் தடுப்பணைகளை கொடுக்கின்றோம். இதற்காக மூன்றாண்டு திட்டத்தில் ரூ.1,000 கோடி ஒதுக்கி, இப்பொழுது தடுப்பணைக்காக ரூ.600 கோடி அளவில் திட்டத்தை உருவாக்கி இருக்கின்றோம். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, ஒரு சொட்டு நீர் கூட வீணாகாமல் இருப்பதற்கு எங்கெங்கெல்லாம் தடுப்பணை கேட்கின்றார்களோ, அங்கெல்லாம் அம்மாவினுடைய அரசால் தடுப்பணை கட்டித் தரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்நாட்டில் ஓடைகள், நதிகளின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டிய பகுதிகளில் எல்லாம் தடுப்பணைகள் கட்டுவதற்கு ஓய்வு பெற்ற பொறியாளர்களை நியமித்து, அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாக ஆய்வு செய்து, எங்கெங்கெல்லாம் மழைநீர் வீணாக கடலில் கலக்கின்றது என்பதை கண்டறிந்து அரசுக்கு தெரிவித்து, ஓடையின் குறுக்கே, நதிகளின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கும் அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது என்னென்ன திட்டங்களைக் கொண்டு வந்தார்களோ, அத்தனைத் திட்டங்களையும் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயத் தொழிலாளியானாலும், நெசவுத் தொழிலாளியானாலும், கட்டடத் தொழிலாளியானாலும் சரி, தொழிலாளி குடும்பங்களுக்கு அம்மாவினுடைய அரசு 2,000 ரூபாய் கொடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே தலைமைச் செயலகத்தில் நான் அந்தப் பணியை துவக்கி வைத்து விட்டேன். கணக்கெடுப்புப் பணி நிறைவடைந்தவுடன் அனைத்து ஏழை தொழிலாளர் குடும்பத்திற்கும் அம்மாவினுடைய அரசு 2,000 ரூபாய் வழங்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, இங்கே வருகை தந்திருக்கின்ற அனைத்து விவசாய பெருமக்களும், தமிழகத்தில் இருக்கின்ற விவசாயிகளும், இந்தத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்று அன்போடு கேட்டு

நீர்வளத்தை பாதுகாப்போம்!
அனைத்து வளத்தையும் பெருக்குவோம்!
வறட்சியை விரட்டுவோம்!
தமிழ்நாட்டை நீர் மிகை மாநிலமாக உருவாக்குவோம்!

என்பதை தெரிவித்து மிகச் சிறப்பாக குறுகிய காலத்திலே இந்த அருமையான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து, வருகை தந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
திருவள்ளூர் மாவட்டம், 43 பனப்பாக்கத்தில் 07.08.2019 அன்று நடைபெற்ற குடிமராமத்து பணிகள் 2019–2020இன் கீழ், தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர்மேலாண்மை இயக்கத்தின் பணிகளை துவக்கி வைத்து ஆற்றிய விழாப் பேருரை.

மாண்புமிகு அம்மாவின் அரசு மக்கள் அரசு, ஏழை, எளியோரின் நலன் காக்கும் அரசு என்பதை மக்கள் உணரும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரும்பணியாற்ற வேண்டும்!

தமிழ்நாடு அரசின் முகமாக மாவட்ட நிருவாகம் விளங்குகின்றது. நீங்கள் மாவட்ட அளவில் அரசின் கண்ணாகவும், கரங்களாகவும் செயல்பட்டால், அரசின் திட்டங்கள் மக்களை உரிய முறையில் சென்றடையும்.

நீங்கள் அரசின் திட்டங்களான குடிமராமத்து, மழைநீர் சேகரிப்பு, பசுமை வீடுகள் கட்டும் திட்டம், பொது விநியோகத் திட்டம், சத்துணவு மற்றும் அங்கன்வாடி குழந்தைகள் திட்டம், தகுதியுடைய நபர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டம், கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள் பராமரித்தல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் மனுக்கள் மற்றும் அதற்கு தீர்வு காணுதல், வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்களை கணக்கெடுத்து அவர்களுக்கு பட்டா வழங்குதல், அம்மா திட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு அடிப்படை

வசதிகள் ஏற்படுத்துதல், நெகிழி ஒழிப்பு, அம்மா இருசக்கர வாகனத் திட்டம், பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கை, வேளாண் சார்ந்த திட்டங்கள் போன்ற திட்டங்களை ஒவ்வொரு மாதமும் கள ஆய்வு மேற்கொண்டு அந்த விவரங்கள் அடங்கிய ஆய்வறிக்கையை மாதந்தோறும் என்னுடைய அலுவலகத்திற்கு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அனுப்ப வேண்டும். இந்தக் கூட்டம் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை எனது தலைமையில் நடக்கும்.

பருவமழை பொய்த்ததன் காரணமாக நமது மாநிலத்தில் பல இடங்களில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தான் தமிழ்நாடு நீர்வள ஆதார மற்றும் மேலாண்மை இயக்கத்தை நேற்று நான் துவக்கி வைத்தேன். நமது நீராதாரங்களை பாதுகாக்கவும், அதை பழைய நிலைக்கு மீட்டெடுக்கவும், நீர் நிலைகள் மாசுபடாமல் தடுக்கவும், பயன்படுத்திய நீரை மறுசுழற்சி செய்யவும், ஒரு சொட்டு நீரைக்கூட வீணாக்காமல் நாம் அதை சேமிக்க வேண்டும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு மக்கள் அரசு என்பதையும், ஏழை, எளியோரின் நலன் காக்கும் அரசு என்பதையும், அவர்களுக்கு செயலாற்றும் அரசு என்பதையும் மக்கள் உணரும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்டங்களில் சுறுசுறுப்பாக களத்தில் இறங்கி அரும்பணியாற்ற வேண்டும் என்பதை நான் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் தலைமையில்*
***08.08.2019** அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற*
மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டத்தில்
ஆற்றிய தொடக்க உரை.

நமது மாநில திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதலை பெறுவதற்கு ஒரு பாலமாக செயல்பட்டவர் மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் அவர்கள்!

வருகை தந்துள்ள அனைவருக்கும் எனது காலை வணக்கம்.

மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் திரு.மு.வெங்கையா நாயுடு அவர்கள் தனது வாழ்க்கை அனுபவங்களை தொகுத்து எழுதிய "Listening, Learning and Leading" என்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில் பங்கேற்றுள்ள மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித் அவர்களே!

மாண்புமிகு மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித் ஷா அவர்களே!

மாண்புமிகு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. பிரகாஷ் ஜவடேகர் அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

வேளாண்மை விஞ்ஞானி பேராசிரியர் திரு. எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களே!

ராஜஸ்தான் மத்திய பல்கலைக்கழக வேந்தர் முனைவர் கிருஷ்ணசுவாமி கஸ்தூரி ரங்கன் அவர்களே!

முன்னாள் இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர் திரு. கே.பராசரன் அவர்களே!

சூப்பர் ஸ்டார் திரு. ரஜினிகாந்த் அவர்களே!

துக்ளக் பத்திரிகையின் ஆசிரியர் திரு. சுவாமிநாதன் குருமூர்த்தி அவர்களே!

அப்போலோ மருத்துவமனையின் தலைவர் திரு. பி.சி.ரெட்டி அவர்களே!

வேலூர் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் நிறுவனர் மற்றும் வேந்தர் முனைவர் ஜி.விஸ்வநாதன் அவர்களே!

வருகை தந்திருக்கின்ற மரியாதைக்குரிய நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

பெரியோர்களே, தாய்மார்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்சிக்கு எளியன், கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். – என்கிறது திருக்குறள்.

காண்பதற்கு எளியவராகவும், கடுஞ்சொல் பேசாதவராகவும் விளங்கும் அரசர் ஆளும் நாட்டை உலகம் புகழும் என்ற வள்ளுவர் பெருந்தகை அவர்களின் கூற்றுப்படி எல்லோரும் எளிதில் அணுகும்படியான எளியவராகவும், பள்ளி, கல்லூரி மாணவர்களையும், இளைஞர்களையும், பெண்களையும் கவர்ந்து இழுக்கக் கூடியவரும், எல்லோரும் விரும்பும்படியாக இனிமையாக பேசி பழகக் கூடியவராகவும், பாரத மக்களுக்காக அயராது பணியாற்றிக் கொண்டிருப்பவர் நமது மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் அவர்கள்.

“உழைப்பே உயர்வு” என்ற பழமொழிக்கு இவர் வாழ்வே ஓர் உதாரணமாகும்.

ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டத்தில் 1949ஆம் ஆண்டு ஜுலை 1ஆம் தேதி பிறந்த இவர், படிப்பது மட்டுமின்றி, “ராஷ்ட்ரிய சுயம் சேவக்” இயக்கத்தில் ஒரு எளிய தொண்டனாக சேர்ந்து தனது சமுதாயப் பணியினை துவக்கினார். பிறகு ஜனசங்கம், ஜனதா கட்சி, பாரதீய ஜனதா கட்சி ஆகிய கட்சிகளில் பல்வேறு பதவிகளை வகித்தார். பின்னர் பாரதிய ஜனதா கட்சியின் தலைவராக 2002ஆம் ஆண்டு உயர்ந்தவர்.

2000ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரை அப்போதைய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.வாஜ்பாய் தலைமையிலான அமைச்சரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சராக பணியாற்றினார்.

Later, during 2014, His Excellency Thiru Venkaiah Naidu Garu worked as the Hon’ble Union Minister for Urban Development, Parliament Affairs, Information and Broadcasting, in the Government headed

Thiru Narendra Modiji. On this same day in 2017, he became the Vice President of Indian Republic and in that capacity, Chairman of Rajya Sabha. He earned the respect of all the members of the House, irrespective of party affiliation, because of his friendly approach.

மற்றொரு நிகழ்வை நான் குறிப்பிட விரும்புகிறேன். வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர்–விம்கோ நகர் வரையிலான சென்னை மெட்ரோ இரயில் சேவையின் நீட்டிப்பு திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் விழாவில், நமது மாண்புமிகு அம்மா அவர்கள் பேசுகையில், “இந்த விழாவில் கண்டிப்பாக திரு.வெங்கையா நாயுடு அவர்கள் பங்கேற்பதற்கு ஏதுவாக நாடாளுமன்ற கூட்டம் நடைபெறாத நாளான சனிக்கிழமை அன்றுதான் நடத்தப்பட வேண்டும் என நான் உத்தரவிட்டிருந்தேன். இந்த விழாவில் திரு.வெங்கையா நாயுடு அவர்கள் கலந்துகொண்டுதில் நான் உண்மையிலேயே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால், இந்த மெட்ரோ இரயில் நீட்டிப்பு திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்றுத் தந்தது இவர்தான் என்று சொன்னால் அது மிகையாகாது” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

மாண்புமிகு வெங்கையா நாயுடு அவர்கள், தமிழ்நாட்டின் உற்ற நண்பர் என்று நமது மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா

அவர்கள் கூறுவார்கள். அதே உறவும், அன்பும் இன்றளவும் நம் மீது வைத்திருப்பவர் மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் அவர்கள்.

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் டிஜிட்டல் உரிமத்தை பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர் நமது மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் அவர்கள்.

மேலும், இவர் மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சராக இருந்தபோது, என்னுடன் இணைந்து திருமங்கலம் முதல் நேரு பார்க் வரையிலான மெட்ரோ இரயில் சேவையை 14.05.2017 அன்று தொடங்கி வைத்த நிகழ்வு எனது மனதில் இன்னும் பசுமையாக உள்ளது. மேலும், அன்றே தலைமைச் செயலகத்தில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மத்திய திட்டங்களை பற்றி ஆய்வு செய்து, நமது மாநில திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதலை பெறுவதற்கு ஒரு பாலமாக செயல்பட்டவர் நமது மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

மாண்புமிகு அம்மாவிற்கு பிறகும், மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தும் திட்டங்களுக்கு இன்றும் மத்திய அரசிலிருந்து உரிய ஆணையை பெறுவதற்கு துணையாக இருந்துகொண்டிருக்கிறார்.

"போற்ற வேண்டியவை உண்மை, உழைப்பு, உயர்வு
பின்பற்ற வேண்டியவை கனிவு, பணிவு, துணிவு
பேண வேண்டியவை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு"

என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிகளின் அடிப்படையில் இன்றும் மக்கள் பணியாற்றிக் கொண்டிருப்பவர் மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

பல ஆண்டுகளாக மாநிலங்கள் அவையில் உறுப்பினராக பணியாற்றிய அனுபவம், அனைத்து கட்சியினரிடமும் நண்பராக பழகும் இவரது இயல்பான குணம் ஆகியவைதான் மாண்புமிகு வெங்கையா நாயுடுகாரு அவர்களை இன்று பாரதத்தின் குடியரசு

துணைத் தலைவராக உயர்த்தி இருக்கிறது. அரசுப் பதவியை விட மக்கள் பணி என்பதுதான் முக்கியம் என்ற கொள்கை பிடிப்பு கொண்டவர் நமது பாரத குடியரசு துணைத்தலைவர் அவர்கள். ஏற்றுக்கொண்ட பதவிகளில் அனுபவங்களையும், அறிவையும், அர்ப்பணிப்பையும் கொண்டு திறமையாக பணியாற்றி, அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றவர் நமது குடியரசு துணைத் தலைவர் அவர்கள் ஆவார்.

இவர், தமிழ்நாட்டில் கலந்துகொள்ளும் நிகழ்வுகளில், தனது உரையின் ஆரம்பத்தில் சில நிமிடங்கள் தமிழில் உரையாடுவார். சமீபத்தில் சென்னையில் மாணவர்களிடையே பேசுகையில் தாய்மொழி கண் போன்றது என்றும், தாய்நாடு, தாய்மொழி மற்றும் பிறந்த ஊரை என்றென்றும் மறக்கக் கூடாது என்றும் ஒரு உயரிய அறிவுரையை கூறினார். வீட்டிலும், வெளியிலும் நமது தாய்மொழியில் தான் பேச வேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுரை வழங்கிய இவர், தமிழும், தமிழ்நாடும் தன் மனதிற்கு நெருக்கமானவை" என்று கூறியுள்ளார்.

உலக அளவில் பல்வேறு நாடுகளிலிருந்து மருத்துவ சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் சென்னை மாநகரம் ஈர்த்து வருகிறது என்றும், மருத்துவ சுற்றுலாவில் தமிழ்நாடு ஒரு உயர்ந்த இடத்தை அடைந்துள்ளதாகவும், சென்னையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் நமது மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர் அவர்கள் பெருமையுடன் குறிப்பிட்டிருந்தார்.

சமீபத்தில் நடைபெற்ற இரண்டாம் உலக முதலீட்டாளர் மாநாட்டின் நிறைவு விழாவில் ஆற்றிய உரையில்

"Tamil Nadu is supremely rich in cultural heritage. It is a place that is close to my heart as well. I am very happy to learn that it is one of the best-performing states of India and has emerged as one of the most sought-after investment destinations.

I am glad to know that GIM-2019 has attracted substantial investments in Manufacturing, Infrastructure and Services.

It is worth noting that NITI Aayog has ranked Tamil Nadu as one of the front-runners in India on many socio-economic parameters." என மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தமிழ்நாடு மற்றும் அதன் மக்கள் மீது இவர் வைத்துள்ள ஈடுபாட்டையும், அன்பையும், பாசத்தையும் காட்டுவதாக இந்த நிகழ்வுகள் உள்ளன.

இன்று வெளியிடப்பட்ட இந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இவரது அனுபவங்கள், அனைவருக்கும் ஒரு படிப்பினையாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அரசியலிலும், பொது வாழ்க்கையிலும் நுழைய விரும்பும் இளைஞர்களுக்கு இந்த புத்தகம் ஒரு வழிகாட்டியாகவும், கிரியா ஊக்கியாகவும் இருக்கும் என்று உறுதி கூறுகிறேன்.

மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் அவர்கள் இந்திய நாட்டிற்கும், இந்திய மக்களுக்கும் தொடர்ந்து சேவை ஆற்ற அவருக்கு நீண்ட ஆயுள் அளிக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறேன்.

இந்த விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டு விடை பெறுகிறேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு பாரத குடியரசு துணைத் தலைவர் பதவியில்
*திரு. **மு.வெங்கையா நாயுடு** அவர்கள் இரண்டாண்டு நிறைவு செய்தது*
குறித்து வெளியிடப்பட்ட புத்தகத்தின் வெளியீட்டு விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் ஆற்றிய உரை – **11.08.2019***

விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் நீரை பங்கிட்டு, சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும்!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அருளாசியோடு, இன்றைய தினம் வேளாண் பெருமக்களின் கோரிக்கையை ஏற்று, வருகை தந்திருக்கின்ற விவசாயிகள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் முன்னிலையிலே இன்றைக்கு மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பாசனத்திற்கான தண்ணீர், என்னால் திறந்து விடப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு மேட்டூர் அணை 101 அடியை எட்டியுள்ளது, அணையில் 66 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. மேலும், இப்பொழுது 2 இலட்சத்து 30 ஆயிரம் கன அடி தண்ணீர் அணைக்கு வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, அணை முழு கொள்ளளவான 120 அடியை எட்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். இன்னும் பருவமழை பெய்யவில்லையே, இன்றைக்கு விவசாயிகளுக்கெல்லாம்

தண்ணீரை எப்படி திறப்பது என்று எண்ணிக்கொண்டு வேதனை பட்டுக்கொண்டிருந்தேன். திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்துவிட்டு வந்தவுடனே மழை பொழியும், ஆனால் இந்த முறை கொஞ்சம் காலதாமதமாக பெய்திருக்கிறது. இருந்தாலும், நாம் நினைத்தபடி எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அருளாசியோடு ஏழுமலையானுடைய அருளாசியோடு, இன்றைய தினம் மேட்டூர் அணைக்கு சுமார் 2 இலட்சத்து 30 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அணை முழு கொள்ளளவை எட்டும். நம்முடைய விவசாயப் பெருமக்களுக்குத் தேவையான நீர் முழுவதும் இந்த ஆண்டு வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்கின்றேன். அம்மாவினுடைய அருளாசியோடு படிப்படியாக தண்ணீர் திறக்கப்பட்டு, வருகின்ற நீரைப் பொறுத்து, நம்முடைய விவசாயிகளுக்கு தேவையான அளவிற்கு தண்ணீர் திறக்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலமாக, சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், அரியலூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயப் பெருங்குடி மக்கள் பாசன வசதியை பெறுவர் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த தண்ணீர் திறப்பின் மூலமாக, சுமார் 16.05 இலட்சம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகின்றது. மிகப்பெரிய பாசனம் பெறுகின்ற ஒரு ஜீவநதி என்று சொன்னால் அது காவேரி நதி தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு தேவைப்படும் மொத்த நீரின் அளவு சுமார் 339 டி.எம்.சி. ஆகும். மேட்டூர் அணையிலிருந்து 220 டி.எம்.சி. தண்ணீர் மற்றும் மீதமுள்ள 119 டி.எம்.சி. தண்ணீர் வடகிழக்கு பருவமழை மூலமும் உறுதி செய்யப்படும். மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாய்களுக்கு இன்று முதல் 132 நாட்களுக்கு மேட்டூர் அணையிலிருந்து விநாடிக்கு 1,000 கன அடி தண்ணீர் திறக்கப்படும், இதனால் சுமார் 45,000 ஏக்கர் நிலம்

பாசனம் பெறுவதால் ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயப் பெருமக்கள் பயன்பெறுவார்கள். இதற்காக சுமார் 9.6 டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படும். மேலும், காவேரி ஆற்றிலிருந்து சுமார் 155 திட்டங்களின் மூலம் தினசரி 1,700 மில்லியன் லிட்டருக்கும் மேற்பட்ட தண்ணீர் 8 மாவட்டங்களிலுள்ள பொதுமக்களின் குடிநீருக்காக பயன்படுத்தப்படுகின்றது. மேலும், 20 மாவட்ட மக்களுக்கு காவேரி நீர் குடிநீர் ஆதாரமாகவும் திகழ்கிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்லாமல், நீர் மின் நிலையம் மூலம் 50 மெகாவாட் மின்சாரமும், சுரங்க மின் நிலையங்கள் மூலம் 200 மெகாவாட் மின்சாரமும், ஆகமொத்தம் 250 மெகாவாட் மின்சாரம் நமக்கு கிடைக்கின்றது. மேலும், காவேரி ஆற்றின் குறுக்கே உள்ள 7 கதவணை நீர் மின் நிலையங்கள் மூலம் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேட்டூர் அணை கட்டப்பட்டதிலிருந்து பல்லாண்டு காலமாக தூர்வாரப்படாமல் இருந்தது, அந்த தூர் வாருகின்ற நிகழ்ச்சியும் மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில்தான் நடைபெற்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம், 1,949 விவசாயிகள் 2.70 இலட்சம் கனமீட்டர் அளவு வண்டல் மண்ணை எடுத்துச் சென்று பயனடைந்துள்ளனர். 19.07.2018 அன்று தண்ணீர் திறந்து விடுகின்றபொழுது, 109 அடி இருந்தது, அணையினுடைய நீரின் அளவு 71 டி.எம்.சி. இருந்தது. சென்ற ஆண்டு மேட்டூர் அணையிலிருந்து 210 டி.எம்.சி. தண்ணீர் பாசனத்திற்காக நாம் திறந்து விட்டோம். அதுமட்டுமல்லாமல், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு போதுமான விதை, நெல், உரம் ஆகியவையெல்லாம் இன்றைக்கு இருப்பு இருக்கின்றது. விவசாய பெருங்குடி மக்களுக்கு தேவையான அளவு உரிய நேரத்தில் வழங்கப்படும். காவேரி டெல்டா விவசாய பெருங்குடி மக்கள் மற்றும் மேட்டூர் கால்வாய் பாசன பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் நீரை பங்கீட்டு, நிலைமைக்கேற்ப தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி ஒத்துழைக்குமாறும், மிக அதிக மகசூல் பெற்று பயன்பெற வேண்டுமென்றும் விவசாயப்

பெருங்குடி மக்களை கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு வருண பகவானின் கருணையால் டெல்டா பாசன விவசாயிகளுக்குத் தேவையான நீர் வழங்கப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. இன்றைய தினம், மேட்டூரில் 101 அடி தண்ணீர் இருக்கிறது, 66 டி.எம்.சி. தண்ணீர் தற்போது இருப்பு இருக்கின்றது. தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இப்போது கருநாடகத்தில் கபினியிலிருந்தும் மற்ற அணைகளிலிருந்தும் தண்ணீர் திறக்கப்பட்டிருக்கின்றது, போதுமான தண்ணீர் திறக்கப்படும். ஏனென்றால், கருநாடகத்தில் 4 அணைகளுமே நிரம்பிவிட்டன. ஆகவே, இனி பெய்கின்ற மழைநீர் முழுவதும் கருநாடகத்திலிருந்து 4 அணைகளின் வழியாக மேட்டூர் அணைக்கு வந்து சேரும். இது உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்கள் என்ன எண்ணுகின்றார்களோ அதை நிறைவேற்றுகின்ற அரசு எங்களுடைய அரசு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு கடுமையான வறட்சி தமிழகத்தில் நிலவினாலும்கூட, டெல்டா பாசன விவசாயிகளுக்குத் தேவையான நீரை இறைவனுடைய அருளால் மேட்டூர் அணை நிரம்பி, இன்றைக்கு பாசன விவசாயிகளுக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது என்ற மகிழ்ச்சியான செய்தியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளுக்குத் தேவையான திட்டங்களை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஒரு சொட்டு நீர் கூட வீணாகாமல் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் திட்டத்தை நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். ஏரிகள், குளங்கள் முழுவதிலும் வண்டல் மண் அள்ளப்படுகின்றது. அதனை விவசாயிகள் தங்கள் நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுத்துகின்றார்கள்.

இந்தக் குடிமராமத்துத் திட்டத்தை பொறுத்தவரைக்கும் முழுக்க முழுக்க விவசாயிகள்தான் அந்தத் திட்டத்தை எடுத்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன் விளைவாக, இந்தத் திட்டம் ஒரு வெற்றிகரமாக அமையும் என்ற முறையிலே இந்தத்

திட்டத்தை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றோம். 2017–2018ஆம் ஆண்டு 1,519 ஏரிகளுக்கு பரீட்சார்த்த முறையில் ரூபாய் 100 கோடி ஒதுக்கி அந்தப் பணியை துவக்கினோம். விவசாயிகளிடத்திலே அதற்கு நல்ல வரவேற்பு கிடைத்ததன் விளைவாக, 2018–2019ஆம் ஆண்டு 1,511 ஏரிகள் எடுக்கப்பட்டு ரூபாய் 328 கோடி இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணி முடிவுறும் நிலையில் இருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கு வலு சேர்க்கும் விதமாக, விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் விதமாக சுமார் ரூ.500 கோடி மதிப்பீட்டில், சுமார் 1,829 ஏரிகள் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பொதுப்பணித் துறையின் கீழ் இருக்கின்ற 14,000 ஏரிகளும் படிப்படியாக தூர்வாரப்படும். ஆகவே, பொதுப்பணித் துறைக்கு சொந்தமான ஏரி, குளம், குட்டை போன்றவற்றை தூர்வாருவதற்கு ரூ.1,250 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணியும் இன்றைக்கு துவங்கப்பட்டு விட்டது. ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் இருக்கின்ற குளங்கள், ஏரிகள், குட்டைகள் அனைத்தும் தூர்வாரப்பட்டு, பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமித்து வைக்கக்கூடிய சூழ்நிலையை இந்த அரசு திட்டமிட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், பருவகாலங்களில் பெய்கின்ற மழைநீர் ஒரு சொட்டு கூட வீணாகக்கூடாது என்பதற்காக ஓடையின் குறுக்கே, நதிகளின் குறுக்கே தடுப்பணை கட்டப்படுகின்றது, இதற்காக அம்மாவினுடைய அரசால் ரூபாய் 1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூபாய் 600 கோடி செலவழிக்க திட்டம் தீட்டப்பட்டு செயலாக்கத்திற்கு வந்திருக்கின்றன. மேட்டூர் அணையிலிருந்து கொள்ளிடம் வரை கிட்டத்தட்ட 5 தடுப்பணைகள் கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது. 2 தடுப்பணைகள் கட்டுவதற்கு அனுமதி கொடுத்துவிட்டோம். மேலும் 3 தடுப்பணைகள் கட்டுவதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளது. அதற்குண்டான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது.

அதுமட்டுமல்ல, கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டத்தை அம்மாவினுடைய அரசு நிறைவேற்றியே தீரும். அதை நிறைவேற்றுகின்ற பொழுது, நமக்கு தேவையான நீர் கிடைக்கும். 125 டி.எம்.சி. தண்ணீர் கிடைப்பதாக மத்திய அரசு தெரிவித்திருக்கிறார்கள். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி துவங்கிவிட்டது என்ற செய்தியையும் தெரிவித்திருக்கிறார்கள். கோதாவரி காவேரி இணைப்புத் திட்டம் கரூரில் இணைக்கப்படும். அதற்கு மேல் உள்ள பகுதிகள் அனைத்தும் நீரேற்று மூலமாக இரண்டு பகுதியில் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான நீரை கொடுப்பதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன். இப்பொழுதுகூட, மேட்டூர், ஓமலூர், சங்ககிரி, சேலம் ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட 100 ஏரிகளுக்கு ரூபாய் 565 கோடி செலவில் இன்றைக்கு மேட்டூர் உபரிநீரை தேக்கி வைக்க இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் திரு.கருப்பணன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் அந்தியூர் ராஜா அடிக்கடி கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். என்னுடைய பகுதி வறட்சியான

பகுதி, ஆகவே, Lift irrigation மூலமாக, பருவமழை காலங்களில் மேட்டூரிலிருந்து வெளியேறுகின்ற உபரிநீரை எங்கள் பகுதிக்கும் திருப்பிவிட வேண்டும், எங்கள் பகுதியில் இருக்கின்ற ஏரிகளிலும் நிரப்ப வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அரசு அதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டம் வருகின்றபொழுது, அந்தப் பகுதி மக்களுக்கும், ஈரோடு மாவட்டத்திலிருக்கின்ற பாசனம் பெறாத அந்த ஏரிகளுக்கும் மேட்டூர் உபரிநீரை கொண்டு சென்று நிரப்பப்படும் என்ற செய்தியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற கெங்கவள்ளி, ஆத்தூர், ஏற்காடு சட்டமன்ற தொகுதியில் இருக்கின்ற மக்களுக்கும் Lift irrigation மூலமாக தண்ணீர் ஏற்றப்பட்டு அங்கு இருக்கின்ற ஏரிகள், குளங்கள் நிரப்பப்படும். அதேபோல, மேட்டூர் அணையிலிருந்து கரூர் வரையிலுள்ள இரண்டு பகுதியிலும் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறுகின்ற விதமாக அங்கே இருக்கின்ற ஏரிகள், குளங்கள் முழுவதும் நிரப்புகின்ற விதமாக உபரிநீரை Lift irrigation மூலமாக நிரப்பப்படும் என்ற செய்தியையும், இதற்காக 25 கோடி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, ஒரு சொட்டு நீர் கூட வீணாகக்கூடாது என்ற அடிப்படையில் எங்களுடைய அரசால் திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன். இதற்காக 2 ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர்கள், 3 ஓய்வு பெற்ற கண்காணிப்பு பொறியாளர்களை நியமித்து, பருவமழை காலங்களில் எங்கெங்கெல்லாம் மழைநீர் வீணாக கடலில் கலக்கின்றதோ அதையெல்லாம் கணக்கிட்டு, அந்த தண்ணீரை எப்படி பயன்படுத்துவது என்று திட்டம் தீட்டி எங்களுக்கு அறிக்கையாக தர இருக்கின்றார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில், அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு விவசாயிகளுக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்றுகின்ற ஒரே அரசு

எங்களுடைய அரசு என்பதை வெளிப்படையாக சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நீர் ஆதாரத்தை பெருக்க வேண்டும், விவசாயிகள் இருக்கின்ற நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக சொட்டுநீர் பாசனத் திட்டத்தை நாங்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். சொட்டுநீர் பாசனத்திற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்த அரசு எங்களுடைய அரசு. ஒரு ஏக்கர் முதல் 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருந்தால் 100 சதவீதம் மானியமும், அதற்கு மேல் எத்தனை ஏக்கர் நிலம் வைத்திருந்தாலும், 75 சதவீதம் மானியத்தில் சொட்டுநீர் பாசனக் கருவிகளை விவசாயிகளுக்குத் தருகிறோம். எனவே, நிலத்தடி நீர் குறைவாக இருந்தால்கூட, சொட்டுநீர் பாசனத்தின் மூலமாக வேளாண் பணிகளை மேற்கொள்கின்றபொழுது, விவசாயிகள் குறைந்த தண்ணீரில் அதிக விளைச்சலை பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றோம். வேளாண் பெருமக்களுக்குத் தேவையான டிராக்டர், வேளாண் கருவிகள், விதைகள், உரம் மானிய விலையில் கொடுக்கின்றோம். வட்டியில்லாத பயிர்க்கடன் கொடுக்கிறோம். இவ்வாறு அனைத்தையும் முழுமையாக கொடுக்கின்ற ஒரே அரசு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் அரசு என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றிற்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக சேலம் மாவட்டத்தில் ஓமலூரிலிருந்து தாரமங்கலம் செல்கின்ற வழியில் மிகப் பெரிய மார்க்கெட் ஏற்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களை இங்கு ஆன்–லைனில் விற்கலாம். விலை கட்டுப்படியாகாத சமயங்களில் அங்கேயுள்ள குளிர்பதனக் கிடங்குகளில் வைத்து பாதுகாத்துக் கொள்ளலாம், அதற்கு ஒரு மாதத்திற்கு வாடகை ஏதும் கிடையாது. அங்கே விவசாயிகள், வியாபாரிகள் குளிப்பதற்கு, தங்குவதற்குத் தேவையான வசதிகளை செய்ய இருக்கிறோம். அதேபோல, அவ்விடத்திலேயே பணம் கிடைப்பதற்கு

ATM வசதியும் செய்ய இருக்கின்றோம். இவையெல்லாம் விவசாயிகளின் நலனுக்காக எங்களுடைய அரசால் செய்யப்படுகின்றது. இங்கு மட்டுமல்லாமல், பரீட்சார்த்த முறையில் தமிழ்நாடு முழுவதும் 10 மாவட்டங்களில் விவசாயிகளின் நலன் கருதி, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்பதற்காக ஆங்காங்கே இந்தத் திட்டத்தை செயலாக்கத்தில் எடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னைக்கு அருகில் ரூபாய் 2,000 கோடியில் மிகப்பெரிய உணவுப் பூங்கா அமைக்கவிருக்கின்றோம். இதன் மூலம், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்களுக்கு ஆன்–லைன் மூலம் விற்பனை செய்து நல்ல விலை கிடைப்பதற்கு அம்மாவின் அரசால் திட்டம் தீட்டப்பட்டு இன்றைக்கு செயலாக்கத்திற்கு கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயிகளின் உபதொழிலாக இருக்கின்ற கால்நடை வளர்ப்பு சிறந்த முறையில் இருக்க வேண்டுமென்பதற்காக இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசு கால்நடைத் துறை அமைச்சரை வெளிநாட்டிற்கு அனுப்பி அங்குள்ள புதிய தொழில்நுட்பங்களை கண்டறிந்து, அதன் விளைவாக இன்றைக்கு சேலம் மாவட்டம், தலைவாசலில் சுமார் ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில், 1,200 ஏக்கர் நிலப்பரப்பில் ஆசியாவிலேயே மிகப்பெரிய கால்நடைப் பூங்கா ஒன்றை உருவாக்க இருக்கின்றோம். இதில், கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை ஆராய்ச்சி நிலையம் கட்டப்படவிருக்கின்றது. அங்கே கலப்பினப் பசுக்கள், ஆடுகள், கோழிகள், மீன்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய வசதிகளை உருவாக்க விருக்கின்றது. நோய்த் தாக்குதலை தாங்கி, அதிகளவில் பால் கொடுக்கும் கலப்பினப் பசுக்களை உருவாக்கவுள்ளோம் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

ரூபாய் 50 கோடியில் ஊட்டியில் விந்தணுக்களை பிரித்து விவசாயிகளுக்குத் தேவையான கன்றுகளை ஈன்று வழங்கக்கூடிய தொழில்நுட்பத்துடன் கூடிய திட்டத்தை அம்மாவின் அரசு உருவாக்கி விவசாயிகளின் நீண்டகாலக் கனவையும் நிறைவேற்றியிருக்கின்றோம்.

இந்த அரசினை விவசாயப் பெருங்குடி மக்களின் அரசு என்று சொன்னால் அது மிகையாகாது. விவசாயிகளுக்குத் தேவையான அனைத்தையும் பார்த்துப் பார்த்து செய்கின்ற அரசு அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு கால்வாய்களை எல்லாம் சீரமைக்க வேண்டுமென்று விவசாயிகள், நான்கு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கையினை ஏற்று, மேட்டூர் கிழக்கு கரை, மேற்கு கரை கால்வாய்கள் முழுவதையும், மேட்டூர் அணையிலிருந்து அது முடிகின்ற எல்லை வரை கான்கிரீட் கால்வாயாக அமைக்கும் திட்டம் ரூபாய் 600 கோடியில் அம்மாவின் அரசு உருவாக்கிக் கொடுத்திருக்கின்றது. மேட்டூர் அணையிலிருந்து திறக்கப்படும் நீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் பாசனத்திற்குப் பயன்படும் வகையில் இந்தத் திட்டத்தை அம்மாவின் அரசு செய்து கொண்டிருக்கின்றது. இங்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலும் இது போன்று கான்கிரீட் கால்வாய்கள் உருவாக்கப்படும். டெல்டா பாசன கால்வாய்களையும் சீர் செய்வதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி கேட்டுள்ளோம், அந்த அனுமதி கிடைத்தவுடன் டெல்டா பாசன கால்வாய்கள் அனைத்தும் கான்கிரீட் கால்வாய்களாக மாற்றி அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 20 சதவிகிதம் தண்ணீர் வீணாகாமல் மிச்சப்படுவதோடு ஆண்டுதோறும் தூர்வாரும் நிலையும் மாறும்.

பொள்ளாச்சி பகுதியில் பரீட்சார்த்த முறையில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் சொட்டு நீர் பாசனம் மூலமாக சுமார் 7,500 ஏக்கர் நிலத்தை எடுத்து, அதற்குத் தேவையான கருவிகளை அரசாங்கமே

கொடுத்து, அந்தத் திட்டத்தை உருவாக்க இருக்கின்றது. ஒரு ஏக்கருக்கு பயன்படும் நீர் சொட்டு நீர்ப் பாசனம் மூலம் பாய்ச்சுகின்ற பொழுது கிட்டத்தட்ட 7 ஏக்கர் நிலத்திற்கு பயன்படுகின்றது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அம்மாவின் அரசு திட்டமிட்டிருக்கின்றது. இவைகளெல்லாம், குறுகிய காலத்தில், நான் முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து உங்களுக்காக செய்யப்பட்ட நல்ல திட்டங்கள் என்பதை தெரிவித்து மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படுகின்ற எங்கள் அரசு, அம்மா செயல்படுத்திய திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் விவசாயிகளிடம் கொண்டு சேர்த்திருக்கின்றோம். பண்ணைத் திட்டத்தையும் செயல்படுத்தியிருக்கின்றோம்.

இவ்வாறு, விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை வாரி, வாரி அம்மாவின் அரசு வழங்கிக்கொண்டிருக்கின்றது என்பதை தெரிவித்து, இன்றைய தினம் 101 அடியை எட்டி, 66 டி.எம்.சி. தண்ணீரோடு இருக்கின்ற மேட்டூர் அணையிலிருந்து, டெல்டா பாசன விவசாயிகளின் மனம் குளிர இன்றைக்கு தண்ணீர் திறந்து விட்டிருக்கின்றோம் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்து, மிகச் சிறப்பாக, குறுகிய காலத்தில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த இந்தத் துறையின் செயலாளர் அவர்களுக்கும், தலைமைப்பொறியாளர் அவர்களுக்கும், முதன்மைப் பொறியாளர்களுக்கும், கண்காணிப்புப் பொறியாளர்களுக்கும் மற்றும் அரசு அலுவலர்களுக்கும், வருகை தந்த அத்தனை பேருக்கும் நன்றியை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி ! வணக்கம் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
13.08.2019 அன்று சேலம், மேட்டூர் அணையிலிருந்து
தண்ணீர் திறந்து வைத்து ஆற்றிய விழாப் பேருரை.

மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரில் 3 சிறப்பு கலைமாமணி விருதுகள் வழங்கப்படும்!

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

இயல், இசை, நாடகம் போன்ற பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்களை சிறப்பிக்க தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் கலைமாமணி விருது வழங்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அனைவருக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

“எங்கள் திராவிட பொன்னாடே
கலை வாழும் தென்னாடே

இயல் இசை நாடகம் அறம் பொருள் இன்பம்
இயங்கும் செந்தமிழ் நாடே"

என்றார் கவியரசு கண்ணதாசன் அவர்கள்.

அவரது பாடல் வரிகளுக்கு ஏற்ப பண்டைய தமிழ்நாட்டை ஆண்ட சேர, சோழ, பாண்டியர்கள் மற்றும் பல அரசர்கள் தமிழ் மொழியையும், கலைகளையும், இலக்கியத்தையும், பண்பாட்டினையும் வளர்க்க அரும் பாடுபட்டார்கள். மதுரையில் முத்தமிழ் சங்கத்தை நிறுவி பல தமிழ் நூல்கள் வெளிவருவதற்கு வழிவகுத்தனர். இதன் மூலம் பல்வேறு சங்கத்தமிழ் நூல்கள் எழுதப் பெற்றும், தொகுக்கப் பெற்றும் தமிழ் மொழிக்கு பெருமை சேர்க்கப்பட்டன. நாடகத் தமிழ் நன்கு வளர்க்கப்பட்டு, மக்களுக்கு பொழுதுபோக்கு, தேசப்பற்று, சமுதாய நெறிகளை விளக்கும் பல்வேறு நாடகங்கள் நடத்தப்பட்டன. இதுவன்றி, இசைக் கலைகள், கிராமியக் கலைகள், நாட்டியக் கலைகள் என பல கலைகளின் பிறப்பிடமாக தமிழ்நாடு திகழ்கின்றது.

இயல், இசை, நாடகத் துறைக்கு தன்னையே அர்ப்பணித்து தொண்டாற்றும் கலைஞர்களை ஆதரித்து அவர்களின் நல்வாழ்விற்காக அக்கால தமிழ் மன்னர்கள் பெரும் பொருளுதவி செய்தார்கள். எடுத்துக்காட்டாக வள்ளல் அதியமான் என்ற மன்னர், தமிழ் மொழி நீண்ட காலம் தழைத்து வாழ வேண்டும் என்ற நோக்கில் தனக்கு கிடைத்த அரிய நெல்லிக்கனியை ஔவையாருக்கு அளித்து மகிழ்ந்தார்.

தமிழ்நாட்டை ஆண்ட முதலமைச்சர்களில், மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும் கலைஞர்களின் நலன் காத்தவர்கள் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. பொதுமக்களை மகிழ்விக்கும் கலைஞர்கள் எப்போதும் தங்கள் வாழ்வில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்திட வேண்டும் என்ற நோக்கத்தில், நமது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் மற்றும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆட்சிக் காலங்களில் பல்வேறு நலத் திட்டங்களையும், விருதுகளையும் அறிவித்து, அவர்களை ஊக்கப்படுத்தி வந்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

கலையும், பண்பாடும் ஒன்றோடு ஒன்றாக பிணைந்தவை. தமிழ்நாட்டின் மரபுக் கலைகளின் வழியாக பண்பாட்டினை பாதுகாத்திட வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகவும், இசைக்கலை, நாடகக்கலை, நாட்டியக் கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை ஆகியவைகளை இளைய தலைமுறையினருக்கு இசை மற்றும் கவின்கலைக் கல்வி பயிலகங்கள் வாயிலாக கொண்டு செல்லவும், இக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் வளர்ச்சிக்காக பல்வேறு கலைத் திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தவும் ‘கலை பண்பாட்டுத் துறை’ என்ற ஒரு தனித்துறை டிசம்பர் மாதம் **1991**ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இத்துறையின் கீழ் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகிய முத்தமிழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் என்ற அமைப்பு நமது மாநிலத்தில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு போதுமான நிதியுதவி வழங்கி,

❖ தொன்மையான கலைகளை வளர்த்தல்,

❖ அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல்,

❖ அழிந்து வரும் கலை வடிவங்களை ஆவணமாக்கி அவற்றை மீட்டெடுத்தல்,

❖ நாடகம், நாட்டிய நாடகங்களுக்கு புத்துயிர் அளித்தல்,

❖ தமிழக பாரம்பரிய கலைகளை வெளி மாநிலங்களிலும், உலகளவிலும் எடுத்துச் செல்லுதல்

போன்ற பணிகளை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மூலம் மேற்கொண்டு வருகின்றது.

கலைகளையும், கலைஞர்களையும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் செயல்படுத்தப்படும் முக்கிய திட்டங்களை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

• நலிந்த நிலையில் வாழும் 500 கலைஞர்களுக்கு மாதந்தோறும் 2,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. 14,063 கலைஞர்களுக்கு இத்திட்டத்தின் கீழ், மாதாந்திர நிதியுதவி வழங்கப்பட்டுவருகிறது.

• மாநிலங்களிடையே கலைக் குழுக்களைப் பரிமாற்றம் செய்யும் திட்டத்தின் கீழ், இதுவரையில் 63 தமிழகக் கலைக்குழுக்கள் வெளிமாநிலத்திற்குச் சென்று நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளனர்.

• பல்வேறு கலை நிறுவனங்களின் மூலம் கலை நிகழ்ச்சிகளை நடத்த வாய்ப்பளித்து அதன்மூலம் திறமைமிக்க

இளம் கலைஞர்களுக்கு ஆதரவும் ஊக்கமும் அளிக்கும் திட்டத்தில் இதுவரையில் 1,972 இளம்கலைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

- தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் பண்பாட்டினை சித்தரித்துத் தயாரிக்கப்படும் சிறந்த தமிழ் நாடகங்கள், நாட்டிய–நாடகக் குழுக்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தில் 47 நாடகங்களுக்கும், 35 நாட்டிய–நாடகக் குழுக்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- அரும்பெரும் கலை நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், 109 நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

- இயல், இசை, நாடக கலைஞர்கள் பயன்பெறும் நோக்கில் கலைவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், கலைத் துறையின் மேம்பட்ட வளர்ச்சிக்காக சேவை செய்த கலைஞர்களுக்கும், மாநில அளவில் கலைக்கு தன்னலமற்ற சேவையாற்றி கலைத் தாயின் மகுடத்தின் ஒரு மணியாக திகழ்ந்த கலைஞர்களின் சேவைகளுக்கும் அங்கீகாரம் அளிக்கும் வகையில் ‘கலைமாமணி’ என்ற உயரிய விருதினை இந்த மாமன்றம் ஆண்டுதோறும் வழங்கி வருகிறது.

தற்போது இயல், இசை, நாட்டியம், நாடகம், திரைப்படம், கிராமியக் கலை, ஓவியம், சிற்பம், விகடம் ஆகிய கலைப் பிரிவுகளையும், அவற்றின் உட்பிரிவுகளையும் சார்ந்த கலைஞர்களுக்கு கலைமாமணி விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த கலைப்பிரிவுகளைச் சாராத பண்பாட்டுக் கலை பரப்புநர், ஒப்பனைக் கலைஞர், இசைக் கருவி தயாரிப்புக் கலைஞர் போன்ற கலைப் பிரிவுகளுக்கும் “கலைமாமணி” விருது வழங்கப்பட்டு வருகிறது. இதுவரையிலும் 1,594 கலைஞர்களுக்கு கலைமாமணி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், இன்று நடைபெறும் இந்த சீர்மிகு விழாவில் இயல், இசை, நாடகம், நாட்டியம், திரைப்படம், சின்னத்திரை, கிராமியக் கலை மற்றும் இதர கலைத் துறைகளில் சிறந்து விளங்கும் 201 கலைஞர்களுக்கு கலைமாமணி விருது வழங்கியதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதில் 72 வகையிலான கலைப் பிரிவுகளில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மேலும், 8 மூத்த கலைஞர்களுக்கு அவர்களின் குடும்ப நிலையை கருத்தில் கொண்டு, தலா 25 ஆயிரம் ரூபாய் பொற்கிழி, கலை வளர்ச்சிக்கு பாடுபட்ட மூன்று தன்னார்வ நிறுவனங்களுக்கு கேடயம், சிறந்த முறையில் செயல்பட்டு வரும் ஒரு நாடகக் குழுவிற்கு சுழற்கேடயம், புகழ் பெற்ற இயல், இசை, நாட்டியக் கலைஞர்களுக்கு முறையே பாரதி, எம்.எஸ்.சுப்புலட்சுமி மற்றும் பாலசரஸ்வதி ஆகியோர் பெயரில் ஒன்பது கலைஞர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ரொக்க பரிசும், பட்டயமும், இந்த விழாவில் வழங்கப்படவுள்ளன.

முதிய கலைஞர்களுக்கு அவர்கள் செய்த சேவைக்காகவும், வளர்ந்து வரும் இளைய இளைஞர்கள், ஊக்கமுடன் பணியாற்ற வேண்டும் என்பதற்காகவும் இங்கே விருதுகள் வழங்கப்படவுள்ளன.

நம் நாட்டு விடுதலைக்காக நடைபெற்ற போராட்டங்களும், நமது மொழி காக்க நடைபெற்ற போராட்டங்களும் வெற்றியடைந்ததில் கலைஞர்களின் பங்களிப்பு மிகவும் மகத்தானது. நாட்டு மக்களிடையே மொழி உணர்வு, சுதந்திர உணர்வு ஏற்படுவதற்கு பல்வேறு இசைக் கருவிகளுடன் கலைஞர்கள் வீதிதோறும் பாடிய பாடல்களும், நாடக மேடைகளில் பேசிய வசனங்களும் அடிப்படையாக அமைந்தன.

கலைஞர்கள், நாம் நாட்டுக்காக வாழ்கிறோம் என்பதையும், நமது கலை, நாட்டு மக்களுக்காக, மக்களை மகிழ்விப்பதற்காகத் தான் என்பதையும் உணர்ந்து, கலைக்கு உயரிய சேவையையும் பங்களிப்பையும் அளிக்க வேண்டும். கற்றது கைமண் அளவு,

கல்லாதது உலகளவு என்ற ஆன்றோர் மொழிக்கேற்ப, கலைத் துறையில் உலகளவில் ஏற்படும் மாற்றங்களை அறிந்து கலைஞர்கள், தான் கற்ற கலையின் ஆரம்ப நிலையிலேயே நிற்காமல், மாற்றங்களை ஏற்றுக் கொண்டு தங்கள் திறமைகளை அடிக்கடி புதுப்பித்துக் கொண்டே, தான் பயின்ற கலையில் நிபுணத்துவம் பெற வேண்டும். அவ்வாறு பெற்ற நிபுணத்துவத்தை தங்கள் கலைகளில் முறையாகக் கையாண்டு தாங்கள் சார்ந்த கலைக்கு மெருகேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைக் கூறும்போது, எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு முனிவர் மரத்தடியில் அமர்ந்து தனது கிழிந்த வேட்டியை தைத்துக் கொண்டிருந்தார். அப்போது சிவபெருமானும், பார்வதி தேவியும் அவ்வழியே சென்று கொண்டிருந்தனர்.

மரத்தடியில் இருந்த முனிவரைப் பார்த்ததும், அவருக்கு ஏதேனும் வரம் கொடுத்து விட்டுப் போகலாம் என சிவபெருமானிடம் பார்வதி தேவி கூற, "வரம் கேட்கும் நிலையெல்லாம் கடந்தவர் அந்த முனிவர், எனவே, நாம் போகலாம்" என்றார் சிவபெருமான். ஆனால், விடாமல் பார்வதிதேவி வற்புறுத்தியதால், இருவரும் அந்த முனிவரிடம் சென்று, வணக்கம் தெரிவித்தனர். அவர்களைப் பார்த்த முனிவர், "அடடே, எம்பெருமானும், பெருமாட்டியுமா, வரணும்" என்று வரவேற்று உபசரித்தார். உபசரித்து விட்டு தன் வேலையைத் தொடர்ந்தார். இதைப் பார்த்த சிவபெருமானும், பார்வதிதேவியும், "சரி நாங்கள் விடை பெறுகிறோம்" என்றனர். அதற்கு முனிவர், "மகிழ்ச்சியாய் போய் வாருங்கள், வணக்கம்" என்று சொல்லி, தனது வேலையில் மூழ்கினார்.

இதைப் பார்த்த சிவபெருமான், "முனிவரே, நாங்கள் ஒருவருக்கு காட்சி கொடுத்து விட்டால், வரம் கொடுக்காமல் போவதில்லை, எனவே, ஏதாவது வரம் கேளுங்கள், கொடுக்கிறோம்" என்று கூறினார். அதற்கு முனிவர், "தங்கள் தரிசனமே எனக்குப் போதும், வரம் எதுவும் வேண்டாம்" எனக் கூறி தனது பணியைத்

தொடர்ந்தார். வரம் கொடுக்காமல் செல்ல மாட்டோம் என்று சிவபெருமானும், பார்வதிதேவியும் பிடிவாதம் பிடிக்கவே, முனிவர், "நான் தைக்கும்போது இந்த ஊசிக்குப் பின்னாலேயே நூல் போக வேண்டும், அது போதும்" என்றார். "ஏற்கெனவே, அது தானே நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு நாங்கள் ஏன் வரம் தர வேண்டும்" என பார்வதிதேவி கேட்டார்.

அதற்கு முனிவர், "அதைத் தான் நானும் கேட்கிறேன், நான் ஒழுங்கு தவறாமல் நடந்து வந்தால், வர வேண்டிய பலன் தானாகப் பின்னால் வரும், இடையில் நீங்கள் எதற்கு எனக்கு வரம் தர வேண்டும்" எனக் கேட்டார். முனிவரின் விளக்கத்தைக் கேட்ட சிவபெருமானும், பார்வதிதேவியும் சிரித்து விட்டு மகிழ்ச்சியாய் சென்றனர்.

இந்தக் கதையில் வரும் முனிவரைப் போல, கலைஞர்களாகிய நீங்களும், உங்கள் துறைகளில் முழு மனதுடன் ஈடுபட்டதால் தான், உங்களுக்குரிய அங்கீகாரமான இந்த கலைமாமணி விருது உங்களைத் தேடி வந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

'கலைமாமணி பட்டம்' பெற்ற கலைஞர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் அனைவரும் உங்கள் திறமைகளை மென்மேலும் வளர்த்துக்கொண்டு நீங்கள் ஏற்றுக்கொண்ட கலைக்கு சிறந்த தொண்டாற்ற வேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே, இங்கே இருக்கின்ற கலைஞர் பெருமக்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். இங்கே கலைமாமணி விருது வழங்குகின்றபொழுது இந்தக் கோரிக்கைகளை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்பு வேண்டுகோள் விடுத்தார்கள். அந்தக் கலைஞர் பெருமக்களின் வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசால் கீழ்க்கண்ட அறிவிப்புகளை வெளியிட விரும்புகின்றேன்.

கலைமாமணி விருது 3 சவரனுக்கு பதிலாக இனி 5 சவரன், அதாவது 40 கிராம் எடையுள்ள பொற்பதக்கங்களாக வழங்கப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் பெயரில் 3 சிறப்பு கலைமாமணி விருதுகள், சிறப்பு விருதுகளாக இனி வழங்கப்படும். இவையும் தலா 5 சவரன் எடையுள்ள பொற் பதக்கங்களாக வழங்கப்படும்.

நலிந்த மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை ரூபாய் 2 ஆயிரத்திலிருந்து மாதந்தோறும் ரூபாய் 3 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழாவினை நல்ல முறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!
வளர்க மாண்புமிகு புரட்சித்தலைவரின் புகழ்!
ஓங்குக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் புகழ்!
தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு!

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் 13.08.2019 அன்று
நடைபெற்ற கலைமாமணி விருதுகள் வழங்கும்
விழாவில் ஆற்றிய உரை.

இந்தியாவிலேயே, தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக உயர்த்திட பாடுபடுவோம்!

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்
திரு. ப.தனபால் அவர்களே!

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற
தலைமை நீதியரசர் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர்களே!
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே!

புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்பு
பிரதிநிதி அவர்களே!

மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர்களே!
மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே!
முன்னாள் அமைச்சர்களே!

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர்
திரு. கே.சண்முகம் அவர்களே!

தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகளே!

காவல்துறை தலைமை இயக்குநர்
திரு. ஜே.கே.திரிபாதி அவர்களே!

காவல்துறை உயர் அதிகாரிகளே!

தரைப் படை, விமானப் படை, கடற் படை, கடலோர பாதுகாப்பு மற்றும் மத்திய பாதுகாப்புப் படை உயர் அதிகாரிகளே!

தாய் நாட்டிற்காகத் தன்னுயிரைத் தர சித்தமாயிருந்த போற்றுதலுக்கும், மரியாதைக்கும் உரிய சுதந்திரப் போராட்ட தியாகிகளே! வாரியத் தலைவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

வணக்கத்திற்குரிய பெரியோர்களே! தாய்மார்களே!

இளைஞர்களே! மாணவச் செல்வங்களே!

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தினையும், 73ஆவது இனிய சுதந்திர தின நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தியாகத்திற்கும் அமைதிக்கும் அடையாளமாகத் திகழும் புனிதமான தேசியக் கொடியை மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடனும், தமிழ்நாட்டு மக்களின் ஆதரவுடனும், மூன்றாவது முறையாக கோட்டைக் கொத்தளத்தில் ஏற்றியதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

நம் நாடு விடுதலை அடைவதற்கு முன்பே, தேசிய கவி பாரதியார் அவர்கள், சுதந்திர வேட்கையுடனும், தீர்க்க தரிசனத்துடனும்,

'ஆடுவோமே – பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்'

என்று பாடினார்.

"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு – நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு"

என்ற பாடலின் மூலம் சுதந்திரம் என்பது சமத்துவத்திற்குக் கிடைத்த வெற்றி என்று முழங்கினார் மகாகவி பாரதியார்.

நாம் அனைவரும் எந்தவித பேதமும் இன்றி கொண்டாட வேண்டிய உணர்வுபூர்வமான திருவிழாதான் சுதந்திர தின விழா.

அண்ணல் காந்தியடிகள் சுதந்திர போராட்டத்திற்குத் தலைமை ஏற்று, அயலாரை அறவழியில் எதிர்த்துப் போராடி, நம் நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தார்.

ஆங்கிலேயர்களை நம் மண்ணில் இருந்து அகற்றி, அடிமைத்தனத்தை தகர்த்தெறிய நடைபெற்ற போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு மகத்தானதாகும். அந்நியர்களிடம் இருந்து நம் தாய் மண்ணைக் காக்க இன்னுயிர் நீத்த பெருமக்கள் எண்ணில் அடங்காதோர். அவர்களின் மகத்தான தியாகத்தைப் போற்றும் அதேவேளையில் அவர்களில் ஒரு சில வீரர்களை இங்கே குறிப்பிட்டு நன்றி நவில வேண்டியது நமது கடமை என்று கருதுகிறேன்.

வீரன் பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், வீரமங்கை வேலு நாச்சியார், மருது சகோதரர்கள், மாவீரன் தீரன் சின்னமலை, பகதூர் வெள்ளையத் தேவன், வீரன் அழகு முத்துக்கோன், செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார், கொடி காத்த திருப்பூர் குமரன், வீரத்தாய் குயிலி, விருப்பாட்சி கோபால நாயக்கர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், தியாகி சீனிவாச ராவ், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், தியாகி விஸ்வநாததாஸ், கண்ணியத்திற்குரிய காயிதெ மில்லத், கந்தவராயன், சந்தவராயன், மயூரம் நாகப்ப படையாட்சி, சர்தார் ஆதிகேசவலு நாயக்கர், ரிபல் முத்துராமலிங்க சேதுபதி, வ.வே.சு. அய்யர், ஜெய்ஹிந்த் செண்பகராமன், வீரர் சுந்தரலிங்கம், வீர முரசு சுப்பிரமணிய சிவா, தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி, தீரர் சத்தியமூர்த்தி, பெருந்தலைவர் காமராஜர், தில்லையாடி வள்ளியம்மை போன்ற எண்ணற்ற தலைவர்களும், கவிஞர்களும், கலைஞர்களும் இந்திய விடுதலைக்காக எண்ணிலடங்கா தியாகங்களை செய்ததுடன், சுதந்திர உணர்வையும் பரப்பினர்.

இவர்கள் இன்னமும் தியாகச் சுடர்களாக இந்தியாவிற்கு வெளிச்சம் தந்து கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் தியாகங்களைப் போற்றிடும் வகையிலும், எதிர்கால தலைமுறையினர் இவர்களது அர்ப்பணிப்பை நினைவு கூர்ந்து போற்றும் வகையிலும், தமிழ்நாடு அரசு இவர்களுக்கு **35** மணிமண்டபங்களையும், முக்கிய இடங்களில் திருஉருவச் சிலைகளையும் நிறுவியுள்ளதுடன், அரசு சார்பில் விழாக்களும் நடத்தி சிறப்பித்து வருகிறது.

“சுதந்திரம் பெற்றோம். அதைக் காத்திடும் வல்லமையும் பெற்றோம் என்று கூறிக் களித்திடுவதுடன் நில்லாது சுதந்திரம் பெற்றோம், சுக வாழ்வு பெற்றோம் என்று கூறிப் பெருமிதம் கொண்டாடிடத்தக்க லட்சியத்தை நோக்கி நடந்திட வேண்டும். உறுதியுடன், உற்சாகத்துடன், நம்பிக்கையுடன்” என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

அவரது இலட்சியத்தை அடைந்திடும் வண்ணம், “அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம்” என்ற முப்பெரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்தியவர்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அந்த தத்துவத்தை, “அமைதி, வளம், வளர்ச்சி” என்று மேலும் மெருகேற்றியவர் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள். நமது மாபெரும் தலைவர்களின் தாரக மந்திரத்தை அடித்தளமாகக் கொண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு, இரும்புக் கோட்டையாக எழும்பி கம்பீரமாக நிற்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை மட்டுமே செயல்படுத்தி வருகிறது. அவற்றில் சிலவற்றை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

- கடந்த நவம்பர் மாதம் கஜா புயலின் காரணமாக டெல்டா மாவட்டங்களில் பெருமளவு பொருட்சேதம் ஏற்பட்டது. ஆனால்,

தமிழ்நாடு அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையினால், மனித உயிர்கள் பெருமளவு காப்பாற்றப்பட்டன. புயலுக்குப் பின் அரசு இயந்திரம் முழு வீச்சில் செயல்பட்டதன் காரணமாக, வெகு விரைவில் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வர முடிந்தது. மறுவாழ்வுப் பணிகள் அப்பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. மேலும், அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பெட்டகம் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் முதன்முறையாக வழங்கப்பட்டது. இப்பணிகளில் இரவு பகல் பாராது பாடுபட்ட மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அதிகாரிகளுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும் மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் இந்த நேரத்தில் மீண்டும் ஒருமுறை நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

- சென்னை நகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தவர் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

- மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையால், தற்போது மீஞ்சூரிலும், நெம்மேலியிலும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

- மேலும், நெம்மேலியில் 1,259 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், கடல்நீரை குடிநீராக்கும் மற்றொரு சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நான் அடிக்கல் நாட்டி, பணிகள் நடைபெற்று வருகின்றன.

- அதேபோன்று, பேரூரில் 6 ஆயிரத்து 78 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

- நாடு செழிக்க நன்னீர் அவசியம். மழை நீரை சேமிக்க வேண்டும். நீர் ஆதாரங்களைக் காக்க வேண்டும். இதன்மூலம், மனிதனின் அடிப்படைத் தேவையான குடிநீரை உறுதி செய்ய வேண்டும். இன்று மாநிலம் எதிர் கொண்டிருக்கும் முக்கிய சவால் இதுதான். இப்படிப்பட்ட சவாலை எதிர்கொள்ள, 2003ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு அம்மா அவர்கள் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தைத் தொடங்கி, அதனைத் தீவிர இயக்கமாக செயல்படுத்தியதன் விளைவாக, நிலத்தடி நீரின் அளவு உயர்ந்தது. இந்தத் திட்டத்தினை முழுவீச்சுடன் செயல்படுத்திட மாண்புமிகு அம்மாவின் அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கு மக்கள் தங்கள் முழு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

- கழிவுநீரை மறு சுழற்சி மூலமாக தொழிற்சாலைகளுக்கு வழங்கும் முறை 1993ஆம் ஆண்டே மாண்புமிகு அம்மா அவர்களால் செயல்படுத்தப்பட்டு, தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. அதேபோன்ற சுத்திகரிப்பு நிலையங்கள் கோயம்பேட்டிலும், கொடுங்கையூரிலும் நிறுவப்பட்டு, விரைவில் பயன்பாட்டிற்கு வர உள்ளன.

- பயன்படுத்தப்பட்ட நீரினை சுத்திகரித்து மறுசுழற்சி செய்வதற்கு, மாண்புமிகு அம்மாவின் அரசு ஒரு கொள்கையை அறிவிக்க உள்ளது. இக்கொள்கையின்படி, மக்கள் பயன்படுத்திய நீரை சுத்திகரிப்பு செய்து, தொழிற்சாலைகளுக்கும், பிற பயன்பாட்டிற்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும். மேலும், புதிய தொழிற்சாலைகள் அல்லது அடுக்குமாடிகள் கட்டுகின்றபோது, பயன்படுத்தப்பட்ட நீரை மறுசுழற்சி மூலமாக மீண்டும் பயன்படுத்துவதற்கு சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்கினால்தான் அனுமதி வழங்கப்படும். இதனால் பெருமளவு நீர் சேமிக்கப்படும்.

- சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி, செம்பரம்பாக்கம், சோழவரம், செங்குன்றம் ஆகிய நீர்த்தேக்கங்களின் கொள்ளளவினை அதிகரிப்பதற்கென தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- கோதாவரி ஆற்றினை காவேரி ஆற்றுடன் இணைக்கும் திட்டத்தினை விரைவாக செயல்படுத்த மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனால், தமிழ்நாட்டில் உள்ள பல மாவட்டங்களில் விவசாயம் மற்றும் குடிநீர் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு ஏற்படும்.

- கங்கை சீரமைப்புத் திட்டம் போன்று, காவேரி ஆற்றினை சீரமைக்க "நடந்தாய் வாழி காவேரி" என்ற திட்டத்தினை செயல்படுத்த மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதேபோன்று, பவானி, வைகை, அமராவதி, தாமிரபரணி ஆறுகளும் மாசுபடுவதைத் தடுக்க, மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

- சேத்துப்பட்டு ஏரி, அத்திப்பட்டு ஏரி போன்ற தமிழ்நாடு முழுவதும் உள்ள பல முக்கிய ஏரிகளின் சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சென்னை

பள்ளிக்கரணையில் உள்ள சதுப்பு நிலங்களும், பெருங்குடி ஏரியும் இவ்வாறு பாதுகாக்கப்படும்.

- இவ்வாறு பல்வேறு கோணங்களில் தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காண நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம், தமிழ்நாட்டில் கிடைக்கும் நீரில் ஒரு துளி நீரைக்கூட வீணாக்கக் கூடாது என்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு மிகுந்த கவனத்துடன் செயலாற்றி வருகிறது. இதை சரியான முறையில் நிறைவேற்றும் வகையிலும், நீராதாரத்தை முறையாக சேமித்து பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் உரிய முறையில் ஒருங்கிணைக்கும் வகையிலும், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள குடிமராமத்து திட்டத்தை இணைத்து, “தமிழ்நாடு நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்” என்ற ஒரு தீவிர மக்கள் இயக்கத்தை 07.08.2019 அன்று தொடங்கி வைத்தேன். மாண்புமிகு அம்மா அவர்களால், தமிழ்நாடு “மின்மிகை மாநிலமாக” எவ்வாறு உருவாக்கப்பட்டதோ, அதே போன்று இந்த இயக்கத்தின் மூலம் தமிழ்நாடு “நீர் வளம் மிக்க மாநிலமாக” விரைவில் உருவாகும். இத்திட்டங்களின் மூலம், இனி வருங்காலத்தில் பருவமழை பொய்த்தாலும், தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத நிலை ஏற்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இயக்கத்திற்கு மக்கள் தங்கள் ஒத்துழைப்பை பெருமளவு நல்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டும் வகையிலும், தமிழ்நாட்டு மக்களின் நலனை பாதுகாக்கும் வகையிலும், பல்வேறு சட்டப் போராட்டங்கள், கோரிக்கைகள் ஆகியவற்றின் மூலம்,

- காவேரி நீர் மேலாண்மை ஆணையமும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவும் மத்திய அரசால் அமைக்கப்பட்டது. பல்லாண்டு காலமாக தீர்வு காணப்படாமல் இருந்த காவேரி

பிரச்சினைக்கு, நிரந்தரத் தீர்வு கண்டது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். தற்போது மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள "மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் பிரச்சினை தீர்ப்பாயம்" நடைமுறைக்கு வந்தாலும்கூட, ஏற்கெனவே உச்சநீதிமன்ற உத்தரவின்படி அமைக்கப்பட்ட இவ்விரு அமைப்புகளும் தொடர்ந்து செயல்படும்.

- மேலும், பல ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வந்த கோரிக்கையின் அடிப்படையில், உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் தமிழில் முதன்முறையாக பெறப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றத்தில் **23.01.1968** அன்று, "தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து இந்தி மொழியை அறவே நீக்கிட இந்த மாமன்றம் தீர்மானிக்கிறது" என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்.

இதேபோன்று மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும் **13.11.1986** அன்று இரு மொழிக் கொள்கையை ஆதரித்து தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்.

மாண்புமிகு அம்மா அவர்களும், 'இந்தி பேசாத மாநில மக்கள் மீது இந்தியை திணிக்கக் கூடாது என்பதிலும், அவ்வாறு எடுக்கப்படும் முயற்சியை எதிர்த்து முறியடிப்பதிலும் உறுதியாக உள்ளோம்' என்றார்.

மாண்புமிகு அம்மாவின் அரசும், இரு மொழிக் கொள்கையில் உறுதியாக உள்ளது. தமிழ்நாட்டு மக்களை பாதிக்கக்கூடிய எந்தத் திட்டமாக இருந்தாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு அதனை எதிர்த்து, மக்கள் நலனை பாதுகாப்பதில் முன்னோடியாக விளங்கும் என்பதை இந்த நேரத்தில் உறுதிபட தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030ஆம் ஆண்டுக்குள் எய்தப்பட்டு, அதன் மூலம் தமிழ்நாடு உலக அரங்கில் வளர்ச்சிப் பாதையில் சென்றிட மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகின்றது. இந்த நோக்கத்தினை செயல்படுத்தும் விதமாக பல்வேறு மக்கள் நலத் திட்டப் பணிகளை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தி வருகின்றது.

பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ், புதிய பயிர்களையும், பகுதிகளையும் அறிவிக்கை செய்து, இத்திட்டத்தை கூடுதல் பரப்பளவில், அதிக வேளாண் பெருமக்கள் பலன் பெறும் வகையில், இந்த ஆண்டு ரூபாய் 634 கோடியே 74 இலட்சம் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும். கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு வேளாண் பெருமக்களுக்காக 5 ஆயிரத்து 410 கோடியே 67 இலட்சம் ரூபாய் இழப்பீட்டு நிதியாக பெற்றுத் தந்துள்ளது.

விரைவில் அழுகும் வேளாண் பொருட்களை பாதுகாக்கும் வகையில், ஏற்கெனவே 10 மாவட்டங்களில் 400 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் 25 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட உள்ள "விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்", மேலும் 5 மாவட்டங்களில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

2018ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் 17 மாவட்டங்களில் அமெரிக்கன் படைப்புழுவின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்காச்சோளப் பயிர்களை பாதுகாக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்ததுடன், பாதிக்கப்பட்ட வேளாண் பெருமக்களுக்கு 186 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிவாரணமும் வழங்கியது.

நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் பாதுகாவலனாக விளங்கும் பனை மரங்களை அதிக அளவில் வளர்க்கும் வகையில், இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் செலவில் 2.5 கோடி பனை விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன.

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வள நடைமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்களை உள்ளடக்கிய உலகத்தரம் வாய்ந்த நவீன கால்நடைப் பூங்கா சேலம் மாவட்டம் தலைவாசலில் 900 ஏக்கர் பரப்பளவில் நிறுவிட நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

விவசாயிகளிடமிருந்து தரமான பாலை கொள்முதல் செய்யவும், அதை மக்களுக்கு தாமதமின்றி கிடைக்கச் செய்யவும், சமீபத்தில் கரூர், தருமபுரி, தேனி, தூத்துக்குடி மற்றும் கடலூரை தலைமை இடமாகக் கொண்டு 5 புதிய பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது வேலூரில் உள்ள மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து, திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் புதிதாக உருவாக்கப்படும்.

காவல்துறையினர், அல்லும் பகலும் அயராது பாடுபட்டு தமிழ்நாட்டை அமைதிப் பூங்காவாக பாதுகாத்து வருகின்றனர். அவர்களது மனநலன் மற்றும் குடும்ப நலன் ஆகியவற்றை

பேணிக்காப்பதற்காக, “காவலர் நிறைவாழ்வு பயிற்சி திட்டம்” என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2015ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றியினைத் தொடர்ந்து, இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு இந்த ஆண்டு நடைபெற்றது. இந்த மாநாட்டில் 10 இலட்சத்து 50 ஆயிரம் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் வகையில் 3 இலட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கான தொழில் முதலீடுகள், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ஈர்க்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 2011ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு அம்மா அவர்களும், அதனைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக, தற்போது தமிழ்நாட்டின் சராசரி மின் தேவை 15 ஆயிரத்து 600லிருந்து 16 ஆயிரத்து 100 மெகா வாட்டாக உள்ள போதிலும், 18 ஆயிரத்து 300 மெகா வாட் நிறுவு திறனுடன் மின்மிகை மாநிலமாகத் திகழ்கிறது. 9,000 மெகாவாட் திறனுள்ள சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் 2023க்குள் நிறுவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான தொடர் நடவடிக்கைகளினால் இந்த ஆண்டு கடும் கோடை காலத்தில் ஏற்பட்ட உச்சக் கட்ட மின்தேவைகள் கூட, தடையின்றி பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை 2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாயாக டிசம்பர் 2018 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் மூலம் கர்ப்பிணிப் பெண்களின் இரத்த சோகையை போக்கவும், பிறந்த குழந்தைகளின் எடையளவை உயர்த்தவும் 4,000 ரூபாய்

மதிப்புள்ள இரும்புசத்து, ஊட்டச் சத்து ஆகிய பொருட்கள் அடங்கிய இரண்டு அம்மா தாய் சேய் நலப் பெட்டகம் வழங்கப்படுகின்றன.

கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, 12ஆம் வகுப்பு வரையில் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. இந்த நிதியாண்டில் பள்ளிக்கல்வித் துறைக்கென மிக அதிக அளவில் 28 ஆயிரத்து 957 கோடியே 62 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு கல்வித்துறையில் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் பயனாக பள்ளி செல்லாக் குழந்தைகள் எண்ணிக்கையும், இடைநிற்றல் விகிதமும் பெருமளவில் குறைந்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

“கல்லூரிகளில் 50 சதவீதத்திற்கும் மேல் கல்வி பயில வகை செய்தல் எனது நோக்கம்” என்று மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் 65 கல்லூரிகளை தொடங்கி வைத்தார். மாண்புமிகு அம்மாவின் வழியில் வந்த இந்த அரசு, 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை தொடங்கியுள்ளதுடன் 5 பாலிடெக்னிக் கல்லூரிகளையும் தொடங்கி உள்ளது. இதன் காரணமாக, உயர் கல்வியில் சேரும் மாணாக்கர்கள் சதவீதம் 48.6 என உயர்ந்து, இந்தியாவிலேயே உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 முதல் 2017 வரையிலான 4 ஆண்டுகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் நாட்டிலேயே தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது.

40 ஆயிரத்து 941 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு

அம்மாவின் அரசு நிருவாக அனுமதி அளித்துள்ளது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை 20 ஆயிரத்து 196 கோடி ரூபாய் நிதியுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

சென்ற ஆண்டு சுதந்திர தின விழா உரையில், அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டுப்போட்டிகளில், பதக்கங்கள் வென்ற அல்லது கலந்து கொள்ளும் வீரர்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட தேசிய, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கும், தமிழ்நாடு அரசு அல்லது தமிழ்நாடு அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் 2 சதவிகிதம் வரை வேலைவாய்ப்பு வழங்கப்படும் என அறிவித்தேன். அதை 3 சதவிகிதமாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டு, அதன் அடிப்படையில் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2018–2019ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 95 ஆயிரத்து 612 சுய உதவிக் குழுக்களுக்கு 11 ஆயிரத்து 448 கோடியே 99 இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கி உயரிய சாதனை படைக்கப்பட்டுள்ளது.

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் மூலம் இதுவரையில் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 849 பணிக்குச் செல்லும் பெண்கள், 351 கோடியே 30 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மானியத்தில் இரு சக்கர வாகனங்களை வாங்கி பயன் அடைந்துள்ளனர்.

மக்கள் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 5 ஆயிரம் புதிய பேருந்துகள் வாங்க நிதி ஒப்பளித்துள்ளது. நடப்பு நிதியாண்டில் மேலும் 2 ஆயிரம் புதிய பேருந்துகள் வாங்கி பொதுமக்களின் சேவைக்காக இயக்கப்படும்.

ஆதிதிராவிட மக்களின் குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, இணைப்புச் சாலைகள், பாதைகள், தெரு விளக்குகள் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காக கடந்த 2 ஆண்டுகளில் தலா 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், அவர்களுக்கு செயற்கைக்கோள் அலைபேசி 'நேவிக்' மற்றும் 'நேவ்டெக்ஸ்' சாதனங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது. இந்தியாவில் முதன்முறையாக ஆழ்கடல் பகுதிகளில் மீன்பிடிக்க ஏதுவாக 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக 30 இலட்சம் ரூபாய் மானியத்தில் நவீன வசதிகளுடன் கூடிய சூரை மீன்பிடி படகுகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாள், "தமிழ்நாடு" மாநிலம் உருவாக்கப்பட்டது. அந்த நாளினை பெருமைப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் நவம்பர் மாதம் முதல் நாள் "தமிழ்நாடு நாள்" என்ற பெயரில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது.

தற்பொழுது காஞ்சிபுரத்தில் அருள்மிகு அத்திவரதர் எழுந்தருளியதை தரிசிக்க வரும் இலட்சக்கணக்கான பக்தர்களுக்கு உரிய பாதுகாப்பு, போக்குவரத்து, குடிநீர், மருத்துவம், அன்னதானம் போன்ற வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து, பக்தர்கள் சீரிய முறையில் தரிசனம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு செய்த பல்வேறு நடவடிக்கைகளை பயன்படுத்தி சுமார் ஒரு கோடி பக்தர்கள் அருள்மிகு அத்திவரதரை தரிசித்து சென்றுள்ளனர் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் சுமார் 60 இலட்சம் ஏழை தொழிலாளர் குடும்பங்களுக்கு முழுமையான கணக்கெடுப்பிற்குப் பின், சிறப்பு நிதியுதவியாக குடும்பத்திற்கு தலா 2,000 ரூபாய் மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கும்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, கைத்தறி நெசவாளர்களுக்கு தொழில்நுட்ப மேம்பாடு, வடிவமைப்பு மேம்பாடு, ரக மாற்றம், வணிக சின்னத்தை பிரபலப்படுத்துதல், சந்தை விரிவாக்கம் மற்றும் நடைமுறை மூலதனம் ஆகியவைக்கான நிதியுதவி வழங்குவதற்காக, “கைத்தறி ஆதரவுத் திட்டத்தினை” ஆண்டுக்கு 40 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10 ஆயிரம் நெசவாளர்கள் நேரடியாக பயனடைந்து வருகின்றனர்.

“மக்களால் நான், மக்களுக்காகவே நான்” என முழங்கியவர் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அவர் வழியில் நடைபெறும் இந்த ஆட்சியில், மக்களின் குறைகளை மக்களை நாடிச் சென்று இந்த அரசு தீர்த்து வருகிறது. எனவேதான், பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதற்கு தற்போதுள்ள முறைகளுடன், ஒரு சிறப்புத் திட்டமாக, முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டம், ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடைபெற உள்ளது. இத்திட்டத்தின் மூலம் ஒரு மாத காலத்திற்குள் மனுக்களுக்கு தீர்வு எட்டப்படும்.

ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் நெகிழி பொருட்கள் மீதான தடை 01.01.2019 முதல் அமலுக்கு வந்துள்ளது. இதனை முழுமையாக செயல்படுத்த தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. எதிர்கால சந்ததியினரின் நலனுக்கான அரசு எடுத்துள்ள இம்முயற்சிகளுக்கு பொதுமக்களும், வணிகர்களும் தங்களது ஆதரவை தொடர்ந்து நல்கிட வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பெரிய மாவட்டமாக உள்ள வேலூர் மாவட்டத்தை பிரிக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து வந்த கோரிக்கைகளை பரிசீலித்து, நிருவாக வசதிக்காக, வேலூரை

தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டமும், திருப்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டமும், ராணிப்பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டமும் தோற்றுவிக்கப்படும். மேலும், வேலூர் மாவட்டத்தில் உள்ள கே.வி.குப்பத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வட்டம் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் மிக மிகச் சாமான்யர்கள் உங்கள் ஒத்துழைப்பால் நாம் சாதித்து உள்ளவைகளோ மிகப் பெரியவை; இன்னும் நாம் சாதிக்க வேண்டியவற்றுடன் ஒப்பிடும்போது இவை கடுகளவு தான்.

நாங்கள் சாமான்யர்கள், ஆனாலும் மகத்தான இம்மாநில மக்களின் அறிவாற்றலோடும், அயராத உழைப்போடும் சாதிக்க வேண்டியவற்றை சாதித்தே தீருவோம்.

ஒட்டு மொத்த செயல்திறன், சட்டம்–ஒழுங்கு மற்றும் சுற்றுலாத் துறை ஆகியவற்றில் சிறந்து விளங்கியமைக்காக, ‘இந்தியா டுடே’ பத்திரிகை தமிழ்நாட்டிற்கு 4 விருதுகள் வழங்கியுள்ளது. நாட்டிலேயே சிறந்த காவல் நிலையமாக தமிழ்நாட்டில் 3 காவல் நிலையங்கள் தேர்வு, வேளாண் துறைக்கு கிரிஷி கர்மான் விருதுகள், மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்திற்கு விருது, பொது விநியோகத் திட்டத்தை கணினிமயமாக்கியதற்கு விருது, புதுப்பிக்கப்பட்ட எரிசக்தித் துறைக்கு விருது, தரமான மருத்துவ சேவைகள் மற்றும் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் சிறந்த முறையில் செயல்பட்டதற்கான விருது, போக்குவரத்து கழகங்களுக்கும், நகராட்சிகளுக்கும் சிறந்த முறையில் பணியாற்றியதற்கான விருது, சமூக நலத் துறையின் சிறந்த பணிக்கான விருது என அகில இந்திய அளவில் பல்வேறு விருதுகளை தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது.

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக தனது இன்னுயிரை ஈந்த தியாக செம்மல்களை சிறப்பிக்கும் வகையில், அவர்களுக்கு

வழங்கப்பட்டு வரும் ஒய்வூதியம் 15,000 ரூபாயிலிருந்து 16,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும், சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஒய்வூதியம் மற்றும் சிறப்பு ஒய்வூதியம் 7,500 ரூபாயிலிருந்து 8,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நமது முன்னோர்கள் செய்த தியாகத்தின் விளைவாக பெறப்பட்ட இந்த சுதந்திர திருநாட்டை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றி நமது நாட்டை ஒரு வல்லரசு நாடாக உயர்த்தவும், மேலும், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக உயர்த்திடவும் பாடுபடுவோம் என்று இந்த நன்னாளில் உறுதி எடுப்போம்.

நம் மக்கள், மிகவும் மகிழ்ச்சியான, நிறைவான வாழ்க்கையைப் பெறுவதற்கு உறுதியான, துடிப்பான, வளமான தமிழ்நாட்டை உருவாக்குவோம் என்று இந்த நன்னாளில் சபதம் ஏற்போம்.

வாழ்க அண்ணா நாமம்!

வளர்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் புகழ்!

ஓங்குக புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கீர்த்தி!

தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி!

வாழ்க பாரத மணித் திருநாடு, வளர்க செந்தமிழ்நாடு!

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்*
சுதந்திர தின உரை (15.08.2019)

நீதிபதிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும் எங்களுடைய அரசு!

My hearty welcome to Hon'ble Chief Justice Tmt.Vijaya K.Tahilramani for having come to inaugurate District Munsif – cum – Judicial Magistrate Court at Edappadi.

I feel privileged to be here. It is only when the litigants, interests are served, it could be said, we have done, justice in fulfilling, our constitutional obligation, of administering, justice to all. This new Court, is sure, to help, for easy access, of the litigants, of three Police Station limits, covering Edappadi Taluk.

எடப்பாடி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எடப்பாடி, பூலாம்பட்டி மற்றும் கொங்கணாபுரம் ஆகிய மூன்று காவல் நிலையங்களின் எல்லைகளை கொண்டதாக இருக்கும். சங்ககிரி முன்சீப் நீதிமன்றத்தில் இருந்து 531 வழக்குகளும், சங்ககிரி குற்றவியல் நீதிமன்றங்கள்

இரண்டிலிருந்தும் 377 வழக்குகளும் மொத்தம் 908 வழக்குகள் எடப்பாடி நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட உள்ளன. இதன்மூலம் இப்பகுதியில் வழக்கு தொடுத்தோருக்கு குறித்த காலத்தில் நீதி கிடைக்கும்.

மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு சென்னை உயர்நீதிமன்றம் ஆகும். இதன் கிளை மதுரையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 1,149 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் சென்னையில் 126 நீதிமன்றங்களும், இதர மாவட்டங்களில் 1,023 நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன.

நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் கட்டுதல், பராமரித்தல், நீதிபதிகளுக்காக குடியிருப்புகள் கட்டுதல் போன்ற நீதித் துறைக்கான மேம்பாட்டு பணிகளுக்காக கடந்த 8 ஆண்டுகளில் சுமார் 1,000 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011–2012 முதல் 2018–2019ஆம் ஆண்டுகள் வரை 456 புதிய நீதிமன்றங்கள் ஏற்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. சென்னையில் சிறப்பு நீதிமன்றம் உட்பட 33 புதிய நீதிமன்றங்களை 2018–2019ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மாவின் அரசு அமைத்துள்ளது. நீதிமன்றங்களுக்கு 15 புதிய கட்டடங்களை கட்டுவதற்கு 2018–2019ஆம் ஆண்டில், 101 கோடியே 89 இலட்சம் ரூபாய் அம்மாவின் அரசால் ஒப்புதல் தரப்பட்டுள்ளது.

2019–2020ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நீதி நிருவாகத்திற்காக 1,265 கோடியே 64 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருப்பூர், முசிறியில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கள்ளக்குறிச்சியில் கூடுதல் சார்பு நீதிமன்றம், குழித்துறையில் ஒரு கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டத்தில் கூடுதலாக ஒரு குற்றவியல் நடுவர் நீதிமன்றம், நாங்குநேரி மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி

ஆகிய இடங்களில் சார்பு நீதிமன்றம் சேந்தமங்கலம் மற்றும் குமாரபாளையம் வட்டங்களில் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், காரியமங்கலம், விக்கிரவாண்டி, சிங்கம்புணரி, பல்லாவரம், மதுரவாயல் ஆகிய இடங்களில் மாவட்ட உரிமையியல் மற்றும் நடுவர் நீதிமன்றம் ஆகியவை வரும் ஆண்டுகளில் அமைக்கப்பட உள்ளன.

வழக்குரைஞர்களின் நலனைக் கருத்தில்கொண்டு பணியில் இருக்கும்போது இறக்கும் வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சேமநலநிதி 7 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதிக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வந்த நிதியுதவியை 4 கோடி ரூபாயிலிருந்து 8 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 220 உரிமையியல் நீதிபதி பணியிடங்கள், நேரடி நியமனம் மூலம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் 2018–2019ஆம் ஆண்டு நிரப்பப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்கள் பற்றிய விவரங்களை குறிப்பிட விரும்புகிறேன். சேலம் மாவட்டத்தில் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் 1, கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் 3, கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் மேட்டூரில் 1, மாவட்ட தனி நீதிமன்றங்கள், மகளிர் நீதிமன்றம், போதை பொருள் தடுப்புச் சட்ட நீதிமன்றம், குடும்ப நல நீதிமன்றம், தொழிலாளர் நல நீதிமன்றம், விபத்து வழக்குகள் விசாரணை சிறப்பு நீதிமன்றங்கள், மக்கள் நல நீதிமன்றங்கள் அமைந்துள்ளன.

மேலும், மேட்டூர், சங்ககிரி, ஆத்தூர் மற்றும் ஓமலூரில் சார்பு நீதிமன்றங்களும், தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், முதன்மை சார்பு நீதிமன்றம், கூடுதல் சார்பு நீதிமன்றம், மற்றும் மேட்டூர், சங்ககிரி, ஆத்தூர் மற்றும் ஓமலூரில் குற்றவியல் நீதிமன்றங்கள், ஊழல் தடுப்புச் சட்டம் சிறப்பு நீதிமன்றம், விபத்து வழக்கு சிறப்பு நீதிமன்றங்கள் 2, சொத்துவரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (சேலம் மாநகராட்சி), குற்றவியல் நீதித்துறை நடுவர்

நீதிமன்றங்கள் சேலத்தில் 6ம், சங்ககிரி, ஆத்தூர், மேட்டூரில் தலா 2ம், ஓமலூரில் 1ம் அமைந்துள்ளன.

காசோலை மோசடி வழக்குகள் நீதிமன்றங்கள் ஆத்தூர் மற்றும் ஓமலூரிலும், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வாழப்பாடியிலும் அமைக்கப்பட்டுள்ளன. இந்நீதிமன்றங்கள் பலதரப்பட்ட வழக்கு தன்மைகளை கொண்ட வழக்குளை விசாரித்து நீதிபரிபாலனம் செய்து வருகின்றன.

உச்சநீதிமன்ற ஆணைப்படி, தமிழ்நாட்டில், குறிப்பிட்ட கால இடைவெளியில் மாவட்டந்தோறும் நடைபெறும் மக்கள் நீதிமன்றம் வாயிலாக ஒரே நாளில் பல தரப்பட்ட வழக்குகள் விசாரிக்கப்பட்டு, அதிக அளவில் தீர்வு கண்ட மாவட்டங்களில் சேலம் மாவட்டமும் ஒன்று என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இது தவிர சமரச தீர்வு மையம் மூலம் சில வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு வருகிறது.

சங்ககிரியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்கு 6 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய கட்டடங்கள் 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அப்போதைய சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.யுசுப் இக்பால் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. சங்ககிரியில் கிரிமினல் வழக்குகளுக்கென ஒரு சார்பு உட்பிரிவு நீதிமன்றம் 1914ஆம் ஆண்டு அன்று அமைக்கப்பட்டது. 1985ஆம் ஆண்டு சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது.

மேலும், மேட்டூரில் கட்டப்பட்டுள்ள சார்பு நிலை நீதிமன்ற வளாகம் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட வளாகம் ஆகும். சார்புநிலை நீதிமன்ற வளாகங்களில் முதன் முதலில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட வளாகம் மேட்டூர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலும், பிறகு அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசிலும் சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் விரைவு நீதிமன்றம், சேலம் கூடுதல் மகளிர் நீதிமன்றம், நில அபகரிப்புக்கான சிறப்பு நீதிமன்றம், நடமாடும் நீதிமன்றம்,

ஓமலூர் விரைவு நீதிமன்றம், ஓமலூர் சார்பு நீதிமன்றம், ஓமலூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றம், வாழப்பாடி நீதிமன்றம், மேட்டூர் கூடுதல் நீதிமன்றம் (விரைவு) போன்ற பல்வேறு வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்கள் 2011 முதல் 30.03.2019 வரை துவங்கப்பட்டன. அதேபோல, 28.01.2012இல் சங்ககிரி நீதிமன்றத்திற்கு கூடுதல் கட்டடம், மார்ச் 2013இல் ஓமலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், ஆத்தூர் மற்றும் மேட்டூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் ஆகியவற்றிற்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மாவின் அரசின் இடையறா முயற்சியின் காரணமாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டு வருகின்றன. உயர்நீதிமன்றத்தின் தமிழ் மொழியை வழக்காடு மொழியாகக் கொண்டு வரவேண்டும் என்று மத்திய அரசிடம் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

நீதித்துறையில் மின்னணு ஆளுமை முறைகளை புகுத்துவதன் அவசியத்தையும், அதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளையும் கருத்தில்கொண்டும்,இத்துறையில் முழுமையாக மின்னணு ஆளுமை முறைகளைக் கொண்டுவர ஏதுவாக நீதிமன்றங்களில் நீதிசார்ந்த மின்னணு முத்திரைத்தாள் முறையினை புகுத்திட வேண்டுமென்ற மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மாவின் அரசால் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நீதித்துறையில் கணினிமயமாக்கல் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசு போதுமான நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மாநிலத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவர ஏதுவாக பல்வேறு பதவிகளுக்கு 1,188 பணியிடங்கள் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகம் மற்றும் கலையரங்கம் அமைப்பதற்கு 10 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மரியாதைக்குரிய நீதியரசர் திரு.சுந்தரேஷ் அவர்கள் அழகாகச் சொன்னார், எடப்பாடி தொகுதியைப் பற்றி நன்கு அறிந்திருக்கின்றார். முருக பக்தர்கள் அதிகமாக இருக்கின்ற பகுதி எடப்பாடி என்று சொன்னார், அது உண்மை தான். தைப்பூச திருவிழாவை எடப்பாடி நகர மக்களும், சுற்று வட்டார மக்களும் மிகச்சிறப்பாக கொண்டாடுவார்கள். காவடி எடுத்துக்கொண்டு பாதயாத்திரையாக நடந்து சென்று பழனி முருகனை தரிசனம் செய்கின்றபொழுது, இரவு தங்குவதற்கு எடப்பாடி காவடிக்காரர்களுக்கு மட்டும்தான் சிறப்பு அனுமதி வழங்கப்படுகிறது. இது காலம்காலமாக இருந்து வருகிறது. ஆகவே, முருகனை பாதயாத்திரையாக சென்று தரிசிக்கின்றவர்களுக்கு அங்கேயே தங்கக்கூடிய சிறப்பும் பெற்றவர்கள் எடப்பாடி நகர மற்றும் சுற்றுவட்டார மக்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இந்த மக்களுடைய கோரிக்கையை ஏற்று நானும், என்னுடைய நண்பர்களும், குடும்பத்தினரும் சேர்ந்து தனியாக ஒரு முருகன் கோவிலையே நஞ்சுண்டேஸ்வரர் ஆலயத்திலே கட்டி திறந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எடப்பாடி பகுதி ஒரு பின்தங்கிய பகுதி. வழக்குகள் எல்லாம் சங்ககிரிக்கு சென்று கொண்டிருந்த நிலையை மாற்றி, நம்முடைய பகுதியிலேயே அந்த ஏழைகளுக்கு குறுகிய காலத்திலேயே நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காக இந்த நீதிமன்றம் திறக்கப்பட்டிருக்கின்றது. நம்முடைய தலைமை நீதிபதியும், உயர்நீதிமன்ற நீதியரசர்களும், மற்ற நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் நம்முடைய தொகுதிக்கு வந்து நேரடியாக இந்த நீதிமன்றத்தை திறந்து வைத்ததற்கு மக்களின் சார்பில், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பாலியல் வழக்குகளை விசாரிக்க தனி சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. அதன் அடிப்படையிலே, விரைவில் தமிழகத்தில்,

பாலியல் வழக்குகளை விசாரிக்க தனி சிறப்பு நீதிமன்றம் அமைக்க அரசு, தலைமை நீதிபதிக்கு பரிந்துரை செய்யும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

விரைவாக நீதி கிடைக்கச் செய்வதைக் கருத்தில் கொண்டு, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பணியாளர் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் நீதிமன்றங்களின் தேவைகளுக்கு ஏற்ப உடனுக்குடன் நிறைவேற்றுகின்ற அரசாக என்னுடைய அரசு திகழும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, நமது சட்டத்துறை அமைச்சர் அவர்கள், தலைமை நீதியரசர் என்ன சொல்கின்றார்களோ, அடுத்த வினாடியே அதை நிறைவேற்றுவதற்கு நேரடியாக என்னிடத்தில் வந்து கையொப்பம் பெற்றுச்செல்வார். ஆகவே, நீதிபதிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் எங்களுடைய அரசு செய்து கொடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் ஆசிரியர்களையும், நீதிபதிகளையும் மிகவும் மதிக்கின்றோம். நீதியரசர்களையும், ஆசிரியர்களையும், கடவுளுக்கு சமமானவர் என்று குறிப்பிடுவார்கள். ஆகவே, நீதியரசர்களையும், ஆசிரியர்களையும் இறைவனுக்கு சமமாக கருதுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிகழ்ச்சிக்கு தலைமை நீதிபதி அவர்களே நேரடியாக வந்து எடப்பாடி நீதிமன்றத்தை திறந்து வைத்தமைக்கு அவரோடு வருகை தந்த உயர்நீதிமன்ற நீதியரசர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
__18.08.2019__ அன்று சேலம், எடப்பாடி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திறப்பு விழாவில் ஆற்றிய உரை.

மக்களின் குறைதீர்ப்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு முன்னுரிமை கொடுக்கிறது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அத்தனைபேருக்கும் முதற்கண் எனது பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம், தமிழகத்தில் இருக்கின்ற ஏழை, எளிய மக்களின் குறைகளை விரைவாக தீர்ப்பதற்காக முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, அதன் திட்ட துவக்க விழாவை எடப்பாடி சட்டமன்றத் தொகுதியிலே துவக்கியிருக்கின்ற ஒரு உன்னதமான நாள். உங்களுடைய மனுக்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு தகுதியான மனுக்களுக்கு நிவர்த்தி காணப்படும் என்பதையும், மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு

மாண்புமிகு அம்மாவின் அரசு அதிக முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டமும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வட்டாட்சியர் தலைமையில் அம்மா திட்ட முகாம்களும் தற்போது நடத்தப்படுகிறது. விவசாயிகள்,ஓய்வூதியதாரர்கள்மற்றும்மாற்றுத்திறனாளிகளுக்கான குறைகளை தீர்வு காண்பதற்கான சிறப்பு குறை தீர்வு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி, குறைதீர் முகாம்களில் பட்டா மாற்றம், சமூகப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம், இலவச வீட்டுமனைப் பட்டா, சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் போன்ற சான்றிதழ்கள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழக அரசு எடுத்துவரும் இத்தகைய முயற்சிகளுக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் ஒரு சிறப்பு குறைதீர்க்கும் திட்டத்தினை மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்த இந்த நிகழ்ச்சியின் வாயிலாக துவக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், நகர்ப்புறங்கள் மற்றும் கிராமங்கள்தோறும் நேரடியாக சென்று மனுக்களை பெற்று, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் மனுக்களுக்கு தீர்வு காண வேண்டுமென்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம், அனைத்து நகர்புற வார்டுகளிலும், கிராமங்களிலும் உரிய விளம்பரத்திற்கு பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்தரவுப்படி ஒரு குறிப்பிட்ட நாளில் வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகர்புற வளர்ச்சித் துறை மற்றும் பிற துறைகளைச் சார்ந்த ஒரு அலுவலர் குழு, ஆகஸ்ட் மாத இறுதிக்குள் சென்று மனுக்களைப் பெறுவார்கள். இம்மனுக்கள் அனைத்தும் கணினியில் பதியப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைக்கு ஒரு வார

காலத்திற்குள் அனுப்பப்படும். அம்மனுக்கள் மீது கிட்டத்தட்ட ஒரு மாத காலத்திற்குள் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிட்ட மனுக்களின் மீதான தீர்விற்குப் பின், செப்டம்பர் மாதத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தலைமையில் வட்ட அளவிலான விழாக்களும் நடத்தப்படும். பல்வேறு நலத்திட்டப் பயன்களை இவ்விழாவில் வழங்குவதோடு, மக்களின் அடிப்படைத் தேவைகளான சாலைகள், தெரு விளக்குகள், மருத்துவம், சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்கல் போன்ற அடிப்படை தேவைகளுக்கும் இவ்விழாவின்போது தீர்வு காணப்படும். மக்களின் குறைகளுக்கு தீர்வு காணும் மாநில அரசின் முக்கியமான திட்டமாக திகழும் இந்த சிறப்புத் திட்டத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வட்டத்திற்கு ரூபாய் **25** ஆயிரம் வீதம், ரூபாய் **76** இலட்சத்து **25** ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும் என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இவ்விழாவின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றது என்ற செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற, மிகப்பெரிய திட்டத்தை எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் துவக்கிவைத்ததின் மூலம், தமிழ்நாடு முழுவதும் உள்ள **234** தொகுதிகளிலும் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. ஏழை, எளிய, நடுத்தர மற்றும் அனைத்துத் தரப்பு மக்களாலும் கொடுக்கப்பட்ட மனுக்களுக்கு தீர்வு காண்பதற்காக இந்தத் திட்டத்தை துவக்கியிருக்கின்றோம். தலைமைச் செயலாளர் அவர்கள் தெரிவித்ததைப்போல, இன்றைக்கு மக்கள் அதிகாரிகளை அணுகுவதைக் காட்டிலும், அதிகாரிகளே மக்களை நாடி மக்களிடம் மனுக்களைப் பெற்று, பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விதமாக இந்தத் திட்டத்தை அம்மாவின் அரசு துவக்கியிருக்கின்றது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் தங்களது தொகுதிகளுக்குச் சென்று மக்களை நேரிடையாக சந்திக்கவுள்ளார்கள். முதலமைச்சர் என்ற முறையில் 234 தொகுதிகளில் இருக்கின்ற பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டும். இருந்தாலும், அவ்வப்போது எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்கு வந்து, மக்களை சந்தித்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகின்றோம், முடிக்கப்பட்ட திட்டங்களுக்கு திறப்பு விழா காண்கிறோம். அதுமட்டுமல்லாமல், ஆங்காங்கே சிறப்பு முகாம்கள் நடத்தி நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றேன். ஆகவே, நான் எங்கே சென்றாலும் எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் எப்பொழுதும் தனி கவனம் செலுத்திக்கொண்டிருக்கின்றேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

2011ஆம் ஆண்டு எடப்பாடி சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் பொழுது, மக்கள் வைத்த கோரிக்கைகளை ஒவ்வொன்றாக தீர்த்து வைத்துக் கொண்டிருக்கின்றேன். குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களிடத்தில் தெரிவித்து சுமார் ரூபாய் 146 கோடி மதிப்பீட்டில் மேச்சேரி–நங்கவள்ளி கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தது அம்மாவின் அரசு. தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றித் தந்திருக்கின்றோம்.

மருத்துவமனை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், நங்கவள்ளியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் மருத்துவர்களை நியமித்து, 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மேம்படுத்தி, கட்டடங்கள் கட்டிக் கொடுத்து தேவையான வசதிகளையும் செய்து கொடுத்திருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், சவுரியூரில் புதிதாக மருத்துவமனை திறந்திருக்கின்றோம். வனவாசி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கின்றோம். ஜலகண்டாபுரம் பேரூராட்சியில் இருக்கின்ற அரசு மருத்துவமனைக்கு போதிய வசதிகளை

செய்து கொடுத்திருக்கின்றோம். மக்கள் நோயற்ற வாழ்வு வாழ வேண்டுமென்பதே எங்களின் இலட்சியம்.

மேலும், ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று மருத்துவ முகாம்கள் நடத்தி, மக்களின் நோய்களைக் கண்டறிந்து அதற்குத் தகுந்த மருத்துவ சிகிச்சையை அம்மாவின் அரசு அளித்து வருகிறது. இந்தியாவிலேயே, மருத்துவத் துறையில் தமிழகம் தான் சிறந்து விளங்கிக்கொண்டிருக்கின்றது. உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்கு மத்திய அரசிடமிருந்து தொடர்ந்து விருதுகளை பெற்றுக்கொண்டிருக்கின்றோம். தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக அரசு மருத்துவமனைகள் செயல்பட்டு கொண்டிருக்கின்றன. இதயதெய்வம் அம்மா அவர்கள் வழங்கிய திட்டங்களை அம்மாவின் அரசு தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கின்றது.

நங்கவள்ளியில் தீயணைப்பு நிலையம், பேருந்து நிலையம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து கோயம்புத்தூர், பெங்களூரு, ஈரோடு என அனைத்து இடங்களுக்கும் செல்ல பேருந்து வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. உலகத் தரத்திற்கேற்ற சாலைகளை அமைத்துக் கொடுத்திருக்கின்றோம். நெடுஞ்சாலைத் துறை மட்டுமல்ல, கிராமங்களில் உள்ள சாலைகளையும் நவீன இயந்திரங்கள் மூலம் சிறப்பான சாலைகளாக அமைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். கிராமப்புற சாலைகளையும் தேசிய நெடுஞ்சாலைக்கு இணையாக அமைத்துக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கும், நகரங்களில் வாழும் மக்களுக்கு இணையாக வசதிகளை செய்துகொடுத்த அரசு எங்களுடைய அரசு.

தெரு விளக்கு வசதிகள், LED bulb வசதி எல்லா இடத்திலும் செய்து கொடுத்திருக்கிறோம். **2014** தேர்தலின்போது, இங்கே பாலிடெக்னிக் கல்லூரி கேட்டீர்கள், அதையும் வனவாசி

பகுதியிலேயே மிகப் பிரம்மாண்டமாக பாலிடெக்னிக் கல்லூரி கொடுத்து, நம்முடைய மாணவச் செல்வங்கள் இங்கேயே குறைந்த கட்டணத்தில் பயிலுவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறோம். அதேபோல, ஜலகண்டாபுரத்தில் போக்குவரத்து நெரிசலை குறைக்க புறவழிச் சாலை வேண்டுமென்று கேட்டீர்கள், அங்கேயும் புறவழிச்சாலை அமைக்கப்படும்.

வாய்பேச முடியாத கால்நடை ஜீவன்களுக்கும் நாங்கள் மருத்துவமனை அமைத்து கொடுத்திருக்கிறோம். சேலம் மாவட்டம் முழுவதும் **36** இடங்களில் கால்நடை மருத்துவமனையை கட்டிக் கொடுத்து, அதற்குத் தேவையான போதிய மருத்துவர்களையும் நியமித்திருக்கிறோம். மத்திய கூட்டுறவு வங்கிக் கிளை, சமூக நலக் கூடங்கள் ஆகியவை கொடுத்திருக்கிறோம். பெரிய சோரகையில் பெருமாள் கோயில் கட்ட வேண்டும் என்று கோரிக்கைக்கிணங்க, அதையும் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். சவுரியூரில் மாதிரிப் பள்ளி, சின்னச்சோரகையில் உயர்நிலைப்பள்ளி

ஆகியவை கட்டிக் கொடுத்திருக்கிறோம், ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, வனவாசி ஆகிய பகுதியில் கழிவுநீர் கால்வாய் வசதியையும் செய்து கொடுத்திருக்கிறோம். எல்லா வீடுகளுக்கும் 100 யூனிட் மின்சாரம் தொடர்ந்து கொடுக்கின்ற அரசு எங்கள் அரசு தான். கைத்தறி, விசைத்தறிக்கு விலையில்லா மின்சாரம் கொடுக்கின்ற அரசு எங்கள் அரசு.

மேட்டூரிலிருந்து வருகின்ற உபரிநீரை மேலேற்று மூலமாக ஏரிகளில் நிரப்பவேண்டும் என்று விவசாயப் பெருங்குடி மக்கள் சொன்னார்கள். ரூ.565 கோடியில் 100 ஏரிகள் நிரப்பப்படுகின்ற ஒரு சூழ்நிலையை துவங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் துவங்க இருக்கிறது. எடப்பாடி சட்டமன்ற தொகுதி மக்களின் நல்ல எண்ணத்தின் அடிப்படையில், தமிழகத்திற்கு ஒரு முதலமைச்சர் கிடைத்திருக்கின்ற காரணத்தினாலே இந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. 234 தொகுதி இருந்தாலும், எடப்பாடி தொகுதியில் இருப்பவர் தான் முதலமைச்சராக இருக்கிறோம், இந்த முதலமைச்சரை உருவாக்கியவர்கள் இங்கே அமர்ந்திருக்கின்ற பொதுமக்கள். நீங்கள் ஓட்டுபோட்டு, சட்டமன்ற உறுப்பினராக என்னை தேர்ந்தெடுத்த காரணத்தினால்தான், இன்றைக்கு இந்த நிலையில் இருந்து உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கிறேன். மக்கள் கொடுக்கின்ற மனுக்களை நாங்கள் பதிவு செய்து படிப்படியாக திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டே இருக்கிறோம்.

விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகளை கொடுத்திருக்கிறோம். கூட்டுப் பண்ணைத் திட்டம், ஒருங்கிணைந்த பண்ணைத் திட்டம் கொடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்கள் உரிய விலை கிடைக்கவேண்டும் என்பதற்காக மாவட்டத்தில் நல்ல விளைச்சல் ஆகின்ற பகுதிகளை தேர்ந்தெடுக்கின்றோம். ஓமலூருக்கும், தாரமங்கலத்திற்கும் இடையில் ஒரு இடத்தினை தேர்வு செய்து இந்தப் பணியை துவங்க இருக்கிறோம். உற்பத்தி செய்கின்ற காய்கறி, பழங்களை

விவசாயிகள் கொண்டு சென்று அங்கேயே விற்பனை செய்யலாம், ஆன்–லைன் மூலமாகவும் விற்பனை செய்யலாம், உடனடியாக பணம் கிடைக்கிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டத்தை துவக்கியிருக்கின்றோம். சென்னைக்கு அருகிலே ரூ.2,000 கோடியில் மிகப் பெரிய உணவுப் பூங்கா ஒன்று உருவாக்கப்பட உள்ளது. இதன்மூலம் நமது விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகளுக்கு கட்டுப்படியான, நியாயமான விலை கிடைக்கும்.

விவசாயிகள், கால்நடை வளர்ப்பை உபதொழிலாக வைத்திருக்கிறார்கள். அந்த கால்நடை வளர்ப்பு சிறக்க வேண்டும் என்பதற்காக ஆசியாவிலேயே மிக உன்னதமான கால்நடைப் பூங்கா சேலம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 1,200 ஏக்கர் பரப்பளவில் உருவாக்க இருக்கிறோம். அங்கே கால்நடை மருத்துவமனை, கால்நடை ஆராய்ச்சி நிலையம் உருவாக்கி, கலப்பின பசுக்களை உருவாக்கி விவசாயிகளுக்கு கொடுக்கிறோம், ஆடுகள், பன்றிகள், மீன்கள், கோழிகள், வளர்த்துக் கொடுத்து, விவசாயிகளுடைய வருமானத்தை இரட்டிப்பாக்க வேண்டுமென்பதற்காக கொடுக்கிறோம். விவசாயிகளின் வருமானம் இரண்டு மடங்கு ஆகவேண்டும் என்பதற்காக எங்களுடைய அரசு புதிய புதிய திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். பால் உற்பத்தி பெருக்குவதை கருத்தில் கொண்டு, ஊட்டியில் விந்தணுவில் பாலினம் பிரிக்கும் ஆய்வகம் ரூ.47.50 கோடியில் அமைக்கப்பட உள்ளது.

நம்முடைய தலைமைச் செயலாளர் நம்முடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர், விவசாயத்திலே அதிகமாக ஈடுபாடு உடையவர், விவசாயத் தொழில் எந்த அளவுக்கு கடினமான தொழில் என்பது தெரியும். ஆகவே, அவர்களுக்கும், தேவையான நன்மைகளைச் செய்வது நம்முடைய முதல் கடமை. அதேபோல கைத்தறித் தொழில்

செய்பவர்களுக்கும் கடினமாக உழைத்தால்தான் அவர்களும் பணம் ஈட்ட முடியும், அதையும் நன்கு உணர்ந்திருக்கின்றோம். ஆகவே, விசைத்தறி, கைத்தறி, வேளாண் தொழில் செய்கின்ற மக்களுக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்றுவதுதான் எங்களுடைய முதல் கடமை என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். நம்முடைய தலைமைச் செயலாளர் நம்முடைய மாவட்டத்தில் இருக்கின்ற பிரச்சினைகளையெல்லாம் நன்கு உணர்ந்திருக்கின்றார், எதை எதை எப்படி செய்யவேண்டும், எதை எதை செய்தால் மக்களுக்கு நன்மை கிடைக்கும் என்று அவரோடு கலந்து பேசி செயல்படுத்துவோம்.

அதுமட்டுமல்லாமல், அருமை சகோதரர் சத்யகோபால் அவர்கள் மிகச்சிறந்த நிருவாகத் திறமை படைத்தவர். கனமழை, புயல், வெள்ளம், வறட்சி என எது வந்தாலும், உடனடியாக தீர்வு காண்பதில் முதன்மையாக விளங்கக் கூடியவர் வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள். இதை எதற்காக சொல்கிறேனென்றால், உணர்வுப் பூர்வமாக இந்த நேரத்திலே பாராட்ட வேண்டும். ஏனென்றால், என்ன தான் அரசாங்கம் திட்டம் போட்டாலும், அதை நடைமுறைப்படுத்தக் கூடியவர்கள் அதிகாரிகள். ஒரு வண்டிக்கு இரண்டு சக்கரம் என்றால், ஒன்று அரசு, மற்றொன்று அரசு அதிகாரிகள். இந்த இரண்டும் சரியாக இருந்தால்தான் இலக்கினை அடைய முடியும். அதனால், அரசாங்கம் போடுகின்ற திட்டத்தை அரசு அதிகாரிகள் மக்களுக்கு கொண்டு சென்று சேர்ப்பதுதான் கடமை. அந்த வகையில் திரு.அதுல்ய மிஸ்ரா அவர்களும், தலைமைச் செயலாளர் அவர்களும், மரியாதைக்குரிய திரு.சத்யகோபால் அவர்களும் சிறந்த முறையிலே பணியாற்றி இந்தத் திட்டத்திற்கு புத்துயிர் கொடுக்கின்ற விதமாக அவர்கள் செயல்படுவார்கள். அதுமட்டுமல்ல, கஜா புயல் வந்தபோது கடுமையாக சேதம் ஏற்பட்டது. அதன் அடிச்சுவடே தெரியாத அளவிற்கு அந்த இடத்தை மாற்றிவிட்டார்கள். அந்த அளவிற்கு அரசாங்கம் துரிதப்படுத்தப்பட்டு இன்றைக்கு அந்தப்

பணிகளையெல்லாம் நாங்கள் நிறைவேற்றித் தந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை செய்து வருகின்றோம். இந்தியாவிலேயே, வறட்சிக் காலங்களில் விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வறட்சி நிவாரணங்கள் அளித்தல், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் அதிக காப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொடுத்தல் என விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதும் அம்மாவின் அரசு தான்.

நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், இந்த ஆட்சி 10 நாள் தாக்குப் பிடிக்குமா? ஒரு மாதம் தாக்குப் பிடிக்குமா? 6 மாதம் தாக்குப் பிடிக்குமா? என்று சொன்னார்கள். இரண்டாண்டுகள் முடிந்து, மூன்றாம் ஆண்டு வெற்றிகரமாக நடந்துகொண்டிருக்கின்றது. இதற்கு முழுக் காரணம் மக்களும், அதிகாரிகளும் தான். உங்களுடைய அன்பும், ஆதரவும் இருக்கின்ற காரணத்தினால் தான் இந்த ஆட்சி வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கின்றது. அனைத்துத் திட்டங்களும் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதற்கு உங்களுடைய ஆதரவும் அன்பும் தான் காரணம்.

நகரத்தில் வாழ்கின்ற மக்களுக்கும் தேவையான திட்டங்களை வழங்கிக்கொண்டிருக்கின்றோம். பேரூராட்சி, நகராட்சி என அனைத்துப்பகுதிகளுக்கும் வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக மத்திய, மாநில அரசுகள் இணைந்து, வறுமைக்கோட்டிற்குக் கீழ், வாழும் வீடில்லா மக்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். பட்டா இல்லாதவர்களுக்கு பட்டா வழங்கப்படும். வீட்டுமனை இல்லாத அனைத்து ஏழை மக்களுக்கும் வீட்டுமனை வழங்குவதற்கு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும். வயது முதிர்ச்சியால் உழைக்க முடியாத முதியோர்களுக்கு முதியோர் உதவித் திட்டத்தை அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதன்மூலம், புதிதாக, தகுதியான 5 இலட்சம்

முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன்.

ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கு ரேஷன் கார்டு வழங்கப்படும். காப்பீட்டுத் திட்டம் இல்லாதவர்கள் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவர். ஏழை, எளிய மக்கள் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்கு, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காலத்தில் ரூபாய் 2 இலட்சமாக இருந்த காப்பீட்டுத்தொகை தற்பொழுது ரூபாய் 5 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆகவே, மக்களுக்குத் தேவையான, மருத்துவ வசதி, விவசாயிகளுக்குத் தேவையான உதவிகள், குடிநீர் வசதி, தடையில்லா மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். உணவு தானிய உற்பத்தியில் தொடர்ச்சியாக கிருஷி கர்மான் விருது பெற்றுக்கொண்டிருக்கின்றோம். இதுபோன்ற காரணங்களினால், விவசாயம் மேம்படுகிறது, தொழில் வளம் பெருகுகின்றது, கைத்தறி, விசைத்தறி நெசவுத் தொழில் சிறந்து விளங்குகின்றது. எனவே, மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அம்மாவின் அரசு செய்துகொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்து, இந்த நிகழ்ச்சியை குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்த அனைவருக்கும், வருகை புரிந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***19.08.2019** அன்று சேலம் மாவட்டம், நங்கவள்ளியில்*
முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தினை
துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கி ஆற்றிய உரை

3 புதிய அரசு சட்டக் கல்லூரிகள் துவங்க ரூ.9.52 கோடி நிதி ஒதுக்கீடு!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற அத்தனைபேருக்கும் முதற்கண் எனது பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் சட்டக்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகின்றது.

பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு குறைந்த செலவில் சட்டக் கல்வி வழங்கிட புதிய 3 அரசு சட்டக் கல்லூரிகள் இந்த ஆண்டு துவங்கப்பட உள்ளன. இதற்காக ரூபாய் 9 கோடியே 52 இலட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, இன்று சேலத்தில் புதிய சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்பக்கட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு தனி அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவர்களுக்கு போதுமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் ரூபாய் 7 கோடியே 70 இலட்சம் செலவில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படவுள்ளது.

தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தான். ஆசியாவிலேயே மிகக்குறைந்த கட்டணத்தில் தரமான சட்டக்கல்வியை இப்பல்கலைக்கழகம் வழங்கி வருகிறது. இந்தப் பல்கலைக்கழகத்திற்கென தனியாக சென்னை பெருங்குடியில் 62 கோடி ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய வளாகம் அமைக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேலும் இப்பல்கலைக்கழக விரிவாக்க பணிகளுக்காக கூடுதலாக 10 ஏக்கர் நிலம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள 13 சட்டக் கல்லூரிகளில் 11 சட்டக் கல்லூரிகள் அரசு சட்டக் கல்லூரிகளாகும். சென்ற ஆண்டு விழுப்புரம், தருமபுரி மற்றும் ராமநாதபுரம் ஆகிய இடங்களில் புதியதாக அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த சட்டக்கல்லூரிக்களுக்கென சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் விரைவாக முடிக்கப்படும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டம், நவலூர் குட்டப்பட்டு கிராமத்தில் 25 ஏக்கர் பரப்பளவில் 79 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி அம்மா அவர்களால் நிறுவப்பட்டது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகம், பெருங்குடி வளாகத்தில் அனைத்திந்திய செய்தியாளர் சட்ட உதவித் தொகுதி என்ற திட்டத்தினை நிறுவியுள்ளது. சட்ட மாணவர்களுக்கு சிறந்த சட்டக் கல்விப் பயிற்சியை அளிப்பதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மாண்புமிகு அம்மாவின் அரசின் இடையறாத முயற்சியின் காரணமாக உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகள் தமிழ் மொழியில் வெளியிடப்பட்டு வருகின்றன. உயர் நீதிமன்றத்தில் தமிழ் மொழியை வழக்காடு மொழியாகக் கொண்டு வரவேண்டும் என்று மத்திய அரசிடம் மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

நீதித்துறையில் மின்னணு ஆளுமை முறைகளை புகுத்துவதன் அவசியத்தையும், அதனால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகளையும்

கருத்தில்கொண்டும்,இத்துறையில்முழுமையாகமின்னணு ஆளுமை முறைகளைக் கொண்டு வர ஏதுவாக நீதிமன்றங்களில் நீதிசார்ந்த மின்னணு முத்திரைத்தாள் முறையினை புகுத்திட வேண்டுமென்ற மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மாவின் அரசால் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நீதித்துறையில் கணினிமயமாக்கல் நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு அரசு போதுமான நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மாநிலத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவில் முடிவுக்கு கொண்டுவர ஏதுவாக பல்வேறு பதவிகளுக்கு 1,188 பணியிடங்கள் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ளன.

விரைவாக நீதி கிடைக்கச் செய்வதை கருத்தில் கொண்டு, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பணியாளர் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் நீதிமன்றங்களின் தேவைகளுக்கு ஏற்ப உடனுக்குடன் நிறைவேற்றும் உணர்வு கொண்ட அரசாக மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்பட்டு வருகிறது.

சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.வெங்கடாசலம் மற்றும் திரு.வெற்றிவேல் ஆகியோரது கோரிக்கையை ஏற்று இன்றையதினம் ஓமலூரிலிருந்து முத்துநாயக்கன்பட்டி, பாலக்குட்டப்பட்டி, கே.ஆர். தோப்பூர், காடையாம்பட்டி வழியாக 6 நடைகள் காலை, மதியம், மாலை நேரங்களில் புதிய வழித்தடத்தில் இன்று முதல் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், சேலத்திலிருந்து சென்னை மற்றும் பெங்களூரு செல்வதற்கு படுக்கை வசதிகளுடன் கூடிய குளிர்சாதன விரைவுப் பேருந்து சேவையினை அம்மாவினுடைய அரசு தொடங்கியிருக்கிறது.

சேலம் மாநகரத்தில் பல்வேறு திட்டங்களை நாங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம். இன்றைக்கு சேலம் மாநகரம்

எங்கேயும் குடிநீர் பிரச்சினை இல்லை என்று சொல்கின்ற அளவிற்கு பாதுகாக்கப்பட்ட காவேரி தண்ணீரை தனி குடிநீர் திட்டத்தின் மூலமாக 60 வார்டுகளிலும் தங்கு தடையில்லாமல் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். எந்த நகரத்திலும் இல்லாத அளவிற்கு அதிகமான பாலம் உள்ள நகரமென்றால் அது சேலம் மாநகரம் தான். ஐந்து ரோடு பாலம், திருவாகவுண்டனூர் பாலம், ஏ.வி.ஆர் ரவுண்டானா பாலம், Steel Plant பகுதியில் ஒரு மேம்பாலம், கந்தம்பட்டி அருகில் மேம்பாலம், முள்ளுவாடி கேட் அருகில் இரண்டு மேம்பாலங்கள், மணல்மேட்டில் ஒரு மேம்பாலம் என சேலம் மாநகரம் சுற்றிலும் மேம்பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.சக்திவேல், திரு.வெங்கடாசலம் ஆகியோர் சீலநாயக்கன்பட்டியில் உள்ள பாலத்தை விரிவுபடுத்தி போக்குவரத்து நெரிசல் இல்லாத சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள், அதற்கும் அம்மாவினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே முதன்முதலாக சேலம் மாநகரத்தில் தான் சுமார் 67.5 ஏக்கர் பரப்பளவில் அனைத்து வசதிகளுடன் கூடிய பஸ்போர்ட் (Bus Port) அமையவிருக்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, சேலம் மாநகராட்சியில் பொதுமக்கள் காலையிலும், மாலையிலும் நடைப்பயிற்சி செய்திடவும் பொழுதுபோக்கவும் 18 பூங்காக்களை அமைத்திருக்கிறோம்.

ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பாதாள சாக்கடைத் திட்டம் துவக்கி இடையில் சரியான முறையில் ஒப்பந்தக்காரர்களுக்கு பணியை ஒப்படைக்காத காரணத்தினால் பணி பாதியிலேயே நின்று விட்டது. அதை மீண்டும் துவக்கி அந்தத் திட்டத்தையும் செயல்படுத்தி இருக்கின்றோம். சட்டப்பேரவை உறுப்பினர் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று,

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் சேலம் வடக்கு, சேலம் தெற்கு, சேலம் மேற்கு என 3 தாலுகாக்கள் ஒரே நேரத்தில் உருவாக்கப்பட்டு அவற்றிற்கு புதிய கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

துணை மேயராக இருந்த திரு.நடேசன் அவர்கள் மணியனூரில் பள்ளிக்கூடம் தேவையென்று வைத்த கோரிக்கையை ஏற்று அம்மா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அந்த இடத்தில்தான் புதிதாக தொடங்கப்படவுள்ள சட்டக் கல்லூரியும் தற்போது இயங்கவுள்ளது.

அதேபோல், ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ், சேலம் மாநகரில் ரூபாய் 948 கோடியில் பிரம்மாண்டமான பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக்கொண்டிருக்கின்றோம். இதில், குடிநீர் விநியோகத்திற்காக ரூபாய் 165 கோடியும், பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக ரூபாய் 145 கோடியும், பழைய பேருந்து நிலையத்தை இரண்டடுக்கு பேருந்து நிலையமாக கட்டுவதற்கு ரூபாய் 92 கோடியும், நேரு கலையரங்கத்தை அனைத்து அம்சங்களுடன் கூடிய சிறந்த கலையரங்கமாக உருவாக்கிட ரூபாய் 72 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் குமரகிரி ஏரி மற்றும் பள்ளப்பட்டி ஏரிகளை புனரமைப்பு செய்யவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மேலும், பாதாள சாக்கடைத் திட்டம், பூமிக்கடியில் மின்வடம் பதிக்கப்பட்டு மின் இணைப்பு திட்டம் ஆகியவையும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சேலம்–கோவை தேசிய நெடுஞ்சாலையில் அன்னபூர்ணா மருத்துவக் கல்லூரிக்கு எதிரில் சேலம் அரசு சட்டக் கல்லூரிக்கான புதிய கட்டடங்கள் இந்த ஆண்டே கட்டப்பட்டு அவ்விடத்தில் மாணவர்கள் பயிலக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும்.

சேலம் மாநகரில், திருமணிமுத்தாற்றில் கழிவுநீர் கலப்பதை தடுப்பதற்கு, ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.

கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம் அரசு சட்டக் கல்லூரிகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

புரட்சித்தலைவி அம்மாவின் அரசு, சொல்வதை நிறைவேற்றுகின்ற அரசு. சேலம் வளர்ந்து வருகின்ற மாநகரம். எதிர்காலத்தில் வெளிநாட்டிற்கு இணையாக உருவாக்கிக் காட்டுவோம் என்பதை தெரிவித்து, குறுகிய காலத்தில், மிகச் சிறப்பாக அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, இந்த கல்லூரியை திறப்பதற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை, எளிய மக்களின் குறைகளை விரைந்து தீர்ப்பதற்கு "முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம்"!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அத்தனைபேருக்கும் முதற்கண் எனது பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம், தமிழகத்தில் இருக்கின்ற ஏழை, எளிய மக்களின் குறைகளை விரைந்து தீர்ப்பதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு அதிக முன்னுரிமை கொடுத்து, "முதலமைச்சரின் சிறப்பு குறை

தீர்க்கும் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. மனுதாரர்களின் தகுதியான மனுக்களுக்கு நிவர்த்தி காணப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர்களின் பெரும்பாலான மனுக்கள் முதியோர் ஓய்வூதியம் கோரிய மனுக்களாகத்தான் இருக்கின்றது. வயது முதிர்ச்சியால் உழைக்க முடியாத முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதன் மூலம், புதிதாக, தகுதியான 5 இலட்சம் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இம்முகாம்களில் வீட்டுமனைப் பட்டா, பட்டா மாறுதல்களும் செய்து கொடுக்கப்படுகிறது.

வீடில்லாத ஏழை மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதை இலட்சியமாக எண்ணி அம்மா அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. பிரதம மந்திரியின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், மத்திய, மாநில அரசுகள் இணைந்து, வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் வீடில்லா மக்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். பேரூராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனை விரைவாக செயல்படுத்த, அம்மாவின் அரசு திட்டமிட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி வேளாண் பெருமக்களின் வேளாண்மைத் தொழில் சிறக்க வேண்டும், இரட்டிப்பு வருமானம் கிடைக்க வேண்டுமென்பதற்காக, அம்மாவின் அரசு புதிய, புதிய யுக்திகளைக் கையாண்டு, அதனை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தி வருகிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு கூட்டுப் பண்ணைத் திட்டம், வட்டியில்லா பயிர்க் கடன் போன்றவை வழங்கப்படுகின்றன.

பருவகாலங்களில் பொழிகின்ற மழை நீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் சேமிக்க, குடிமராமத்துத் திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக, பரீட்சார்த்த முறையில், 2017–2018ஆம் ஆண்டில் ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,519 ஏரிகளும், இரண்டாம்கட்டமாக 2018–2019ஆம் ஆண்டில் ரூபாய் 328 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 1,511 ஏரிகளும் தூர்வாரப்பட்டுள்ளன. 2019–2020ஆம் ஆண்டில் சுமார் ரூபாய் 500 கோடி ஒதுக்கீடு செய்து 1,829 ஏரிகளில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில், முழுக்க முழுக்க விவசாயிகளையும், ஆயக்கட்டுதாரர்களையும் குழுவாக உருவாக்கி, அக்குழுவின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுப்பணித் துறை மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் 39,000 ஏரிகள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஏரிகளை எடுத்து தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள், குட்டைகள், ஊரணிகளில் தண்ணீரை சேமிக்க ரூபாய் 1,250 கோடி மதிப்பீட்டில் திட்டம் தீட்டப்பட்டு, அப்பணிகளும் துவங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதால், பொழிகின்ற மழை நீர் சேமிக்கப்படுவதுடன், நிலத்தடி நீர் உயரக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. உடலுக்கு உயிர் முக்கியம் போல் விவசாயத்திற்கும், மக்களுக்கும் நீர் முக்கியம். எனவே, இத்திட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்களும், விவசாயத் தொழிலாளர்களும், பொதுமக்களும் முழுமையாக தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கண்ணுக்கு இமை போல ஏரிக்கு இமையாக இருந்து இத்திட்டம் வெற்றியடைய ஒத்துழைக்க வேண்டும்.

விவசாயிகளின் உபதொழிலான கால்நடை வளர்ப்பு சிறக்க வேண்டுமென்பதற்காக ஆசியாவிலேயே மிகப் பெரிய பிரம்மாண்டமான கால்நடைப்பூங்கா சேலம் மாவட்டத்தில்

கிட்டத்தட்ட 1,200 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்படும். அங்கே கால்நடை மருத்துவமனை, கால்நடை ஆராய்ச்சி நிலையம் உருவாக்கி, கலப்பின பசுக்கள், ஆடுகள் உருவாக்கி விவசாயிகளுக்கு கொடுக்கிறோம், மேலும், பன்றிகள், மீன், கோழிகள் ஆகியவற்றை வளர்த்துக் கொடுத்து, விவசாயிகளுடைய வருமானத்தை இரட்டிப்பாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பால் உற்பத்தி பெருக்குவதை கருத்தில்கொண்டு, ஊட்டியில் விந்தணுவில் பாலினம் பிரிக்கும் ஆய்வகம் ரூபாய் 48 கோடியில் அமைக்கப்பட உள்ளது.

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதற்கு, தனியார் பங்களிப்புடன் சென்னைக்கு அருகிலே ரூபாய் 2,000 கோடியில் மிகப் பெரிய உணவுப் பூங்கா ஒன்று உருவாக்கப்பட உள்ளது. மேலும், விவசாயிகளின் விளைபொருட்களை பாதுகாப்பாக சேமித்து வைக்க குளிர்பதனக் கிடங்கு விரைந்து அமைத்துக் கொடுக்கப்படும். இத்திட்டங்கள் சிறப்பாக செயல்படுவதற்கு, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறி, பழங்களை On-line மூலமாகவும் விற்பனை செய்துகொள்ளலாம்.

ஓடைகள், நதிகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவதற்கு, 3 ஆண்டுகாலத் திட்டமாக ரூபாய் 1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இரண்டாண்டு காலத்தில் தடுப்பணை கட்டுவதற்கு ரூபாய் 600 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

அம்மாவின் அரசு, சேலம் மாவட்டத்திலேயே அதிகமான பாலங்களை கெங்கவல்லியில் கட்டிக் கொடுத்துள்ளது. தலைவாசல் ஒன்றியத்தில் காட்டுக்கோட்டை பாலம் ரூபாய் 2 கோடியிலும், மணிவிழுந்தான் பாலம் ரூபாய் 2 கோடியே 10 இலட்சத்திலும், கோவிந்தம்பாளையம் பாலம் ரூபாய் 6 கோடியிலும், புதூர் பாலம்

ரூபாய் 2 கோடியிலும், காவர்பனை பாலம் ரூபாய் 3 கோடியிலும், வீரகனூர் பாலம் ரூபாய் 3 கோடியிலும், 74–கிருஷ்ணா பாலம் ரூபாய் 3 கோடியிலும், ஜங்கமசமுத்திரம் பாலம் ரூபாய் 2 கோடியிலும் என பல்வேறு பாலங்களை அம்மாவின் அரசு கட்டிக் கொடுத்துள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் இதுவரை கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு பணிகள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன.

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் ரூ.229 கோடி மதிப்பீட்டில் 33,108 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருவாய்த்துறையின் மூலம் ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் தலைவாசல் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம் கட்டப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறையின் மூலம் ரூ.97 இலட்சம் மதிப்பீட்டில் 4 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் மற்றும் 239 கி.மீ. சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ரூ.10 கோடி மதிப்பீட்டில் சாலைகளை அகலப்படுத்தி புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சிகள் 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1,345 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.270 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறையின் மூலமாக விவசாயப் பெருமக்களுக்கு பயிர்க்கடன், மத்திய காலக்கடன், நகைக் கடன், மாற்றுத்

திறனாளிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக 7,54,967 நபர்களுக்கு ரூ.2,640 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு விலையில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டமும், புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டமும் அம்மாவின் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 8 ஆண்டுகளில் கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த 3,934 பயனாளிகளுக்கு ரூ.50 கோடி மதிப்பீட்டில் விலையில்லா ஆடுகளும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 400 கிராமப்புற பெண்களுக்கு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கோழிக் குஞ்சுகளும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மைத்துறையின் மூலம், ரூ.57 கோடி மதிப்பீட்டில் 1,04,492 விவசாயிகளுக்கு விவசாய பண்ணை இயந்திரங்கள், கருவிகள், விதைகள், சொட்டு நீர் பாசன மானியம், இடுபொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் மூலம், ரூ.54 கோடி மதிப்பீட்டில் 10,976 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டுநீர் பாசனம் மானியம், காய்கறி விதைகள், பழச்செடிகள், தேனீ வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. பருவ மழை பொய்த்ததன் காரணமாக தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்த 6,568 விவசாயிகளுக்கு ரூ.3.72 கோடி வறட்சி நிவாரண இடுபொருள் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

கெங்கவல்லி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு ரூ.82 இலட்சம் மதிப்பீட்டில் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு மற்றும் பரிவர்த்தனைக்கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விலையில்லா மடிக்கணினிகள் ரூ.21 கோடி மதிப்பீட்டில் 19,333 மாணவ / மாணவியர்களுக்கும், விலையில்லா மிதிவண்டிகள்

ரூ.6 கோடி மதிப்பீட்டில் 17,976 மாணவ / மாணவியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வருவாய் ஈட்டும் பெற்றோர்களை இழந்த 50 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.26 இலட்சம் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இடைநிற்றலை தவிர்க்க 10 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 19,333 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.9.70 கோடி சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. 35 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ஆய்வக உதவியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 40,851 மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது. இலத்துவாடி, வேப்பம்பூண்டி, நடுவலூர் ஆகிய ஊராட்சி ஒன்றியப் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், செந்தாரப்பட்டி, ஊனத்தூர், கொண்டையம்பள்ளி ஆகிய அரசு உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. ரூ.8 கோடி மதிப்பீட்டில், பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள், மேல்நிலை ஆய்வகங்கள் கழிப்பறைகள், குடிநீர்த் தொட்டிகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளன.

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 3.14 கோடி மதிப்பீட்டில் இடைநிலை கல்வி இயக்கத்தின் சார்பில் பல்வேறு பள்ளிகளில் ஆய்வகங்கள், வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. ரூ.5.63 கோடி மதிப்பீட்டில் பெத்தநாயக்கன்பாளையம் மாதிரிப்பள்ளிக்கு ஆய்வகம், வகுப்பறை கட்டடங்கள் மற்றும் கழிப்பறைகள் கட்டித் தரப்பட்டுள்ளன. கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியில் நடப்பாண்டில் 4 அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.72 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

படித்த ஏழைப்பெண்களுக்கு ரூ.25,000/– நிதியுதவியுடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2,241 பயனாளிகளுக்கு ரூ.5.60 கோடி நிதியுதவியும், 9,828 கிராம் தங்கமும்

வழங்கப்பட்டுள்ளது. மேலும், பட்டம் / பட்டயம் படித்த ஏழைப் பெண்களுக்கு ரூ.50,000/– நிதியுதவியுடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1,526 பயனாளிகளுக்கு ரூ.7.63 இலட்சம் நிதியுதவியும், 7,172 கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது. பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 917 பயனாளிகளுக்கு ரூ.2 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பல திட்டங்களை மக்களுக்காக அம்மாவின் அரசு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது. ஆனால், எதிர்க்கட்சிகள் அம்மா அரசுக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காக வேண்டுமென்றே, திட்டமிட்டு, தவறான, பொய்யான செய்தியை பரப்பி வருகின்றார்கள். அம்மாவின் அரசு மக்களின் அரசு, மக்களுக்கான திட்டங்களை அளிப்பது தான் இலட்சியம். அந்த இலட்சியப் பாதையில் அம்மாவின் அரசு சென்று கொண்டிருக்கின்றது. பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த திட்டங்களை சிந்தாமல், சிதறாமல் மக்களின் இல்லங்களுக்கு கொண்டு சேர்க்கின்ற அளவிற்கு அம்மாவின் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியை ஏற்படுத்திக் கொடுத்த அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி!

வணக்கம்!

விவசாய பெருங்குடி மக்கள் குடிமராமத்து திட்டத்தினை பயன்படுத்தி மழை நீரை வீணாக்காமல் சேமித்து பயன்பெற வேண்டும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அத்தனைபேருக்கும் முதற்கண் எனது பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

குடிமராமத்து எனும் மிகப் பெரிய திட்டத்தின் மூலம், பெத்தநாயக்கன்பாளையத்தில் உள்ள அபிநவம் ஏரியை தூர்வாருவதால், சுமார் 424.53 ஏக்கர் பரப்பளவிலான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. குடிமராமத்துத் திட்டமானது விவசாயிகளின் வயிற்றில் பால் வார்க்கும் திட்டமாக அமைந்துள்ளது. அபிநவம் ஏரியை தூர்வாரும் பணியை மிகச் சிறப்பாக மேற்கொண்டதற்காக இப்பகுதி விவசாய

சங்கத் தலைவர் திரு.ஜெயராமன் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய அனைத்து சங்க நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, அபிநவம் ஏரியை தூர்வாரும் பணிக்கு என்னுடைய சொந்தப் பணத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் வழங்குகிறேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளும், ஆயக்கட்டுதாரர்களும், ஏரிகளில் வளர்ந்துள்ள சீமைக் கருவேல மரத்தை அகற்றி, கண்ணை இமை காப்பது போல் ஏரிகளைக் காக்க வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

50 ஆண்டுகாலமாக தீர்க்கப்படாமல் இருந்த காவேரி நதிநீர்ப் பிரச்சினையை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், அம்மா வழியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசும் தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தி, உச்சநீதிமன்றத்தில் நல்ல தீர்ப்பைப் பெற்றது. மத்தியில் எத்தனையோ பேர் ஆட்சி அதிகாரத்தில் இருந்தபொழுது செய்யத் தவறினார்கள், ஆட்சி அதிகாரம் தான் அவர்கள் கண்களுக்குத் தெரிந்தது. ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு விவசாயிகள்தான் கண்ணுக்குத் தெரிந்தார்கள். விவசாயிகளின் நிலையை உணர்ந்து, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கில் போராடி, வாதாடி காவேரி நதிநீர் தீர்ப்பைப் பெற்ற அரசு அம்மாவின் அரசு.

தமிழ்நாடு அரசு, நீர் மேலாண்மைத் திட்டத்தை உருவாக்கி, ஓய்வு பெற்ற பொறியாளர்களைக் கொண்ட குழுவை அமைத்து, அக்குழுவின் ஆய்வறிக்கையின்படி அம்மாவின் அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது.இஸ்ரேலில்நீர்மேலாண்மைசிறப்பாகஇருப்பதால், அதனை அறிந்து வந்து தமிழ்நாட்டில் செயல்படுத்தும் நோக்கில், என்னுடைய தலைமையில் இஸ்ரேல் செல்ல திட்டமிட்டிருந்தோம். தற்போது அங்கு தேர்தல் நடைபெறுவதால் செல்ல இயலவில்லை.

அங்கு பின்பற்றப்பட்டு வரும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, தண்ணீரை மறுசுழற்சி செய்து விவசாயத்திற்கு பயன்படுத்தும் முறையை செயல்படுத்தவுள்ளோம். சொட்டு நீர்ப் பாசன முறையில் தண்ணீரை சேமித்து வழங்குவதால், சாதாரணமாக ஒரு ஏக்கர் பாசனம் பெறும் விவசாய நிலம், சொட்டு நீர்ப் பாசனம் மூலம் 10 ஏக்கர் பாசன வசதி பெறும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த பரீட்சார்த்த முறையில், பொள்ளாச்சியில் சுமார் ரூபாய் 500 கோடி மதிப்பீட்டில் 7,200 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டம் படிப்படியாக தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்படும்.

மக்காச்சோளம் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு, அப்பயிரை அமெரிக்கன் படைப் புழு தாக்கியதற்கு ரூபாய் 184 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. தென்னை மரம் பட்டுப்போனால் அதற்கான

இழப்பீடாக மத்திய அரசால் ரூபாய் நூறும், மாநில அரசால் ரூபாய் 1,200 வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு குறைந்தபட்சம் ரூபாய் 10 ஆயிரம் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

அம்மாவின் அரசு மக்களின் அரசு, விவசாயிகளுக்கான அரசு. விவசாயப் பெருங்குடி மக்கள் குடிமராமத்துத் திட்டத்தினை பயன்படுத்தி மழை நீரை வீணாகாமல் சேமித்து பயன்பெற வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
20.08.2019 அன்று, சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர் பேரூராட்சியில் அபிநவம் ஏரியில் தூர்வாரும் பணியை ஆய்வு செய்து ஆற்றிய உரை.

ஆத்தூர் மற்றும் நரசிங்கபுரம் நகராட்சிகளில் ரூ.95.33 கோடி மதிப்பீட்டில் 336 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அத்தனைபேருக்கும் முதற்கண் எனது பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி ஆத்தூரில் ஆற்றிய உரை:

ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி மக்களின் கோரிக்கையின் அடிப்படையில், இங்கு புறவழிச்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அப்பம்மா சமுத்திரத்தில் ரூபாய் 5 கோடி

செலவிலும், அம்மாபாளையத்தில் ரூபாய் 5 கோடி செலவிலும், கல்பகனூரில் ரூபாய் 4.25 கோடி செலவிலும், நரசிங்கபுரம் நகராட்சியில் ரூபாய் 4.60 கோடி செலவிலும் உயர்மட்டப் பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.

ஆத்தூர் நகராட்சிப் பகுதியின் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு ரூபாய் 28 கோடி மதிப்பீட்டில் அயோத்தியாப்பட்டினம் அருகே குடிநீர்க் குழாய் மாற்றியமைக்கப்படும். ஆத்தூர் பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக மேட்டூரிலிருந்து பாதுகாக்கப்பட்ட காவேரித் தண்ணீர் தடையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் மூலமாக, சாதாரண மக்களும் தனியார் மருத்துவமனைக்கு சென்று உயர்தர சிகிச்சை பெறக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றோம்.

சேலம் மாவட்டத்தில்தான், அதிகமான மகளிர் சுய உதவிக் குழுக்கள் துவங்கப்பட்டு, அதிக கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவில் கடன் வழங்கி அவர்கள் தொழில் துவங்கும் நிலையை உருவாக்கியதும், மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பில் நான்கு சதவீதம் கொடுத்ததும் அம்மாவின் அரசு தான்.

விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்காக வேலை வாய்ப்பில் 3 சதவீத இட ஒதுக்கீடு கொடுத்ததும் அம்மாவின் அரசு தான்.

மேலும், இத்தொகுதியில் நடைபெறுகின்ற சில பணிகளை குறிப்பிட விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் சுமார் ரூபாய் 240 கோடி மதிப்பீட்டில் 28,519 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வருவாய்த்

துறை சார்பில் ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையின் மூலம் ஆத்தூர் மற்றும் நரசிங்கபுரத்தில் 2 புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. மல்லியக்கரை மற்றும் ஆரியபாளையம் ஆகிய பகுதிகளில் 2 மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு சுமார் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத் துறை மூலம் கடந்த 8 ஆண்டுகளில் ரூபாய் 112 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் மற்றும் 268 கி.மீ. சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் ரூபாய் 3.15 கோடி மதிப்பீட்டில் 6.350 கி.மீ. சாலைப் பணிகள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. ஆத்தூர் அம்மம்பாளையம்–நரிக்குறவர் காலனி சாலையில் வசிஷ்ட நதியின் குறுக்கே ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய உயர்மட்டப் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியங்களில் ரூபாய் 8.26 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கூட்டுறவுத்துறை சார்பில் விவசாயப் பெருமக்களுக்கு பயிர்க் கடன், மத்திய காலக் கடன், நகைக் கடன், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு கடனுதவியாக 7,00,540 நபர்களுக்கு ரூபாய் 2,170.65 கோடி வழங்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில், ரூபாய் 42 கோடி மதிப்பீட்டில் 3,287 பயனாளிகளுக்கு 13,148 விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டு சுயமாக பொருளாதாரத்தை ஈட்டக்கூடிய சூழ்நிலையை அம்மாவின் அரசு உருவாக்கிக் கொடுத்திருக்கின்றது. விலையில்லா கறவைப் பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூபாய் 1 கோடியே 2 இலட்சம் மதிப்பீட்டில் 250 பயனாளிகளுக்கு 250 விலையில்லா கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளன. ரூபாய் 2.33 இலட்சம் மதிப்பீட்டில் 194 கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள கிராமப்புற பெண்களுக்கு புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 350 பயனாளிகளுக்கு ரூபாய் 21 இலட்சம் மதிப்பிலான கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன. 9 கால்நடை மருந்தகங்களுக்கு ரூபாய் 1.89 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

வேளாண்மைத் துறை சார்பில் ரூபாய் 14.51 கோடி மதிப்பீட்டில் 40,003 விவசாயிகளுக்கு விவசாயப் பண்ணை இயந்திரங்கள், விதைகள், சொட்டுநீர் பாசன மானியம், இடுபொருள்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையில் சுமார் 3.50 கோடி மதிப்பீட்டில் 6,146 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டு நீர்ப் பாசன மானியம், காய்கறி விதைகள், பழச் செடிகள், தேனீ வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன. பருவ மழை பொய்த்ததின் காரணமான, தோட்டக் கலை பயிர் சாகுபடி செய்த 4,142 விவசாயிகளுக்கு ரூபாய் 2.40 கோடி வறட்சி நிவாரண இடுபொருள் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆத்தூர் மற்றும் நரசிங்கபுரம் நகராட்சிகளில் ரூபாய் 95.33 கோடி மதிப்பீட்டில் 336 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பள்ளிக் கல்வித்துறை சார்பில் ரூபாய் 25.98 கோடி மதிப்பீட்டில் 23,467 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளும், ரூபாய் 6.49 கோடி மதிப்பீட்டில் 18,801 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன. 27 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உதவியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். விலையில்லாப் பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது.

கல்லாநத்தம், உமையாள்புரம் தவளப்பட்டி ஆகிய ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், சொக்கநாதபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய சுகாதார மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோல், ஆத்தூரை

தலைமையிடமாகக்கொண்டு புதிய கல்வி மாவட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது. ரூபாய் 198.75 கோடி மதிப்பீட்டில் 211 புதிய பள்ளிக் கட்டடங்கள், ஆய்வகங்கள், வகுப்பறைகள், விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

படித்த ஏழைப் பெண்களுக்கு ரூபாய் 25 ஆயிரம் நிதியுதவிடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2,642 பயனாளிகளுக்கு ரூ.6.60 கோடி நிதியுதவியும், 11,464 கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது. பட்டப் படிப்பு/பட்டயப் படிப்பு படித்த ஏழைப் பெண்களுக்கு ரூபாய் 50 ஆயிரம் நிதியுதவிடன் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1,753 பயனாளிகளுக்கு ரூபாய் 8.76 கோடி நிதியுதவியும், 8,204 கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளன. பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், 919 பயனாளிகளுக்கு ரூபாய் 2 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேட்டூரிலிருந்து வருகின்ற உபரி நீரை கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள ஏரிகள், குளங்களில் நீரேற்று மூலமாக நிரப்புவது குறித்த கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏற்காடு சட்டமன்றத் தொகுதி வாழப்பாடியில் ஆற்றிய உரை:

அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் விலையில்லா மின்சாரம் வழங்குவதும், தடையில்லா மின்சாரம் வழங்குவதும் அம்மாவின் அரசு தான். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது கடுமையான மின்வெட்டு இருந்த காரணத்தினால் தொழில் வளம் பாதித்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில், நான் முதலமைச்சரானால் தமிழ்நாட்டிற்கு தடையில்லா மின்சாரம் வழங்குவேன் என்று தெரிவித்ததுடன், முதலமைச்சரானவுடன் அதை நிறைவேற்றியும் காண்பித்தார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் இந்த ஆட்சியில் என்ன நடைபெற்றுள்ளது ? என்று கேட்கிறார்.

தமிழ்நாடு முழுவதும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அம்மாவின் அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள் பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சித் துறை சார்பில் ரூபாய் 352.63 கோடி மதிப்பீட்டில் 45,477 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆத்தூர் வட்டத்திலிருந்து பிரித்து பெத்தநாயக்கன்பாளையத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கப்பட்டு, அதற்கு ரூபாய் 2.62 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. வாழப்பாடி வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ரூபாய் 2.44 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

கூட்டாத்துப்பட்டி, மஞ்சக்குட்டை, குன்னூர் மற்றும் சூலாங்குறிச்சி ஆகிய பகுதிகளில் புதிதாக 4 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஏற்காடு சட்டமன்றத் தொகுதியில் மட்டும் ரூபாய் 9.24 கோடி மதிப்பீட்டில் 29 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைத்துறை சார்பில் கடந்த 8 ஆண்டுகளில் ரூபாய் 272 கோடி மதிப்பீட்டில் 472 கி.மீ. சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் ரூபாய் 8.70 கோடி மதிப்பீட்டில் சாலைப்பணிகள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. புழுதிக்குட்டை—சந்துமலை சாலையில் புங்கமடுவு அருகிலும், அயோத்தியாபட்டினம்—பேளூர்—கிழாக்காடு சாலை, தும்பல் அருகிலும் தலா ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் இரண்டு புதிய உயர்மட்டப் பாலங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் 210 ஊரக குடியிருப்புகளுக்கு ரூபாய் 8.97 கோடி மதிப்பில் தனி

மின்விசைக் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஏற்காடு, பெத்தநாயக்கன்பாளையம், வாழப்பாடி மற்றும் அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றியங்களில் 83 பள்ளிகள், 71 அங்கன்வாடி மையங்கள், 5 மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு ரூபாய் 39 இலட்சம் மதிப்பில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கூட்டுறவுத்துறை சார்பில் விவசாய பெருமக்களுக்கு பயிர் கடன், மத்திய கால கடன், நகைக் கடன். மாற்றுத்திறனாளிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்த மகளிருக்கான கடன் என மொத்தம் 8,81,420 நபர்களுக்கு ரூபாய் 3,082.27 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மைத்துறை சார்பில் ரூபாய் 15.40 கோடி மதிப்பீட்டில் 79,160 விவசாயிகளுக்கு விவசாய பண்ணை இயந்திரங்கள், கருவிகள், விதைகள், சொட்டு நீர் பாசன மானியம், இடுபொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் ரூபாய் 23.71 கோடி மதிப்பீட்டில் 11,197 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டுநீர் பாசன மானியம், காய்கறி விதைகள், பழச்செடிகள், தேனீ வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்காடு சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்த நெய்யமலை, விலாரிப்பாளையம், துக்கியாம்பாளையம், அத்தனூர்பட்டி, நாகலூர், டி.பெருமாபாளையம், வாய்க்கால் பட்டறை, இராமலிங்கபுரம், நீர்முள்ளிக்குட்டை ஆகிய 9 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், கூட்டாத்துப்பட்டி மற்றும் வீராணம் அரசு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும், ரூபாய் 22.59 கோடி மதிப்பீட்டில் 167 புதிய பள்ளிக் கட்டடங்கள், ஆய்வகங்கள், வகுப்பறைகள், விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு

கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மலைவாழ் மக்களின் குழந்தைகள் கல்வி பயில அம்மாவின் அரசு கருமந்துறையிலும், ஏற்காட்டிலும் ஏகலைவா உண்டு உறைவிடப் பள்ளிகள் திறந்து சிறப்பான கல்வியை வழங்கி வரும் அரசு அம்மாவின் அரசு.

சேலம் மாவட்டத்தில் எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நங்கவள்ளி, எடப்பாடி, கொங்கணாபுரம் பகுதிகளிலும், கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதி தலைவாசலிலும், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி ஆத்தூரிலும், ஏற்காடு சட்டமன்றத் தொகுதி வாழப்பாடியிலும் நடைபெற்ற முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்ட முகாம்களில் 19.08.2019 அன்று 4,062 மனுக்களும், 20.08.2019 அன்று 9,234 மனுக்களும் என மொத்தம் 13,296 மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
20.08.2019 அன்று சேலம் மாவட்டம், ஆத்தூர் மற்றும் ஏற்காடு சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தினை துவக்கி வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை.

உயர்கல்வியின் மூலம் துடிப்பான, அறிவார்ந்த சமுதாயத்தினை உருவாக்குவதே தமிழ்நாடு அரசின் நோக்கம்!

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று
எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக் குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம்
என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்
பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி

என்ற மகாகவியின் பாடல் வரிக்கிணங்க, ஈரோடு பகுதியில் உள்ள பெண்கள் உயர்கல்வி படிக்க அருகிலுள்ள மாவட்டங்களுக்குச் செல்லும் நிலையை மாற்றியமைத்து, பெண் கல்வி சிறந்து, சமுதாயம் செழித்து மலர்ந்திடவும், நாட்டில் நன்னெறி உயர்ந்திடவும், பெண்கள் கல்லூரி ஒன்று ஈரோட்டில் துவங்கிட நல்ல மனம் படைத்த சான்றோர் பலர் சிந்தித்ததின் விளைவாக 24.10.1969இல் வேளாளர் கல்வி நிறுவனம் நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் எடுத்த அயராத முயற்சியின் காரணமாக, 1970 ஜூலை திங்களில் ஈரோட்டில் உள்ள திண்டலில் வேளாளர் மகளிர் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இதன் விளைவாக ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பெண்கள் அறிவு ஒளி பெற்று வருகின்றனர். பெண் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து துவக்கப்பட்ட வேளாளர் கல்வி நிறுவனத்தின் பொன் விழா நிகழ்ச்சியில் கலந்துக்கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்விழாவிற்கு வருகை புரிந்துள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

“பெண்குலம் சிறக்காமல் உலகத்திற்கு நல்ல காலம் இல்லை. ஒரே இறக்கையுடன் பறவை பறக்க முடியாது” என்றார் சுவாமி விவேகானந்தர்.

இந்தக் கல்லூரி நிர்வாகம் முதலில் மகளிர் கல்லூரியை துவக்கி, பின்னர் அதோடு நின்றுவிடாமல் பெண்கள் அனைவரும் அனைத்து விதமாக கல்வி பயில வசதியாக பள்ளிகள், கலைக்கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி, ஆசிரியர் பயிற்சி நிறுவனம், செவிலியர் கல்லூரி போன்ற பல்வேறு கல்வி நிறுவனங்களை நடத்தி வருவது பாரதி கண்ட கனவை நனவாக்கும் வகையில் அமைந்துள்ளது என்பதை இங்கே பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆரம்பத்தில் 280 மாணவியரைக் கொண்டு துவக்கப்பட்ட இந்தக் கல்லூரியில் இன்று பல்வேறு பாடப் பிரிவுகளில் 6,300க்கும் மேற்பட்ட மாணவியர் கல்வி பயில்கிறார்கள் என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், இந்த நிறுவனம் ஆரம்பித்த பிற கல்வி நிலையங்களில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர்கள் பயின்று வருவது மிகுந்த வியப்பை அளிக்கின்றது.

சீரிய நோக்கோடும், சிறந்த லட்சியத்துடனும் அன்று விதைத்த விதை இன்று ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி விரிந்து, பரந்து, விழுதோடி, தரணி போற்றும் தனிப்பெரும் கல்லூரியாக திகழ்ந்து, தலைநிமிர்ந்து நிற்பதற்கு, வேளாளர் கல்வி நிறுவனத்தினரின் அயராத உழைப்பும், விடாமுயற்சியும்தான் காரணம் என்பதை பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அறிவுசார் மனிதவளம் மேம்பாடு அடைய வேண்டுமெனில் அனைவருக்கும் தங்கு தடையின்றி தரமான கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்றார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

உயர்கல்வியின் மூலம் மிகவும் துடிப்பான, அறிவார்ந்த சமுதாயத்தினை உருவாக்குவதும், சமமான, தரமான உயர்வாக்கம், சிறப்பான, உலகளாவிய போட்டித் திறன்கள், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றின் மூலம் இளைஞர்களை தனிச்சிறந்த சக்தியாக உருவாக்குவதே தமிழ்நாடு அரசின் நோக்கமாகும்.

உயர்கல்வி மூலம் தற்போதுள்ள மனித வளத்தினை மேம்படுத்தி, திறன் வாய்ந்த தொழில்களை போதுமான எண்ணிக்கையில் உருவாக்கி, தமிழ்நாட்டை உலகளாவிய ஒரு மையமாக மேம்படுத்திட, மாற்றிட பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கும் வகையில் உயர்கல்வித் துறையின் கீழ் 13 மாநில பல்கலைக்கழகங்கள், 829 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 718 ஆசிரியர் கல்வியியல் கல்லூரிகள், 585 பொறியியல் கல்லூரிகள், 520 பலவகை தொழில்நுட்ப, உணவக மேலாண்மை மற்றும் சமையல் தொழில்நுட்பப் பயிலகங்கள் செயல்படுகின்றன.

ஏழை மாணாக்கர்களின் கல்வியில் கவனம் செலுத்தி, முதல் தலைமுறையில் கற்கும் இளைஞர்களுக்கு கல்வி கற்க ஆர்வம் ஊட்டுதல், தரமான இலவச கல்வியை அளித்தல், தமிழ் வழி கற்கும் மாணாக்கர்களுக்கு உதவித்தொகை அளித்தல், ஆராய்ச்சி மாணாக்கர்களுக்கு உதவித்தொகை வழங்குதல், சிறப்பு உதவித்தொகை வழங்குதல், கட்டணமில்லா விடுதிகள், விலையில்லா பேருந்து பயண அட்டை, பள்ளிகளிலேயே விலையில்லா மடிக்கணினி, விலையில்லா மிதிவண்டிகள் அளித்து, அவர்கள் உயர்கல்வி பயில மாண்புமிகு அம்மாவின் அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

2011ஆம் ஆண்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக பொறுப்பேற்கின்றபொழுது உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 32 சதவிகிதம். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011லிருந்து எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக கல்விக்கு ஏராளமான திட்டங்கள், சலுகைகளை அறிவித்து, அதிக நிதி ஒதுக்கீடு செய்து, கல்வி புரட்சி செய்ததின் விளைவாக கல்வி கற்போரின் எண்ணிக்கை உயர்ந்து இம்மாநிலத்தில் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை இன்று 48.6 சதவிகிதமாக உயர்ந்து இந்தியாவிலேயே உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கையில் முதலிடம் வகிப்பது தமிழ்நாடு தான் என்பதை பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அகில இந்த அளவில், உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 25.8 சதவிகிதம். ஆனால், தமிழகத்தில் உயர்கல்வி படிப்பவர்களின் எண்ணிக்கை 48.6 சதவிகிதம் என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

2018–2019ஆம் கல்வியாண்டில் புதிய பல்வகை தொழில்நுட்பக் கல்லூரிகளை அரசு தொடங்கியதுடன், 29 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும் தொடங்க அனுமதி வழங்கியுள்ளது. ராமேஸ்வரத்தில் டாக்டர் ஏ.பி.ஜெ அப்துல்கலாம் அவர்களின் பெயரில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கப்பட்டுள்ளது.

முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு கல்விக் கட்டணம் திரும்பி வழங்கும் திட்டத்திற்காக இந்த ஆண்டிற்கு 460 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கல்வி நிறுவனங்களை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாக, தனியார் பல்கலைக்கழகங்கள் நிறுவுவதற்கான சட்டம் இயற்றப்பட்டு 2 தனியார் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதியும் அம்மாவின் அரசால் வழங்கப்பட்டுள்ளது. 10 மாநில பல்கலைக்கழகங்கள் மற்றும் 65 அரசு கலைக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை

மேம்படுத்துவதற்காக 382 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று எண்ணிலடங்கா திட்டங்களை உயர்கல்வித்துறையில் தமிழ்நாடு செயல்படுத்தி வருகிறது.

அதுமட்டுமல்ல, கிராமத்தில் வாழ்கின்ற ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த மாணவ, மாணவிகளுக்காக புதிய பள்ளிகளை அம்மா அரசு திறக்கின்றது. மேலும், பள்ளிகளை தரம் உயர்த்தியதன் விளைவாக, மாணாக்கர்களின் சேர்க்கை விகிதம் தற்போது உயர்ந்திருக்கின்றது. இதற்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கல்வியில் செய்த புரட்சிதான் காரணம் என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

கற்கை நன்றே: கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

என்று வெற்றிவேற்கை தெரிவிக்கிறது. ஒருவன் செல்வம் இல்லாதவனாக மிகவும் ஏழ்மை நிலையை அடைந்தாலும் கல்வி கற்க முயல வேண்டும். இதனை கூறுகையில் எனக்கு ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.

மதராஸ் செனட் ஹவுஸ் 1898ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. அதில், கொஞ்சம் பதற்றத்துடன் அமர்ந்திருந்தார் ஒற்றை பெண்மணி. தென்னிந்தியாவின் முதல் பெண் பட்டதாரி என்கிற அறிமுகத்துடன் அவரது பெயர் அழைக்கப்பட, தடுமாறி மிகுந்த பயத்துடன் மேடை ஏறினார். அவரை பல்கலைக்கழக வேந்தரிடம் அறிமுகம் செய்து வைத்தார் கல்லூரி பேராசிரியர். அந்தப் பெண் பி.ஏ.பட்டப் படிப்பிற்கான சான்றிதழ் பெறும் சமயம் அந்த அரங்கமே கரகோஷத்தில் அதிர்ந்தது. அவர்தான் கமலா ரத்தினம் சத்தியநாதன் அவர்கள்.

1879ஆம் ஆண்டு ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த கமலா ரத்தினம் சத்தியநாதன் பள்ளிபடிப்பு முடிந்தவுடன் இளங்கலை வகுப்பில் பயின்றதன் மூலம் சென்னை பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற முதல் பட்டதாரி பெண் ஆவார்.

பின்னர், இவர் திரு.சத்தியநாதன் என்ற ஒரு பேராசிரியரை திருமணம் செய்துகொண்டார். திருமணத்திற்கு பின்னர் சென்னை இராயப்பேட்டை பகுதியில் வசித்து வந்தார். அவரது கணவரின் தூண்டுதலின்படி 1901ஆம் ஆண்டு எம்.ஏ.தேர்வு எழுதி 'தென்னிந்தியாவின் முதல் முதுகலைப் பெண் பட்டதாரியானார்'. பின்னர், இவர் 1901ஆம் ஆண்டு 'இந்தியன் லேடீஸ் மேகசீன்' என்ற பத்திரிகையை தொடங்கினார். இந்தியாவில் பெண் ஒருவரால் தொடங்கப்பட்டு நடத்தப்பட்ட முதல் பெண் பத்திரிகை இதுவே.

பின்னர், இவரது வாழ்க்கையில் சோதனைகளாக குடும்பத்தில் பல இழப்புகள் ஏற்பட்டன. அதனைக் கண்டு மனம் தளராமல் 1919ஆம் ஆண்டு தனது குழந்தைகளுக்கு சிறந்த கல்வி வேண்டும் என்பதற்காக தனது வீட்டை விற்று, இங்கிலாந்து நாட்டுக்கு தனது குழந்தைகளுடன் சென்றார். இங்கிலாந்தில் அவரது மகன் இந்திய சிவில் சர்வீஸ் தேர்வில் தேர்ச்சி பெறும் வரை இருந்து பின்னர் நாடு திரும்பினார். தன் மகனுடன் இந்தியா முழுக்க ஒரு கலெக்டரின் தாய் என்ற அடையாளத்துடன் பயணம் செய்தார்.

பெண்கள் கல்வி கற்கவே கூடாது என்று எதிர்ப்பு இருந்த அந்தக் காலத்திலேயே, அந்த எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாமல் இளங்கலை மற்றும் முதுகலை பட்டங்களைப் பெற்றதோடு மட்டுமல்லால், பெண்கள் உரிமையை காக்க பத்திரிகை நடத்தி, மகளிருக்காக சமூக நிறுவனங்களை நிறுவிய திருமதி கமலா சத்தியநாதன் போன்று நீங்களும் வாழ்வில் ஒரு இலட்சியத்துடன் வாழ்ந்து, பெண்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னுக்கு வர ஒரு தூண்டுகோலாகத் திகழவேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாணவிகள் படிக்கும்போது அவர்கள் கவனம் முழுவதும் படிப்பில்தான் இருக்கவேண்டும். உங்களது பெற்றோர்கள் உங்கள் வாழ்வு சிறக்க பல கனவுகள் காண்கின்றார்கள். அவர்களின் கனவை நனவாக்க நீங்கள் பாடுபட வேண்டும். உங்களுக்கு சமுதாய

பொறுப்பு இருக்கிறது. எளிதாக தட்டி கழித்து விட முடியாத பொறுப்பு உள்ளது. உங்களை வளர்த்துவிட்ட நிறுவனத்திற்கும், உங்கள் மாநிலத்திற்கும், தேசத்திற்கும் உங்கள் பங்களிப்பு இருக்க வேண்டும். நமது குறிக்கோள் கல்வியை நல்ல முறையில் கற்பது. பின்னர் நாம் படித்த இந்த கல்வியைக் கொண்டு, நாட்டிற்கு நல்லது செய்வதாகும்.

ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகிப்பதை முற்றிலும் தவிர்த்தல், நிலத்தடி நீரை அதிகரிக்கச் செய்ய மழைநீர் சேகரிப்பு திட்டத்தை செயல்படுத்துத்தல், நீர்வள ஆதார இயக்கம் பற்றி மக்களிடையே விளக்கமாக எடுத்துரைத்து, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகளில் மாணவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டால், நாட்டின் நலனில் அக்கறையுள்ள ஒரு நல்ல குடிமகனாக தங்களை உயர்த்திக்கொள்ள முடியும்.

உயர்கல்வி வாய்ப்பின்றி கிராமங்களில் இருந்த பெண்களுக்கு இந்தப் பகுதியில் அரியதொரு வாய்ப்பளித்த வேளாளர் கல்லூரியின் பொறுப்பாளர்களுக்கு எனது பாராட்டுதல்களையும், இந்த கல்லூரி மேன்மேலும் உயர்நிலை அடையவேண்டும் என்று வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

1969 ஆம் ஆண்டு இந்த வேளாளர் மகளிர் கல்லூரியை ஆரம்பிக்க அடித்தளமாக விளங்கிய மரியாதைக்குரிய மறைந்த கைலாச கவுண்டர், மறைந்த முன்னாள் எம்.எல்.சி திரு.செங்கோட்டை வேலப்ப கவுண்டர், மறைந்த திரு.பி.கே.பொன்னுசாமி கவுண்டர் மற்றும் துரைசாமி கவுண்டர் ஆகியோரை நினைவுகூற

கடமைப்பட்டுள்ளேன். மரியாதைக்குரிய மறைந்த திரு.துரைசாமி கவுண்டர் அவர்கள் 25 ஆண்டுகாலம் தாளாளர் பதவி வகித்து கல்லூரி வளர்ச்சிக்கு தன்னுழைப்பை அர்ப்பணிப்பை வழங்கி பெரும் பங்களித்துள்ளார் என்பதை தெரிவித்து அவர் மறைந்தாலும் அவருடைய புகழ் இந்தக் கல்லூரி வாயிலாக ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

ஈரோடு மாவட்டத்திற்கான திட்டங்களை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்:

கல்லூரி மாணவிகளாகிய நீங்கள் அம்மாவின் அரசு செயல்படுத்தும் திட்டங்கள் குறித்த விபரங்களை மற்றவர்களுக்கு எடுத்துரைப்பது சரியாக இருக்குமென்ற காரணத்தினால் இந்த விளக்கத்தை தருகின்றேன்.

ஈரோடு நகரத்தில் அரசு மருத்துவமனை அருகில் ரூபாய் 58 கோடியே 54 இலட்சம் மதிப்பீட்டிலான மேம்பாலம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஈரோடு–பெருந்துறை–காங்கேயம் சாலையில், காளிங்கராயன் இல்லத்திலிருந்து திண்டல்மலை வரை ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் சுமார் 5.5 கிலோமீட்டர் நீளத்திற்கு உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது, விரைவில் அப்பணி துவங்கும். நாமக்கல் மற்றும் ஈரோடு மாவட்டத்தை இணைக்கும் வகையில் பள்ளிப்பாளையத்தில் ரூபாய் 29 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டித் திறக்கப்பட்டுள்ளது. ஈரோடு மற்றும் தொட்டிபாளையம் ரயில் நிலையங்களுக்கிடையே ரூபாய் 10 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டில் சாஸ்திரி நகரில் இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வந்திருக்கிறது. ஈரோடு நகரத்திற்கு ரூபாய் 76.2 கோடி மதிப்பிலான வெளிவட்டச் சாலை அமைக்கும் பணியில் எஞ்சியுள்ள 10 சதவிகித பணிகள் நிறைவு பெற வேண்டிய நிலையில்,

சில நில உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கினால் அப்பணி நிலுவையில் உள்ளது, நீதிமன்ற தீர்ப்பு கிடைத்தவுடன் அந்த வெளிவட்டச் சாலை அமைக்கப்பட்டு, நகரத்திற்குள் போக்குவரத்து நெரிசல் இல்லாத நிலை உருவாக்கப்படும். சத்தி, அத்தாணி, பவானி சாலையில் ரூபாய் 2.2 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டப்படுகிறது.

பவானியில் புறவழிச் சாலை அமைக்கும் பணி விரைவில் துவங்கப்படும். கோபியிலிருந்து சித்தோடு வரை 4 வழிச் சாலை அமைப்பதற்கு ரூபாய் 270 கோடியிலான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டவுடன் பணிகள் துவங்கப்படும்.

சித்தோடு முதல் வீரப்பன்சத்திரம் வரையிலான சாலை, மாநில அரசாங்கத்தால் 4 வழிச் சாலையாக அகலப்படுத்தப்படும்.

கோபிசெட்டிப்பாளையத்திற்கு புறவழிச் சாலை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கரட்டடிப்பாளையம், பங்களா புதூரில் பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 70 ஆண்டுகள் பழமையான பாலத்திற்கு மாற்றாக புதிய உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூபாய் 14.47 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது.

ஈரோடு, பெருந்துறை, காங்கேயம் சாலையில், திண்டல் சந்திப்பிலிருந்து வில்லரசம்பட்டி வழியாக ஊட்டி, கோத்தகிரி, சத்தி, ஈரோடு சாலையில் கண்ராத்தாங்குளம் அருகே சுமார் 9 கிலோமீட்டர் நீளமுள்ள இணைப்புச் சாலை பல்வழித் தடமாக ரூபாய் 22.50 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நிறைவடைந்தவுடன் விரைவில் பணி துவங்கப்படும்.

ஈரோடு மாவட்டம், கொடுமுடி மற்றும் நாமக்கல் மாவட்டம் புள்ளிக்கல் பாலத்தை இணைக்கும் வகையில் காவேரி ஆற்றின்

குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நிறைவடைந்தவுடன் விரைவில் பணி துவங்கப்படும்.

மாநிலச் சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஈரோட்டிலிருந்து பவானி, மேட்டூர் வழியாக தொப்பூர் வரை உள்ள சாலையை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தும் பணி விரைவில் தொடங்கப்படும்.

மேட்டுப்பாளையம் முதல் பவானி வரை ஏற்கெனவே உள்ள இரு மாநில நெடுஞ்சாலைகளை இணைத்து மாவட்ட நெடுஞ்சாலை (15) மற்றும் மாவட்ட நெடுஞ்சாலை (82), சுமார் 98 கி.மீ. நீளத்திற்கு மேம்படுத்த, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. சுமார் 77 கி.மீ. நீளமுள்ள பவானி முதல் கரூர் வரையுள்ள மாநில நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அந்தச் சாலையும் விரைவில் தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தப்படும்.

ஈரோடு அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 67.76 கோடி மதிப்பீட்டில் உயர் சிகிச்சையுடன் கூடிய பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. ஈரோடு மாவட்ட மருத்துவமனை மூலம் ரூபாய் 84.50 கோடி மதிப்பீட்டில் 18 பணிகள் நடைபெற்று வருகின்றன.

கணக்கம்பாளையம் கிராமத்தில் ரூபாய் 64 கோடி மதிப்பீட்டில் ஏரி அமைக்கும் பணி துவங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 500 ஏக்கர் பரப்பளவுள்ள விவசாய நிலங்கள் நேரடி பாசன வசதியும், 1,800 ஏக்கர் பரப்பளவுள்ள விவசாய நிலங்கள் மறைமுக கிணறுகள் நீர் செறிவூட்டுவதன் மூலம் பயன்பெறும்.

பவானி வட்டம், ஜம்பைக்கு அருகில் பவானி ஆற்றின் குறுக்கே ரூபாய் 18 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கப்படவுள்ளது. ஈரோடு, ஊராட்சிக் கோட்டையிலிருந்து தண்ணீர் எடுத்து ஈரோடு மாநகராட்சிக்கு வழங்குவதற்கான குடிநீர் திட்டப்பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்துவிட்டன, எஞ்சியுள்ள பணிகளும் மூன்று அல்லது நான்கு மாத காலங்களுக்குள் நிறைவு பெற்று என்னால் துவக்கி வைக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும், ஈரோடு மக்கள் வைத்த கோரிக்கைகளில் பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

செல்வத்தில் சிறந்த செல்வம் கல்விச் செல்வம், அழியாச் செல்வம் கல்விச் செல்வம் ஒன்று தான். ஒருவர் எவ்வளவு சம்பாதித்தாலும் அதை பாதுகாத்துக் கொண்டே இருக்க வேண்டும், இல்லையென்றால் மற்றவர்கள் களவாடி விடுவார்கள். நம் உயிர் இருக்கின்றவரை ஒட்டி இருக்கின்ற ஒரே செல்வம் கல்விச் செல்வம் மட்டும்தான். அப்படிப்பட்ட கல்விச் செல்வத்தை வேளாளர் மகளிர் கல்லூரி உங்களுக்குத் தந்துகொண்டிருக்கின்றது, அதனை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். பொருள் இருப்பவர்களுக்கு அந்த ஊரில்தான் செல்வாக்கு இருக்கும். ஆனால், கல்வி கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் பெருமை, சிறப்பு இருக்கும். அந்தச் சிறப்பை இந்தக் கல்லூரியின் மூலமாக நீங்கள் பெறவேண்டும் என்ற அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

நாங்கள் படிக்கின்றபொழுது நடந்தே சென்று பள்ளியிலே படித்தோம். நான் படிக்கின்றபொழுது எங்கள் ஊரிலேயிருந்து ஆற்றைக் கடந்து பவானி வந்து நான் படித்துக் கொண்டிருந்தேன், ஆற்றிலே தண்ணீர் நிறைந்துவிட்டால் பரிசலில் சென்று படிக்க

வேண்டும். ஆனால் இன்றைக்கு அப்படி அல்ல. ஐந்து நிமிடத்திற்கு ஒரு பேருந்து இருக்கின்றது. குறித்த காலத்தில் நீங்கள் பள்ளி, கல்லூரிகளுக்கு செல்ல முடியும், சிறந்த கல்வியை கற்க முடியும். அதுமட்டுமல்லாமல், இப்பொழுது அரசாங்கம் நிறைய சலுகைகளை கொடுக்கிறது.

யூடியூப், ட்விட்டர், வாட்ஸ்ஆப் போன்ற நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய, விஞ்ஞான உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண் பிள்ளைகளாகிய நீங்கள் மிகுந்த கவனமாகவும், தன்னம்பிக்கையோடும், படிப்பில் மட்டும் கவனம் செலுத்தி வாழ வேண்டும். மாணவிகள் உயர்கல்வி படித்து, மென்மேலும் வளர்ந்து உங்கள் பெற்றோர்களுக்கும், தேசத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என வாழ்த்தி, பொன்விழா கொண்டாடுகின்ற வேளாளர் கல்வி அறக்கட்டளை சிறந்து விளங்கி, நூற்றாண்டு விழா காணவேண்டும் என்று வாழ்த்தி வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
ஈரோடு மாவட்டத்தில், 21.08.2019 அன்று நடைபெற்ற
வேளாளர் கல்வி நிறுவனத்தின் பொன் விழா நிகழ்ச்சியை
துவக்கி வைத்து ஆற்றிய உரை.

‘கல்வித் தொலைக்காட்சி’ 24 மணி நேரமும் கல்விச் சார்ந்த நிகழ்ச்சிகளை மட்டுமே ஒளிபரப்பு செய்யும்!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

எழுச்சியான இந்த நிகழ்ச்சியில் மிகச் சிறப்பாக அற்புதமாக உரையாற்றி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.ப.தனபால் அவர்களே!

முன்னிலை உரையாற்றிய அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே!

வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களே!

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை ராதாகிருஷ்ணன் அவர்களே!

மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்களே!

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திருமதி பா.வளர்மதி அவர்களே!

வரவேற்புரை ஆற்றிய மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம் அவர்களே!

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே!

மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

நன்றியுரை ஆற்றவுள்ள பள்ளிக் கல்வித் துறை முதன்மை செயலாளர் திரு. பிரதீப் யாதவ் அவர்களே!

கல்விக் கண்ணின் ஊற்றாக விளங்கும் ஆசிரியப் பெருமக்களே! பெரியோர்களே! தாய்மார்களே! நாளைய உலகை ஆளவிருக்கின்ற மாணவச் செல்வங்களே! பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! அனைவருக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

‘கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகளவு’ என்றார் நமது தமிழ் மூதாட்டி ஔவையார். மனிதனது வாழ்க்கை அவன் கல்வியை கற்பதன் மூலமே முழுமை பெறுகிறது. பிறந்தது முதல் வாழ்நாள் முழுவதும் இடைவிடாது கற்றாலும், ஒருவனால் கல்வியில் முழுமை அடைய முடியாது.

நம்மிடம் இருக்கும் அறியாமையைப் போக்கி அறிவை விரிவாக்குகிறது கல்வி. இந்தக் கல்வியானது, அறம், பொருள், இன்பம் போன்ற அனைத்து வகைப் பயன்களையும் நமக்குத் தருகிறது. கல்வி கற்றவர்கள் இந்த பயன்களைப் பெறுவதுடன், உலகில் நல்ல புகழையும் அடைவார்கள். மேலும், “கவலை ஏற்படும்போது அந்த கவலையிலிருந்து மீள்வதற்கு உரிய வழியையும் கல்வி தரும்” என்று குமரகுருபரர் கூறியுள்ளார். எனவே, மனிதனுக்கு கல்வியைத் தவிர வேறு எதுவுமே சிறந்த துணையாக இருக்க முடியாது.

“கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

கற்கத் தகுந்த நூல்களை குற்றம் இல்லாமல் கற்க வேண்டும். பிறகு கற்ற அறிவிற்கு தக்கபடி அவற்றை பின்பற்றி நடக்க வேண்டும் என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். இந்த அறிவுரையை கல்வி கற்கும் அனைவரும் பின்பற்ற வேண்டும்.

அறிவுசார் மனிதவளம் மேம்பாடு அடைய வேண்டுமெனில் அனைவருக்கும் தங்கு தடையின்றி, தரமான கல்வி கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும். சிறப்பான கல்வி அளிப்பதாலும்; மக்களின் உடல் நலம் பேணி பாதுகாக்கப்படுவதாலும்; மனிதவளம் மேம்பாடு அடையும். மனித வளம் மேம்பட்டால் அந்த மாநிலத்தின் வளர்ச்சி சீராக இருக்கும்.

“கல்லாதவர்களே தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பதே எனது கோட்பாடாகவும் எனது அரசின் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது” என்றார் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

“சொன்னதைச் செய்வேன், செய்வதைத்தான் சொல்வேன்” என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் கூற்றுப்படி, தமிழ்நாட்டில் கல்வித் துறையில் அவர் செயல்படுத்திய திட்டங்களின் மூலம் ஒரு புரட்சியையே ஏற்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசாலும் கல்வித் துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

❖ அனைத்து குழந்தைகளுக்கும் அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே பள்ளி வசதி கிடைத்திட சிறப்பு முன்னுரிமை வழங்கி, கடந்த 8 ஆண்டுகளில் 248 புதிய தொடக்கப் பள்ளிகளை அரசு தொடங்கியுள்ளதுடன், 117 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தியுள்ளது.

❖ 1,079 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 604 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

❖ “கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சைப் புகினும் கற்கை நன்றே” – அதாவது பிறரிடமிருந்து உதவி பெற்றாவது கல்வி கற்க வேண்டும் என்கிறது நறுந்தொகை நூல். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களோ, கல்விக்கான அனைத்து செலவினத்தையும் அரசே மேற்கொள்ளும் வகையில் பல

திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தினார்கள். கட்டணமில்லாக் கல்வி, மாணவர்களுக்கு சத்துள்ள மதிய உணவு, விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மடிக்கணினி, சீருடை, காலணி, புத்தகப்பை, கிரையான்ஸ், வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப்பெட்டி, புவியியல் வரைபட புத்தகம், கம்பளிச் சட்டை, மழைக்கால ஆடை, உறைக் காலணி, காலுறைகள், பேருந்து பயண அட்டை மற்றும் மிதிவண்டிகள் போன்றவற்றை வழங்கி, மாணாக்கர்கள் கல்வியை தொடர்வதற்கான அனைத்து அத்தியாவசிய தேவைகளையும் பூர்த்தி செய்தார்கள்.

❖ மாண்புமிகு அம்மாவின் அரசு கல்வித் துறையில் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களின் பயனாக பள்ளி செல்லாக் குழந்தைகளின் எண்ணிக்கையும், இடைநிற்றல் விகிதமும் பெருமளவில் குறைந்துள்ளது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்று பல பள்ளிகளை துவங்கியதினால் மாணவர்களின் சேர்க்கை விகிதம் அதிகரித்து, இந்தியாவிலேயே உயர்கல்வி கற்பவர்களின்

எண்ணிக்கையில் தமிழகம் முதலிடம் வகிக்கின்றது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

❖ கல்வி என்பது எழுத்தறிவை மட்டும் கொடுக்காமல், மனிதனை சிந்திக்க வைக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்த மாண்புமிகு அம்மாவின் அரசு 12ஆம் வகுப்பு வரையில் புதிய பாடத் திட்டங்களை வெளியிட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு இதற்கான பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

❖ வேகமாக மாறிவரும் கற்றல் சூழ்நிலையில் தகவல் தொழில்நுட்ப செயல் திறனை பள்ளிகளில் இணைப்பது இன்றியமையாததாக உள்ளது. இதற்கென 520 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் உயர் தொழில்நுட்ப ஆய்வக வசதிகள் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அமைக்கப்பட்டு வருகின்றன.

❖ அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் அதாவது Smart Classes ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

❖ 2018–2019ஆம் ஆண்டில் 277 கோடியே 69 இலட்சம் ரூபாய் செலவில் அரசுப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு பயன்பெறும் வகையில் மாநிலம் முழுவதும் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

❖ மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த எட்டு ஆண்டுகளில் இதுவரை 6 ஆயிரத்து 613 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 46 இலட்சத்து

42 ஆயிரத்து 469 எண்ணிக்கையிலான மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் முதுகலை ஆசிரியர்களின் பணி மேம்பாட்டுத் தேவைக்காக, 29 ஆயிரத்து 891 மடிக்கணினிகளை வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவெடுத்துள்ளது. இதற்கென 37 கோடியே 86 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது போன்று பள்ளிக் கல்வித் துறையில் மாண்புமிகு அம்மாவின் அரசு எண்ணிடலங்கா சாதனைகளை புரிந்துள்ளது.

இந்த சாதனைகளுக்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில் “பள்ளிக் கல்வித் துறையின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லவும், பொதுத் தேர்வுகள், கல்வி உதவித்தொகை தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள் தொடர்பாக மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கவும் புதிய தொலைக்காட்சி அலைவரிசை தொடங்கப்படும்” என மாண்புமிகு அம்மாவின் அரசால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பிற்கிணங்க, கல்வித் தொலைக்காட்சி தனது அலைவரிசையை தொடங்கும் பணிகளை மேற்கொள்வதற்காக கல்வித் துறை அதிகாரிகள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அடுத்தபடியாக, தொழில்நுட்பப் பணி மற்றும் தொலைக்காட்சிக்கான முன் தயாரிப்பு காட்சிகளை பதிவு செய்ய தனியாக ஒரு குழு

ஏற்படுத்தப்பட்டது. இந்தக் குழுக்களின் அயராத உழைப்பின் காரணமாக, குறுகிய காலத்திலேயே, இந்தத் தொலைக்காட்சி தனது நிகழ்ச்சிகளை இன்று முதல் தொடங்கியுள்ளது. இதனை நிகழ்த்திக் காட்டிய உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தொலைக்காட்சிக்கான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பு செய்ய அதிநவீன கேமராக்கள், தொழில்நுட்ப கருவிகள், ஆளில்லா பறக்கும் கண்காணிப்பு கேமரா போன்ற பல்வேறு தொழில்நுட்பக் கருவிகள் வாங்குவதற்கென ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளன.

கல்வித் தொலைக்காட்சி அரசு கேபிளில் 200ஆவது அலைவரிசையில் ஒளிபரப்பாகும். இந்த அலைவரிசை 24 மணி நேரமும் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகளை மட்டுமே ஒளிபரப்பு செய்யும்.

வணிக நோக்கில் செயல்படும் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுடன் போட்டிபோடும் வகையில் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. எல்.கே.ஜி. முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணாக்கர்களுக்கு பயன்படும் வகையில் போட்டித் தேர்வுக்கான பயிற்சிகள், படைப்பாற்றலை மேம்படுத்தும் நிகழ்ச்சிகள், மாணவர்களின் சந்தேகங்களுக்கு தீர்வு சொல்லும் நிபுணர்களின் பதில்கள், பள்ளிக் கல்வித் துறையின் அறிவிப்புகள், புதுமையான முறையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் நேர்காணல், அரசுப் பள்ளி மாணவர்களின் கண்டுபிடிப்புகள், கல்வியாளர்களின் கலந்துரையாடல் என பல்வேறு நிகழ்ச்சிகள் 24 மணி நேரமும் இடம் பெறும்.

பொதுவாக, மாணவர்கள் தங்கள் படிப்பில் கவனம் செலுத்தாமல், வீட்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்ப்பதை பெற்றோர்கள் விரும்புவதில்லை. எனவே, அவ்வப்போது வீட்டில் தொலைக்காட்சி பார்க்கும் மாணவர்களை படிப்பில் கவனம் செலுத்துமாறு பெற்றோர்கள்

அறிவுறுத்திக்கொண்டே இருப்பார்கள். ஆனால், இந்த கல்வித் தொலைக்காட்சி தொடங்கப்பட்டதன் காரணமாக, மாணவர்கள் தங்கள் படிப்புக்கு உதவும் செய்திகளையும், தகவல்களையும் தொலைக்காட்சி மூலமாகவும் கண்டு பயன்படுத்திக்கொள்ள முடியும். இனி மாணவர்கள் கல்வித் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பதை பெற்றோர்களும் ஊக்கப்படுத்துவார்கள். எனவே, கல்வித் தொலைக்காட்சி அலைவரிசையை மாணாக்கர்கள் பார்த்து, அதனை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியப் பெருமக்களும், உங்கள் பெற்றோர்களும் உங்களுக்கு நல்ல வழிகளை காட்டுபவர்கள். தற்போதுள்ள சூழ்நிலையில், மாணாக்கர்கள் பல்வேறு தேவையற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், செல்போன்கள், சமூக ஊடகங்கள் போன்றவற்றில் தங்கள் நேரத்தை செலவிடாமல், தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் பயனுள்ள நிகழ்ச்சிகளைக் கண்டு வாழ்க்கையில் உயர்வு பெற வேண்டும். இதன்மூலம் அறிவுசார்ந்த தமிழ் சமுதாயத்தை உருவாக்கிட முடியும். படிக்கும்பொழுதே, மருத்துவர், பொறியாளர், விளையாட்டு வீரர், ஆசிரியர், மத்திய அரசு நடத்தும் சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றிபெற்று ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள், இந்திய இராணுவத்தில் பணியாற்றல், தொழில் முதலீட்டாளராதல், வங்கிப் பணியில் அமர்தல் என்று, எதிர்காலத்தில் அடைய வேண்டிய உயரிய குறிக்கோள்களை நாம் சிறு வயதிலேயே கொண்டிருக்க வேண்டும். இதனால் படிக்கும் காலங்களில் முழு கவனம் செலுத்தி நமது குறிக்கோளை எய்திட வேண்டும். ஆசியர்கள் அன்றாடம் நடத்தும் பாடங்களை அன்றைய தினமே படித்தால் தேர்வினை மிக எளிதாக எழுதி, அதிக மதிப்பெண்களை பெறமுடியும். நீண்ட நேரம் கண்விழித்துப் படிக்க வேண்டிய அவசியத்தைத் தவிர்க்கலாம். சுவரை வைத்துத்தான் சித்திரம் என்பார்கள், எனவே, படிப்பு

மட்டுமன்றி, சிறந்த ஆரோக்கியமான தேகம் நமக்குத் தேவை. எனவே, உடற்பயிற்சியிலும் கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்கள் பள்ளியில் உள்ள நேரங்களில், பள்ளிகளில் நடைபெற்ற போட்டிகள், திறன்வளர்ப்பு குறித்த பயிற்சிகள், பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கும் நிகழ்ச்சிகள் போன்றவை இன்றையதினம் தொடங்கப்பட்டுள்ள கல்வித் தொலைக்காட்சி ஒளிபரப்பில் இடம் பெறும். இதனை மாணாக்கர்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும், கல்வித் தொலைக்காட்சி தொடங்கப்படுவதன் மூலம், கல்வித் துறை சார்ந்த அரசின் அனைத்து செயல்பாடுகளையும், மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ள இயலும். மாணாக்கர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும், இந்த புதிய கல்வித் தொலைக்காட்சியினை முழுமையான அளவு பயன்படுத்திக்கொள்ளுமாறு அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கல்வித் தொலைக்காட்சியை உருவாக்குவதற்கு அரும்பாடுபட்ட பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும், அவருக்கு துணையாக இருந்த பள்ளிக் கல்வித் துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்கும், மற்றவர்களுக்கும் எனது இதயப்பூர்வமான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால், செல்வத்துள் செல்வம் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். பிற செல்வங்களெல்லாம் எந்தவொரு சூழ்நிலையிலாவது அழிந்துவிடும். ஆனால், நம் உயிர் இருக்கும் வரை நம்மோடு இருக்கும் ஒரே செல்வம் கல்விச் செல்வம். கல்வி கற்றோருக்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட கல்வி மேலும் சிறக்க கல்வித் தொலைக்காட்சியை மாணாக்கர்களுக்கு

அரசு அர்ப்பணித்திருக்கிறது. பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைக்குக் கல்வி கற்பது சாதாரண விஷயம் அல்ல. தற்போது நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறுபவர்கள் பலர் உண்டு. நாங்கள் படித்த காலம் வேறு, நீங்கள் படிக்கின்ற காலம் வேறு. இன்றைய காலகட்டத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெறக்கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், அறிவுசார்ந்த இந்த தொலைகாட்சியை உங்களுக்கு அர்ப்பணித்திருக்கின்றோம். இதனை நல்லமுறையில் பயன்படுத்தி மாணாக்கர்கள் எதிர்காலம் மென்மேலும் சிறப்படைய வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***26.08.2019** அன்று தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட*
“கல்வித் தொலைக்காட்சி”யை சென்னை, அண்ணா நூற்றாண்டு
நூலக அரங்கத்தில் துவக்கி வைத்து ஆற்றிய உரை.

தமிழகத்திலும் ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் சேவையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளும்!

இந்த கிங்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிகின்ற அனைத்து மருத்துவர்களையும் மனமார, உளமார இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அது மட்டுமல்லாமல், கிங்ஸ் மருத்துவமனையின் கிளை ஒன்றை தமிழகத்திலே அமைக்க இருப்பதாக தெரிவித்திருக்கின்றார்கள், அதற்கான முழு ஆதரவை தமிழக அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு இருக்கின்ற மருத்துவ வசதிகள் அனைத்தும் தமிழக மக்களுக்கும் கிடைக்கக்கூடிய சூழ்நிலையை இந்த கிங்ஸ் நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு தமிழக அரசின் சார்பாக, மக்களின் சார்பாக நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் பல்வேறு இடங்களை சுற்றிப் பார்த்ததில், கிங்ஸ் மருத்துவமனை உண்மையிலேயே ஒரு தலைசிறந்த மருத்துவமனையாக திகழ்கிறது. சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளை ஹெலிகாப்டர் மூலம் அழைத்து வரும் திட்டம் பாராட்டுக்குரியது. இன்றைக்கு ராபின்ஸன் ஹெலிகாப்டர் இருக்கின்ற இடத்தை பார்வையிட்டோம். சென்னையிலும் அதனை அமைப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்யவிருக்கின்றோம். உடல்நலம் பாதிக்கப்பட்டவர்கள் தொலைதூரத்திலிருந்து நகரத்திற்கு வந்து சிகிச்சை பெறமுடியாதபோது, விலை மதிக்க முடியாத உயிரை இழக்க நேரிடுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் மூலமாக குறித்த காலத்தில் மருத்துவமனைக்கு கொண்டு வந்து நோயை குணப்படுத்தி அவர்களை பிழைக்க வைக்கக்கூடிய அரிய சாதனையை கிங்ஸ் மருத்துவமனை செய்துகொண்டிருக்கிறது. அதுபோன்றே, தொலைதூரத்தில் உள்ள இடங்களில் உடல்நலம் பாதிக்கப்பட்டவர்களை குறித்த நேரத்தில் சிகிச்சை அளித்துக் காப்பாற்ற, தமிழகத்திலும் ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு நிச்சயமாக செயல்படுத்தும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***29.08.2019** அன்று, இலண்டன், கிங்ஸ் மருத்துவக்*
கல்லூரி மருத்துவமனையில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்

சுகாதாரத்தில் இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது!

பல்வேறு சுகாதார அம்சங்களில் இந்தியாவில் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு தான் முன்னிலை பெற்றுள்ளது. புதிய முக்கிய திட்டங்களை அறிமுகம் செய்தல், தரமான கொள்கைகளை புகுத்துதல், கூடுதல் நிதி ஒதுக்கீடு போன்றவை தமிழகத்தில் சுகாதாரம் மேம்பட முக்கிய பங்காற்றுகின்றன.

ஐக்கிய நாடுகள் நிருணயித்திருந்த எம்.டி.ஜி. என்ற மேம்பாட்டு இலக்குகளை தமிழ்நாடு ஏற்கெனவே அடைந்துவிட்டது. சுகாதாரப் பிரிவில் எஸ்.டி.ஜி. என்று அழைக்கப்படக்கூடிய மேம்பாட்டு நோக்கங்களை 2030ஆம் ஆண்டுக்குள் இலக்கினை அடைவதற்காக தமிழக அரசு தொடர்ந்து பயணித்து வருகிறது. தமிழக அரசு தற்போது விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் மூலம், 140 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் 1.58 கோடி குடும்பங்கள், 1,027 வகையிலான மருத்துவ சேவையை இலவசமாக அளித்து வருகின்றது.

பெண்கள் மற்றும் குழந்தைகளை மையப்படுத்தி அதிக அளவிலான சுகாதாரத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணிநேர மகப்பேறு சேவை வழங்கப்படுகிறது. தமிழகத்தில் 100 சதவீத பிரசவமும் மருத்துவமனைகளில் தான் நடக்கின்றன. இதில் இந்தியாவின் ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று.

இந்தியாவில் தமிழ்நாடு தான் அதிக மருத்துவர்களைக் கொண்ட மாநிலமாகவும், தரமான மருத்துவ சேவைகளை வழங்கும் மருத்துவ நிபுணர்களையும் கொண்ட மாநிலமாகவும் விளங்குகிறது. தேசிய சுகாதார சேவையில் தமிழகத்தைச் சேர்ந்த மருத்துவர்களும், செவிலியர்களும் அதிக அளவில் பங்களித்துள்ளனர். இங்கிலாந்தில் உள்ள சிறப்பான மருத்துவ சேவைகளை தமிழகத்திலும் செயல்படுத்த முடிவெடுத்துள்ளோம்.

இந்தியாவில் தற்போது தமிழகம்தான் முதலீடுகளை குவிப்பதற்கு ஏற்ற மாநிலமாக இருக்கிறது. ஏனென்றால் இங்கு தொழிற்சாலைகளை அமைக்கக்கூடிய சூழ்நிலைகள் உள்ளன. உயர்ந்த தரமான வாழ்க்கைக்கு இங்கு வழிவகை உண்டு. 2018ஆம் ஆண்டில் பிராஸ்ட் மற்றும் சல்லிவன், இந்திய மாநிலங்களின் தர வரிசையை பட்டியலிட்டு வெளியிட்டது. அதில், ஒட்டுமொத்த செயல்பாட்டில் இரண்டாவது இடத்தையும், முதலீடு செய்வதற்கான சாத்தியக் கூறுகளைக் கொண்ட மாநிலமாகவும் தமிழ்நாடு உள்ளது.

இந்தியா டுடே பத்திரிகை குழுமம் 2018இல் இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்களில், தமிழ்நாடு அனைத்து துறைகளில் ஒட்டுமொத்த செயல்பாட்டிற்காகவும், சட்ட ஒழுங்கினை பராமரித்தல் மற்றும் சுற்றுலா வளர்ச்சி பணிகளுக்காகவும் விருதுகளை வழங்கியுள்ளது.

இந்த ஆண்டு எனது அரசு நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாடு, உலகத்தின் பல்வேறு முதலீட்டாளர்களின் கவனத்தை

ஈர்த்துள்ளது. குறிப்பாக, ஜப்பான், தென்கொரியா, தைவான், பிரான்ஸ், அமெரிக்கா, ஜெர்மனி, பின்லாந்து நாடுகளில் உள்ள முதலீட்டாளர்களின் 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.3 இலட்சத்து 431 கோடி அளவிற்கு முதலீடுகளை ஈர்த்துள்ளது.

ஆட்டோ மொபைல், வாகன உதிரி பாகங்கள், ஜவுளி, தோல் தயாரிப்புகள், எலக்ட்ரானிக் பொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் அதிக அளவில் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆகின்றன. இந்தியாவில் இருந்து ஏற்றுமதியாகும், ஆட்டோ மொபைல்களில் 45 சதவீதம் தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி ஆகிறது. அதுபோல ஏற்றுமதியில் வாகன உதிரிபாகங்களில் 34 சதவீதம், எலக்ட்ரானிக் பொருட்களில் 16 சதவீதம் தமிழ்நாட்டின் பங்களிப்பாக உள்ளது.

தமிழ்நாட்டை அடுத்த அளவில் முன்னேற்றம் அடையச் செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகளை நாங்கள் எடுத்து வருகிறோம். பொருளாதார உள்கட்டமைப்புகளில் அரசு அங்கீகரித்துள்ள மாற்று முதலீட்டு நிதி, உலக முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதாக அமைகிறது. பசுமை எரிசக்தி, நீர், நகர்ப்புற உள்கட்டமைப்பு, வீட்டுவசதி ஆகிய இனங்களில் முதலீடு செய்வதற்கு உங்களுடன் இணைந்து பணியாற்ற எண்ணுகிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***எடப்பாடி கே. பழனிசாமி*** *அவர்கள்*
29.08.2019 அன்று இலண்டனில் உள்ள
இங்கிலாந்து பாராளுமன்ற கூட்டரங்கில்
ஆற்றிய உரையின் தமிழாக்கம்.

வெளிநாடு வாழ் தமிழர்களின் முதலீடுகளை ஈர்க்க ஏதுவாக "யாதும் ஊரே" என்ற வலைதளம் துவக்கம்!

உலகெங்கும் சென்று தமிழரின் பண்பாட்டுச் சிறப்பையும், அறிவுத் திறத்தையும் பறைசாற்றி தமிழுக்கும், தமிழ் மண்ணுக்கும் பெருமை சேர்த்து வருகின்றீர்கள். உலகில் எந்த மூலையில் இருந்தாலும், உங்கள் உயிராய் தமிழும், உள்ளமெல்லாம் தமிழ்நாடும் விளங்குகிறது என்பதை நான் அறிவேன். உலகின் மாபெரும் அறிவியல் தொழில்நுட்ப நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கைவினைஞர்கள், புத்தொழில்கள் என துறைகள்தோறும் சாதனைகள் செய்து பல நாடுகளில், புதிய தொழில் பலவற்றையும் தொடங்கி

"சீன மிசிரம் யவனரகம்–இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக்–கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும்–மிக
நன்று வளர்த்த தமிழ்நாடு"

என்று பாடிய பாரதியாரின் வாக்கின்படி, கோடிக்கணக்கான தமிழர்களின் உழைப்பால் தமிழகம் உயர்ந்து விளங்குகிறது. வறுமை நிலை என்பது துளியும் இல்லாத இந்தியாவின் வளம் நிறைந்த வளர்ச்சியில் சிறந்த மாநிலமாக, தமிழ்நாடு விளங்கிட வேண்டும். ஒரு நவீன சமுதாயம் பெறவேண்டிய அனைத்து அடிப்படை சேவைகளையும் பெற்று, உணர்வு சூழலோடு இரண்டறக் கலந்து ஒன்றி, தமிழ்நாட்டு மக்கள் உயர்ந்திட வேண்டும். இதுவே தமிழ்நாட்டிற்கான எனது தொலைநோக்குப் பார்வை என்று சூளுரைத்த மாண்புமிகு அம்மா அவர்கள் இட்ட பாதையில் எனது தலைமையிலான அரசு தொடர்ந்து பயணித்து வருகிறது.

இந்த வகையில், இந்தியாவின் சிறந்த மாநிலமாகிய தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை மேலும் சிறப்பாக்கும் பொருட்டு, உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழர்களின் சீரிய ஆலோசனைகளைப் பெறவும், தமிழ்நாட்டில் தொழில் துவங்க முன்வரும் வெளிநாட்டு வாழ் தமிழ் மக்களுக்கு ரத்தினக் கம்பளம் விரித்து வரவேற்போம், உங்களைத் தேடி தமிழ்நாடு அரசு சார்பில் முதல் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சரான நான் வருகை தந்துள்ளேன்.

எழுதிய பாடநூல் ஒன்றுதான் என்றாலும், தமிழர்களின் உள்ளத்து உயர்வையும், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம்

முன்னோர் கொண்டிருந்த உயர்ந்த உலகளாவிய பார்வையையும் இன்றளவும் எடுத்துக் காட்டும் வகையில், காலத்திற்கும் நிலைத்து நிற்கும் கணியன் பூங்குன்றனாரின் வைர வரிகளையே பெயராக "யாதும் ஊரே" என்ற ஒரு புதிய திட்டத்தை தமிழ்நாடு உருவாக்கும் என சமீபத்தில் நடைபெற்ற சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் போது நான் அறிவித்திருந்தேன்.

அதன்படி, உலகெங்கும் வாழும் தமிழர்களை நினைத்திட ஒரு புதிய உறவுப்பாலம் அமைக்கும் தமிழ்நாடு அரசின் இந்த உன்னத முயற்சியை அமெரிக்காவில் துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு அரசு தொழில் துறையின் கீழ் இயங்கும், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் இணையதளத்தில் "யாதும் ஊரே" என்ற தனி தரவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் உங்கள் முதலீடு ஆலோசனைகள் நேரடியாக தமிழ்நாடு அரசை வந்தடையும். நீங்கள் தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்ய விரும்பினால், அதற்கான வழிமுறைகளை எடுத்துக்கூறி, Single Window System என்று சொல்லக்கூடிய ஒற்றைச் சாளர முறை, சிறப்பான நிர்வாகம், அமைதியான சூழல், திறன்மிகு மனித வளம், ஈடு இணையில்லா உட்கட்டமைப்பு, தடையில்லா மின் விநியோகம், இந்தியாவின் நுழைவு வாயிலாக விளங்கும் வகையிலான பூகோள அமைப்பு என தமிழ்நாட்டின் தனித்துவத்திற்கு, இங்கு விரும்பி வந்து தொழில் துவங்கும் பன்னாட்டு நிறுவனங்களே சான்று.

சமீபத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது கையெழுத்திட்ட 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் 3 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு உத்தரவாதம் வரப்பெற்றுள்ளது. இவற்றில் இதுவரை 220 நிறுவனங்கள் தங்களுடைய முதலீடுகளை துவங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் துறைக்கு, தமிழ்நாட்டில் இது வசந்த காலம் என்பதற்கு இதை விட பெரிய சான்று தேவையில்லை. திசையெங்கும் சென்று சிறப்புகள் பல பெற்று உயர்ந்து விளங்கும் நீங்கள் தமிழ்நாட்டின்

மேம்பாட்டிற்காக, தமிழக தொழில் துறையின் சிறப்புக்களையும், முதலீட்டிற்கு உகந்த சூழலையும் பாரெங்கும் எடுத்துச் செல்லும் முதலீட்டுத் தூதுவர்களாக விளங்கிட வேண்டும் என தமிழ்நாடு அரசின் சார்பில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று
சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்,
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே"

என்று முழங்கிய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வழியில் இன்று நாம் இணைந்திருக்கிறோம். இந்நாள் தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒரு பொன்னாளாக, புது துவக்கமாக அமைந்திட வேண்டும். என் அன்புத் தமிழர்களே, "பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின் அருமை உடைய செயல்" என்று வான்புகழ் வள்ளுவர் உரைத்ததைப் போல, நாம் இன்று துவங்கும் இந்த புதிய முயற்சி உங்கள் அன்போடும், ஆதரவோடும் தமிழ்நாட்டின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கு ஊக்கமாக அமையும் என்பதில் எனக்கு சிறதளவும் சந்தேகமில்லை. இந்த முயற்சியில் உங்களுக்கு என்றும் உற்ற துணையாக மாண்புமிகு அம்மாவின் அரசும், தமிழ்நாட்டு மக்களும் என்றைக்கும் இருப்போம் என உறுதி அளிக்கின்றேன். இன்றையதினம் மதியம் 2 மணியளவில் நடைபெற்ற தொழில் முதலீட்டாளர்கள் நிகழ்ச்சியிலே 16 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன. அதன் வாயிலாக தமிழகத்திலே 2,780 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன்வந்த தொழில்முனைவோர்களுக்கு மனமார, உளமாற தமிழகத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழர்கள் எங்கு சென்றாலும் விசுவாசமாகவும், உழைப்பவர்களாகவும் இருப்பார்கள். ஆகவே, விசுவாசத்திற்கும், உழைப்பிற்கும் பெயர் பெற்றவர்கள் தமிழர்கள். அந்த உழைப்பு தான் உங்களை உயர்த்தியிருக்கின்றது. இந்த உழைப்பு தமிழகத்திற்கு கிடைக்க வேண்டும். அதற்கு நீங்கள் மனமார, உளமாற தொழில் முதலீடு

செய்ய முன்வர வேண்டும். ஆகவே, இந்த விசுவாசமும், உழைப்பும் இருக்கின்ற காரணத்தினால்தான், இங்கே மகிழ்ச்சியோடு நீங்கள் அமர்ந்திருக்கின்றீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் மாநிலத்தில் எந்த ஒரு இடத்தில் இருந்தாலும், அங்குள்ள அத்தனை பேரும் இங்கே அயல்நாடான அமெரிக்காவில் தொழிலதிபர்களாக, மருத்துவர்களாக, பொறியாளர்களாக, இன்னும் பல பணிகள் புரிகின்ற அத்தனை பேரும் தமிழ் என்று சொல்லின் கீழ் வருகின்ற தமிழ் சொந்தகளாகிய அனைவரும் தமிழ் என்ற ஒரு குடையின் கீழ் இங்கே குழுமியிருக்கின்றோம். ஆகவே, தமிழ் என்ற சொல்லுக்கு எந்த அளவு ஈர்ப்பு இருக்கின்றது என்பதை இங்கே காண முடிகிறது. ஆகவே, இதையெல்லாம் பார்க்கும்பொழுது, நீங்கள் தொழில் முதலீடு செய்வதற்கு மனமார, உளமாற முன்வர வேண்டும் என்று அன்போடு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரைக்கும் அரசியலிலே ஒரு படி மேலே வந்திருக்கின்றேன். நான் முதலமைச்சராக வருவேன் என்று கனவு கூட காணவில்லை. இருந்தாலும், ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களிடத்தில் விசுவாசமாக இருந்த காரணத்தினால் படிப்படியாக நான் உயர்ந்தேன். நான் 6 முறை சட்டமன்றத் தேர்தலிலும், 3 முறை நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு, பல முறை வெற்றி பெற்றிருக்கின்றேன், சிலமுறை வெற்றி வாய்ப்பை இழந்திருக்கின்றேன், ஆகவே, அந்த உழைப்பால் நான் இங்கே நிற்கின்றேன், உழைப்பால் நீங்கள் இங்கே அமர்ந்திருக்கின்றீர்கள். நான் முதலமைச்சராக இருக்கின்ற காரணத்தினால்தான் உங்களை சந்திக்க முடிகின்றது, இந்த எடப்பாடி பழனிசாமியை நீங்களும் காண முடிகின்றது, உங்களை சந்திக்கின்ற வாய்ப்பை இறைவன் நமக்கு அளித்திருக்கிறார், அதற்கு இறைவனுக்கு இந்த நேரத்தில் நன்றியை கூறிக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழ் சொந்தங்களை இறைவன் இணைத்திருக்கின்றார்,

அந்த இறைவனுக்கு அனைவரும் நன்றி சொல்லி, இந்த நிகழ்ச்சியை சீரோடும், சிறப்போடும் தமிழ் சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் மிக பிரம்மாண்டமாக அமைத்ததற்கு அவர்களுக்கு மனமார, உளமாற பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து, இங்கே வந்து பணிபுரிகின்ற அத்தனை நல்ல உள்ளங்களும் சீரோடும், சிறப்போடும் எல்லாம் வல்ல இறைவன் அருளால் நலமோடும், வளமோடும் வாழ்ந்து, தமிழகத்திற்கு நீங்கள் பெருமை சேர்க்க வேண்டுமென்று கூறி, வாய்ப்பிற்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***03.09.2019** அன்று நியூயார்க்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில்,*
வெளிநாடு வாழ் தமிழர்களின் முதலீடுகளை ஈர்க்க ஏதுவாக
“யாதும் ஊரே” என்ற திட்டத்தினை துவக்கி வைத்து ஆற்றிய உரை

நாம் மறந்து கைவிட்ட பாரம்பரிய உணவுகளை நமது அன்றாட வாழ்வில் எடுத்துக்கொண்டு நலமுடன் வாழ்வோம்!

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

நாம் உட்கொள்ளும் உணவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த மக்கள் நல்வாழ்வுத்துறையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'மதராசபட்டினம் விருந்து – வாங்க ரசிக்கலாம். ருசிக்கலாம்' என்ற இந்த நிகழ்ச்சியில் கலந்துக்கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு, சிறப்பாக உரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டு இருக்கிற மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்களே!

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே!

மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணைவுத் திட்டத்துறை அமைச்சர் டாக்டர் வி.சரோஜா அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்று இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களே,

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்களே,

சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, இ.ஆ.ப., அவர்களே,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., அவர்களே,

மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! முன்னாள் அமைச்சர் பெருமக்களே, முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களே, முன்னாள் உள்ளாட்சி

பிரதிநிதிகளே, கூட்டுறவுச் சங்க நிர்வாகிகளே, வருகை தந்திருக்கும் பெரியோர்களே! தாய்மார்களே! அரசு உயர் அலுவலர்களே! பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவே மருந்து – மருந்தே உணவு என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால்இன்று உணவு என்பது அலங்காரப் பொருளாக மாறிவிட்டது. வெவ்வேறு நாட்டின் உணவு வகைகளுக்கும், விதவிதமான சமையல் வகைகளுக்கும், நமது நாக்கு அடிமையாகி விட்டது. ஆனால் நாம் ஆரோக்கியமான வாழ்வு வாழ நமது முன்னோர்கள் உட்கொண்ட ஆரோக்கியமான சத்தான உணவுகளையே, உட்கொள்ள முன் வரவேண்டும்.

அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து

என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். அதாவது முன்னர் நாம் சாப்பிட்ட உணவு நன்கு செரித்தபின், நம் தன் உடம்பிற்கு ஏற்ற உணவினை நன்கு அறிந்து, பசியெடுத்த பின்னரே உண்ண வேண்டும். இதை நாம் தவறாது கடைப்பிடித்தால், நோய்கள் நம்மை அண்டாது.

இந்தியா முழுவதும் அமலுக்குக் கொண்டு வரப்பட்ட உணவுப் பாதுகாப்புத் தரங்கள் சட்டம் **2006**ன்படி பொதுமக்களுக்குப் பாதுகாப்பான, சத்தான, சுகாதாரமான, செறிவூட்டப்பட்ட, சரிவிகித உணவைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த அக்கறையோடு தமிழ்நாடு அரசால் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இன்று காலை தொடங்கி வரும் ஞாயிறு மாலை வரை நடைபெறவிருக்கின்ற 'மதராசபட்டினம் விருந்து வாங்க ரசிக்கலாம், ருசிக்கலாம்' என்ற நிகழ்ச்சியை துவக்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்பொழுதெல்லாம் இளம் வயதிலேயே மக்களுக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், இதய சம்பந்தப்பட்ட நோய் ஆகியவை பெருகி வருவதற்கு முதல் காரணம், நமது உணவுப் பழக்க வழக்கமே.

நமது முன்னோர்கள் பாரம்பரிய உணவு வகைகளான சாமை, கேழ்வரகு, தினை, குதிரைவாலி, கம்பு, சோளம் போன்ற இதர நவதானியங்களை அன்றாட உணவில் பயன்படுத்தியதனாலும், அதற்கேற்ப உடல் உழைப்பை மூலதனமாகக் கொண்டு வாழ்ந்ததினால்தான், அன்றைக்கு அவர்களுக்கு இரத்த அழுத்தம், மாரடைப்பு, நீரிழிவு நோய் போன்றவை அரிதாக காணப்பட்டது.

நமது அன்றாட வாழ்வில் பாரம்பரிய உணவுப் பழக்கத்தோடு உடற்பயிற்சியும் மேற்கொண்டு நாம் ஆரோக்கியமாக வாழவேண்டும். உடற்பயிற்சி எவ்வாறு உடலுக்கு வலிமையாக்குகிறதோ, அதுபோன்றே மனதை புத்துணர்ச்சியூட்ட யோகா மற்றும் தியான பயிற்சிகள் அவசியமாகிறது. இதனை நமது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் "Fit India" (ஃபிட் இந்தியா) என்ற திட்டத்தின் மூலம் இந்தியா முழுவதும் நடைமுறைப்படுத்தியுள்ளார்கள்.

மத்திய உணவுப் பாதுகாப்புத் தர நிர்ணய ஆணையரகம் கடந்தாண்டு அக்டோபர் மாதம் தேச பிதா மகாத்மா அவர்களின் **150**ஆவது பிறந்தநாளை ஆண்டு முழுவதும் கொண்டாடும்

வகையில் பல திட்டங்களை அறிவித்தது. தமிழ்நாட்டில் நடைபெற்ற இப்பயணத்தில், வழியெங்கும் உணவுப் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து "குறைந்த உப்பு", "குறைந்த சர்க்கரை", "குறைந்த கொழுப்பு" என்ற தாரக மந்திரத்தினை அடிப்படையாகக் கொண்டு பொதுமக்கள் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நமது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்த சிறந்த நடவடிக்கைகளுக்கு மகுடம் சூட்டும் வகையில் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத்துறை இந்தியாவில் முதல் சிறந்த மாநிலமாகவும், சிறந்த நகரமாக மதுரையும் மற்றும் சிவகாசியும் தேர்வு செய்யப்பட்டது.

ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள பல்வேறு உணவு வணிகர்களை தேர்ந்தெடுத்து அவர்களை ஒருங்கிணைத்து அவர்களது உணவின் சிறப்பை பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் இந்த விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த விருந்தின் முக்கிய அம்சமாக அடுத்த 3 நாட்களுக்கு பல்வேறு சுவைகளை நமக்கு படைக்க 160 உணவு அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுய உதவி குழுக்கள் / அங்கன்வாடி பணியாளர்களின் உணவு அரங்கங்கள் மற்றும் பல்வேறு மாவட்டத்தை சார்ந்த சிறப்பு உணவு அரங்கங்கள் இடம் பெறுகின்றன. விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் வினாடி வினா, கலந்தாய்வு மற்றும் செய்முறை விளக்கங்கள், முக்கிய பிரமுகர்களின் உரைகள், பட்டிமன்றம் மற்றும் சமையல் வல்லுநர்களின் ஆரோக்கியமான சமையல் செய்முறைகள் குறித்த விளக்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முன்பெல்லாம் கேப்பை களி, வரகரிசி சோறு, கம்பு தோசை, தேன் கலந்த தினைமாவு போன்ற சிறு தானியங்கள்தான் பெருவாரியான நம் மக்களின் உணவாக இருந்தது. வரகு, சாமை, கம்பு, சோளம், தினை, குதிரைவாலி போன்ற தானியங்களைச் சமைத்து உண்பதன் மூலம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்; கொழுப்பு சத்து

குறையும்; உடலுக்கு நல்ல ஊட்டச் சத்து கிடைக்கும். உடல் நலன் பாதுகாக்கப்படும். எனவே நமது முன்னோர்கள் வழங்கிச் சென்ற உணவு வகைகளை மீண்டும் உட்கொள்ள ஆரம்பித்தால், நாம் அனைவரும் நல்ல உடல் ஆரோக்கியத்தைப் பெற்று சுகமாக வாழ முடியும்.

நமது உடல் நலத்திற்காக பின்பற்றப்பட வேண்டிய வாழ்க்கை முறைகள், உண்ண வேண்டிய சத்தான உணவு வகைகள், உடல் ஆரோக்கியத்திற்கான ஆலோசனைகள் ஆகியவற்றை வழங்குவதற்காக நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியில் பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக்கொண்டு, ஆலோசனைகளைப் பெற்று, ஆரோக்கியமான தமிழ்நாட்டினை, சமுதாயத்தினை உருவாக்க வேண்டும் என அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே வேளையில் ‘‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்‘‘ என்ற பழமொழிக்கேற்ப, யார் ஒருவருக்கு நோய் இல்லையோ, அவர் மிகுந்த செல்வந்தராக வாழமுடியும். எவ்வளவுதான் செல்வம் நம்மிடத்திலே இருந்தாலும், சர்க்கரை நோய் வந்துவிட்டால், சர்க்கரையால் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களை வேடிக்கைதான் பார்க்க முடியும், உண்ண முடியாது. ஆனால், சர்க்கரை நோய் இல்லாத ஒரு ஏழையாக இருந்தாலும் கூட, சர்க்கரையால் செய்யப்பட்ட உணவுப் பண்டங்களை அள்ளி, அள்ளி வயிறு நிரம்ப சாப்பிடலாம். எனவே, தான் ‘‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்‘‘ என்று பழமொழியில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதேபோல, ரத்தக் கொதிப்பு, சர்க்கரை நோய் ஆகியவை வருவதற்கு முன்பு நான் சொன்னவற்றையெல்லாம் பின்பற்றினால் இவை வராமல் தடுக்கலாம், வந்துவிட்டால் அதை நாம் கட்டுப்பாட்டுக்குள் தான் வைத்திருக்க முடியும். ஆகவே, வராமல் இருப்பதற்கு என்னென்ன வழிமுறைகள் தேவையோ அதை அரங்கிலே இன்றைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

அதேபோல, இன்றையதினம் மழைநீர் சேகரிப்பைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பிளாஸ்டிக் ஒழிப்பு பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், டெங்கு ஒழிப்பு பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் விழைகின்ற மிகப் பிரம்மாண்ட பேரணியை இந்த நிகழ்ச்சி முடிந்தவுடன் துவக்கி வைக்கின்றேன் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

நாம் மறந்து கைவிட்ட நமது முன்னோர்களின் பாரம்பரிய உணவை நமது அன்றாட வாழ்வில், இனிமேல் தினசரி எடுத்துக் கொண்டு நலமுடன் வாழ உறுதி ஏற்போம்.

இந்த இனிய மதராசபட்டினம் விருந்தினை நல்லமுறையில் ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
13.09.2019 அன்று மக்கள் நல்வாழ்வு மற்றும்
குடும்ப நலத்துறை – உணவு பாதுகாப்புத் துறையினால் நடத்தப்பட்ட
“மதராசபட்டினம் விருந்து – வாங்க ரசிக்கலாம், ருசிக்கலாம்”
என்ற நிகழ்ச்சியை துவக்கி வைத்து ஆற்றிய உரை.

மக்கள் அனைவரும், மரம் வளர்ப்பு பணிகளில் பங்கேற்று தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக உருவாக்க ஒத்துழைக்க வேண்டும்!

மாண்புமிகு அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தி மரக்கன்றுகள் நட்டு தமிழ்நாட்டின் பசுமைப் போர்வையை உயர்த்துவதை இலக்காகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள ஈஷா யோகா மையத்தின் ஒரு அமைப்பான பசுமைக் கரங்கள் இயக்கத்தின் சார்பில் இன்று நடைபெறும் மரம் நடும் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவிலே கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவிருக்கின்ற மாண்புமிகு ஆளுநர் அவர்களே!

சிறப்புரையாற்றிய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தமிழ்மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு.ஜி.கே.வாசன் அவர்களே!

இங்கே, சிறப்பான நிகழ்ச்சிக்கு கதாநாயகனாக விளங்கிக் கொண்டிருக்கின்ற, தலைமையுரையாற்றிய சத்குரு அவர்களே!

அப்பல்லோ மருத்துவமனையின் தலைவர் அவர்களே!

திருமதி சுகாசினி மணிரத்னம் அவர்களே! வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே! தாய்மார்களே! பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே! மற்றும் இவ்விழாவில் கலந்துகொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

மரங்கள் மண்ணின் வளங்கள், காற்றின் கரங்கள், மரங்கள் மண்ணை மருதாணியாய் குளிர்விக்கின்றது. நிலங்களுக்கு மரகதப் போர்வை போர்த்தி அழகு பார்க்கின்றன. மரங்கள் பாதசாரிகளுக்கு நிழற்குடை, பயணிக்குத் தங்கும் விடுதி, பறவைகளுக்கு சரணாலயம், அது இனிமையின் சாசனம், இயற்கையின் வாசம்.

நிழலின் அருமை வெயிலில்தான் தெரியும் என்பது பழமொழி. நாம் அனைவரும் நிழலின் அருமையை உணர்ந்துள்ள இவ்வேளையில், நிழலினை உருவாக்க மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதும், நிழல் தரும் மரங்களைக் காப்பதும் நம் அனைவரின் கடமையாகும்.

மரங்களால் சுவாசக் காற்று அதிகரிக்கின்றது, நில அரிப்பு தடுக்கப்படுகின்றது. மழை மாதந்தோறும் பொழிவதற்கு மண்ணின் மீதுள்ள மரங்களே அழைத்திடுகிறது.

மரம்நடுவோம்!மழைபெறுவோம்!என்றவாசகம்நாம்அனைவரும் அறிந்ததே, மரங்கள் மழை கொடுக்க வேண்டுமென்றால் நமக்குத் தேவை காடுகள். காடுகள் மனிதர்களால் உருவாக்கப்படுவதில்லை, மனிதன் நட்ட மரங்களைவிட மண்ணே நட்ட மரங்களே அதிகம். கரங்கள் நட்ட மரங்களைவிட காற்றே நட்ட மரங்களே அதிகம்.

ஒற்றை மரம், ஒரு நாளைக்கு சராசரியாக சுமார் **300** லிட்டர்கள் வரை தண்ணீரைத் தன்னுடைய வியர்வையாக வெளியேற்றுகிறது.

மரங்கள் தங்களது தேவையான நீரைவிடப் பல மடங்கு அதிகமான நீரை உறிஞ்சிக்கொள்ளும். அந்த உபரி நீர் அவ்வளவும் வெளியாகி ஈரப்பதமாக காற்றில் கலந்துவிடுகிறது. அந்த உபரி நீர்தான் காற்றைக் குளிர்வித்து நம்மையும் குளிர்விக்கின்றன. அந்த உபரி நீரை கொண்டுதான் மேகங்களும் நமக்கு மழையை கொடுக்கின்றன.

இந்தியத் திருநாட்டின் கலாச்சாரத்தில் மரம் ஒரு இன்றியமையாத பங்கு வகிக்கிறது. எடுத்துக்காட்டாக, நாம் வேப்ப மரத்தினை மாரியம்மன் தெய்வத்தினோடும், அரச மரத்தினை விநாயகப் பெருமானோடும் எப்பொழுதும் இணைத்து வழிபடுவது வழக்கம். இன்றும் பல்வேறு பழங்குடியின மக்களின் சடங்குகளில், குறிப்பாக திருமண சடங்குகளில் மரத்தினை வணங்கி திருமணத்தை நடத்துவது வழக்கமாக கடைபிடிக்கப்படுகின்றது.

மருது சகோதரர்கள் நினைவாக மரங்கள் இரண்டினை வளர்த்து வந்த ஓர் பெரியவர், அம்மரங்களை அரசரே ஆணையிட்டும் வெட்ட அனுமதிக்காத நிகழ்வு மக்களுக்கு மரத்தின் மீது இருந்த அக்கறையினை உணர்த்துகிறது.

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
காடும் உடையது அரண்.

இதன் பொருள், மணிபோல் தெளிந்த நீரும், நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் ஒரு நாட்டின் அரண் ஆகும் என்பதை வலியுறுத்தி தெய்வப்புலவர் திருவள்ளுவர் திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த தினத்தையொட்டி, மாநிலத்தில் பசுமைப் போர்வையினை அதிகரித்தல், சுற்றுச்சூழல் மாசினால் ஏற்படும் விளைவுகளைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு மாபெரும் மரம் நடவுத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கப்பட்டது. தொடர்ந்து மாண்புமிகு

அம்மாவின் அரசாலும் 2011–2012ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, 4 கோடியே 69 இலட்சம் மரக்கன்றுகள் நடவு மற்றும் பராமரிப்பு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2019–2020ஆம் ஆண்டில் 71 இலட்சம் மரக்கன்றுகள் நடுவதனை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

- முழுமையடையாத வனப்பகுதிகளில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 71 இலட்சம் மரக்கன்றுகளும்,
- காப்பு வனங்களுக்கு வெளியே மரப்பரப்பை அதிகரிக்கவும், வேளாண் பெருங்குடி மக்களின் வருமானத்தைப் பெருக்குவதற்கும், தமிழ்நாடு உயிர்ப்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் தனியார் நிலங்களில் சுமார் 8 கோடி மரக்கன்றுகளும்,
- காவேரி ஆற்றுப்படுகைகளில் மண்ணரிப்பைத் தடுக்கவும், மரப் போர்வையினைஅதிகரிக்கவும், தேக்குமரம் நடும் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 2.40 இலட்சம் தேக்கு மரக்கன்றுகளும்,
- வேளாண் காடுகள் திட்டத்தின் கீழ் 9 இலட்சம் மரக்கன்றுகளும்,
- மண் அரிப்பை தடுக்கவும், ஈரத் தன்மையை பாதுகாக்கவும், பனை மரத்தை நம்பியுள்ள மக்களின் வாழ்வாதரத்தை உறுதி செய்யும் வகையிலும், தமிழ்நாட்டின் மாநில மரமான பனை மரங்களை நடுதல் மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆண்டிற்கு இரண்டு இலட்சம் பனை விதைகளும் இதுவரை தமிழ்நாட்டில் நடப்பட்டுள்ளன.
- மேலும், வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை மூலமாக 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டு 2.5 கோடி பனை

விதைகளை நடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

தமிழ்நாடு சந்திக்க உள்ள சவால்களை முழுவதுமாக உணர்ந்து தான் மாண்புமிகு அம்மாவின் அரசு மாநில வனக் கொள்கை, 2018ஐ வடிவமைத்துள்ளது. இந்தக் கொள்கையில் மாநிலத்தின் நீண்ட நெடும் கடற்கரை, கிழக்கு மற்றும் மேற்கு மலைத் தொடர்கள், வறண்ட பருவநிலை மற்றும் நீர் பற்றாக்குறையை போக்க வேண்டிய பாங்கு, வனப்பகுதிகளுக்கு வெளியேயும் மரங்களை வளர்த்து அதன் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மரங்கள் அதிகரிக்கும்போது காற்று குளிர்கிறது. வாயு மண்டலத்தில் உள்ள தட்பவெப்ப நிலையும் சீராகின்றது. கார்பன்டை ஆக்ஸைடின் அடர்த்தி அதிகரிக்காமல் இருக்கிறது. ஓசோன் மண்டலம் பாதுகாக்கப்படுகிறது. பயிர்கள் செழிக்கின்றன. நோய்கள் குறைகின்றன. நீர்வளம் பாதுகாக்கப்படுகின்றது. தொழில்கள் முன்னேறுகின்றன. ஆரோக்கியமான மனித வளம் நாட்டில் பெருகுகின்றது.

இதேபோன்று, சுற்றுச் சூழல் மாசினை கட்டுப்படுத்த தமிழ்நாடு சூழல் சுற்றுலாக் கொள்கை, 2017 மற்றும் தமிழ்நாடு சுற்றுச்சூழல் கொள்கை, 2017 அறிவிக்கப்பட்டு, பல்வேறு நடவடிக்கைகள் மாண்புமிகு அம்மாவின் அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன.

காவேரி ஆற்றின் பல்லுயிர் காத்தல், காவேரி மற்றும் அதன் துணை நதிகளில் மாசுகளை அகற்றுதல், காவேரி நகர்ப்புற கழிவு நீரை சுத்திகரிக்க தேவையான சுத்திகரிப்பு ஆலைகளை நிறுவுதல், ஆற்றுப்படுகையில் மரங்களை நட்டு காடுகளை வளர்த்தல், ஆற்று முகப்பு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள “நடந்தாய் வாழி காவேரி” என்ற திட்டத்தினை செயல்படுத்த மாண்புமிகு பாரதப் பிரதமர்

அவர்களிடம் நான் கோரிக்கை வைத்தேன். அதன் தொடர்ச்சியாக "நடந்தாய் வாழி காவேரி" திட்டத்தினைப் பாராட்டி, இதேபோல் நாட்டிலுள்ள ஜீவநதிகளில் செயல்படுத்த மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் நாடாளுமன்ற கூட்டத்தில் தனது உரையில் இத்திட்டத்தினை குறிப்பிட்டுள்ளார் என்பதை பெருமையுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்க விரும்புகின்றேன்.

இதேபோன்று, தமிழகத்திலுள்ள பவானி, வைகை, அமராவதி, தாமிரபரணி ஆறுகளும் மாசுபடுவதைத் தடுக்க மாண்புமிகு அம்மாவின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதேபோன்று, வைகை மற்றும் நொய்யல் ஆறுகளுக்கு புத்துயிர் அளிக்கும் திட்டம் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.24.58 கோடி மதிப்பீட்டில் 2017–2018 முதல் மூன்று ஆண்டுகளுக்கு செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு 2018–2019ஆம் ஆண்டு வரை ரூ.14.06 கோடி செலவீனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பாலாறு ஆற்றிற்கு புத்துயிர் அளிக்கும் திட்டம் 2019–2020ஆம் ஆண்டு முதல் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு பல்வேறு புதிய நீர் மேலாண்மை திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. முக்கியமாக, நீர்நிலை ஆதாரங்களை பொதுமக்கள் பங்களிப்புடன் தூர்வாரும் குடிமராமத்து திட்டம், தமிழ்நாடு நீர் மேலாண்மை இயக்கம் ஆகியவற்றை இங்கு குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்குத் தடை என்னும் திட்டத்தினை முன்னெடுத்தபோது ஒவ்வொரு குடிமகனும் அதனை ஆதரித்து, தங்களது பழக்கங்களில் மாற்றத்தினைக் கொண்டு வந்தததினால்தான் இத்திட்டம் வெற்றி பெற்றுள்ளது என்பதை இந்நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டம் தொடர மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை என்னும் திட்டத்தினை இந்தியா முழுவதும் செயல்படுத்த அறிவிப்பு செய்துள்ளதை இந்த நேரத்திலே நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதுபோன்ற நடவடிக்கைகளை அரசு செயல்படுத்துவதோடு மட்டுமல்லாமல், தன்னார்வலர்களும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் பொதுமக்களும் இணைந்து ஒரு மக்கள் இயக்கமாகச் செயல்படுத்த வேண்டும். உதாரணமாக, மாண்புமிகு அம்மா அவர்களின் "மழை நீர் சேகரிப்புத் திட்டம்" எப்படி மக்கள் இயக்கமாக மாற்றப்பட்டதோ அதுபோல, மரங்கள் நட்டு நதியைப் பாதுகாக்கும் திட்டத்தையும் மக்கள் இயக்கமாக நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயல்படுத்த வேண்டும்.

பொதுமக்கள் தங்கள் குழந்தைகளின் பிறந்தநாள் கொண்டாட்டம், திருமண நிகழ்ச்சி, திருமண ஆண்டு விழா நிகழ்ச்சி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளின்போது மரக்கன்றுகளை வழங்கினால் இந்தத் திட்டம் இன்னும் விரிவடையும். மரக்கன்றுகளை முறையாக நட்டு வளர்த்தால் காடு செழிக்கும். நாடு செழிக்கும்.

உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். புதுக்கோட்டை மாவட்டம், சேந்தக்குடியைச் சேர்ந்த பாரம்பரியமான விவசாய குடும்பத்தைச் சேர்ந்த திரு.தங்கசாமி, ஆரம்பத்தில் நவீன விவசாயத்தில் லாபமும் மனநிறைவும் கிடைக்கவில்லை என்பதனால், தன்னிடமுள்ள பத்து ஏக்கர் நிலப்பரப்பில் காடு வளர்க்க ஆரம்பித்தார். யார் அவர் வீட்டிற்கு வந்தாலும் சரி, எவர் வீட்டிற்கும் அவர் போனாலும் சரி மரக்கன்று ஒன்றினை நட்டு விடுவார். வீட்டில் எந்த விசேஷமானாலும் மரக்கன்றினை நட்டு விடுவார். இதனால் சேந்தக்குடி கிராமத்தில் நுழையும்போது காற்றில் ஒரு குளுமையை உணர முடியும். எங்கும் பசுமையே வியாபித்திருக்கிறது. இன்று அவர் கைப்பட்ட

மரக்கன்றுகள் மாவட்டம் முழுவதும் முளைத்து கிடக்கின்றன. அவரது மகன் கல்யாணம் அன்று மட்டும் ஊரில் 10 ஆயிரம் மரக்கன்றுகளை கொடுத்துள்ளார். அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, இஸ்ரேல் எங்கெங்கோ இருந்து வருகின்ற மாணவர்கள் இவரிடம் காடு வளர்ப்பு பற்றிய அறிவுரைகளை பெற்றுச் செல்கின்றனர். இது போன்று நாம் அனைவரும் செய்ய முனைந்தால், நம் நாடு சோலைவனமாக மாறும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு பல்வேறு நிலைகளில் நதிகளையும் வனங்களையும் பாதுகாக்கும் வண்ணம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்நாளில், காவேரி நதியைப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், சத்குருஜி அவர்கள் "காவேரி கூக்குரல்" என்ற ஒரு இயக்கத்தை துவங்கியுள்ளது பெருமை அளிக்கிறது என்பதை இந்த நேரத்தில் நினைவுகூற கடமைப்பட்டிருக்கின்றேன். தலைக்காவேரியில் அவருடைய பயணத்தைத் துவக்கி வைத்து, இன்றைக்கு சென்னை வந்தடைந்திருக்கின்றார். வருகின்ற வழியெல்லாம் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கின்றார்.

இதுவரை 69,000 விவசாயிகள் வேளாண் காடுகள் குறித்து பயிற்சி பெற்றுள்ளனர் என்ற விவரம் அறிந்தேன். இந்த இயக்கத்தை அடுத்து வரும் 12 வருடங்களுக்குள் இதைப் படிப்படியாக மக்களிடம் பெரிய அளவில் எடுத்துச் செல்வார்கள் என்று அறிகிறேன். இவ்வியக்கத்தின் வாயிலாக 242 கோடி மரங்களை நடுவதற்குத் திட்டம் தீட்டியுள்ளார்கள். இது வரவேற்கத்தக்கது. இந்தியாவிலேயே அதிக மரக்கன்றுகளை நடுகின்றவர் சத்குருஜி அவர்கள் தான் என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் அனைவரும், குறிப்பாக இளைஞர்கள், பெண்கள் பெருவாரியாக மரம் வளர்ப்புப் பணிகளில் தொடர்ந்து பங்கேற்று தமிழ்நாட்டை முன்னோடி மாநிலமாக உருவாக்க மாண்புமிகு அம்மாவின் அரசு எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும்

ஒத்துழைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, சத்குருஜி அவர்கள் எடுக்கும் முயற்சிக்கு எங்களுடைய அரசு துணை நிற்கும் என்று சொல்லி, 242 கோடி மரங்களையும் நடுகின்றபொழுது நிச்சயமாக இயற்கை வளம் பெருகும். அந்த இயற்கை வளம் பெருகின்றபொழுது நல்ல காற்று மற்றும் ஆரோக்யமான வாழ்வு கிடைக்கும். நல்ல மழையும் கிடைக்கும். அனைத்தும் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் நாம் 242 கோடி மரங்களையும் நட்டு நம்முடைய சத்குருஜி அவர்களின் கனவை நனவாக்கப் பாடுபடுவோம் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***15.09.2019** அன்று ஈஷா யோகா மையத்தின் சார்பில்*
சென்னை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மரம் நடும் விழிப்புணர்வு
நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆற்றிய உரை

இயற்கையைப் பாதுகாப்பதற்கும் வனவிலங்குகள் பாதுகாப்பாக வாழ்வதற்கும், வனத்துறை முக்கிய பங்காற்றுகிறது!

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

வனக்காப்பாளர்கள் பயிற்சி நிறைவு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி சிறப்பான தலைமையுரை ஆற்றிய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களே!

மாநிலங்களவை உறுப்பினர் முன்னாள் அமைச்சர் திரு.ஏ.கே.செல்வராஜ் அவர்களே!

சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.பி.ஆர்.ஜி.அருண்குமார் அவர்களே! திரு.ஓ.கே.சின்னராஜ் அவர்களே! திரு.வி.சி. ஆறுக்குட்டி அவர்களே! திரு.எட்டிமடை ஏ. சண்முகம் அவர்களே! திருமதி கஸ்தூரி வாசு அவர்களே! திரு.வி.பி.கந்தசாமி அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று வரவேற்புரை ஆற்றிய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்களே!

வனத்துறைத் தலைவர் அவர்களே!

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்களே!

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே!

தமிழ்நாடு வன உயர் பயிற்சியகத்தின் இயக்குநர் அவர்களே!

வனத்துறையில் பயிற்சி முடித்து பணியில் இணையவிருக்கும் வனக்காப்பாளர்களே, அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர் பாதுகாப்பு மற்றும் உயிர்ப்பன்மை பாதுகாப்பு ஆகியவற்றிற்கு வனம் மற்றும் வன உயிரினப் பாதுகாப்பு மிகவும் அத்தியாவசியமானதாகும். வளிமண்டலத்திலிருந்து கரியமில வாயுவினை நீக்கக்கூடியவைகளாக வனங்கள் செயல்படுகின்றன. பூமிக்கடியில் பரந்துள்ள மரம், செடி, கொடிகளின் வேர்கள் மண் வளத்தினைப் பிணைத்து, மண் அரிப்பினைத் தடுத்து, வெள்ளம்

மற்றும் நிலச்சரிவுகளிலிருந்து நமக்கு பாதுகாப்பு அளிக்கின்றது. மனித இனத்தின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு அத்தியாவசியமான காடுகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியாக உள்ளது. “வனமே வாழ்வு” என்பதை உணர்ந்தவர்கள் நாம். காடுகளை நேசித்த மன்னர்களையும், மக்களையும் தமிழ்நாடு வரலாறு நெடுகிலும் நம்மால் காண முடிகிறது.

1855ஆம் ஆண்டு அப்போதைய பிரிட்டிஷ் அரசு Dr.H.F.கிளக்ஹார்ன் அவர்களை மெட்ராஸ் பாரஸ்ட் டிபார்ட்மெண்ட் (Madras Forest Department) எனும் துறையை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணித்தது. அவரையே சென்னை மாகாணத்தின் முதல் வனப்பாதுகாவலராக நியமித்தது. அதன்படி உருவாக்கப்பட்டு, பின்னர் 1864ஆம் ஆண்டு இந்திய வனத்துறையாக உருவெடுத்தது. அந்த வகையில் வனப்பாதுகாப்பைப் பொறுத்தவரையில் தமிழ்நாடே ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் வழிகாட்டியாக இருந்துள்ளது என்பதை இங்கே பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். அதன் பிறகு 1865, 1878 மற்றும் 1882 ஆகிய ஆண்டுகளில் இந்திய மற்றும் மெட்ராஸ் வனச் சட்டங்கள் இயற்றப்பட்டு வனங்கள் அரசுடைமையாக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகிறது.

25.07.2018 அன்று மாண்புமிகு அம்மாவின் அரசு, தனியே வனக் கொள்கை ஒன்றை வெளியிட்டது வரலாற்று சாதனையாகும். இந்த வனக் கொள்கையில் மாநிலத்தின் நீண்ட நெடும் கடற்கரை, கிழக்கு மற்றும் மேற்கு மலைத் தொடர்களின் சங்கமம், வறண்ட பருவநிலை மற்றும் நீர் பற்றாக்குறையை போக்க வேண்டிய அவசியம், வனப் பகுதிகளுக்கும் வெளியேயும் மரங்களை வளர்த்து அதன் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம் போன்ற தனித்துவமான பண்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை–**2023**, மாநிலம் முழுவதும் சமநிலைப்பட்ட சுற்றுச்சூழலை வலியுறுத்துகின்றது. **33** விழுக்காடு வனம் மற்றும் அடர்த்தியான பரப்பினை எய்திடும் வகையில் இலக்குகள் நிருணயிக்கப்பட்டுள்ளது.

இந்திய வன நில அளவை நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள **2017**ஆம் ஆண்டு அறிக்கையின்படி மாநிலத்தின் வனப்பரப்பு **26** ஆயிரத்து **281** சதுர கிலோ மீட்டர். இது மாநிலத்தின் மொத்த புவியியற் பரப்பில் **20.21** விழுக்காடாகும். இந்திய வன நில அளவை நிறுவனத்தால் **2015** மற்றும் **2017**ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிக்கைகளை ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் வனப்பரப்பு **75** சதுர கிலோ மீட்டர் அதிகரித்துள்ளது. வனம் மற்றும் வனத்திற்கு வெளியே, வனம் மற்றும் மரப் பரப்பினை அதிகரிக்கச் செய்வதற்கான கொள்கையைப் பின்பற்றியதால் இச்சாதனை படைக்கப்பட்டது.

வன உயிரின பாதுகாப்புச் சட்டத்தை வலுப்படுத்தும் நோக்கோடு, **15** வன விலங்குகள் சரணாலயங்கள், **15** பறவைகள் சரணாலயங்கள், **5** தேசிய பூங்காக்கள், **4** புலிகள் காப்பகங்கள், **3** உயிர்க்கோள் பாதுகாப்பு மண்டலங்கள் போன்ற பல பாதுகாக்கப்பட்ட பகுதிகள் அறிவிக்கப்பட்டு வன உயிரின பாதுகாப்பில் இந்தியாவின் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த தினத்தையொட்டி, மாநிலத்தில் பசுமைப் போர்வையினை அதிகரித்தல், சுற்றுச்சூழல் மாசினால் ஏற்படும் விளைவுகளைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு மாபெரும் மரம் நடவுத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் துவங்கப்பட்டது. இந்தத் திட்டம் மாண்புமிகு அம்மாவின் அரசால் **2011–2012** முதல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு இதுவரை **4** கோடியே **69** இலட்சம் மரக்கன்றுகள் நடவு மற்றும் பராமரிப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். **2019–2020**ஆம் ஆண்டில் **71** இலட்சம் மரக்கன்றுகள் நடுவதனை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுபோன்று வனப்பெருக்கம் மற்றும் வனப்பாதுகாப்பு சம்பந்தமாக பல்வேறு திட்டங்களை வனத்துறை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்த,

வனத்துறையில் கடமையுணர்வுடன் பணியாற்றக் கூடிய பணியாளர்கள் மிகவும் அவசியம்.

இருக்கும் வனப்பரப்பை பாதுகாத்திடவும், வனத்திற்கு வெளியே வனப்பரப்பை விரிவுபடுத்தவும், வனத்துறைக்குப் போதுமான பணியாளர்களை நியமிப்பது அவசியமாகிறது. இந்த நிலையில் வனத் துறையில், 45 சதவீதத்திற்கு மேல் இருக்கும் களப்பணியாளர்களின் காலிப் பணியிடங்களைக் கருத்தில் கொண்டு, இந்தியாவிலே முதன் முறையாக வனத்துறைக்கென தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் குழுமம் 2012ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இக்குழுமம் மூலம் முதன்முறையாக இணைய வழித் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுக் குழுமத்தின் மூலம் கடந்த 2018ஆம் ஆண்டு 726 வனக்காப்பாளர்கள், 152 ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர்கள் மற்றும் 300 வனவர்கள் தேர்வு செய்ய அறிவிப்பு செய்யப்பட்டது. கடந்த 2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் என்னால் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு வனத்துறை வரலாற்றில் முதன்முறையாக 190 பெண் வனக் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்பதை பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தற்போது 595 நபர்கள் பயிற்சியினை நிறைவு செய்திருக்கிறார்கள். இவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிற்சி பெற்ற அலுவலர்களுக்கு 9 பாடங்களைக் கொண்ட வகுப்பறை பாடங்களோடு, பல்வேறு களப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் விதமாக, தமிழ்நாடு காவல்துறையின்

அதிரடிப்படை பயிற்சி, ஆயுதப் பயிற்சி, வனத்துக்கு வெளியே வன விலங்குகளைக் கையாளும் விதம் போன்றவையும், தீ தடுப்புப் பணிகள், தேக்கு போன்ற மரங்களை அறுவடை செய்தல், நாற்றங்கால் உற்பத்தி மற்றும் தோட்டம் எழுப்புதல் போன்ற அடிப்படை களப் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். துறை சார்ந்த அலுவல் பயிற்சி மட்டுமல்லாது நீச்சல், வாகனம் ஓட்டுதல் போன்ற பயிற்சிகள் இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

வனத்துறை பணியில் இணையவிருக்கும் உங்களுக்கு பல்வேறு பணிகள் காத்திருக்கின்றன. வன விலங்குகளைப் பாதுகாத்தல், ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து வனங்களைப் பாதுகாத்தல், காடுகளை வளர்த்தல் மற்றும் பராமரித்தல், வனத்துக்குள் வாழும் பழங்குடி மக்களின் காவலனாக இருத்தல், தாய்நாட்டின் இயற்கை வளங்களான விலங்குகள், பறவைகள், பட்டாம் பூச்சிகள், மரங்கள்,

செடிகள், கொடிகள் ஆகியவற்றை பாதுகாத்தல் போன்ற எண்ணற்ற வனம் சார்ந்த பணிகளை தாங்கள் திறமையுடனும், முழு கடமை உணர்வுடனும் செய்ய வேண்டும். மாண்புமிகு அம்மாவின் அரசு உங்களின் பணிகளுக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் என்று உறுதிப்பட தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிற்சியை நல்ல முறையில் நிறைவு செய்த உங்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மரங்கள் மண்ணின் வளங்கள்,
காற்றின் கரங்கள்,
நிலங்களுக்கு மரகதப் போர்வை போர்த்தி அழகு
பார்க்கின்றன.
பறவைகளுக்கு சரணாலயம்,
இயற்கையின் வாசம்.
மரங்கள் மண்ணின் வளங்கள்,
காற்றின் கரங்கள்,
பறவைகளின் சரணாலயம்,
மரங்கள் அதிகரிக்கும்போது காற்று குளிர்கிறது,
வாயு மண்டலத்தில் உள்ள தட்பவெப்ப நிலையும் சீராகின்றது.
கார்பன்–டை–ஆக்ஸைடின் அடர்த்தி அதிகரிக்காமல்
இருக்கிறது,
ஓசோன் படலத்தில் ஓட்டை விழாமல் இருக்கிறது,
பூமி புன்னகைக்கிறது,
பயிர்கள் செழிக்கின்றன,
நோய்கள் குறைகின்றன,
நீர்வளம் பாதுகாக்கப்படுகின்றது,
ஆரோக்கியமான மனித வளம்
நாட்டில் பெருகுகின்றது.

இயற்கையை காப்பதற்கும், வன விலங்குகள் பாதுகாப்பாக வாழ்வதற்கும், மனிதகுலம் மேன்மை அடைவதற்கும் வனத்துறை

முக்கிய பங்காற்றுகிறது என்பதில் ஐயமில்லை. இந்த வனத்துறைப் பணியில் ஈடுபட்டுள்ள உங்கள் பங்கு மெச்சத்தக்க பணியாகும். இதனை சிறப்பாக செய்வதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை நவீனப்படுத்த வேண்டுமென்பதற்காக சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று, அங்கே இருக்கின்ற மிருகக்காட்சி சாலைகளைப் பார்வையிட்டு, அங்குள்ள நவீன முறைகளை தமிழகத்தில் புகுத்த வேண்டுமென்று கருதி, அதை விரைவாக செயல்படுத்த இருக்கின்றோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இன்னும் பல அரிய வகை மிருகங்களையும், பறவைகளையும் கொண்டு வருவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சிகரமாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பணி மிக முக்கியமான பணி. எத்தனையோ துறைகள் இருந்தாலும் வனத்துறை என்பது இயற்கையை வளமாக்குகின்ற துறை. அந்தத் துறையில் நீங்கள் பயிற்சி பெற்று, பயிற்சி முடிந்து பணியில் அமர்ந்திருக்கின்றீர்கள். நீங்கள் சிறப்பாக பணியாற்றி தமிழகத்திற்கு பெருமை சேர்க்க வேண்டுமென்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்,*
***27.09.2019** அன்று கோயம்புத்தூர்,*
தமிழ்நாடு வன உயர் பயிற்சியகத்தில் நடைபெற்ற
வனக்காப்பாளர்கள் பயிற்சி நிறைவு மற்றும்
சான்றிதழ்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை.

மக்கள் பிரச்சினைகளை எப்படி தீர்க்க வேண்டும் என்பதை ஆய்வு செய்து, சிந்தித்து, செயலாற்றுகின்ற அரசு எங்களுடைய அரசு!

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்த மனுக்களைப் பெற்று அந்த மனுக்களுக்கு தீர்வு காண்பதற்காக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், இந்த நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகின்றன.

ஏற்கெனவே நான் கெங்கவல்லி, ஆத்தூர், ஏற்காடு, எடப்பாடி ஆகிய சட்டமன்றத் தொகுதியிலுள்ள பொதுமக்களிடம் நேரடியாக மனுக்களைப் பெற்று அந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் வாயிலாக, நீண்டகாலமாக தீர்க்கமுடியாமல் இருக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் அளித்த மனுக்கள் மீதான நடவடிக்கை குறித்து அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். அதேபோல், என்ன காரணத்திற்காக மனு நிராகரிக்கப்பட்டது என்பதை அவர்களுக்கு பதில் கடிதம் மூலமாக தெரிவிக்கப்படும். பொதுமக்கள் கொடுக்கின்ற மனுக்கள் பெரும்பாலும் முதியோர் உதவித்தொகை வழங்கிட வேண்டி இருக்கின்றது. அதோடு நீண்டநாட்களாக தாங்கள் வசித்து வருகின்ற வீட்டிற்கு பட்டா வாங்காமல் இருக்கின்றவர்கள் பட்டா வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கின்றார்கள். அதை அதிகாரிகள் ஆய்வு செய்து தகுதியுள்ளவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல், நிலம், வீடு வாங்கியுள்ளவர்கள் பட்டா மாறுதல் செய்வதற்கு மனு கொடுத்தால், அந்த மனுவை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஆய்வு செய்து பட்டா மாறுதல் செய்து கொடுக்கப்படும். மக்கள் தங்களின் பிற பிரச்சினைகள் குறித்து மனு கொடுத்தால், அரசு அதை ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் வழங்கப்படுகின்ற நலத்திட்ட உதவிகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டம் மற்றும் பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 100 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டுவதற்கான மானிய நிதியுதவிகளும்,

கூட்டுறவுத் துறையின் சார்பில் 182 நபர்களுக்கு பயிர்க்கடன் உதவியும், 1 நபருக்கு மத்திய காலக் கடனுதவியும் மற்றும் 48 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவியும், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு

கடனுதவி, என 234 நபர்களுக்கு ரூபாய் 1 கோடியே 62 இலட்சத்து 81 ஆயிரம் மதிப்பீட்டிலான கடனுதவிகள் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வழங்கப்படுகிறது.

மகளிர் திட்டம் சார்பில் 14 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவியும், 122 நபர்களுக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் மானியமும், என மொத்தம் 136 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 56 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டிலான கடனுதவி வழங்கப்படுகிறது.

வேளாண்மைத் துறையின் சார்பில், 20 நபர்களுக்கு பிரதம மந்திரி நுண்ணுயிர் பாசனத் திட்டத்தின் கீழ் மானியமும், 5 நபர்களுக்கு தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் பைப்லைன் அமைக்க மானியமும், ஒரு நபருக்கு தென்னை வளர்ச்சி மானியத்தின் கீழ் மறு நடவு மற்றும் மறு சீரமைப்பு நிதியுதவி என மொத்தம் 26 பயனாளிகளுக்கு ரூபாய் 5 இலட்சத்து 89 ஆயிரம் மதிப்பிலான நிதியுதவியும்,

வேளாண் பொறியாளர் துறை சார்பில் வேளாண் இயந்திரமாக்கல் உப இயக்கத் திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு டிராக்டர் மானியமும், ஆக மொத்தம் இன்றையதினம் நடைபெறுகின்ற இந்த விழாவில் 523 பயனாளிகளுக்கு ரூபாய் 5 கோடியே 21 இலட்சத்து 5 ஆயிரம்

மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் நேரடியாக நானே இங்கே வந்து உங்களை சந்தித்து வழங்கியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் 2011ஆம் ஆண்டு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து 2019 வரை 8 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட பணிகள் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு தமிழகம் முழுவதும் அம்மாவின் அரசால் அனைத்து பகுதிகளிலும் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்கள், குறிப்பாக, எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றைக்கு இந்த ஆட்சியில் எந்தத் திட்டமும் நிறைவேற்றப்படவில்லை என்ற ஒரு தவறான குற்றச்சாட்டை அவர் செல்கின்ற இடத்திலும், பொதுக்கூட்டங்களிலும் பேசி வருகிறார். ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஒவ்வொரு தொகுதியிலும் என்ன என்ன திட்டங்களை நிறைவேற்றியுள்ளது என்பதை சுட்டிக் காட்டுவதற்காக இதை தெரிவிக்க விரும்புகின்றேன். ஏனென்றால், ஒரு அரசாங்கம் ஒரு தொகுதியிலே எவ்வளவு பணிகளை நிறைவேற்றியிருக்கிறது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும், எதிர்க்கட்சியும்

தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக சில குறிப்புகளை இங்கே தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கடந்த 8 ஆண்டுகளில் ரூபாய் 213 கோடியே 38 இலட்சம் மதிப்பீட்டில் இந்தத் தொகுதியில் மட்டும் 29,531 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வருவாய்த் துறையில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 8,360 பயனாளிகளுக்கு ரூபாய் 85 கோடியே 27 இலட்சம் மதிப்பிலான பல்வேறு உதவித்தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ், 4,035 பயனாளிகளுக்கு ரூபாய் 10.81 கோடி மதிப்பீட்டில் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆகவே, பொதுமக்கள் கொடுக்கின்ற மனுக்களை அரசு எந்த அளவுக்கு விரைவாக, வேகமாக நிறைவேற்றி வருகிறது என்பதற்கு இது ஒரு உதாரணம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருத்துத் துறையில் சுமார் ரூபாய் 54.80 இலட்சம் மதிப்பீட்டில் தும்பல்பட்டி மற்றும் முருங்கம்பட்டி ஆகிய பகுதியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ஆகவே, தேர்தல் நேரத்திலே பொதுமக்கள் வைத்த கோரிக்கைகளை அம்மாவினுடைய அரசு இந்த இரண்டு பகுதிகளிலும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

பனமரத்துப்பட்டி, இளம்பிள்ளை மற்றும் கன்னங்குறிச்சி ஆகிய 3 இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.1.87 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆகவே, இன்றைக்கு தரமான மருத்துவ சிகிச்சையை கிராமப்புற மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக 30 படுக்கைகள் கொண்ட புதிய மருத்துவமனையை

கொடுத்து, புதிய மருத்துவர்கள் கூடுதலாக நியமிக்கப்பட்டு அங்கே வருகின்றவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்க வேண்டும் என்பதற்காக அரசு மேம்படுத்தப்பட்ட மருத்துவமனையையும் நாங்கள் இந்தத் தொகுதியில் துவக்கியிருக்கின்றோம் என்பதைச் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் மூலம் 28,777 பயனாளிகளுக்கு ரூபாய் 66.29 கோடி மகப்பேறு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்திய வரலாற்றிலேயே பிறக்கின்ற குழந்தைகளுக்கு உடனே நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற ஒரே அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். அதன் மூலமாக இந்தத் தொகுதியில் 2,109 பச்சிளம் குழந்தைகளுக்கு அம்மா பரிசு பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

அம்மா தாய்சேய் நல ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் திட்டத்தின் கீழ், 535 தாய்மார்களுக்கு ரூ.10.70 இலட்சம் மதிப்பீட்டிலான ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் திட்டத்தின் கீழ், 1,16,085 சானிடரி நாப்கின்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, இவையெல்லாம் ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்த பெண்களுக்கு கொடுக்கப்படுகின்ற நலத்திட்ட உதவிகள் என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

இணை இயக்குநர், நலப்பணிகள் மூலமாக 10 படுக்கைகள் கொண்ட நைனாம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 60 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு, இம்மருத்துவமனைக்கு புதிதாக ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் 50 படுக்கைகள் கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக கடந்த 8 ஆண்டுகளில் சுமார் ரூபாய் 60 கோடி மதிப்பீட்டில் 116 கி.மீ. சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ரூ.26.5 கோடி மதிப்பீட்டில் 40 கி.மீ. சாலைப்பணிகள் அகலப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளன.

ரூபாய் 45 கோடி மதிப்பீட்டில் தேசிய நெடுஞ்சாலை அரியானூர் சாலை சந்திப்பில் 8 வழி சாலை மேம்பாலம் (Fly Over) கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

வேளாண்மைத் துறையில் ரூ.8.52 கோடி மதிப்பீட்டில் 57,364 விவசாயிகளுக்கு விவசாய பண்ணை இயந்திரங்கள், கருவிகள், விதைகள், சொட்டு நீர் பாசன மானியம், இடுபொருட்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இன்றைக்கு விவசாயிகளுக்கு ஏராளமான திட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அடிக்கடி ஸ்டாலின் சொல்லுவார், இந்த முதலமைச்சர் விவசாயி, விவசாயி என்று கூறுகிறார், விவசாயிகளுக்கு என்ன செய்தார் என்று சொன்னார். இந்தத் தொகுதியில் மட்டும் 57,364 விவசாயிகளுக்கு நன்மை கிடைத்திருக்கின்றது என்பதை எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, விவசாயிகள் விவசாயத் தொழில் மட்டும் செய்வது கிடையாது. அவர்களுக்கு கூடுதல் வருமானம் வரவேண்டும் என்பதற்காக தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறையின் சார்பில் இந்தத் தொகுதியில் சுமார் ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் 3,524 விவசாயிகள் பயன்பெறும் வகையில் சொட்டு நீர் பாசனம் மானியம், காய்கறி விதைகள், பழச்செடிகள், தேனீ வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்றைக்கு விவசாயிகள் உபதொழிலாக இந்தத் தொழில்களெல்லாம் இன்றைக்கு இடம்பெற்றிருக்கின்றன.

பட்டு வளர்ச்சித்துறையின் சார்பில் இந்தத் தொகுதியில் சுமார் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் 167 விவசாயிகளுக்கு பல்வேறு மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண் பொறியியல் துறையில் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் 1,823 விவசாயிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை பொருளீட்டுக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 123 விவசாயிகளுக்கு சுமார் ரூ.2.50 கோடி பொருளீட்டுக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளன.

சேலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சுமார் ரூ.3.5 கோடி மதிப்பீட்டில் 2,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட 2 கிடங்குகள் மற்றும் பரிவர்த்தனைக் கூடம், 25 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதன கிடங்கு மற்றும் சூரிய உலர்த்தி உள்ளிட்ட கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆகவே, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களின் விலை குறைகின்றபொழுது, அதை விற்றால் பெருத்த நஷ்டத்திற்குள்ளாவார்கள். அந்த இழப்பிலிருந்து விவசாயிகளை காப்பாற்ற வேண்டும் என்பதால் இந்த குளிர்ப்பதன கிடங்குகள் கட்டி, விவசாயிகள் உற்பத்தி செய்த விளைபொருட்களை குளிர்ப்பதன கிடங்குகளில் சேமித்து வைத்து, விலை ஏறும்பொழுது

விற்பனை செய்யலாம். அவர்களுக்கு பணம் தேவை என்றால், குறைந்த வட்டியில் கடன் பெறுவதற்கும் வழிவகை செய்யப்படுகிறது. இதெல்லாம் விவசாய பெருங்குடி மக்களுக்கு கிடைத்த நன்மை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் 8 ஆண்டுகளில் 245 ஊரக குடியிருப்புகளுக்கு சுமார் ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் தனி மின்விசை குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

வீரபாண்டி மற்றும் பனைமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியங்களில் 46 பள்ளிகள், 47 அங்கன்வாடி மையங்கள் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. குடிநீர் ஆதாரங்களை செறிவூட்டுவதற்காக 62 புனரமைப்புத் திட்டப்பணிகள் சுமார் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஆக மொத்தம் சுமார் ரூ.13.89 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு, இந்தத் தொகுதி மக்களுக்கு தங்குதடையில்லாமல் குடிநீர் வழங்கக்கூடிய அரசு என்னுடைய அரசு என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் பல பகுதிகளுக்கு குடிநீர் வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளீர்கள், அதையும் நிறைவேற்றுவதற்கு இந்த அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக ரூ.270 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள ஆத்தூர், நரசிங்கபுரம் நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1,345 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இருந்து பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 35 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு 1.08 மில்லியன் லிட்டர் அளவுக்கு சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இளம்பிள்ளை, பனமரத்துப்பட்டி, ஆட்டையாம்பட்டி பேரூராட்சிகள் மற்றும் பனமரத்துப்பட்டி, வீரபாண்டி, சேலம் ஊராட்சி

ஒன்றியங்களுக்குட்பட்ட 799 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் சுமார் ரூபாய் 824 கோடி மதிப்பீட்டில் இந்த திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் இந்தப் பகுதியிலுள்ள இலட்சக்கணக்கான மக்கள் குடிநீர் வசதியைப் பெறுவார்கள்.

கூட்டுறவுத்துறையில் 30,625 விவசாய பெருமக்களுக்கு சுமார் ரூபாய் 160 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1,534 விவசாய பெருமக்களுக்கு ரூபாய் 9.50 கோடி மத்திய காலக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2,76,433 விவசாய பெருமக்களுக்கு ரூ.900 கோடி நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

349 மாற்றுத்திறனாளிகளுக்கு சுமார் ரூ.1.50 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்த 774 மகளிருக்கு சுமார் ரூபாய் 20 கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. 6,073 நபர்களுக்கு சுமார் ரூபாய் 20 கோடி இதர கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

8 ஆண்டுகளில் வீரபாண்டி சட்டமன்ற தொகுதியில் மட்டும் கூட்டுறவுத்துறையின் மூலம் மொத்தம் 3,15,788 நபர்களுக்கு சுமார் ரூபாய் 1,110 கோடி அளவில் பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் உபதொழிலாக இருப்பது கால்நடை வளர்ப்பு. கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் சுமார் ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் 13,395 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள், விலையில்லா அசல் இன கோழிகள், கால்நடை பாதுகாப்புத் திட்டம், மாநில தீவன அபிவிருத்தித் திட்டம், மேச்சேரி இன ஆடு அபிவிருத்தித் திட்டம், சிறுபால்பண்ணை அமைக்கும் திட்டம் மற்றும் கால்நடை காப்பீடு திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்கவேண்டும்

என்பதற்காக அம்மாவினுடைய அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சுமார் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் 14 கால்நடை மருந்தகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

இன்றைக்கு நம் குழந்தைகள் சிறப்பான கல்வி கற்க வேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அப்படி சிறப்பான கல்வியை கற்க வேண்டும் என்று சொன்னால், அந்த குழந்தைகளுக்கு தேவையான வசதிகளை அரசே செய்து கொடுக்க வேண்டும். ஏழ்மையான நிலையிலே இருக்கின்ற திறமையான மாணவர்கள் உயர்கல்வி பெற முடியாது, வேலைக்கு செல்ல முடியாது. ஆகவே, இதையெல்லாம் சிந்தித்து புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தொலைநோக்கு சிந்தனையோடு வசதி படைத்த மாணவர்கள் கற்கும் கல்வியை ஏழை குடும்பத்திலே பிறந்த மாணவனும் கற்க வேண்டும், வேலைக்கு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அற்புதமான இந்த திட்டத்தை கொண்டு வந்தார்கள். அதனை அம்மாவின் அரசும் செம்மையான முறையிலே தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அறிவுபூர்வமான கல்வி, விஞ்ஞான கல்வி ஏழை, எளிய மாணவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதற்காக புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மடிக்கணினி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். மடிக்கணினி வழங்கும் திட்டத்தின் மூலம் நம்முடைய வீரபாண்டி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 8 ஆண்டுகளில் 24,474 மாணவ, மாணவிகளுக்கு சுமார் 26 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விலையில்லா மடிக்கணினி வழங்கிய அரசு அம்மாவுடைய அரசு.

பள்ளிக்கு மாணவ, மாணவிகள் குறித்த நேரத்தில் செல்ல வேண்டும், பள்ளி முடிந்து மீண்டும் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையோடு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை துவக்கி

வைத்தார்கள். இந்த பகுதியிலே மட்டும் ரூ.5.72 கோடி மதிப்பீட்டில் 23,564 மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, வருவாய் ஈட்டும் பெற்றோர்களை இழந்த மாணவர்களுக்கு உதவித்தொகை, இடை நிற்றலை தவிர்க்க சிறப்பு ஊக்கத்தொகை, இப்படி பல வகையில் மாணவர்களின் கல்வி சிறக்க அம்மாவுடைய அரசு மாணவர்களுக்கு அடித்தளமாக விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பெருமையுடன் சுட்டிக்காட்ட விழைகின்றேன். அதேபோல, விலையில்லா பேருந்து பயணஅட்டையை அம்மாவுடைய அரசு வழங்கிக் கொண்டு இருக்கிறது.

வீரபாண்டி தொகுதி மக்கள் அந்த பகுதியிலே இருக்கின்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கையை ஏற்று அம்மாவுடைய அரசு எருமாபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நிலவாரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கீரைபாப்பம்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கம்மாளப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஆகிய 4 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி, இப்பகுதியிலே உள்ள மாணவர்கள் அங்கேயே உயர்கல்வி பயில்வதற்கான சூழ்நிலையை எங்கள் அரசு உருவாக்கித் தந்துள்ளது. அதேபோல, நாழிக்கல்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தித் தந்துள்ளது. அனைவருக்கும் இடைநிலை கல்வி இயக்கத்தின் சார்பில் ரூ.14.40 கோடி மதிப்பீட்டில் பனமரத்துப்பட்டி மற்றும் வீரபாண்டியில் மாதிரி பள்ளிகள் மற்றும் விடுதி கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இந்த தொகுதியில் ரூ.17.60 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய பள்ளிக் கட்டடங்கள், ஆய்வகங்கள், வகுப்பறைகள்,

சுற்றுச்சுவர், மாதிரி பள்ளிகள் மற்றும் விடுதிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக இப்பகுதியிலே இருக்கின்ற ஏரிகள் தூர் வாரப்படாமல் இருக்கின்றன. பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீரை சேமிப்பும் வகையில், விவசாயிகளைக் கொண்டே நீர்நிலைகளை தூர் வாரும் குடிமராமத்து திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுப்பணித்துறையின் கீழ் பராமரிக்கப்படும் சுமார் 14,000 ஏரிகள், ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் பராமரிக்கப்படும் சுமார் 26,000 ஏரிகள், ஆக மொத்தம் தமிழ்நாட்டில் இன்றைக்கு 40,000 ஏரிகள் உள்ளன. இவைகளை படிப்படியாக தூர் வாரும் வகையில் குடிமராமத்து திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட தொகையினை ஒதுக்கி, குறிப்பிட்ட ஏரிகளை எடுத்துக் கொண்டு குடிமராமத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தை குறை கூறும் எதிர்க்கட்சியினர் அவர்கள் ஆட்சி காலத்தில் ஒரு துரும்பை கூட கிள்ளிப் போடவில்லை. இத்திட்டத்தின் மூலம் அரசுக்கு நல்ல பெயர் கிடைத்து வருகிறது என்பதால் அவர்கள் அங்கே தூர் வாரவில்லை, இங்கே தூர்வாரவில்லை என்று குறை கூறுகிறார்கள். ஏரிகளை தூர் வாருவதால் கிடைக்கும் வண்டல் மண் விவசாயிகளுக்கு இயற்கை உரமாக பயன்படுகிறது.

நான் வெளிநாடுகளுக்கு அரசுமுறை பயணம் சென்றுவிட்டு திரும்பியபோது, அடுத்து எந்த நாட்டிற்கு செல்ல இருக்கிறீர்கள் என்று பத்திரிகையாளர்கள் கேட்டார்கள். நான் அடுத்து இஸ்ரேலுக்கு செல்ல உள்ளேன் என்று தெரிவித்தேன். அங்கு விவசாயிகள் இருக்கின்ற நீரை சிக்கனமாக பயன்படுத்தி நல்ல விளைச்சலை பெற்று வருகிறார்கள். குறைந்த நீரிலே அதிக நிலப்பரப்பில் விவசாயம் செய்கிறார்கள். நம்முடைய பகுதியில் 1 ஏக்கர் நிலப்பரப்பிற்கு விவசாயம் செய்ய பயன்படுத்தும் நீரை அங்கு 7 ஏக்கருக்கு பயன்படுத்துகிறார்கள். ஆகவே, இதை பார்வையிடுவதற்காக நான் இஸ்ரேல் செல்ல உள்ளேன் என்று தெரிவித்தேன். இன்றைக்கு நகரப்

பகுதியிலே வெளியேறுகின்ற கழிவுநீரை சுத்திகரித்து மறுசுழற்சி செய்து அருகாமையில் இருக்கக் கூடிய ஏரியில் சேமித்து வைக்கின்ற போது அது நிலத்தடி நீரை உயர்த்தி விவசாயத்திற்கு பயன்படுகிறது. இப்படிப்பட்ட டெக்னாலஜியை பார்வையிடுவதற்காக நான் இஸ்ரேல் செல்வேன் என்று சொன்னேன். உடனே எதிர்க்கட்சி தலைவர் திரு. ஸ்டாலின் அவர்கள் சொல்கிறார், இங்கே காவேரியில் தண்ணீர் உபரியாக கடலில் கலக்கிறது இதையெல்லாம் சேமிக்க இயலாத முதலமைச்சர் அங்கே போய் பார்வையிடுகிறார் என்ற சொல்கிறார். திமுக ஆட்சியில் மேட்டூர் முதல் கொள்ளிடம் வரை எத்தனை தடுப்பணைகள் கட்டினீர்கள். ஒரு தடுப்பணை கூட கட்டவில்லை. எதுவுமே செய்யாத ஸ்டாலின் எங்களைப் பற்றி பேசுவதற்கு எந்த தகுதியும் இல்லை என்பதை இந்த நேரத்திலே கோடிட்டு காட்ட விரும்புகிறேன். ஏன் என்றால் நீர் மேலாண்மை திட்டத்தை செயல்படுத்துவதற்காக தனி அமைப்பையே நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம். நான் விவசாயி என்ற காரணத்தினாலே நீரினுடைய அருமையை நான் தெரிந்திருக்கின்றேன். மனிதனுக்கு உயிர் போல, விவசாயிக்கு நீர் மிக முக்கியமானது. அந்த நீரை காப்பதற்காக நீர் மேலாண்மை திட்டத்தை உருவாக்குவதற்காக ஒய்வு பெற்ற பொறியாளர்களை நியமித்து தமிழகம் முழுவதும் எங்கெல்லாம் உபரியாக நீர் வீணாகின்றதோ அதை எல்லாம் தேக்குவதற்கு நீங்கள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று சொல்லி, அவர்கள் எல்லாம் ஆய்வுப் பணி மேற்கொண்டு அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்ய இருக்கிறார்கள். அந்த வகையிலே மேட்டூரிலிருந்து கொள்ளிடம் வரை திமுக ஆட்சியில் ஒரு தடுப்பணை கூட கட்டப்படாமல், அதற்கு எந்த வழிவகையும் செய்யாத திமுகவைச் சேர்ந்தவர்கள் எங்களைப் பற்றி பேசுவதற்கு எந்த தகுதியும் இல்லை என்பதை இந்த நேரத்தில் கோடிட்டு காட்ட விழைகின்றேன்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மேட்டூரிலே உற்பத்தியாகி மழைக்காலங்களிலே பெய்கின்ற மழைநீர் வீணாக

கடலில் சென்று கலப்பதை தடுப்பதற்காக கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்காக ஆதனூர் குமாரமங்கலம் என்ற இடத்திலே அந்த திட்டம் மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக அம்மா அறிவித்தார்கள். அம்மாவுடைய அரசு இன்றைக்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்தப் பணி துவக்கப்பட்டு விட்டது. அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அதைக்கூட தெரியாமல் ஸ்டாலின் அவர்கள் சொல்கிறார், பேட்டி கொடுக்கின்றார். அம்மா ஆரம்பித்த திட்டத்தையாவது இந்த முதலமைச்சர் நிறைவேற்ற வேண்டும் என்று ஸ்டாலின் அவர்களே, தெரியாமல் பேச வேண்டாம். யாரோ எழுதி கொடுத்ததை தெரியாமல் பேச வேண்டாம். இந்த திட்டம் துவங்கப்பட்டு விட்டது. ஆதனூர் குமாரமங்கலத்திலே மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட அந்த தடுப்பணை இன்றைக்கு கட்டப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மேட்டூரிலிருந்து கொள்ளிடம் வரை எந்த எந்த இடத்திலே தடுப்பணை கட்ட வேண்டும் என்று இன்றைக்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையிலே முதல்கட்டமாக கரூருக்கு அருகிலே ஒரு தடுப்பணை கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை இன்றைக்கு தயாரிக்கப்பட்டு வருகிறது. இன்னும் நான்கு மாதத்தில் அந்த ஒப்பந்தம் போடப்பட்டு அந்தப் பணி துவங்கப்படும் என்ற செய்தியை தெரிவித்துக்கொள்கிறேன். மேட்டூர் முதல் கொள்ளிடம் வரை மூன்று நான்கு தடுப்பணைகள் கட்ட அம்மாவுடைய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவதற்கு 1,000 கோடி ரூபாய் ஒதுக்கி 3 ஆண்டுகளில் இந்த திட்டம் நிறைவேற்றப்படும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் அரசு அம்மாவுடைய அரசு என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கேரள மாநிலங்களுக்கு இடையேயான முல்லை – பெரியாறு பிரச்சினை, ஆழியாறு – பரம்பிகுளம் பிரச்சினை,

பாண்டியாறு – புன்னம்புழா பிரச்சினை, செண்பகவல்லி அணை பிரச்சினை, நெய்யாறு பிரச்சினை இப்படி பல்வேறு பிரச்சினைகள் இருந்து வருகின்றன. எங்களுடைய மக்களுக்கு தண்ணீர் வேண்டும், விவசாயத்திற்கு தண்ணீர் வேண்டும் என்று கேரள முதலமைச்சருக்கு கடிதம் எழுதினேன். நீங்கள் நேரில் வாருங்கள் இது குறித்து பேசுவோம் என்ற அழைப்பு விடுத்தார்கள். அந்த அழைப்பினை ஏற்று, 15 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில் கேரளாவிற்கு நானே நேரடியாக சென்று கேரள முதலமைச்சரை சந்தித்தேன்.

தமிழகத்திலே அதிக ஆண்டுகள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தவர் திரு. துரைமுருகன் அவர்கள் தான். நீங்கள் பதவியில் இருந்த காலத்திலே முல்லை – பெரியாறு பிரச்சினையை முடித்திருக்கலாம். பாலாறு பிரச்சினையாவது தீர்த்திருக்கலாம். நீங்கள் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது. அப்படி இருக்கின்ற போது, ஒரு முயற்சி செய்கின்றோம். அந்த முயற்சிக்கு நீங்கள் குரல் கொடுத்தால் நன்றாக இருக்கும். அதை விடுத்து திரு.துரைமுருகன் அவர்கள், இந்த அரசு செயல்படுவது போல காட்டுவதற்காக கேரளாவிற்குச் சென்று முதலமைச்சரை சந்தித்தார் என்ற தோரணியில் கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.

நாங்கள் குழு அமைக்கப்படும் என்று சொன்னோம். ஒரு பிரச்சினை தீர்க்க வேண்டுமென்றால், குழு அமைத்துத்தான் பிரச்சினை தீர்க்க முடியும். ஆகவே, இரண்டு மாநிலங்களிலுள்ள உயர் அதிகாரிகளின் மூலமாக குழுக்கள் அமைக்கப்படுகின்றது. கேரளாவில் ஒரு குழு, தமிழ்நாட்டில் ஒரு குழு. இரண்டு குழுக்களும் சந்தித்துப் பேசி நம்முடைய மாநிலத்தில் என்னென்ன பிரச்சினைகள், கேரளாவில் என்னென்ன பிரச்சினைகள் என்பதை கலந்து பேசி இறுதி வடிவம் கொடுக்கப்படும். ஆகவே, சுமார் இரண்டு மாத காலத்தில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சியை நாங்கள் எடுப்போம் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

உங்களைப் போல், பல ஆண்டு காலம் கிடப்பிலே போடுகின்ற அரசு என்னுடைய அரசு அல்ல. எந்தத் திட்டத்தை கொண்டுவந்தாலும், அந்தத் திட்டத்தை அறிவித்தவுடன், அந்தத் திட்டத்தை கண்காணித்து நடைமுறைப்படுத்தும் அரசு எங்களுடைய அரசு என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம். அந்த வகையில், இன்றைக்கு நான் சொன்ன திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு எங்களுடைய அரசு விரைந்து செயல்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

ஆனைமலையாறு திட்டம் குறித்தும் மாண்புமிகு கேரள முதலமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கின்றோம். அதுவும் அந்தக் குழுவின் மூலமாக விசாரிக்கப்பட்டு ஒரு முடிவு காணப்படும். ஆகவே, இரண்டு மாநில முதலமைச்சர்களும் சந்தித்து பேசுகின்றபொழுது தான் ஒரு நல்ல தீர்வு எட்டப்படும் என்ற அடிப்படையில்தான் நாங்கள் சந்தித்து பேசியிருக்கின்றோம். நிச்சயமாக நாங்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறும். ஆகவே, அதைப்பற்றியெல்லாம் திமுக கவலைப்படத் தேவையில்லை. உங்கள் ஆட்சியில் பதவியை மற்றும் அனுபவித்தீர்கள், மக்களைப் பற்றி கவலைப்படவில்லை. எங்களுடைய காலத்தில் மக்களைப் பற்றி மட்டும் சிந்தித்துக் கொண்டு இருக்கின்றோம், அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளை எப்படி தீர்க்க வேண்டும் என்பதை ஆய்வு செய்து, சிந்தித்து செயலாற்றுகின்ற அரசு எங்களுடைய அரசு என்பதை நிரூபித்துக் காட்டுவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின்போது, பணிபுரியும் மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். 2017–2018 மற்றும் 2018–2019ஆம் ஆண்டுகளில் மாவட்ட தேர்வுக்குழு மூலம் அரசு மானியத்தில் 694 உழைக்கும் மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகனம்

வழங்க தேர்வு செய்யப்பட்டு, 347 உழைக்கும் மகளிருக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.86.75 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சுமார் ரூபாய் 260 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் மூலம் சுமார் ரூ.26 கோடி மதிப்பீட்டில் 880 குடியிருப்புகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது.

மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக, 103 பயனாளிகளுக்கு ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் புதிய தொழில்கள் தொடங்குவதற்கான மானியம் வழங்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களின் மூலம் ரூ.2.50 கோடி மதிப்பீட்டிலும், ஆதிதிராவிட நலத்துறையின் மூலமாக சுமார் ரூ.2 கோடி மதிப்பீட்டிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் வீரபாண்டி சட்டமன்ற தொகுதியில் மட்டும் ரூ.11.73 கோடி மதிப்பீட்டில் 11,457 மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள், உதவித்தொகைகள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் சட்டக் கல்வி பயில வேண்டும் என்பதற்காக அம்மாவினுடைய அரசு, சேலத்தில் அரசு சட்டக் கல்லூரியை துவக்கி பெருமை சேர்த்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது இணை பதிவாளர் தரத்திலிருந்து கூடுதல் பதிவாளர் தரத்திற்கு தரம் உயர்த்தப்படும். நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக பல்வேறு சாலைகள் சீரமைக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு பாலப் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பொதுமக்களும், தாய்மார்களும் கொடுக்கின்ற மனுக்களை பரிசீலித்து தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்து, இந்த அரசு உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்கள் என்ன எண்ணுகின்றார்களோ, அதை நிறைவேற்றுகின்ற அரசு எங்களுடைய அரசு என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, நான் முதலமைச்சராக இருந்தாலும், உங்களையெல்லாம் சந்தித்து மனுக்களைப் பெற்று, அந்த மனுக்களுக்கு தீர்வு காணவேண்டும் என்பதற்காகத் தான், நேரடியாக மனுக்களைப் பெறுகிறேன் என்பதைச் சொல்லி, மிக சிறப்பான ஏற்பாடுகளை செய்த மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும், செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்கின்ற ஊடக மற்றும் பத்திரிகை நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்*
***28.09.2019** அன்று சேலம் மாவட்டம் வீரபாண்டி சட்டமன்றத் தொகுதி,*
நெய்க்காரப்பட்டியில் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும்
முகாமினை துவக்கி வைத்து ஆற்றிய உரை.

“அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம்“ என்ற முப்பெரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்தியவர்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த தத்துவத்தை, “அமைதி, வளம், வளர்ச்சி” என்று மேலும் மெருகேற்றியவர் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள். நமது மாபெரும் தலைவர்களின் தாரக மந்திரத்தை அடித்தளமாகக் கொண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு, இரும்புக் கோட்டையாக எழும்பி கம்பீரமாக நிற்கிறது.

எடப்பாடி K. பழனிசாமி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத்துறை